# மனத்துக்கு மனம்

## தமிழண்ணலின் வாழ்க்கைக் குறிப்பு



# மனத்துக்கு மனம்

## தமிழண்ணலின் வாழ்க்கைக் குறிப்பு



ஆக்கம் பெரியார்

# மனத்துக்கு மனம்

## தமிழண்ணலின் வாழ்க்கைக் குறிப்பு

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : தி.வ. ஆண்டு, 2041, (கன்னி) புரட்டாசி எ. 23.9.2010

உரிமை : ஆசிரியருக்கு

விலை : உருவா. 80.00

பேராசிரியர் இரா. மோகன்

பேராசிரியர் நிர்மலா மோகன்

மணிவிழா நினைவுச் சிறப்பு வெளியீடு

நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் | : மனத்துக்கு மனம் |
| ஆசிரியர் | : தமிழண்ணல் |
| நூல் நுவல் பொருள் | : வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் |
| முதற்பதிப்பு | : 23, செப்தம்பர் 2010 |
| தாள் | : வெள்ளைத்தாள் |
| நூல் அளவு | : 14 X 22 செ.மீ. டெம்மி |
| அச்சு எழுத்து அளவு | : 12 புள்ளி |
| பக்கங்கள் | : 144 |
| நூலின் விலை | : உருவா. 80.00 |
| அச்சிட்டோர் | : வினாயகா ஸ்கிரீன்ஸ், மதுரை. |
| ஒளி அச்சுக் கோர்வை | : ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |

---

SELLING RIGHTS

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

மனிதம்

## 'ஆவி' ஆகுமோர் மழைத்துளி!

ஆற்றுநீர் 'ஆவி' யாகி
அமிழ்தமாம் துளியாய் மாறும்
தோற்றத்தில் மனிதம் ஆகும்
துளிஇது வாழ்க்கை என்னும்
ஏற்றதோர் துறையில் நீந்தும்
இயல்பினில் வாழும் மீண்டும்
ஆற்றுநீர் 'ஆவி' ஆகி
அமிழ்தமாம் துளியாய் மாறும்!

# நன்றி நவிலல்

என் அகவை 82 (12.8.1928இல் பிறந்த நாள் - 12.8.2010 83ஆம் பிறந்த நாள்).

என் மணி விழா மலர் : 7.10.1989இல், மதுரையில், வெளிவந்தது. என் அன்பிற்கினிய பேராசிரியர் மீராவும் (மீ.இராசேந்திரன்) முனைவர் இரா. மோகனும் பதிப்பாசிரியர்களாய், அது வரை நிகழ்ந்தவற்றில் குறிப்பிடத்தக்கவற்றை ஆவணப்படுத்தித் தந்தனர்.

19.9.2006இல் இரா.மோகன் ஒரு குறிப்பு எழுதித் தந்தார். அதன்படி என் கட்டுரைகளும் கவிதைகளும் முன்னுரைகளும் 'மனத்துக்கு மனம்' என்று என் வாழ்வில் நடந்த, குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் தொகுப்பும் என்னைப் பற்றிப் பிறர் கட்டுரையாக - கவிதையாக - மடல்களாக - இதழ் மதிப்புரைகளாக - இதழ் சிலவற்றில் நேர்காணல்களாக வந்தனவற்றில் குறிப்பிடத்தக்கவற்றைத் தொகுத்தும் வெளியிட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

வாழ்வே எழுத்தாக, எழுத்தே வாழ்வாக முழுமை பெற வாழ்ந்ததால், என்னிடம் இவை பல்வேறு இடங்களில், கோப்புகளில் சிதறிக் கிடந்தன. இப்போது மோகன், நிர்மலா மோகன் இருவரும் தம் மணிவிழாச் சமயத்தில் 'மனத்துக்கு மனம்' என்பதை, இயன்றவரை கிடைத்தவற்றைக் கொண்டு தொகுத்துத் தந்து விடுங்கள்; அவற்றை முதலில் வெளியிட்டு விடுவோம் என்று அதற்கு ஒரு நாளும் குறிப்பிட்டு விட்டனர்.

அவர்களுக்கும் என்பால் பேரன்பு கொண்டு இவ்வாறு ஒன்றைக் கொணர ஆர்வம் காட்டிய பொது நலச் செம்மல் பி.வரதராசனுக்கும் உற்றுழி உதவும் பேராசிரியர் உல. பாலசுப்பிரமணியனுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**தமிழண்ணல்**

## தமிழண்ணல் கட்டுரை தமிழனின் தன்மானம் காப்பது

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்
'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்'?
நூல் வெளியீடு - 1968.

ஆங்கிலக் கல்வியும் அறிவியலாராய்ச்சி முறையும் தமிழகத்திற் புகுத்தப் பெற்று இருநூற்றாண்டாகியும் இன்னும் பட்டக்கல்வி கற்ற தமிழர்க்கும் கண்திறவாமையால், 1964ஆம் ஆண்டு செபுதெம்பர் மீ² 22ஆம் பக்கல் சென்னையரசுப் பொருட்காட்சிசாலை மண்டபத்தில் தென்னிந்தியப் பழம்பொருட் கலைக் கழகச்சார்பில் பேரா. கே.ஏ.நீலகண்ட சாத்திரியார் படித்த கட்டுரையில், செந்து (Zend) மொழியில் முருக் (Muruk) என்றும் பழம் பாரசீகத்தில் முர்க் (murgh) என்றும் சேவலைக் குறிக்கும் சொல்லிருத்தலால், அச் சொல்லினின்றே சேவற் கொடியோனாகிய தெய்வத்தைக் குறிக்கும் முருகன் என்னும் தமிழ்ப் பெயரும் திரிந்துள்ளதென்று கூறியுள்ளார்.

இதை மறுத்துத் தமிழறிஞர் சிலர் 'குறள் நெறி'யிற் கட்டுரை வரைந்தாரேனும், நாடு முழுதும் கிளர்ச்சியெழவில்லை. முப்பெருஞ் சிவ மடங்களும் மூகங்களாயிருந்துவிட்டன. சட்டப் புலமை பெற்ற தமிழக வழக்கறிஞரும் சற்றும் வாய்திறந்திலர். இந்நிலையில், தமிழண்ணல் இராம. பெரியகருப்பன், எம்.ஏ., 'குறள்நெறி'யிதழ் நான்கில் வரைந்த தொடர் கட்டுரை மிகப் பாராட்டத்தக்கதும் தமிழன் தன்மானத்தைப் பெரிதும் காப்பதுமாகும்.

ஞா. தேவநேயன்

## தமிழண்ணலின் பாடல்களில் இனிமை உள்ளது

பேராசிரியர். மு. வரதராசனார்
தமிழண்ணலின் சிறுவர் பாடல்கள்
நூலின் அணிந்துரை, 1949

"இத்துறையில் தொண்டு செய்ய முன்வந்த (இராம பெரியகருப்பன்) தமிழண்ணலையும் தேவகோட்டை உண்மைப் பிரசுரத்தையும் பாராட்டுகின்றேன். தமிழண்ணலின் பாடல்களில் இனிமை உள்ளது; நேர்மை உள்ளது; உயர்ந்த நோக்கமும் உள்ளது. இவை கலந்திருப்பதால் இந்நூல். நல்விருந்தாக விளங்கும். 'எழுந்திரு' என்ற பாடலின் எளிமை என் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது."

மு. வரதராசன்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மனத்துக்கு மனம் | 7 |
| 2. | கடந்துவந்த வாழ்க்கைச் சுவடுகள் | 16 |
| 3. | தற்குறிப்பும் குடும்பமும் | 63 |
| 4. | நூல்கள் | 69 |
| 5. | கட்டுரைகள் | 76 |
| 6. | நினைவில் நிற்கும் நிகழ்வுகள் | 85 |
| 7. | குறிப்பிடத் தக்க பணிகள் | 129 |
| 8. | வெளிநாடுகளில் தமிழ்ப்பணி | 132 |
| 9. | தமிழ்வழிக் கல்வி | 134 |
| 10. | பொது | 141 |
| 11. | முனைவர் பட்டம் பெற்றோர் | 143 |

# மனத்துக்கு மனம்

என் வாழ்க்கை எனக்குக் கற்றுத் தந்த பாடங்களை உங்களுக்குச் சொல்லப் போகின்றேன். பிறருக்கும் ஓரளவேனும் படிப்பினை ஆகுமோ என எண்ணித் தேர்ந்தெடுத்தே எழுதுகின்றேன். நடந்துவந்த பார்வையைத் திரும்பிப் பார்க்கும்போது, இன்பமோ துன்பமோ, கடந்துவந்து விட்டோமாதலால், எனக்கு நானே மன நிறைவு கொள்ளும் தன்னலமும் இதிலுளது. இவற்றுள் சிலவேனும் உங்களுக்குப் படிப்பினை ஆகலாம்; மன ஆறுதல் தரலாம்; அல்லது என்னைப் பற்றி நன்றோ அன்றோ ஒரு கருத்துரு ஏற்படலாம்.

'மனம் போல் வாழ்வு' – என்பது மிக நுட்பமான, ஆழமான பழமொழி. மன வாழ்வு தான் பெருவாழ்வு; நேரில் காணும் உயிர் வாழ்வு அம் மன வாழ்வின் ஒரு சிறு கூறேயாகும்.

ஒரு நாள் உயிர் வாழ்வில் மனம் ஆயிரம் கனவுகளில் மிதக்கும். அதற்குக் காலமும் இடமும் இல்லை. நாம் இங்கே இருக்க, அது எங்கோ சென்று விடும்; கல்வி கற்ற நாளை எண்ணிப் பார்க்கும்; பறக்கும்; தடுமாறும்; திரும்பி வரும்; போகும்.

நேரில் காணும் உயிர் வாழ்விலும் கட்புலனாகாத மன வாழ்விலும் மிகமிக உயர்வானவையும் உண்டு; கீழ்வானவையும் உண்டு. இரண்டற்கும் இடைப்பட்டது – சமனிலைப்பட்டது – மறக்க வேண்டிய வேண்டாதவற்றை விடுத்து, வெளிப்படுத்த வேண்டியவற்றை மட்டுமே வெளிப்படுத்துவது மனித இயல்பு.

மிகவும் சிந்தித்தால் உண்மையான வாழ்க்கை புற வாழ்க்கையன்று; அகமன வாழ்க்கையே.

மனத்தால் வாழ்வதென்பது நுண்பொருள் வாழ்வு. குடிவழித் தொடர்ச்சியுடையது அது; பழகும் இனவழிப் பாதிப்பு உடையது அது; சுற்றுச் சூழல் சார்புடையது அது; திருவள்ளுவர் இவற்றை மன நலம் இனநலம் என்பார். சிலரது பண்புகள், எண்ணங்கள், கற்பனைகள், இயல்புகள் வாழும் முறைகள் அவர்களின் 'பாணி' யிலேயே தொடர்கின்றன; சுழல்கின்றன.

மனித உயிரணுக்களில் – மரபணுக்களில் (DNA) இவை பதிவாகின்றன. புறவாழ்வைவிட, அகமன வாழ்வே அழுத்தமாய்ப் பதிவாகிறது.

மனம் மூன்றடுக்குக் கொண்டதென்பர், சிக்மண்ட் பிராய்டு. ஆழ்மனம், நடுமனம், மேல் மனம். நமக்குத் தெரிவதெல்லாம் மேல்மனம் மட்டுமே; ஒருவர் வெளியே நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்து, அவைதான் அவர் என்று முடிவு செய்கிறோம். எனினும் இப் புறவாழ்வை ஒரு 'நாடகம்' எனலாம். நமக்கென்று அமைந்து விட்ட 'பாத்திரத்தை' நாம் நடிக்கின்றோம். எனினும் உள்மனம், ஆழ்மனம் எதை நினைக்கிறதோ, அதுதான் நம்குருதியிலுள்ள மரபணுவில் பதிவாகி, நம் மக்களுக்கு, பேரனுக்கு என்று இவ்வாறு தொடர்கிறது. ஏழு பிறவிக்கும் தொடரும் என்பது வள்ளுவம்.

பெருஞ்செல்வர் ஒருவர், அழகிய பொருளைக் கண்டால் திருடிவிடுவார். மாடு மேய்த்தவன் மாவட்ட ஆட்சியர் ஆகிவிடுவான். ஏழுவயதுப் பையன் மிகப்பெரிய இசைஞானி ஆகிவிடுகிறான். இதில் ஏதோ மரபணுத் தொடர்ச்சி இருக்கிறது. 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்'; 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்ற குறளுக்கெல்லாம், இம்மரபணுத் தொடர்ச்சியைக் கொண்டு பார்த்தால்தான், அவற்றின் உண்மைப் பொருள் விளங்கும்.

'மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்' – என்ற குறளில் மனம் தூயவர்களுக்கு நல்ல பிள்ளைகள் பிறக்கும் என்று கூறுகிறார், திருவள்ளுவர். இதில் மிகச்சிறந்த, அரிய அறிவியலுண்மை அடங்கிக் கிடக்கிறது.

வெளியே நல்லவர்போல் நடித்து, உலகை ஏமாற்றி விடலாம் என்று நினைப்பவர்கள், திரும்பத் திரும்பப் படிக்க வேண்டிய திருக்குறள் இது.

**மனப்பயிற்சி**

**மனப்பக்குவம்**

மனிதன் என்பதற்கும் மனம் என்பதற்கும் ஒரு தொடர்ச்சியுளது.

மனப் பயிற்சியால், மன அழுக்கை நீக்கலாம். உடலில் அழுக்குச் சேர்வதுபோல், மனத்திலும் அழுக்குச் சேரும் என்று எச்சரித்தவர், திருவள்ளுவர். 'நெஞ்சத்து அழுக்காறு' என்றும், 'அழுக்காறு என ஒரு பாவி' என்றும் அவர் கூறுவார். நாள்தோறும் உடலைத் தூய்மைசெய்து, வலிமைப்படுத்தி, நலமாக வாழமுனைவதுபோல, மனத்தையும் அவ்வப்போது தூய்மைப் படுத்த வேண்டும்.

சமயங்கள் மனத்தைத் தூய்மைப்படுத்தி, பக்குவப்படுத்தத் தோன்றியனவே. வழிபாடு – என்பது மன வலிமையைப் பெருக்குவது. பக்திப் பாடல்கள் என்பன மனக் கவலை தீர்க்கும் மருந்துமாகும். அண்மையில், கொலம்பசு நகரில் (U.S.A) தமிழ்ச்சங்கத்தில், என் மகன் மணிவண்ணன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் 'இலக்கியம் – மன அமைதி தரும் மருந்து' என்று பேசினேன்.

நாம் சமயம், கோவில் வழிபாடு எல்லாவற்றையும் கெடுத்து 'புண்ணிய வாணிக' நிறுவனங்களாக்கிவிட்டோம்.

பரிகாரத்தால் தோசத்தை, பாவத்தை, தீங்கைப் போக்கிவிடலாம் என்று நூறாயிரம் பரிகாரங்கள் இந்து சமயத்தில், வடமொழியாளர்களால் புகுத்தப்பட்டுவிட்டன. அதனால் இந்திய நாடே, மனப்பக்குவ வழியைக் கைவிட்டு, குறுக்குவழியில் திரும்பிவிட்டது 'அழுதால் அவனைப் பெறலாமே' என்பது வெறும் புறப்பேச்சாகிவிட்டது.

மனப் பயிற்சியால் மனத்தில் சேரும் அழுக்கை நீக்கலாம்; வாழ்வைத் திருப்பலாம்; விரும்பிய இடத்திற்கு, வெற்றிக்கு அழைத்துப் போகலாம்.

உடற்பயிற்சி போல மனப்பயிற்சி செய்வார், வாழ்க்கையில் வெற்றி பெறுவர்.

ஒரு தந்தை மகனுக்கு மாடு மனை வீடு செல்வம் என எத்தனை சேர்த்தாலும் அவை அனைத்தையும் கை மாறலாம்; இழக்க நேரலாம்; அவையே அவனுக்குக் கேடாகவும் ஆகலாம்.

தனது உடைமையாய், வழியினர்க்குத் தாமே சென்று சேர்வன, மனவுணர்வு நிலைகளே.

மனத்தால் உணரப்படுவன பல, மன வழியாலேதான் மற்ற மனங்களால் உணரப்பட்டு, மனத்துக்கு மனம் உலகெங்கும் உணரப்படுகின்றன. 'வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல' என்பது காதலுக்குமட்டுமன்று, வேறு பல நிலைகளிலும் பொருந்திவரும். ஒரு தந்தை, தாய் சொல்வன, கற்பிப்பனவற்றை விட அவர்கள் நடந்து கொள்வன, காண்பன, உண்பன, உடுத்துவன, பழகுவன, சிரிப்பன, அழுவன போல அவர்தம் நடைமுறையை மௌனமாய்க் கண்டுகண்டு – கவனித்துக் கவனித்தே பிள்ளைகள் பெரிதும் உருவாகின்றனர். அங்கும் மன உணர்வு நிலைகளே இடம் பெயர்கின்றன. அவை அங்ஙனம் இடம்பெயர உதவுவனவே புறத்தோற்ற வாழ்வு நடைமுறைகள்.

என் வாழ்க்கையில் யான் பெற்ற பாடங்கள் பல; படிப்பினைகள் பல. அவை சில மற்றவர்க்கும் பயன்படலாம்; மன ஆறுதல் தரலாம்.

எப்பொழுதோ, யாரோ எழுதிய இலக்கியங்களுடன் எல்லாம் மனத்தால் உணர்ந்துதானே உறவாடுகின்றோம். அம்முறையில், என் எழுத்தின் மூலம், என்பால் அன்புடைய தங்களுடன் மனத்துக்கு மனம் உறவாட விழைகின்றேன்.

### வாழ்க்கை ஒரு கட்டமைப்புடையது

உலகில் ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு விதக் கட்டமைப்புடையது.

சிலர் வாழ்வில் நேரும் நிகழ்வுகள் ஒரு தன்மையாய் நடைபெறக் காணலாம். ஒரே மாதிரி இவை – வெற்றியோ, தோல்வியோ; ஏமாற்றமோ எழுச்சியோ; பழகுதலோ பகைத்தலோ எல்லாம் ஒரே பாணியில் நடக்கக் காணலாம். 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்பது கலித்தொகை. அவரவர் இயல்பு என்பது வேறுவேறாக இருக்கும். அதை அறிந்து அவருடன் பழகுதல் வேண்டும்.

ஒருவனது அகமன உணர்வுகளுக்கு ஒரு தனித்தன்மை இருக்கும். விட்டுக் கொடுப்பது, அடிதடியில் இறங்குவது, சிரித்த முகமாக இருப்பது, சீறி விழுவது, வருமானம் தேடுமுன் வருவது, வந்ததும் கைவிட்டுப் போவது என இவ்வாறு சிலருக்கு வாழ்க்கை நடைமுறை அமைந்துவிடுவதுண்டு.

உணவை வெவ்வேறு விதமாகச் சமைப்பது போல், பண்புகளும் இயல்புகளும் ஆளுக்கு ஆள் வெவ்வேறு விதமாகச் 'சமைக்கப்' படுகின்றன.

ஐம்பூதச் சேர்க்கையின் பலவித உருமாற்றங்களே உலகப் பருப்பொருள்கள், மக்கள் உடல் மண்ணாலானதுதான்; உயிர் வானம் போன்றது. ஏனைய மூன்று 'பூ'தங்களாம் காற்று, நீர், நெருப்பு, இவற்றாலானதே உடம்பு. திருவள்ளுவர், 'வளி முதலா எண்ணிய மூன்று' என்றது இவைதான். இவ் ஐம்பெரும் 'பூ'தங்களின் மாற்றங்கள், கலவைகளால் இப் 'பூ'வுலகம் 'பூ'த்துளது. 'நிலம் தீ நீர் வளி விசும் போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' (1589) என்பார், தொல்காப்பியர்.

மனம் எனும் நுண்பொருளின் பலவகைக் கருத்தோட்டங்களும், இவ்வாறான 'கலவை'களின் நுண்ணுருவாக்கமே. இதனால் ஒவ்வொருவர் வாழ்வும் ஒவ்வொரு வகைப் 'பாணி'ப்பாக அமைந்துவிடுகின்றன.

என் வாழ்க்கை அமைந்த விதம் தனிப்பாணிப்பாகும். அதனையே நினைத்துப் பார்க்கின்றேன்.

ஒரு நன்மை வரும்; உடனே தொடர்ந்து தீது வரும். நல்லது வருதற்கான அறிகுறியே இராது; ஆனால் எதிர்பாராது அது தேடி வரும்.

ஒன்று தவறிப் போகும்; அதன்பின் அது இருமடங்கு நன்மையாக மாறும்.

பணம் இல்லையே எனும் உச்சத்திற்குப் போகும் போது, மறுநாளே பணம் வரும். நாடகத்திற் போலச் சிக்கல் உச்சத்திற்குப் போய், உடனே மாறும்.

சிறு உயர்வுக்கே மிகப் பெரிய பொறாமைச் சூழல் உருவாகும். நாம் எத்தீங்கும் செய்யாதிருக்கவும், ஒருவர் நமக்குத் தீங்கு செய்வதிலேயே குறியாக இருப்பார்.

நம்பியவர், நன்மை செய்து கொண்டவர் தட்டி விடுவார். ஆனால் எங்கிருந்தோ, யாரிடமிருந்தோ, முன்பின் தெரியாதவரிடம் இருந்து நன்மையும் பெருமையும் தேடி வந்து சேரும்.

இந்த இன்பதுன்பச் சுழற்சி என் வாழ்வில் போல, வேறு சிலரிடம் இருக்கலாம். இது ஒரு புதுமையான அனுபவம். துன்பம் வந்துவந்து பழகிப்போகிறது; பின்பு அதிலும் இன்பம் காணுமாறு மனம் பக்குவப்பட்டு விடுகிறது.

**மகா கவிகள் வாக்கு :** எழுதுகோல் தெய்வம்; இந்த எழுத்தும் தெய்வம்! செய்யும் தொழிலே தெய்வம்!

கடின உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும். நான் என் வீட்டில் சொல்வேன், "தெய்வம் நமக்கு அளந்து கொடுக்கிறது, அள்ளிக் கொடுப்பதில்லை", என்று.

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

ஒரு முறை முப்பது நாள் இரவு பகல் பாராது எழுதியபடி இருந்த பொழுது, இருந்த இருக்கையில் இரத்தம் கசிந்து வந்து விட்டது. ஆனால் அந்நூல் விற்பனையால் 'கூலி' கூடுதலாகக் கிடைத்தது.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்

என்பதும் என் வாழ்வில் நான் அடைந்த பேறுதான்! உயர்நிலைப் பள்ளிப் பணியிலிருந்த போதே ஏழு நூல்கள் எழுதினேன். ஒப்பிலக்கியம் பாடம் எடுத்ததாலும் முனைவர் பட்டத்திற்குச் சங்க இலக்கியத்தை ஆராய்ந்ததாலும் நூல்கள் பல எழுதலானேன். பணியும் எழுத்துமே என்னை வாழவைத்தன. புகழ்பெற்ற தொல்லியல் நிபுணர் ஐராவதம் மகாதேவனும் என் அன்புக்குரிய தம்பி இராம. திரு. சம்பந்தமும், 'தினமணி'யில் தமிழ்மொழி பற்றியும் தமிழ்வழிக் கல்வி இயக்கம் பற்றியும் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுத வாய்ப்புத் தந்து, என்னை உலகிற்கு அறிமுகப்படுத்தினர்.

மதுரை வானொலியில் முனைவர் சுந்தர ஆவுடையப்பன் என்ற என் அருமை மாணவருடன் 'பழகுதமிழ் அறிவோம்' என்று 50 வாரங்கள் உரையாடினேன்.

கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், அணிந்துரைகள், வானொலிகளில் (திருச்சி, மதுரை, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சிங்கப்பூர்) மிகுதியாக உரையாற்றிய வாய்ப்புக்கள் என எண்ணிப் பார்க்கும் போது எழுத்தும் பேச்சுமே வாழ்வாக இருந்தது போல் தோன்றுகின்றது. கவிதைகள் சிலவேயாயினும், இன்று படிக்கும் பொழுது வெளியிடத் தோன்றுகிறது. 101 அடிகளாலான, அன்னை மீனாட்சி பற்றிய பாடலுக்காக, முதன்முதல் முதற் பரிசுபெற்றேன். பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் மூன்று முறை கவியரங்கேறினேன். எனது 'மறை மலை அடிகள் பிள்ளைத் தமிழுக்கு' ஆறுதல் பரிசு கிடைத்தது. நான் தொகுத்த தாலாட்டு நூலும் அதிலுள்ள யான் எழுதிய தாலாட்டுப் பாடலும் புகழ் தேடித்தந்தன. திருச்சி வானொலியில், கலைஞர் தலைமையில், ஒரு பொங்கல் கவியரங்கில், 'செல்வம்' பற்றி யான் பாடியது, தில்லி வானொலியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாத் தொடர்பான 'சர்வ பாஷா கவி சம்மேளனம்' என்னும் கவியரங்கிற்குத் தேர்வு செய்யப்பட்டு, அங்கு சென்று பாடினேன். அது இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்து ஒலிபரப்பப்பட்டது. செல்வம் என்னும் காதலியே என்று அது சில பாட நூல்களிலும் இடம் பெற்றது.

கவிதைகள் இனித்தான் தொகுக்கப்படவேண்டும். இந் நூலில் இயன்ற வரை முயன்று, நினைவிலிருந்தனவும் கிடைத்தனவும் மட்டும் குறிக்கப்பட்டுள்ளன.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பிறருக்கு வேலை தர நிரம்ப வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஒரு முறை அஞ்சல் வழிக் கல்வித் தமிழ்த்துறைக்கு ஒரே நாளில் ஆறுபேர் சேர்க்கப் பெற்றனர். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் குறைந்தது இருவருக்கேனும் இடம் பெற்று விடுவேன். சிறப்பு நிதியுதவித் திட்டம் (DSA - Programme) என்பதை, நல்கைக் குழுவில் (UGC) முயன்று பெற்றதால், சிலருக்கு நல்ல வேலை வாய்ப்புக்கள் தரமுடிந்தது. இந்தியப் பொதுப்பணி ஆணையத்தில் (UPSC) இந்திய அளவிலான வேலை வாய்ப்புக் குழுக்களில் இடம் பெற்றமை; பல்கலைக் கழக நல்கைக் குழுவில் (UGC), தற்கால மொழிகளின் ஆராய்ச்சிக்கான நிதியுதவிக் குழுவில் இரண்டாண்டுகள் இடம் பெற்றமை; மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், ஓய்வு பெற்ற பெரும் பேராசிரியர்களுக்கு ஓய்வு பெற்ற பிறகும் பணிதரும்படியான தமிழியற் புலத்தில் அறிஞர்களை அமர்த்தும் வாய்ப்புப் பெற்றமை, சாகித்திய அக்காதெமி, ஞானபீடம், தமிழக அரசின் குறள்பீடம் போன்றவற்றிலும் தமிழ்ப் பல்கலைக் கழக இராசராசன் விருது தரும் குழுவிலும் இடம் பெற்றமை; சிங்கப்பூரிலும் சிறந்த நூலுக்குப் பரிசு தரும் குழுவில், தமிழுக்குத் தலைமை நடுவராக்கப் பெற்றமை என இவ்வாறு பல நற்பேறுகளை அடுக்கிக் கூறலாம். “இறைவன் பிறருக்குக் கொடுக்கிற இடத்தில் வைத்த அளவு, பெறுகிற இடத்திலும் உங்களை வைக்கவில்லையே’ என்று, அடிக்கடி என் மனைவி கூறுவாள். பெறுவதை விடக் கொடுப்பது மேலானதுதானே என்று அவளுக்கு எடுத்துக் கூறுவேன்.

புகழ்பெற்ற அறிஞர்கள் திருக்குறள் மூல நூலை மாற்றித் திருத்தி மறுகோலம் செய்வது தவறென்று பட்டது. ‘தீக்குறளை சென்றோதோம்’ என்று ஆண்டாள் நாச்சியார் திருக்குறளைப் படிக்காதீர் என்று, சமய வேற்றுமையால் பாடி விட்டார் எனலாமா? ‘தமிழ் இலக்கணம் கூடத் தெரியாமல்’ இப்படியா எழுதுவதென்று மனம் வருந்தியது. இவை தவறென்று உடனுக்குடன் எழுத நேர்ந்தன.

இன்று தமிழகத்தில் மிகுபுகழ் பெற்ற பெரியோர் பலர் இத்தகைய செயல்கள் தவறென்று ஒரு சொல் கூடக் கூறாததைக் காணும் போது, நம் காலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் இல்லையே என வருந்த நேரிட்டது.

தொல்காப்பியத்தை, தமிழர் இலக்கியப் பண்பாட்டு இலக்கணக் கருவூலத்தை, முற்றிலும் சிதைத்து வெளியிட்டது. மாபெருந்தவறு எனக் குறிப்பிட நேர்ந்ததைக் கேட்டுப் பகைக்கலாமா? அவ்வாறு தவறு செய்தவர்களை அல்லவா கடிதல் வேண்டும்.

கம்பராமாயணத்தைத் திருத்தி வெளியிட்ட போது, 'இவ்வாறு திருத்தி, இவைதான் கம்பன் செய்யுள்' என்று அச்சிட்டு வெளிப்படுத்தியவர்களை, "இந்தக் கொம்பன் யார் என்று கேட்க ஆளில்லையா, புலவர் கூட்டந்தன்னில்' என்று தம் சீற்றம் முழுவதையும் கொட்டினார்', பாவேந்தர் பாரதிதாசன். திருக்குறளைத் திருத்தியதாகக் கேள்விப்பட்டதும், அவை அனைத்தையும் வாங்கி குப்பைக் குழியில் போட்டு எரித்துவிட்டார், பாண்டித்துரைத் தேவர்.

ஆங்கில வழிப் பள்ளிகள் பல ஆயிரமாக வளர்ந்து, அரசின் ஏற்பிசைவு பெற்றும் பெறாதும் கல்வி வாணிகம் செய்து தமிழை ஒரு பாடமாகக் கூடக் கற்பிக்காமல் கை விட்டனர். இன்று தமிழில் எழுத்தும் எண்ணும் சொற்களும் தெரியாமல் பல நூறாயிரம் குழந்தைகள் படித்து முடித்துப் பெற்றோர்கள் ஆகிவிட்டனர். இந்நிலையில் தமிழ் வீட்டிலும் பேச்சிலும் ஊடகங்களிலும் கலப்படமாகிப் படிப்படியாக அழிந்து கொண்டு வருவது, தொலை நோக்குப் பார்வையினர்க்கு விளங்குகிறது.

இந்நிலையில் 'எழுத்துச் சீர்திருத்தமே' கூடாது. மேலும் திருத்தத் தொடங்கினால், தமிழும் பழந்தமிழ், புதுத் தமிழ் என இரண்டாவதுடன், ஏற்கெனவே பயன்பாட்டில் குறைந்து வரும் தமிழை அழிவு நோக்கி விரைந்து செலுத்துவதாக அமைந்துவிடும். எவ்வளவு பெரியவர்களாயினும் தமிழைக் கற்றறிந்து அதனையே வாழ்வாகக் கொண்ட தமிழறிஞர்களைக் கலந்து ஆராயாமல் தாமே முடிவு செய்வது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

தெளிவான மொழிக் கொள்கை ஒன்று வேண்டும். பிற மாநிலங்களில் சட்டமியற்றாமலே, மரபு வழியில் தாய்மொழிகள் காப்பாற்றி வளர்க்கப் படுகின்றன.

பொதுமக்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு விட்டனர். கணினிப் பயிற்சி மூலம், வேலை வாய்ப்புக் கிடைத்து, வருமானம் ஈட்ட வாய்ப்புளதால், இன்றைய இளைஞர்குழாம் முற்றிலும் தமிழை இழந்து வருகின்றது.

தெளிவானதொரு மொழிக் கொள்கையை வகுத்துச் செயற்படுத்தினாலன்றி, தமிழைக் காப்பது அரிதினும் அரிதேயாகும். தமிழ் செம்மொழி ஆகிவிட்டது – என்பது, மங்கலமல்லாச் சொல் ஆகிவிடக் கூடாது என்பதே நம் கவலை.

சிங்கப்பூரில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் நான்கும் தேசிய மொழிகள். அங்கு ஓர் கட்டிட எச்சரிக்கை அறிவிப்பில் கூட, ஆங்கிலம் சீனம் மலாய் தமிழ் நான்குமிருக்கும். இத்துணைப் பெரிய இந்தியத் துணைக் கண்டத்தின் தேசிய மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, வங்காளம், குசராத்தி, மராத்தி எனும் இந்தியப் பெருமொழிகள் எட்டினையும் ஆங்கிலத்துடன் சேர்த்து, ஒன்பதையும் சமனிலையில், சம உரிமை கொடுத்து வளர்ப்பதே இந்திய ஒருமைப் பாட்டைக் காக்கும். சிங்கப்பூர் போல இந்த 9 மொழிகளில் சமன்பாடு, பேணுவது கடினமாகாது.

பழைமை மிக்க செம்மொழிகளாய், ஏனைய இந்திய மொழிகளுக்கெல்லாம் உதவிய தமிழையும் சமஸ்கிருதத்தையும் சமமாக மதித்து, நிதி உதவ வேண்டும். இவ்வாறான ஒரு கொள்கையைப் பற்றி, அழுத்தமாக எழுதவும் பேசவும் நேர்கிறது. எனவே 'யாரொடும் பகை கொள்ளலன் யான்' என அறிவிக்க விழைகின்றேன்.

எய்தற்கு அரிய இயைந்தக்கால், அந்நிலையே
செய்தற்கரிய செயல்.

வள்ளுவர் கூறுவது போல், உயிர்க்கு ஊதியம் இரண்டுள. ஒன்று ஒளி; மற்றது புகழ். ஒளி - வாழுங்காலத்து உளதாவது. புகழ் - வாழ்ந்து மறைந்த பிறகும் நிலையாக நீடித்து நிற்பது. நமக்கு ஒளியும் வேண்டும்; ஆனால் அது மட்டும் போதுமா என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**தமிழண்ணலின்**

**82ஆம் பிறந்தநாள் விழா**

30.8.2009 அன்று, மதுரை புரட்சிக் கவிஞர் மன்றத்தின் சார்பில்
மணியம்மை மழலையர் பள்ளியில் நடைபெற்றது.
மன்றத்தலைவர் <u>பி.வரதராசன்</u> வரவேற்றார்.
காந்திய நெறிச் செம்மல் <u>க.மு.நடராசன்</u> தலைமை ஏற்றார்.
மாண்புமிகு அமைச்சர் <u>சி.நா.மீ.உபயதுல்லா,</u>
முதுமுனைவர் <u>இளங்குமரன்</u>
பாராட்டுரை வழங்கினர். சான்றோர் பலர் வாழ்த்திப் பேசினர்.

## கடந்து வந்த வாழ்க்கைச் சுவடுகள்

ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை இளி ஒருவற்கு
அஃது இறந்து வாழ்தும் எனல் (குறள் 971)

ஒருவனுக்கு செயற்கரிய செய்யும் ஊக்கமிகுதியே ஒளியாகும். ஊக்கத்துடன் அரியவற்றைச் செய்யாது எப்படியாவது வாழ்க்கையைக் கடத்துவோம் என்பது அவனுக்கு இளிவரலாம் அவமானத்தைத் தரும்.

நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது (குறள் 235)

ஒரு கொள்கையுடன் வாழ்பவனுக்கு வரும் கேடு கேடாகாது, அதுவே ஆக்கமாகும். அவனது சாக்காடு இறப்பதாகாது, அதுவே புகழுடம்புடன் இறந்த பின்னும் வாழ்வதாகும். நிலையாதனவற்றான் 'நிலையின எய்துவார் வித்தகராகலின்', 'வித்தகர்க்கல்லால் அரிது என்றார்', என்பது பரிமேலழகர் விளக்கம்.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (தொல். கற்பியல் 1135)

இல்லறத்தில் விருப்பங்கள் அனைத்தையும் நல்வழியில் நுகர்ந்து அனுபவித்து நிறைவெய்திய அகவையில் கணவனும் மனைவியும் என்ன செய்ய வேண்டும்? நற்பண்புள்ள சிறந்த துணையான, மக்களுடன் கூடி வாழ வேண்டும். அறநெறியில் வாழும் சுற்றத்தார், நண்பர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும். இறுதிக் காலத்தில் குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு உலகில் நல்லன எனப்படும் எல்லாப் பொதுப்பணிகளையும் கடமையாகச் செய்து வாழ்தலே, இவ்வளவு காலம் உலகில் வாழ்ந்ததன் பயனாகும்.

இன்பம் துன்பம் என்ற சொற்கள் அவை இரண்டுக்குமிடையே பெருத்த வேறுபாடில்லை என்பதையோ, அவை மாறிமாறி அமைவன - அடுத்தடுத்து வரக்கூடியன என்பதையோ காட்டுகின்றன.

# சான்றோர் நண்பர்கள்



அமெரிக்காவில் தமிழண்ணல் இணையருடன் ஈரோடு தமிழன்பன்




தமிழண்ணலும் மோகனும்

# சான்றோர் நண்பர்கள்




தமிழண்ணல் திறக்குறட் செம்மல் மணிமொழியனாருக்குப் பொன்னாடை அணிவித்தல்



சோமலெ பற்றி இரா. மோகன் எழுதிய நூல் வெளியீட்டு விழா. அமைச்சர் காளிமுத்து வெளியிடுகிறார். மணிமொழியனார் பெற்றுக் கொள்கிறார். ரா. சொக்கலிங்கம், ச. மெய்யப்பன், இரா. மோகன், சோமலெ சோமசுந்தரம், நிர்மலா.

# குடும்பம்



தமிழண்ணல் - சிந்தாமணி தமிழண்ணல்



தமிழண்ணல் குடும்பத்தார் கத்தப்பட்டு குலதெய்வக் கோயில்
தமிழண்ணல் (75) பவளவிழா

# குடும்பம்



தமிழண்ணல் சிந்தாமணி மகன்கள் கண்ணன், சோலையப்பன், மணிவண்ணன்



மகள்கள் அன்புச்செல்வி, முத்து மீனாள், கண்ணம்மை

# மணி விழா



மணிவிழாவில் தமிழண்ணல் மனைவிக்கு மாலை அணிவித்தல்



தவத்திரு குன்றக்குடி அடிகளார் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோருடன் தமிழண்ணல்

# மணி விழா



கவிப்பேரரசர் 'மீரா' வரவேற்கிறார்



மீனாட்சி புத்தக நிலையம் செ. செல்லப்பன் வாழ்த்துகிறார்

# மணி விழா



அண்ணன் முடியரசனுக்குத் தம்பி பொன்னாடை அணிவித்தல்



தமிழண்ணலும் பி. வரதராஜனும்

# சிறப்புக்கள்



'மீனாட்சி' பொற்கிழி பரிசுப் பாடலை தமிழண்ணல் கலைஞர் தலைமையில் அரங்கேற்றுகிறார்



பேராசிரியர் முன்னிலையில், தமிழண்ணலுக்குக் கலைஞர் திரு.வி.க. விருது வழங்குகிறார்

# சிறப்புக்கள்



சிறந்த நூற்பரிசுக்கு எம்.ஜி.ஆர். தமிழண்ணலுக்கு பரிசு வழங்குகிறார்



மறைமலையடிகள் பிள்ளைத் தமிழுக்குத் தமிழண்ணல் பரிசு பெறுகிறார்

# சிறப்புக்கள்



கம்பன் கழகச் சார்பில் திருமதி இராசேசுவரி அம்மையார் தமிழண்ணலுக்குச் சிறப்புச் செய்கிறார்



மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை தமிழ்ப்பேரவைச் செம்மல் பட்டத்தை கல்வி அமைச்சர் க. அன்பழகனிடமிருந்து பெற்றுக்கொண்ட தமிழண்ணல், மா. நன்னன். உடன் (இடதுகோடி) பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு. ஆளுடையபிள்ளை.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழண்ணலுக்கு, பேரவைத் தமிழ்ச் செம்மல் விருதைப் பேராசிரியர் க.அன்பழகன் வழங்குகிறார்.

# நூல் வெளியீடு

## கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' நூல் வெளியீடு




சென்னை அண்ணா அறிவாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' நூல் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) பேராசிரியர் நன்னன், சாலமன் பாப்பையா, நூலின் முதல் பிரதியைப் பெற்ற மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, நூலை வெளியிட்ட பேராசிரியர் தமிழண்ணல், திமுக பொதுச் செயலர் க. அன்பழகன், நூல் ஆசிரியரும், திமுக தலைவருமான மு.கருணாநிதி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிஞர்கள் அப்துல் ரகுமான், வாலி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அவ்வை நடராசன்.

கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா வெளியீடு



நெற்குப்பை வைகாசி விசாகத் திருவிழாவில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, சிறுவனுக்குப் பரிசு நல்குதல் மெ. சுந்தரம் அருகில் உள்ளார்.

# நூல் வெளியீடு



குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தலைமையில் கோவிலூர்த் திருமடத்தின் சார்பாக சீர்வளர்சீர் நாச்சியப்ப அடிகளார் பதிப்பித்த சங்க இலக்கியம் மக்கள் பதிப்பு தில்லியில் வெளியீடு



82ஆம் பிறந்தநாள் விழா தமிழக அமைச்சரும் சான்றோர்களும்

இது போல முதலெழுத்து மட்டும் மாறும் நூறு சொற்களை எண்ணிப் பார்த்தேன். அவற்றுள் என் வாழ்க்கைக்குப் பொருத்தமுடையன சில. அவை எழுதல் விழுதல், போற்றுதல் தூற்றுதல், புகழ்ச்சி இகழ்ச்சி, கெடுதலை விடுதலை, இசை வசை, இணக்கம் பிணக்கம், நல்லது அல்லது எல்லாம் நான் அடிக்கடி ஆழமாக அனுபவித்தன.

எல்லோர் வாழ்விலும் இவை சிலசில நிகழ்பவைதானே என்பீர்கள். ஆனாலும் என் வாழ்க்கையில் மிக ஆழமாகப்பதிந்தன. இவை என்னைப் பாதித்ததும் உண்டு; எனக்கு வாழ்வின் உண்மைகளைப் போதித்ததும் உண்டு.

**அரிதரோ இளமை தரற்கு!**

ஓர் ஓட்டப் பந்தயத்தில் குறிப்பிட்ட தூரம் ஓடியதும் தடை ஏற்பட்டு நின்றுவிடலாம்; அல்லது திரும்பி விடலாம்; தடைகளைத் தாண்டித் தொடர்ந்தும் ஓடலாம்.

பொதுவாக வாழ்க்கை என்பது தடை ஓட்ட ந்தான்; தொடரோட்டந்தான். மாரத்தான் ஓட்டந்தான்.

படிக்கும்போது என்னுடன் ஓடத் தொடங்கிய பலர் இடையே நின்றுவிட்டதுண்டு; மறித்துத் திரும்பிப் போய்விட்டதும் உண்டு; சிலர் திசை மாறிப் பிரிந்து போனதும் உண்டு. ஆனால் நான் இன்னமும் தொடங்கிய போது தொடநினைத்த திசை நோக்கியே ஓடிக் கொண்டிருக்கின்றேன். எண்பது, எண்பத்தொன்று, எண்பத்துஇரண்டு, மூன்று எண்ணிக்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா சொன்னதுபோல், "என் வாழ்நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால் ஆரஅமர அடி எடுத்து வைத்து நடக்கின்றேன்".

முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை (நற்.314)

அகவை முதிர்ந்தவர்கள் மீண்டும் இளமை பெறுவதற்காக, ஒரு முறை இறந்து மறுபடி பிறந்து வளர்ந்து இளமையைப் பெற இயலாது. அதாவது செத்துப் பிறந்து தவழ்ந்து வளர்ந்து, இழந்த இளமையைத் திரும்பப் பெற முடியாது. ஒருவரின் வாழ்நாளின் எல்லையளவை அறிந்தவர்களும் உலகில் இல்லை. இன்னநாளில் தம் வாழ்க்கைப் பயணம் முடியும் என்று யாருக்குத் தெரியும்?

**மனத்துக்கு மனம்**

இதனை உணர்ந்தவர் முனைவர் இரா.மோகன். அவர் ஒரு வகையில் எனக்கு மாணவர்; என்னைப் போல் மு.வ. வைத் தம் முன் மாதிரியாகக் கொண்டு வளர்ந்ததால் எனக்கு நண்பர்; இப்போது 'இன்னமும் உங்கள் தமிழ்ப்பணி நிரம்ப இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே இருப்பதால் எனக்கு வழிகாட்டி.

அகவை எண்பதைக் கடந்த போது, என் வாழ்க்கையை நானே திரும்பிப் பார்த்ததுண்டு; திரும்பத் திரும்ப நினைத்துப் பார்ப்பதுண்டு. அவற்றுள் நினைவில் நிற்கக் கூடிய மிகச் சிலவற்றை, என் நூல்களை வாங்கிப் படித்து என்னை வாழ்வித்து வரும் எண்ணற்ற வாசகர்களுடனும் மாணவர்களுடனும் பகிர்ந்து கொண்டால் என்ன என்று தோன்றியது.

அவற்றை 'மனத்துக்கு மனம்' எனக் காதோடு சொல்லி வைப்போம் என எண்ணினேன். 'ஒன்றிய உணர்ச்சியாலே' ஒற்றுமைப்பட்டவராதலாலே முனைவர் இரா.மோகன், 'உங்கள் வாழ்க்கையிலேற்பட்ட இன்றியமையாத, சுவையான, படிப்பினையான அனுபவ நிகழ்வுகளை மட்டும் தொகுத்து எழுதித் தாருங்கள். வாழ்க்கை வரலாறாக அல்லாமல் நிகழ்வுகளாக இருக்கட்டும்' என்றார். அவர் சொல்லிப் பல ஆண்டுகளாகியும் இயலாது போனது. இனி 'விடை பெறுங்காலம்' நெருங்குகிற வேளையில், மேலும் நீட்டித்தால் இயலாமலே போய் விடலாமென்பதால், ஒருவழியாக இப்பொழுது இது நிறை வேறுகிறது.

**வாழ்க்கை ஒரு 'கண்ணாமூச்சி' விளையாட்டு**

இன்பம் ஒன்று வரும் பொழுதே அதனுள் துன்பம் ஒன்று இருக்கும்; துன்பம் என்று நினைப்பதனுள்ளே இன்பம் ஒன்று பொதிந்திருக்கும். நம்பிக்கை வைத்த ஒன்றினுள்ளே ஏமாற்றம் ஒன்று உள்ளிருக்கும். எதிர்பாராது, கேட்காது, முயலாது பதவி, பட்டம் வரும். தகுதியுடையவரெனப் பிறரெலாம் கூறிய சில, 'கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமற் போகும்'. துன்பம் அளவு கடந்த உச்சிக்குப் போகும், மறுகணமே சற்றும் சுணங்காது அச்சங்கடம் விலகிப்போகும். முன் கோபம் மூள்வதால், சொல் செயல் தடுமாறும். பிறகு அதை நினைத்து மனம் வருந்தும்.

'நாளைக்கு என்ன செய்வது, பணம் தீர்ந்துவிட்டதே' என்பேன். வங்கியில் வேலை பார்த்த என் மகன் சோலையப்பன், 'அது தான் பணம் இல்லை என்றால், ஏதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது ஒரு நிறுவனத்திலிருந்து காசோலை ஒன்று வந்து விடுமே' என்பான். அவ்வாறே வரும். பணக்கவலை தீரும்.

அமெரிக்கா சென்றதும் என் மகன் மணிவண்ணன், 'அப்பா, இனி நமக்குப் பணக்கவலை வராது' என்றான். ஏனெனில் ஒவ்வொரு நாளும் நாங்கள் பட்ட மனக்கவலையை அறிந்தவன் அவன்.

என் மகன் தொல்காப்பியன் (ஏ) கண்ணன், எடின்பரோ பல்கலைக் கழகம் சென்றதும், 'எடுத்ததற்கெல்லாம் மனக்கவலைப்படுவதை' இனி விடுங்கள் என்றான்.

### உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு போராட்டம்

தொடக்க காலத்திலிருந்து என் உடலுக்கும் உள்ளத்திற்கும் பெரும் போராட்டம். என் உள்ளம் வலிது. எனக்கு இது இப்படித்தான் முடியும் என்று, முன் கூட்டி உணர முடியும். நமக்கு நாமே மருத்துவர்; நமக்கு நாமே கணியர் (சோதிடர்); நமக்கு நாமே ஆசிரியர்; நமக்கு நாமே வழிகாட்டி இவ்வாறு வாழ முடியும்.

நம் கண் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முனைகிறது. தூசி வருமுன் இமை மூடிக்கொள்கிறது! நம் உடல்கூட, அது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முனைகிறது. சாதாரணக் காய்ச்சல் உடலை நலப்படுத்திப் போகும் என்பார்கள்.

என் பெற்றோர்க்கு நான் 'கடைக்குட்டி'. என் உடல் மிகமிக மென்மையானது. இளம் பிள்ளைப் பருவத்தில் சொரிசிரங்கு, பல்லில் சீழ்வடிதல், இன்றைய மருத்துவ வசதி அன்றில்லை. வயிற்றினுள் நச்சுநீர் ஊறும் (Acidity); அதனால் வயிற்றுப்புண், தலைவலி, வாந்தி, மயக்கம். புளிச்ச நீர் வாந்தியாக வரும். கடிதாக உழைத்தால் மனம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டால் இந் நச்சுநீர் ஊறிவிடும். ஒருநாள் முழுவதும் குப்புறப் படுத்த படுக்கைதான். பத்துமுறை வாந்தி வரும். மதியம் உண்ட சோறு, இரவு பத்துமணிக்குச் செரிமானமின்றி, அப்படியே புளிச்சநீருடன் வெளிவரும். திரும்பத் திரும்ப வாந்தி, மயக்கம், பிறகு உறக்கம். மறுநாள் 'புதுமனிதனாகி' உழைக்க, படிக்க, எழுத ஆயத்தமாகிவிடுவேன். ஒரு மாதம், இரண்டு மாதமானால் அதே புளிச்சநீர் ஊறி, அத்தனை தொல்லைகளும் திரும்ப வந்து, பிறகு விட்டுவிடுதலையாவது ஒரு வாடிக்கை.

இதே போலத்தான் நன்மைகள் தேடிவரும்; தீமைகள் தேவையின்றி, நான் அதற்குக் காரணமாகாமலே, என்னைத் தாக்கிப் பார்க்கும்.

உடம்பும் ஒரு பழக்கத்திற்குட்டபட்டது; உள்ளமும் ஒரு பழக்கத்தில் ஊறி விடுகிறது. கணியன் பூங்குன்றன் பாடியதுபோல், 'வாழ்தல் இனிதென்று மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின் இன்னாதென்றலும் இலமே' என்பதொரு மனநிலை வாய்த்ததனால், எதுவும் என்னைப் பாதிக்கவில்லை.

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து...**

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர

என்று, திருப்பாவை பாடினார் ஆண்டாள் நாச்சியார்.

இதுபற்றி சொ.சொ.மீ. சுந்தரம் கண்ணதாசனுடன் ஒப்பிட்டு எழுதுகிறார். "கண்ண பெருமான் 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தவன்' - தேவகியின் பிள்ளையாகப் பிறந்து யாசோதையின் பிள்ளையாக வளர்ந்தவன். கவியரசரும் சிறுகூடல்பட்டியில் பிறந்து காரைக்குடிக்குப் பிள்ளை வளரச் 'சுவீகாரமாய்ப்' போனவர். விசாலாட்சி ஆச்சியின் மகனாய்ப் பிறந்து, தெய்வானை ஆச்சியின் மகனாய் வளர்ந்தவர்", என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

என் கதையும் இதுதான். கலியாணி ஆச்சி அளவு கடந்த பிள்ளைப் பாசம் உடையவராக இருந்தும் பிள்ளை இல்லை. என் பெற்ற தாயார் பார்வதி ஆச்சி. அவர்கள் இருவரும் நெருங்கிய உறவுடையவர்கள். எனக்கு இரண்டு அண்ணன்மார் இருந்ததால், என் பெற்ற தாயார் பார்வதியாச்சி, கலியாணி ஆச்சியிடம், 'கவலைப் படாதே, எனக்கு இனிப் பிறப்பது ஆண் குழந்தையாக இருந்தால், உன்னிடம் தந்துவிடுகிறேன். நீ வளர்த்துக்கொள்' என்று கூறியுள்ளார். அதன்படி நான் பிறந்த மூன்று மாதத்திற்குள்ளேயே, பெரிதும் கலியாணி ஆச்சி வீட்டில் வளரப் போய்விட்டேன். என் இருவழித் தந்தையர்க்கும் தெரியாமல், முன்கூட்டி நடந்துவிட்ட தாயர் ஒப்பந்தம் இது. எனக்கு ஆறேழு வயதுவரை, நான் பிறந்தது வேறு வீடு என்று சிறிதளவும் தெரியாது.

**தாய்த்தெய்வம்**

என் வளர்ப்புத் தாயார் கலியாணி ஆச்சி, யார் பிள்ளையானாலும் தன் பிள்ளைபோல் அன்பும் பரிவும் காட்டித் தூக்கி வந்து வளர்ப்பார்கள். தன் பிள்ளையாக என்னை ஏற்ற அவர்கள் கண்ணுள் கருமணிபோல் காத்து

வளர்த்தார்கள். என்னைத் தனியே போய், நண்பர்களுடன் விளையாட விடமாட்டார்கள். மிதிவண்டி ஓட்டும் பயிற்சிபெற அவர்களிடம் நான் பட்டபாடு பெரிது. என்னைச் செல்லமாக அழைக்கும் பெயரால், சிங்காரம் சிங்காரம் என்று கூவிக் கொண்டு, கண்மாய்த் திடலுக்கும் அவர்கள் தேடிவரும்போது எனக்கு வெட்கமாகவும் வெறுப்பாகவும் இருக்கும். ஆயினும் இன்றும் கலியாணித் தாயை நினைக்கும் போதெல்லாம், இவ்வுலகிடைக் கண்கண்ட தெய்வமாகக் காட்சி தருகிறார்கள். எனது 'புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலை அவர்களுக்கு காணிக்கை ஆக்கினேன்.

பல தொடர் பதிப்புகளைக் கண்டுவரும் அந்நூலில் யான் எழுதிய பாடல் இது.

கலியாணி மகனா என்று
கண்டவர் கேட்கும் போதில்
மல்குமே மகிழ்ச்சி! அம்மா!
மாட்சிமை மிக்காய்! என்றும்
வல்வழி அறியாய், கொண்டோன்
வாழ்வதற் காக வாழ்ந்தாய்!
நல்வழி ஒன்றே கண்டாய்!
நலிந்தனை அம்மா! அம்மா!!

தாய் செய்த நல்ல றங்கள்
தனயனைச் சாரும் என்று
சேய்களுக் கெல்லாம் சொல்லச்
சிறப்புற வாழ்கின் றேன்யான்!
வாய்மையே அறமே அன்பே!
வாழ்விக்கும் தெய்வமே! என்றன்
தாய்மையே அம்மா! அம்மா!!
தாளிணை வணங்கு கின்றேன்.

வேலையின்றி இருபதாண்டுகளுக்குமேல் வீட்டிலேயே இருந்துவிட்ட தன் கணவரையும், தன் பாசத்திற்குரிய பிள்ளையாகிய என்னையும் வாழ்விக்க, கலியாணித்தாய் பட்டபாடு சொல்லுந்தரமன்று.

**வறுமைப் பிடியில் வாடியது குடும்பம்**

இன்று சொன்னால் நம்பமாட்டார்கள். நான் வளர வந்த வீட்டில் மூவர் ஆண்மக்கள்; மூத்தவர் என் தந்தை இராமசாமி, என் தாய் கலியாணி ஆச்சிக்கு முப்பதாயிரம் 'பரிசம்' கொடுத்துத் திருமணம் ஆனதாம். இரண்டாமவர் காரைக்குடிக்குப் பிள்ளைவிடப்பட்டு, அங்கு திருமணமானது. வெள்ளை வெளேர் என்று அழகாயிருந்த அவருக்கே பெண் கிடைக்க வில்லை. வெள்ளையன் என்ற பெயருடன் இருந்த அவர், காரைக்குடிக்குப் போய் 'கோகலே' அருணாசலம் எனப் புகழுடன் வாழ்ந்தார். மூன்றாமவர் நாகப்பருக்குத் திருமணம் செய்ய இயலாத சூழலில், குடிகாரராகிக் குடும்பச் சொத்துக்களையெல்லாம் இழக்க வைத்துவிட்டார்.

என் தந்தையார் பருமாவில் 'மாந்தளை' எனும் ஊரில் ஐந்து கணக்கு 'கொண்டுவிற்கப்' போனாராம். ஒரு கணக்கு என்பது மூன்றாண்டு. என் தாயார், என் தந்தையார் பற்றிப் பல நூறு தடவை பெருமை பேசியன எல்லாம் இந்த 'ஐந்து கணக்கு' வெளிநாடு போன கதைதான்!

என்னைப் பிள்ளை கூட்டிய ஐந்தாம் வயதில் எனக்குச் சீரும் சிறப்புமாகக் 'காப்புக் கட்டுப் புதுமை' நடத்தினராம். மற்றபடி, எனக்கு விவரம் தெரிந்த ஆறேழு வயது முதல் - சுமார் இருபதாண்டுகளுக்குமேல் என் வளர்ப்புத் தந்தையார் வீட்டிலேயே இருந்ததுதான் தெரியும். காலணா சம்பாதிக்காமல் குடும்பம் எப்படி நடக்கும்?

போதாக்குறைக்கு அவர் வெளிநாட்டிலிருந்து வந்த போது, முதலாளியிடம் மூவாயிரம் கடன் வாங்கி, அதற்கு எங்கள் வீட்டு இடத்தை அடைமானமாக எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருந்தார், பிற சொத்துக்களை எல்லாம் சித்தப்பா நாகப்பர் யார்யாருக்கோ ரூபாய் இருநூறுக்கும், ஐந்நூறுக்கும் குடிவெறியில் எழுதிக் கொடுத்திருந்தார். என் தந்தையாரிடம் இடையிடையே சூதாடப் போகும் பழக்கமும் சென்னைக்குக் குதிரைப் பந்தயத்திற்குப் போகும் பழக்கமும் இருந்தன.

என் தாயார் கலியாணி ஆச்சிதான் நகைநட்டு, பண்ட பாத்திரம் அனைத்தையும் ஒவ்வொன்றாக அடைமானம் வைத்தும் விற்றும், குடும்பத்தையும் தாங்கி, என்னையும் திண்ணைப் பள்ளிகளில் படிக்க வழிசெய்தபடி இருந்தார்.

பிற்பாடு அவர்கள் அனைவரும் மறைந்தபிறகு, எனது நிலை சுழியம் ஆனது; 'நடுத்தெருவில் நான்' என்ற கதைதான்!

## கை கொடுத்தது கல்வி

இடர்களுக்கிடையே திண்ணைப் பள்ளிகளில் படிப்பதை நிறுத்தவில்லை. ஏழாம் வகுப்பு முடிந்தபின், அரசிசைவு பெற்ற பள்ளியில் சேர வேண்டும். காமராசருக்கு முன் எங்களூரைச் சுற்றிப் பள்ளியே இல்லை; இன்று பள்ளி இல்லாத ஊரே இல்லை. முப்பதுபேர் தங்கிப் படிக்கும் விடுதியுள்ள, பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளிக்கு என்னுடன் படித்த சிலர் சென்றனர். அதனால் நானும் அடம்பிடித்து அங்கு சேர்ந்தேன். அதுவும் இருந்ததை விற்று நடந்த கதைதான். ஒரு காசு வருமானம் இல்லையே!

அன்று பள்ளி இறுதிவரை படிப்பது, பணக்காரர்களுக்கு மட்டுமே எளிதாய் இருந்தது.

புதுக்கோட்டை, திருப்புத்தூர், காரைக்குடி போலும் நகர்களில் அங்கங்கு உள்ளவர்க்குப் பள்ளிகள் இருந்தன. புதுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியில் வெளியூரார் படிக்கத் தனி வசதி செய்துகொள்வர். வாடகைவீடு, தனிச்சமையல் ஏற்பாடு செய்ய வேண்டும். இது பணக்காரர்களாலேயே முடிந்தது.

என்னை ஓராண்டு படிக்கவைக்கவே பெரும் துன்பப்பட்டார்கள். ஒன்பதாம் வகுப்பில் படிக்கத் தொடங்கியபோது 'வெள்ளையனே வெளியேறு' என்று 1942 ஆகஸ்டு மாதம் விடுதலை இயக்கப் போராட்டம் நடந்தது. பள்ளிக் கூடம் ஒரு மாதம் மூடப்பெற்றது. அதுவே சாக்காக, வசதியின்மையால், என் பள்ளிப் படிப்பு நின்றது.

## நெற்குப்பைப் பள்ளிப்படிப்பு நினைவுகள்

நெற்குப்பை திண்ணைப் பள்ளிகளில் மணலில் எழுதி, முறை வைத்து, எல்லோரும் 'அரிச்சுவடி' படித்ததுண்டு. ஏட்டுச் சுவடியில் எழுதித்தர, அதைப் பார்த்துப் படித்ததுண்டு. ஆத்திசூடி முதல் ஔவை பாடல்கள் எல்லாம் சொல்லித் தந்தார்கள். என் தாயார் 'கைத்தல நிறைகனி' எனத் தொடங்கும் திருப்புகழ்ப்பாடலைச் சொல்லித் தந்தார்கள். நான்கு பேர் கூடுமிடத்தே இருக்க நேர்ந்தால் 'என் மகன் திருப்புகழ் சொல்வான்' என்று, இப் பாடலைப் பாடிக் காட்டச் சொல்லி, மனம் மகிழ்வார்கள்.

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ டைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமானே!

மழலை மொழியில் தட்டுத் தடுமாறி யான்பாட, விட்ட இடத்தில் தாயார் தொட்டுக் கொடுக்க ஒருவாறு வெட்கத்துடன் பாடி முடித்த நினைவுகள் வருகின்றன.

எங்கள் ஊர் விடுதலை இயக்கத்திலும் மிகுதியாக ஈடுபட்டது. இலட்சுமணன் என்ற (பூணூலை அறுத்தெறிந்து, கலப்பு மணமும் செய்துகொண்ட) அந்தணர், மிகத் தீவிரமான விடுதலைப் போராட்ட வீரர். அதனால் காந்திய இயக்க ஊர்வலங்கள் நடக்கும். இரண்டு இரண்டு மாணவர்களாய் ஊர்வலம் வருவதுண்டு. அவற்றில் முதலில் பாரதி பாடல்களைப் பாடிச் செல்லும் இருவரில் நானும் ஒருவன்.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்றும் கொள்வாரோ? – என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ'

இப்பாடலை உரத்த குரலில், உச்சகட்டத்தில் நான் பாடுவதுண்டு. நமது மாநிலம் தென்னாடு முழுவதையும் உள்ளடக்கியதாக இருந்த காலத்தில், எங்கள்

ஊரில் பாரதி பாடல் போட்டி நடைபெற்றது. அப்போது எனக்கு வயது பதினொன்று. பாரதியார் பாடல்களைப் பாடி, நான் முதற்பரிசு பெற்றேன். டாக்டர். சுப்பராயன் முதலமைச்சராக இருந்த காலம் அது. அவர் தலைமையில் விழாவில் எனக்குப் பரிசளிக்கப்பெற்றது.

பாரதி பாடல் போட்டியில்
ராம. சிங்காரத்துக்கு
முதற்பரிசாக அளிக்கப் பெற்றது

11.9.39

என எழுதி, சந்திரிகையின் கதை, கண்ணன் பாட்டு (இரண்டும் 1938 பதிப்பு) ஆகிய இரண்டு நூல்கள் பரிசளிக்கப்பட்டன. அவற்றுள் சந்திரிகையின் கதை, யாரோ படிக்க வாங்கியவர் தராமல் போய்விட்டது. கண்ணன் பாட்டு மட்டும் இன்றும் என்னிடம் உளது.

**படிப்பில் இடைக்காலத் தடை**

மீண்டும் பள்ளத்தூர் செல்ல முடியாத நிலையில், எட்டாம் வகுப்புப் (Third Form) படிப்புடன் நின்ற எனக்கு, என்ன செய்வதென்று தெரியவில்லை. வறுமையில் வாடிய என் பெற்றோர், நான் ஏதாவது வேலைக்குப் போனால் நல்லதென்று கருதினர். என் தந்தையார், அன்று புகழ்பெற்று விளங்கிய மதுரை மீனாட்சி ஆலைக்கு, பரிந்துரையுடன் என்னை அழைத்துச் சென்றார். கலைத் தந்தை கருமுத்து தியாகராசரைக் கண்டு, பரிந்துரைக் கடிதத்தைத் தந்தோம். அவர் பள்ளி இறுதி வகுப்புக் கூடப் படிக்காதவனுக்கு இங்கு வேலை தர இயலாது என்று திருப்பி அனுப்பிவிட்டார். தியாகராசர் கல்லூரியில் சேர்ந்து, முனைவர் பட்டம் பெற வேண்டிய பிற்கால நிலை நோக்கிப்போலும், அன்று ஆலையில் வேலை மறுக்கப்பட்டது!

**மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை**
**கணேசர் செந்தமிழ்க் கல்லூரி**

பண்டிதமணி மு.கதிரேசர் வழிகாட்டுதலில், பழனியப்பர், அண்ணாமலையார் என்னும் வள்ளல்கள் இருவர் தொடங்கிய சன்மார்க்க சபையில், தமிழ் கற்பிக்க, 'கணேசர் செந்தமிழ்க் கல்லூரி' நடைபெற்றது. அங்கு என் தாய்வழிப் பாட்டனார் மு.கும. குமரப்பர், முதன் முதல் கவுரவச் செயலாளராக

இருந்தார் எனப் பின்னர் அறிந்தேன். சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் படிப்பு ( 2Dவித்துவான் என்று அன்று பெயர்) இருந்ததால், 1942லேயே அங்கு சேர்ந்தேன். கட்டணமில்லாத படிப்பு. என் தாயார் கலியாணி ஆச்சி பிறந்த ஊர். மேலைச்சிவபுரிக்கும் நெற்குப்பைக்கும் சுமார் நான்கு கிலோமீட்டர் தூரம் இருக்கும். எங்களூரிலிருந்து நடந்து சென்று படித்தேன். சிலபோது தாயைப்பெற்ற ஆயாள் வீட்டிலும் தங்கிப் படித்ததுண்டு. புகுமுகவகுப்பு, முன்னிலை வகுப்பு இரண்டாண்டு (Entrance, Preliminary) என மூன்றாண்டுகள் ஓடின.

அங்கு கீழே எட்டாம் வகுப்புவரையிலான பள்ளிப் படிப்பும் இருந்தது. புகழ்பெற்ற தினமணி ஆசிரியராக இருந்த இராம. திரு. சம்பந்தமும், என் அம்மான் மகன் சொக்கலிங்கமும் கீழ் வகுப்புகளில் படித்தனர்.

நானும் சொக்கலிங்கமும், நடந்து போகும் போது எல்லோரும் போகும் நேர்வழியில் போகச் சிலபோது வெட்கப்பட்டு. அதன் வலப்பக்கம் வண்ணான் துறை வழியாக, வயல் வரப்பிலேறி மேலைச்சிவபுரிசென்று திரும்புவதுண்டு. வேறு ஒன்றிரண்டு சமயம் இடப்பக்கமாகக் கண்மாயில், இறுங்கிக் குறுக்கே நடந்து, வேந்தன் பட்டி ஊருணியை அடைந்து, பிறகு மேலைச்சிவபுரி செல்வதுண்டு. இளங்கன்று பயமறியாது என்பதோடு, அவற்றில் ஒரு மகிழ்ச்சியும் தெம்பும் இருந்தன.

அந்த மூன்றாண்டுகளில்தான் (1942 - 1945) என் வாழ்வில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. திராவிட இயக்க எழுச்சி, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, தமிழார்வம் என்பன மேலோங்கி வளர்ந்தன.

தமிழை மிக ஊன்றிக் கற்றதும் அக்கால கட்டத்தில் தான்.

அண்ணன் மெ. சுந்தரம், கவியரசு முடியரசன் நட்பும் உணர்வும் என்னைச் 'சுயமரியாதைக் காரன்' ஆக்கின.

முதல் தொடக்கநிலையில் எனக்குப் பாடமாக அமைந்த திரு.வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' என்னுள் பெரும் விளைவை ஏற்படுத்தியது. அவருடைய நூல்களையும் மு.வ. அவர்களின் நூல்களையும் மிகுந்த ஆர்வத்துடன் படித்தேன். அறிஞர் அண்ணாவின் பேச்சாலும் எழுத்தாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். 'திராவிட நாடு' இதழை நான் மட்டுமே பணம் கட்டி வாங்கிப் படித்தேன். என்னிடம் அதைப் பெற்று அனைவரும் படித்தனர். அதன் மீது கொண்ட ஆர்வத்தால் என் தமையனார் இலட்சுமணன் அவர்களிடம் கூறி, ஐந்து ஆண்டுகளுக்குப் பணம்

கட்டினேன். ஞாயிறு தோறும் 'திராவிட நாடு' வரும். அது வராவிட்டால் அந்த வாரம் முழுவதும் எனக்குச் சோர்வாக இருக்கும். என்னுடன் பயின்ற கந்தசாமி 'விடுதலை'யைத் தவறாது வாங்குவார். முதலியாராகிய அவர் கந்தசாமி ஐயர் என்றே தம் பெயரை அழைக்கச் செய்வார். அன்று இவ்விரு இதழ்களையும், சன்மார்க்க சபை போன்ற நகரத்தார் சூழலில், கையில் வைத்திருப்பது, படிப்பது எல்லாம் தவறாக உணரப்பட்டன. எல்லோரும் ஒளிவுமறைவாகவே வாங்கிப் படிப்பர். அதனால் நானும் கந்தசாமியும் 'புரட்சிக்காரர்கள்' போலக் காணப்பட்டோம்.

அன்று எங்களுக்குக் கல்லூரி முதல்வராக இருந்தவர் பி.ஆர்.மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர். பிற்பாடு அவர் அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியரானார்; இரசியாவிற்கும் சென்று தமிழ்ப்பணி ஆற்றினார். அவர் என்னிடம் திராவிடநாடு இதழை மறைவாக வீட்டிற்குக் கொண்டுவந்து தரச்சொல்லிப் படித்துவிட்டுத் திரும்பத் தருவார். அவர் செல்லமாகக் கந்தசாமியாரைப் 'பெரியார்' என்றும் என்னை 'சின்ன அண்ணாதுரை' என்றும் அழைப்பதுண்டு.

அந்தச் சூழலில், அந்த வயதில் என்னுள் ஒரு தீப்பொறி படிந்தது; குறிக்கோள் ஒன்று பதிந்தது; அதுதான் இன்றும் நந்தாவிளக்காக என்னுள் ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறது.

**மு.வ.வைப்போல வரவேண்டும்**
**எடுத்த முடிவும் தொடுத்தவாழ்வும்**

'மு.வ. அவர்களைப் போல மேன்மேலும் படித்து, டாக்டர் பட்டம் பெற வேண்டும். அவரைப் போல நூல்கள் எழுதவேண்டும். ஒரு தமிழாசிரியன் தன் எழுத்துத் திறத்தால், உழைப்பால், முயற்சியால் தன் காலில் நிற்கும் தகுதிபெறவேண்டும். பிறரை எதிர்பாராது, கையேந்தாது, பொய்ம்மைப்புகழ், பின்பாட்டுப் பாடுதல், இரந்து நிற்றல் என வாழாமல் பெருமிதமாக வாழ வேண்டும்', என இவ்வாறான கனவுகளில், கற்பனைகளில் மிதந்தேன். அன்று தமிழ் படித்தவர்கள் வறுமையில் வாடினர். சிலமடங்கள், வள்ளல் சிலர் எனத்தேடி, அவர்களைப் பாடிப் பரிசில் ஏதாவது சிறிது பெற்று, தமிழ்ப் படிப்பே செல்வமென வாழ்ந்தனர். என் தாய்வழிப்பாட்டனார் 'புராணப் பிரசங்கம்' ஒருவாரம், பத்துநாள் என்று தொடர்ந்து பேசி, தரப்படும் சன்மானம் பெற்று வாழ்க்கையை ஓட்டியதுண்டு.

இவற்றால் அன்று தமிழ் வித்துவானுக்குப் படிப்பதைத் தாழ்வாகவே கருதினர்; இழிவாகவே பேசினர். என் உறவினர்களே 'இது ஒரு படிப்பா! தமிழைப் படிப்பதா! இங்கிலீசைப் படிப்பதுதானே படிப்பு. இது என்ன நமக்குத் தெரிந்த தமிழைப் படிப்பது? ஆமாம். இவர்கள் தமிழைப் படித்துவிட்டு எங்கே போகப் போகிறார்கள்? ஆண்டி, பரதேசியாக வேண்டியதுதான்' என்று மறைமுகமாகவும் நேரேயும் கிண்டல் கேலி பேசுவர்.

அப்போதுதான் இவர்கள் அனைவரின் முகத்திலும் கரியைப் பூசி, தமிழைப் படித்தவன் மு.வ. போல் ஆகலாம்; உலகம் வியக்க வாழ்ந்து காட்டலாம் என என் மனம் எகிறிக் குதித்தது. நான் சிறிதும் தாழ்வு மனப்பான்மைக்கு இடம் கொடுக்கவில்லை. பிறர் தாழ்வுணர்வோடு பார்த்தன, பேசியன எல்லாம் என் மனத்தில் தணலாய்க் கிடந்த, உணர்வைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து, உள்ளொளியைப் பெருக்கின.

முழுமூச்சாகத் தமிழை நம்பினேன்; தமிழைப் படித்தேன்; அதில் மூழ்கினேன். வறுமையில் வாடியதாற்போலும் அனைவரிலும் மேம்பட்டுக் காட்ட வேண்டும் என்று மனம் துடிதுடித்தது.

பிறர் பலர் அரைக்கிணறு தாண்டுவதுபோல் தமிழை அரைகுறையாகவே நம்பினர்.

என்னுள் எழுந்த கல்விக் கனலை, மூட்டிவிட்டு வளர்த்ததில், பேரறிஞர் அண்ணாவுக்குப் பெரும்பங்குண்டு. ஆறு ஆண்டுகள் 'திராவிடநாடு' இதழை, சங்க இலக்கியம் போல் தவறாது படித்ததன் விளைவு, எனக்கொரு பெருமித உணர்வைத் தந்துவிட்டது. ஈழத்து அடிகள், அச்சகக் கோளாறால் ஒரு ஞாயிறன்று திராவிடநாடு இதழ் வெளிவரவில்லை என அறிவிப்பார். அதுவே எனக்குப் பேரிழப்பாகத் தோன்றும்.

ம.பொ.சி. அவர்களின் தமிழ்முரசு, சி.பா. ஆதித்தனார் கையால் செய்த தாளில் அச்சிட்டனுப்பும் தமிழன், தமிழ்நாடு இதழ்கள், Sunday Observer என்ற இதழ், மற்றும் பல திராவிட இயக்க இதழ்களை ஆர்வத்துடன் படித்தேன்.

ஒருபுறம் என் குடும்பம் வறுமையில் நலிந்தபோது மனத்தளவில் நான் மிகுந்த வலிமையுள்ள உணர்வுடன் வளர்ந்தேன்.

**கல்வியில் வளர வேண்டும் என்ற கனவுக்கு மீண்டும் ஒரு தடை**

நான் வளரவந்த குடும்பம் மீண்டும் சொல்லொணா வறுமையில் தள்ளாடியது. நகரத்தார் மரபில் பிள்ளை போனவர்கள், பிறந்த வீட்டு வறுமை நீங்கவும், வளரப் போன வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழவுமே கண்டதுண்டு. என் வாழ்வு இதற்கு நேர் மாறாக அமைந்தது.

கல்வியில் இருந்த நாட்டம் காரணமாக, பெற்றோரை வாடவிடலாமா? அவர்கள் எப்படிப் போனால் நமக்கென்ன, நாம் நம் குறிக்கோளை நோக்கி நடப்போம் என முடிவு செய்வதா?

பெரும் மனப் போராட்டத்திற்குப் பிறகு, என் தமிழ்ப் புலவர் படிப்பை இடையில் விட்டு விட்டு, இலங்கை கொழும்பில் ஒரு நகரத்தார் கடையில் – அடைமானம் பிடிக்கும் வட்டிக்கடை – வேலைக்குப் போனேன். அது கடற்கரைத் தெரு (Sea street) எனப்படும் செட்டியார் தெருவில் இருந்தது. எங்களூரைச் சேர்ந்த செல்வர் பலர் இருந்தனர்; அவர்களில் இளைஞரும் பலர், ஓரளவு பள்ளிப்படிப்புடன், தொழிலுக்கு வந்திருந்தனர். அந்த இளம் அகவையில், கணக்கப் பிள்ளை இருவருக்குத் துணையாக, நகைப் பெட்டகப் பொறுப்பாளனாக நான் வேலை பார்த்தேன்.

அங்கு வீரகேசரி என்ற இதழ் வெளிவந்ததை ஆவலுடன் வாங்கிப் படித்தேன். அதில் கவிதைகள் எழுதினேன். ஞாயிறு தோறும் 'நமது கவிதா மண்டலம்' என்ற தலைப்பில், தமிழண்ணல் என்ற பெயருடன் என் கவிதை வரும். இதைத் தொடர்ந்து படித்த, என் போன்ற இளைஞர்கள் பலரும், 'நாங்கள்தான் பள்ளிப் படிப்பைக்கூட இடையிலே விட்டுவிட்டு வட்டித் தொழிலுக்கு வந்துவிட்டோம். நீ இவ்வளவு படித்தவன் – நீ எழுதுவதெல்லாம் வீரகேசரியில் வருகிறது. இந்த அளவு பேரும் புகழுமாய்க் கல்வியில் முன்னேறக் கூடிய நீ இப்படி வட்டித் தொழிலுக்கு வந்து, உன் வாழ்வை வீணாக்கி விட்டாயே' என்று இவ்வாறு பலவிதமாகச் சொல்லிச் சொல்லி, என் மனத்துள் இருந்து, மறைய இருந்த கல்வி ஆர்வத் தணலை, மீண்டும் கிளப்பிவிட்டனர். இதனால் பதினொருமாதங்கள் மட்டும் அங்கிருந்த நான், முதலாளிமார் எவ்வளவு சொல்லியும் கேட்காமல், வேலையைவிட்டு விலகி ஊர்திரும்பிவிட்டேன். அங்ஙனம் என்னுடன் பழகியவர்கள், இரயிலடிக்கு வந்து வழியனுப்பிவிட்டனர். அன்று

வழியனுப்பியவர்களில், வ.சுப. மாணிக்கனாரின் தம்பி வ.சுப. சொக்கலிங்கமும் ஒருவர் ஆவார். முன்பின் தெரியாத நிலையில், என்னைத் 'தமிழ் உலகிற்குத்' திருப்பியனுப்பியவர்களில் அவரும் ஒருவர் என்பது பிற்காலத்தில்தான் எனக்குத் தெரிந்தது.

**இடைவேளைக்குப் பிறகு...**

கொழும்பிலிருந்த அந்தப் பதினொரு மாதங்கள் என் உள்ளத்தை இரும்பாக, எஃகாக மாற்றின. பிறருக்குக் கீழ் பணி செய்வது ஒருவிதம்; தமிழாசிரியனாகித் தலை நிமிர்ந்து வாழ்வது ஒருவிதம். நகரத்தார்கள் முதலில் முழுவதும் வணிகர்களாகவே வாழ்ந்தனர். கிழக்காசிய நாடுகளுக்கெல்லாம் போனவர்களை 'கொண்டுவிற்கப் போயுள்ளார்கள்' என்றுதான் சொல்வது வழக்கம். காலப்போக்கில் வட்டித்தொழில் - வங்கித்தொழில் (Banking) என்பதற்கு மாறிக் கொண்டனர்.

கால மாறுதலுக்கேற்ப, தமிழ்க் கல்வியைத் தொடர்வதே மேல் என, மீண்டும் முடிநிலை முதலாண்டில் மேலைச் சிவபுரிக் கல்லூரியில் சேர்ந்தேன். அன்று திராவிட இயக்க எழுச்சியால் நாடுமுழுவதும் பொங்கல்விழா தமிழ் விழாவாக, முத்தமிழ் விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப் பெறும். ஒவ்வொரு கல்லூரியும் போட்டி போட்டுக் கொண்டு நடத்தும். தமிழ் மன்றங்கள், அமைப்புக்கள் எல்லாம் முத்தமிழ் விழாவை மிகச்சிறப்பாக நடத்தும். அண்ணன் மெ. சுந்தரம், அன்பழகனைக் கூட அழைத்து வருவார். புதுக்கோட்டை திவான் (அன்று அது தனியரசு) ஹபிபுல்லாவை, அவருக்குத் தமிழ் தெரியாவிட்டாலும் அழைத்துவந்துவிடுவார். இவர்களோடும், நெடுஞ்செழியன் போலும் பிற பெரியவர்களோடும் நானும் சேர்ந்து இவ் விழாக்களுக்குச் சென்றதுண்டு. அறிஞர் அண்ணா பேச்சு எங்கு என்றாலும் சென்றுவிடுவோம். எங்களுடன் ஆசிரியர்களும் அண்ணா பேச்சைக் கேட்க வருவார்கள்.

படிப்பிலும் கூடுதல் கருத்திச் செலுத்தினேன். எந்த நேரமும் புத்தகமும் கையுமாய் தனியே படித்துக் கொண்டு இருந்த என்னைப் பார்த்த, யாழ்ப்பாணம் பொன். முத்துக்குமரன் என்ற ஆசிரியர், 'நீ பிற்காலத்தில் சிறந்த தமிழறிஞனாக வருவாய்' என வாழ்த்தினார். அது போலவே மல்லிங்கசாமி என்ற ஆசிரியரும் வகுப்பிலேயே 'நீ பிற்காலத்தில் பண்டிதமணிபோல், பேரும்புகழும் கொண்டு வாழ்வாய்' என வாழ்த்தியது, என்றும் என் நினைவிலோடும். தலையில் ஒரு குட்டுவைத்து, வகுப்பில் கவனத்தைச் சிதறவிடாதே என்று சொல்லித்தந்த முத்துசாமிப் பிள்ளையையும் என்னால் மறக்க முடியாது.

அந்த ஆண்டு இறுதியில், வித்துவான் படிப்பு முடிய இன்னும் ஓராண்டுதான் உளது என்ற வேளையில், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், வகுப்புக்கள் நிறுத்தப்படும் என அறிவித்து விட்டனர்.

இதனால் மெ.சுந்தரம், கதி.சுந்தரம் போலும் சிலர் மயிலம் தமிழ்க் கல்லூரியில் இறுதியாண்டுப் படிப்பைத் தொடரப் போயினர். நானும் வே.அண்ணாமலையும் மட்டும், எவ்வாறோ தெரியவில்லை, திருவையாறு அரசர் கல்லூரிக்குச் சென்று எங்கள் இறுதியாண்டுப் படிப்பைத் தொடர்ந்தோம்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார், மேலைச் சிவபுரியினர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து புலவர்க்குப் பயின்று, அங்கேயே ஆசிரியராகி, பின்பு மேற்படிப்புகளையும் மேற்கொண்டவர். அவர் தமது ஊரிலுள்ள கல்லூரி மூடப்படக் கூடும் என்பதை அறிந்துவந்து, சபை நிறுவனர் வழிவந்த சிதம்பரம் செட்டியாரவர்களுடன் மலேயா சென்று, ஓரளவு நிதி திரட்டி வந்து, தமிழ்க் கல்லூரி தொடர வழிசெய்தார். எனினும் எங்களைப் போன்ற சிலர், வேறு இடங்களில் முன்னதாகச் சேர நேர்ந்துவிட்டது.

நானும் வே. அண்ணாமலையும் திருவையாற்றில் சேர்ந்தோம். அங்குள்ள பழைய, மன்னர்கள் கட்டிய, காவிரிக்கரையோரமுள்ள கட்டிடத்தில்தான் கல்லூரி நடைபெற்றது. சரபோசி மன்னர்கள் காலத்தில் தஞ்சையிலிருந்து, அங்குவந்து தங்குவதற்குக் கட்டியது அது. மகளிர் குளிப்பதற்கும் ஏற்ப, அக் கட்டிடத்தில், இரண்டு துறைகள், காவிரி ஆற்றின் கரையில், ஆற்றோட்டம் உள்ளே வந்து போகுமாறு இரண்டு புறமும் கல்கட்டிடம் நீண்டிருக்கும். காவிரி நீர் உள்ளேயுள்ள படிக்கட்டுகளுக்குள் வந்து போகும்.

ஒரு காலத்தில் அங்கு சமஸ்கிருதம் மட்டுமே கற்பிக்கப்பட்டது. உண்டியும் உறையுளும் கல்லூரி வகுப்புகளும் அதனுள்ளேயே அமைந்திருந்தன. எல்லாம் இலவயம்.

இதனை நீதிக் கட்சி வலுத்த காலத்தில் தமிழும் சமஸ்கிருதமும் கற்பிக்கும் கல்லூரியாக மாற்றப்பட்டதாம்.

நாங்கள் அந்த இலவசச் சூழலில் தங்கவும், உணவுண்ணவும் விரும்பவில்லை. என்ன செய்வது என எண்ணினோம். வெளியே உணவுண்ண

வசதியான, வீட்டுச் சமையல் கூடங்கள் – இன்று 'மெஸ்' என்பது போலப் பல இருந்தன. அங்கு உணவுண்டு கல்லூரியில் தங்கினோம்.

வளமனையிலிருந்து வந்துபடிக்கும் மாணவர்கள்

தேவகோட்டை உ. ராம. சுப. சேவு. மெ. என்ற வகையினர் அங்கு பெரு நிலக்கிழாராக, நிலபுலன்கள் வைத்திருந்தனர். அவர்களுக்கு ஒரு வளமனை (பங்களா)யும் இருந்தது. அதில் கணக்கப்பிள்ளைகள் மட்டும் இருந்தனர். ஐயாறப்பனுக்குப் பல திருப்பணிகள் செய்த குடும்பம் அது. ஐயாறு என்பது, தஞ்சையிலிருந்து அங்கு போவதற்குள் ஐந்து கிளையாறுகள், காவிரியில் கலப்பதால் வந்தது. அதனையும் 'பஞ்சநதீஸ்வரர்' என மாற்றினர். திருவையாறு என்பதை மாற்றத் தெரியாமல் விட்டுவிட்டனர்.

நாங்கள் அங்குள்ள கணக்கப் பிள்ளைகளிடம் கேட்ட பொழுது, தேவகோட்டை சென்று, அங்கு தலைமைவாய்ந்த தமிழ் வள்ளல் மெய்யப்பச் செட்டியாரிடம் கடிதம் வாங்கிவந்தால், பங்களாவின் முன் காலியாகவுள்ள ஓர் அறையில் தங்கலாம் என்றனர்.

காரைக்குடி தேவகோட்டை சாலையில், மகளிர் இல்லம் என்ற நிறுவனத்தை நடத்திய சொ.முருகப்பா அவர்கள், ஒரு சீர்திருத்தச் செம்மல். அவர் தாம் நடத்திய 'குமரன்' என்ற வாரஇதழில், முதன்முதலாக வெண்பாப் போட்டி தொடங்கினார். ஈற்றடி கொடுத்துப் பாடச் சொல்வார். நல்ல வெண்பாக்கள் அடுத்த வாரமே வரும். தம் பெயருடன் ஒரு வெண்பா அச்சில் வருவதைப் பார்த்ததும், மாணவர்கள் பெருமகிழ்ச்சியடைவர். மிக எளிதாக வெண்பாப் பாடுபவர்களில் நானும் ஒருவன் என்பதால், என் பாடல் சிங்காரம், பெரிய கருப்பன், தமிழண்ணல் என்ற பெயர்களில் அடிக்கடி வெளிவரும். தமிழண்ணல் என்ற பெயரை, அந்த இதழுக்கென்று வைத்துக் கொண்டதாக நினைவு. ஒரே வாரத்தில் இரண்டு, மூன்று பெயரில் நம் ஒருவர் வெண்பாக்களே வருவதைப் பார்ப்பதில் ஒரு மகிழ்ச்சி.

திருவையாற்றை விட்டு கட்டியிருந்த உடுப்போடு புறப்பட்ட நான், இவ் வெண்பாப் போட்டி அறிமுகம் ஒன்றை வைத்தே, அமராவதி புதூர் மகளிர் இல்லம் சென்று முருகப்பாவைச் சந்தித்தேன். அவரும் மனம் உவந்து வள்ளல் மெ. அவர்களுக்கு ஒரு கடிதம் தந்தார். அம் மடலுடன் உடனே தேவகோட்டை சென்று, மெ. அவர்கள் வீட்டை அடைந்தேன். மிகப் பெரிய வளமனை அது. அங்கு அன்று ஒரு விசேடம் நடந்திருக்கக்கூடும். உள்ளே இருந்த அவர்களிடம் தருமாறு அறிமுகக் கடிதத்தைக் கொடுத்தனுப்பினேன்.

சற்று நேரத்தில் அவர்களே வந்து, விவரம் கேட்டு, பங்களாவில் தங்க ஒரு கடிதம்; அங்குள்ள பேராசிரியர் புருஷோத்தம நாயுடுவுக்கு ஒரு கடிதம், கல்லூரி முதல்வருக்கு ஒரு கடிதம் என மூன்று மடல்கள் தந்தார்கள். மறக்கமுடியாத பேருதவி அது. அன்றுமுதல் மெ. அவர்களின் அன்பும் ஆதரவும் வாய்த்தது.

திருவையாற்றில் "பங்களாவில் இருந்து வந்து படிக்கும் மாணவர்கள்" என்ற பெருமையுடன் படிப்பு முடிந்தது. புருஷோத்தம நாயுடு ஒரு நல்லாசிரியர். அவரிடம் கற்றது பெரும் பேறு.

### பிரபாகரனின் அறிவுரை

ஒருவாறு படிப்பு முடிந்து ஊர் திரும்பும் சமயம். என்னுடன் படித்தவர்கள் இருபத்துமூவர். அவர்களில் எனக்கும் வே.அண்ணாமலைக்கும் கோவை இளஞ்சேரனுக்கும் நல்ல பெயர்; காரணம் எளிதில் கவிதைகள் எழுதுவோம் என்பதுடன், படிப்பிலும் துடிப்பாய் இருந்தோம்.

எங்களுடன் படித்தவர்களில் பிரபாகரன் என்பவர் என்னைவிட வயதில் மூத்தவர்; என்னிடம் அன்புடையவர்.

அவர்மட்டும் என்னை வழியனுப்பக் காரடிக்கு வந்தவர், எனக்குச் சொன்ன அறிவுரை இன்னமும் மறக்கவில்லை.

"பெரியகருப்பன்! எதையும் வெளிப்படையாக, துணிச்சலாகப் பேசும் பழக்கம் உங்களிடம் உளது. சிறிது ஒளிவு மறைவு வேண்டும்.

வெளிப்படையாகப் பேசுவதை விட்டுவிடுங்கள். இன்றேல் வாழ்க்கையில் பல பாதிப்புக்கள் ஏற்படலாம். பிறவற்றில் நன்கு படிக்கும் நீங்கள் இதை மாற்றிக்கொண்டால் உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது!" என்று வாழ்த்தி வழியனுப்பினார்.

### என் உள்ளம் ஒரு திறந்த புத்தகம்

எனினும் ஒருவருடைய பிறவி இயல்பை மாற்றுவது கடினமே. வெளிப்படையாகப் பேசுவது மட்டுமன்றி, உள்ளத்தில் பட்டதை அப்படியப்படியே உடனுக்குடன் எழுதி, அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பல. எனினும் 'உண்மைகளை' உடனுக்குடன் சொல்லாமல், எழுதாமல் இருக்க என்னால்

இயலவில்லை. அதனுடன் முகமனுரை சொல்லவும் பழக்கமே வரவில்லை. ஒருவரிடம் மிக உயரிய மதிப்பும் உரிமையும் அன்பும் உறவுணர்வும் இருந்தாலும் அதை அவரிடம் எடுத்துரைக்க எனக்குத் தெரிவதில்லை. ஆனால், உள்ளத்தில் உண்மை இல்லாவிட்டாலும், வெளியே அப்படி முகமன் கூறுவதைத்தான் உலகம் விரும்புகிறது.

எங்கள் வீட்டில் 'இன்னார் வருகிறார். அவரிடம் இந்தச் செய்தியை மட்டும் கூறவேண்டாம்' என்று எச்சரிப்பார்கள். அவர் வந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, எங்கள் வீட்டில் எதைக் கூறவேண்டாம் என்று சொன்னார்களோ, அதுவே மிக விரிவாக வெளிப்பட்டுவிடும். அவர் போன பிறகு என் வீட்டார், "இப்படியும் யாரும் இருப்பார்களா? படித்துப் படித்துச் சொன்னாலும், உள்ளதை அப்படியே கொட்டிவிடுகிறீர்களே" என்று தலையில் அடித்துக்கொள்வார்கள். இதனால் சிலர் உள்ளன்போடு பாராட்டினாலும், பலர் பகைக்கவே செய்கிறார்கள்.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்பார் வள்ளலார். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதே உலகத்தில் வாழும் வகை' என்பதை மட்டுமே இந்த உலகம் உணர்த்துகிறது. ஏனெனில் இப் பழக்கத்தால் எனக் கேற்பட்ட பாதிப்புக்கள் மிகமிகக் கூடுதல். அப்பொழுதெல்லாம் 'பிரபாகரன்' நினைவுக்கு வருவார்.

அன்று பார்த்தபின் இன்று வரை அவரை நான் பார்த்ததில்லை. அவர் சொன்ன சொல் மட்டும் என் உள்ளத்தை விட்டு மறையவே இல்லை.

**வேலை தேடு படலம்**

எனக்குப் பரிந்துரைகள் பலிப்பதில்லை; பதவிகள் தேடி நான் ஓடியதில்லை. பெரிய பதவிசில கைக்கு வந்து வாய்க்கு எட்டாமற் போன போதும் நான் வருந்தியதில்லை.

படிப்பு முடிந்ததும் மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து வந்த விளம்பரம் பார்த்து, விண்ணப்பம் போட்டு, கம்பனடிப் பொடி சா.கணேசனுக்கும் ஓர் அஞ்சலட்டை போட்டிருந்தேன். ஈரோடு மகாசன உயர்பள்ளிக்கும் விண்ணப்பம் போட்டிருந்தேன்.

புலவர் நா.மு. மாணிக்கமும் மேலைச் சிவபுரியினர். பெரியாரின் பெருந்தொண்டர். நகரத்தார்களிலேயே, பெரியார் தலைமையில், உலகம்பட்டியில் திருமணம் செய்துகொண்டவர். அவர் பெரியாருக்குத் தம் வாழ்வையே ஒப்படைத்தவர் எனலாம். அவர் ஈரோட்டில், குடியரசு இதழில் துணையாசிரியராய்ப் பெரியாருக்கு உற்ற துணையாகப் பணி செய்து கொண்டிருந்தார். அவரை நன்கறிந்த யான் அவருக்கும் ஓர் அஞ்சலட்டை போட்டிருந்தேன்.

காரைக்குடியில் கம்பனடிப்பொடி சா.கணேசனார் கூறியதால், உடனே எனக்கு ஆணை வழங்கி, என்னுடன் படித்த ஏரியூர் நடராசன் அங்கு வேலையிலிருந்தவரிடம் தந்து நெற்குப்பைக்கே நேரில் ஆணையைத் தருமாறு அனுப்பியுள்ளனர்.

ஈரோட்டிலிருந்து, அதற்கு இருநாள் முன்பே, நா.மு.மாணிக்கம் அவர்கள், எனக்காக வேலைக்கு ஆணைபெற்று, தொலை வரி கொடுத்துவிட்டார். இதனால் நான் உடனே ஈரோடு போக நேர்ந்தது. ஏரியூர் நடராசனிடம் நான் முன்பே சென்றதைக் கூறித் திருப்பி அனுப்பிய என் பெற்றோர், அதுபற்றி இறுதிவரை எதுவும் என்னிடம் தெரிவிக்கவே இல்லை.

ஈரோட்டில் குடியரசு இதழ் அச்சகத்திற்குப் பக்கத்தில் நாங்கள் - நானும் புலவர் சேதுராமனும் ஓவிய ஆசிரியர் ஒருவரும் குடியிருந்ததால், அவ் விதழ்த் தொடர்பு ஏற்பட்டது.

**இன்பம் தரவும் இடர் ஒன்று வரும்**

சிக்கைய நாயக்கர்தான், மகாசன உயர்நிலைப் பள்ளித் தாளாளர். அங்கு பணியாற்றிய போது எனக்குப் பத்தொன்பது வயது; மேலும் ஒல்லியான உடம்பு. கொங்குநாட்டு மாணவர்கள் நன்கு தாட்டிகமாக, பருமனாக, என்னை விடப் பெரியவர்கள் போல் இருப்பார்கள். பள்ளி இறுதிவகுப்பு மாணவர்களுடன் எடுத்த படம் இன்னமும் இருக்கிறது. இதனால் சிலபோது, சிலர் என்னை ஆசிரியன் என நம்ப மறுத்ததுண்டு; மேலும் நகரத்தார்கள் என்றால் இப்படி வேலைக்கு வரமாட்டார்கள் என்று அதிலும் ஐயப்பட்டார்கள்.

அன்று பள்ளிகளில் என்னைப்போல் வேலைக்குச் சேர்ந்து, ஆசிரியரான நகரத்தார்கள் இருவர் மூவர் இருக்கலாம். சிக்கைய நாயக்கர் நிருவாகத்தில் எனக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. தமிழாசிரியருக்கு என ரூ 64 தந்தவர்கள்,

இடைநிலை ஆசிரியருக்கான ரூ. 48 மட்டுமே தரமுடியும், அதற்கே விதிகள் உள என்று, சம்பளத்தைக் குறைக்க முயன்றார்கள்.

உடனே நான் காரைக்குடிப் பள்ளிக்கு, என்னை அறியாமல், முன்பு ஆணை தரப்பட்ட விவரமும் தெரியாமல், இடமிருந்தால் அங்கு வர விரும்புவதாக ஓர் அஞ்சலட்டை எழுதினேன். உடனே தலைமை ஆசிரியர் சீனிவாச அய்யர் 'இனி யாரும் சிபாரிசு வேண்டாம். சென்ற ஆண்டே நீங்கள் ஏன் வரவில்லை என்று பலர் கேட்டுவிட்டார்கள். அதனால் உடனே வந்து வேலையில் சேர்ந்து கொள்ளவும்' என்று மறுமொழி அஞ்சலட்டை அனுப்பினார்.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று, உடனே புறப்பட்டு வந்து, காரைக்குடியில் சேர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினேன்.

கம்பனடிப் பொடி சா. கணேசனார் உட்படப் பலரும், "நாங்கள் சிபாரிசு செய்தால் வரமாட்டீர்கள்; பிறகு, நீங்களாக வந்து சேர்ந்து கொள்வீர்கள்" என்று கூறிச் சிரிப்பதுண்டு.

**கரையேற்றியது காரைக்குடி வாழ்க்கை**

பட்டிமன்ற நகைச்சுவை ஒன்று, சோதிடரிடம் கேட்ட போது, இந்த ஆண்டு முழுவதும்தடைகள்தான், மன நிம்மதி இராது, வறுமை தாண்டவமாடும், சிக்கல்கள் கூடும் என்றாராம். அது சரி, அடுத்த ஆண்டு எப்படி என்று கேட்டபோது அது பழகிப் போய்விடும் என்றாராம். எனக்குத் தடைகள் வருவது; வரக்கூடியது பறிபோவது, நாம் ஏதும் தீங்கு எண்ணாதபோதும் அவர்களாகத் தவறாக எண்ணி பொறாமைப்படுவது, ஏதேனும் தீங்கிழைப்பது என இவ்வாறான தடைகள், துன்பங்கள், அவலங்கள் எல்லாம் என் சிறு வயது முதலே நன்கு பழகிப்போய்விட்டன. அதனால் இவற்றுள் எதுவும் என் மனத்தைப் பாதிக்கவில்லை. காரைக்குடியில் முதலில் சம்பளம் ரூ. 64 + 20 = 84 எனத் தந்தனர். இது அன்று உள்ளாட்சி நிருவாகச் சம்பளம் (Local Board Scale). அரசு விதிப்படி ரூ. 65+ 25 = 85. பிற B.A., L.T என்று படித்த அனைவருக்கும் அரசுவிதி; தமிழாசிரியர்களுக்கு மட்டும் குறைவு. இந்த அளவு தமிழாசிரியருக்கும் சம்பளம் தரச் செய்தவர் அன்றைய கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் அவர்கள். மாவட்டக் கல்வி அதிகாரி (D.E.O) கோபாலய்யர், ஆண்டுக்கு ஒருமுறை, ஆய்வு கருதி வருபவர், "தமிழாசிரியர்களுக்கு மட்டும் ஏன் குறைவு?" அவர்களுக்கும் அரசு விதிப்படி 85 கொடுங்கள் என்று பணித்துச் சென்றார். அன்று அந்த ஒரு ரூபாய்

கூடுதல், பெரும்பயனும் மகிழ்ச்சியும் தந்தது. அதிலும் எனக்குமட்டும் ஒரு சிக்கலேற்பட்டுவிட்டது.

எனக்குச் சிக்கலேற்பட்டுப் பிறகு தீர்வதென்பது ஒரு தொடர்நிகழ்ச்சி. அதையே ஒரு புதினமாக எழுதலாம்.

**வறுமையில் செம்மை**

இந்த ரூ 85இல், யான் என் சித்தப்பார் வீட்டில் தங்கி, அங்கேயே உணவுண்ண மாதம் ரூ. 30 தந்தேன். நெற்குப்பைக்கு பெற்றோருக்கு ரூ. 20 அல்லது 25 அனுப்புவேன். பிற செலவுகள், என் படிப்புச் செலவு, இவ்வாறு கத்தி முனையில் நடப்பதுபோல் வாழ்க்கை ஓடியது. எனினும் இது அடிமை வேலையாகாது, ஆசிரிய வேலை ஆனதால், பெருமிதமாக வாழ்க்கை அமைந்தது; வறுமையில் செம்மை கைகூடியது.

**வழக்கிலும் வழுக்கி விழுந்தது குடும்பம்**

காரைக்குடியில் இருந்தபோது, நானூறு ஐந்நூறு என்று கடன் கொடுத்தவர் முதல், அனைவரையும் ஒருங்கிணைத்து, ஓர் ஆச்சி சிவகங்கையில் வழக்குத் தொடுத்து, எங்கள் சொத்து அனைத்தையும் எடுத்துக் கொள்ள முயன்றது. கீழ் நீதிமன்றத்திற்கு என் தந்தையார் எதிர் வழக்காடப் போக, காரைக்குடி வந்து, என்னிடம் பணம் பெற்றுச் செல்வார். எனினும் போதிய அளவு வழக்கு நடத்த வசதியுமில்லை; என் தந்தையாராலும் இயலவில்லை.

நெற்குப்பை வீட்டில், அடுப்பில் சோறு வெந்து கொண்டிருந்த போது, அமீனாவை வைத்து, பாதியில் விரட்டிவிட, என் பெற்றோர் அனைத்தையும் அள்ளிக்கொண்டு, ஓர் உறவினர் வீட்டு வெளித்திண்ணைக்குப் போயுள்ளனர். 'குய்யோ முறையோ' என்று அவர்களை அலறி அடித்து ஓட வைத்தவர், கணக்கப் பிள்ளை ஐயர் ஆவார். பணக்காரர்கள் சொத்துக்களை எல்லாம் எடுத்துக்கொள்ள, எனக்குச் சொந்த ஊரில் கால்வைக்க இடமின்றிப் போனது.

இந்த வழக்குகள் தொடருமுன்பே எனக்குத் திருமணம் பேசினார்கள். சொ. முருகப்பா இவ்வளவு இடர்களுக்கிடையே, நகரத்தார்களில் திருமணம் செய்ய முயலுவதைவிட, கலப்பு மணம் நல்லதென்று பெண்பார்க்கத் தொடங்கினார்கள்.

**தமிழ்நெறியில் திருமணம்**

மேலும் நான் தமிழ்நெறியில்தான் திருமணம் செய்து கொள்வதென முடிவெடுத்தேன். ஒருமுறை அழகப்பர் கல்லூரி விழாவிற்குப் போய் இரவு திரும்பும் நேரத்தில், பேராசிரியர் வ.சுப.மா.விடம், கலப்புத் திருமண முயற்சிபற்றிக் கூறினேன். அவர், “ஏன்? நம் இனத்திலும் திருமணம் செய்ய முடியாது தவிக்கும், பெண்களை வைத்துக்கொண்டு அவதிப் படுபவர் பலர் உள்ளனரே. அவர்களுள் நமக்கு ஏற்ற ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்வதும் ஒருவகையில் கலப்புத் திருமணம் தானே”, என்றார். அச் சொற்கள் என் மனத்தில் ஆழமாய்ப் பதிந்தன. வறுமையில் வாடியது குடும்பம்; படிப்பும் தமிழாசிரியப் பணியும்தான் சொத்து. நகரத்தார்களில் யார் எனக்குப் பெண் கொடுக்க முன் வருவார்கள்? இந்நிலையில் ஒன்றிரண்டு குடும்பத்தார் பெண்தர வந்தவர்கள், சில காரணங்களால் விலகிப் போக நேர்ந்தது.

இச் சூழலில் என் நண்பர், தமிழார்வலர் இராம. விசுவநாதன், புதுப்பட்டியில் ஒருவருக்கு ஐந்து பெண்கள் என்றும், முதல் பெண்ணுக்குத் திருமணமாகிவிட்டதென்றும், இரண்டாம் பெண் அழகும் பண்பும் உடைய பெண்ணாக உள்ளாள் என்றும் ஆயினும் அவர்களிடம் ‘வரதட்சிணை’ முதலியன தரப் போதிய வாய்ப்பில்லை என்றும் அப் பெண்ணை மணந்துகொண்டால் பிற்காலத்தில் நல்ல வாழ்வு அமையும் என்று தாம் கருதுவதாகவும் தமிழ்முறையில் மணம்செய்துதரவும் ஒப்புவர் என்றும் ஓர் உள்நாட்டுக் கடிதம் விரிவாக எழுதியிருந்தார்.

அவ்வாறே என் மனமும் அதில் ஈடுபட்டதால், என் மனைவி அடைக்கம்மை (எ) சிந்தாமணியை பெண் பார்த்து, இசைவு தெரிவித்து, எவ்வித பண எதிர்பார்ப்புமின்றித் தமிழ் நெறியில் மணந்துகொண்டேன்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களை அழைக்கலாம் என்ற போது, ‘திராவிடர் கழகம், நாயக்கர் கட்சி, சு.ம. (சுயமரியாதைக்காரன்), கடவுளே இல்லை என்பவன்’ என்றெல்லாம் நான் என் பெற்றோரிடம் பெயர் எடுத்திருந்ததால், அவர்கள் அதற்கு இசையவில்லை.

கவியரசு முடியரசனார், கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களைக் கூட்டி வந்து, திருமணத்தை நடத்தி வைக்கச் செய்தார்கள். அவர் தமிழில் அனைத்துக்

## தமிழ்நெறியில் திருமணம்

மேலும் நான் தமிழ்நெறியில்தான் திருமணம் செய்து கொள்வதென முடிவெடுத்தேன். ஒருமுறை அழகப்பர் கல்லூரி விழாவிற்குப் போய் இரவு திரும்பும் நேரத்தில், பேராசிரியர் வ.சுப.மா.விடம், கலப்புத் திருமண முயற்சிபற்றிக் கூறினேன். அவர், "ஏன்? நம் இனத்திலும் திருமணம் செய்ய முடியாது தவிக்கும், பெண்களை வைத்துக்கொண்டு அவதிப் படுபவர் பலர் உள்ளனரே. அவர்களுள் நமக்கு ஏற்ற ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்வதும் ஒருவகையில் கலப்புத் திருமணம் தானே", என்றார். அச் சொற்கள் என் மனத்தில் ஆழமாய்ப் பதிந்தன. வறுமையில் வாடியது குடும்பம்; படிப்பும் தமிழாசிரியப் பணியும்தான் சொத்து. நகரத்தார்களில் யார் எனக்குப் பெண் கொடுக்க முன் வருவார்கள்? இந்நிலையில் ஒன்றிரண்டு குடும்பத்தார் பெண்தர வந்தவர்கள், சில காரணங்களால் விலகிப் போக நேர்ந்தது.

இச் சூழலில் என் நண்பர், தமிழார்வலர் இராம. விசுவநாதன், புதுப்பட்டியில் ஒருவருக்கு ஐந்து பெண்கள் என்றும், முதல் பெண்ணுக்குத் திருமணமாகிவிட்டதென்றும், இரண்டாம் பெண் அழகும் பண்பும் உடைய பெண்ணாக உள்ளாள் என்றும் ஆயினும் அவர்களிடம் 'வரதட்சிணை' முதலியன தரப் போதிய வாய்ப்பில்லை என்றும் அப் பெண்ணை மணந்துகொண்டால் பிற்காலத்தில் நல்ல வாழ்வு அமையும் என்று தாம் கருதுவதாகவும் தமிழ்முறையில் மணம்செய்துதரவும் ஒப்புவர் என்றும் ஓர் உள்நாட்டுக் கடிதம் விரிவாக எழுதியிருந்தார்.

அவ்வாறே என் மனமும் அதில் ஈடுபட்டதால், என் மனைவி அடைக்கம்மை (எ) சிந்தாமணியை பெண் பார்த்து, இசைவு தெரிவித்து, எவ்வித பண எதிர்பார்ப்புமின்றித் தமிழ் நெறியில் மணந்துகொண்டேன்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களை அழைக்கலாம் என்ற போது, 'திராவிடர் கழகம், நாயக்கர் கட்சி, சு.ம. (சுயமரியாதைக்காரன்), கடவுளே இல்லை என்பவன்' என்றெல்லாம் நான் என் பெற்றோரிடம் வயர் எடுத்திருந்ததால், அவர்கள் அதற்கு இசையவில்லை.

கவியரசு முடியரசனார், கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களைக் கூட்டி வந்து, திருமணத்தை நடத்தி வைக்கச் செய்தார்கள். அவர் தமிழில் அனைத்துக்

இங்கு வருமுன்போ, வந்த பின்போ அதைத் தீர்க்க முயன்றிருக்கவேண்டும். அக் கடனால், நான் பிள்ளை வந்த இடத்தில், ஒரு காலியாகக் கிடந்த இடமும் எனக்குக் கிடைக்காமல் போனது. கால் பதிக்குமளவு கூட இவ்வுலகில் சொந்த இடமின்றிப்போனது.

இந்நிலையில் இலங்கையிலிருந்த என் தமையனார்க்கு, என் திருமணத்திற்கு என அக் கடனைத் திருப்பித் தருமாறு எழுத, அவர் 'கடன் வாங்கியவர்கள் (என்னைப் பெற்றவீட்டார்) உயிருடனிருக்க, என்னை எப்படிக் கடன் கேட்கலாம்' என எழுத, அக் கடிதத்தைக் காட்டி என்னிடம் அழுதனர்.

பிறகு எவ்வாறோ சொல்லி, என் தமையனாரே, ஏறத்தாழ நாலாயிரம் ரூபாயளவு செலவழித்து என் திருமணம் முடிந்தது. அச்செலவு கணக்கு இன்னமும் எங்கள் கைப்பெட்டியில் உளது. எனினும் கடன் வாங்கித் திருமணம் செய்து கொண்டவன் என்பது போன்ற, பல அவலச் சொற்களை நூறுமுறை திரும்பத் திரும்பப் பலரும் சொல்லிக் காட்டும்படி செய்துவிட்ட என் பெற்றோரை நினைத்து நான் கணத்திற்குக் கணம் நொந்த காலங்கள் பல. இதிலும் என் மனைவி சிந்தாமணிதான் மிகமிக அவமானப் படுத்தப்பட்டாள்.

நகரத்தார் சமூகமே வாழ்ந்தார்க்கு மாரடிக்கும் சமூகம் என்றுநான் வருந்துவதுண்டு. இப்பொழுது சமுதாய மனமே மாறியுளது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

### முயற்சியுடைமை இகழ்ச்சியை முறியடித்தது

இந்தச் சூழலுக்கிடையேயும், சில ஆண்டுகள் எப்படியோ ஓடிவிட்டன. எனக்கும் கண்ணம்மை என்ற மகளும் சோலையப்பன் என்ற மகனும் இக்கால கட்டத்தில் பிறந்து வளர்ந்தனர். என்னை வளர்க்க என்று 'தத்தெடுத்த என் பெற்றோர்க்கு பேர்த்திபேரனைப் பார்த்ததும் தங்கள் குடிவழி வளர்கிறது என்ற மகிழ்ச்சியை மட்டும் இறைவன் அருளினான். ஏனெனில் அக்குடும்பத்திலிறர் எல்லோரும் காலமாகிவிட்டனர்.

இவ்வளவிற்கும் இடையிலேதான், எட்டாம் வகுப்புத் தேர்ச்சிடன் படிப்பைவிட்டு, பிறகு புலவருக்குப் படித்து, ஆசிரியனாக ஆன நான் பள்ளி இறுதி வகுப்பு (SSLC), இடைநிலை வகுப்பு (Intermediate), இளங்கலை - பொருளியல் (B.A., Economics), முதுகலை - தமிழ் எனத் தனிப்படிப்பு முறை மூலம், படிப்படியாகப் படிப்பில் முன்னேறிக் கொண்டிருந்தேன்.

காரைக்குடிப் பள்ளியில் பணி செய்த அப் பன்னிரண்டு ஆண்டுகளையும் எனக்குப் பயனுடையன ஆக்கிக் கொண்டேன்.

மேலும், பலரும் போற்றும்படியான ஏழு நூல்கள் எழுதி வெளிவந்தன. யாரையேனும் தக்கவரை முன் மாதிரியாகக் கொண்டு முயன்றால், வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்பதற்கு என் வாழ்க்கை ஒரு சான்று, மு.வ.வைப் போல வர வேண்டும் என்ற பேரார்வம் நூல்களை எழுத வைத்தது என்பதே உண்மை.

நோயால் இறந்தவருண்டு; கவலையால் இறந்தனர் என்னை வளர்த்த பெற்றோர். இதே சூழலில்தான், முன்னே சுட்டிய வழக்குகளும் நடந்து தோல்வியில் முடிந்தன. எங்கள் வழக்கறிஞர் மேல் முறையீடு செய்ய வற்புறுத்தினார். என்னுடைய சம்பளம் நூறு ரூபாய்க்குள் இருக்கும் போது, ஒரு செல்வக் குடும்பத்தாருடன் போட்டியிட்டு, வழக்காடி வெல்ல முடியாது என்பதாலும் அப்படி வென்றாலும் வழக்காட வென்று கடன் வாங்க நேர்ந்து, அது வட்டியும் முதலுமாகி வெற்றி பெற்றாலும் எஞ்சுவது பெரிதாக இராது என்பதாலும் நான் தொடர்ந்து படிப்பிலேயே கவனம் செலுத்தி, முதுகலை அளவு வர அது தடையாகிவிடுமென்பதாலும் 'போனால் போகட்டும் போடா' என்று, மேல் முறையீடு செய்யாமலே விட்டுவிட்டேன்.

இந்நிலையில் அந்த இரக்கமற்ற அரக்கர்கள், என் பெற்றோரைக் கொதிக்கின்ற உலையைக் கொட்டச்செய்து விரட்டி அடித்துள்ளனர். காரைக்குடியிலிருந்த எங்களுக்கு இதை என் பெற்றோர் அறிவிக்கவில்லை. பிறகு கேள்விப்பட்டு, பிறிதொரு உறவினர் வீட்டு, உட்புற முற்றங்கள் சூழ்ந்த இடத்தில், இவர்கள் குடிபெயர்ந்து இருந்தமையறிந்து ஊர்சென்று பார்த்தேன்.

அதே மனத் துயரால் இருவரும் நோய்வாய்ப்பட்டனர். அன்று தொடக்கநிலை மருத்துவமனை – அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பூலாங்குறிச்சி என்ற பக்கத்தூரில் மட்டுமே இருந்தது. மாட்டுவண்டி வைத்து, இருவரையும் அழைத்துப் போய்ச் சில நாட்கள் மட்டுமே மருத்துவம் பார்த்தோம்.

நானோ வேலையில் இருப்பவன்; இந்தச் சுமையும் என் மனைவி மீதே விழுந்தது. என் கொழுந்தியார் தெய்வானை இல்லையென்றால், காரைக்குடியில் என்னையும் பிள்ளைகளையும் கவனிக்க இயன்றிராது. நெற்குப்பையில் தன் மாமியார், மாமனாரைக் கவனித்துக் கொண்டாள், என் மனைவி.

எனினும் நாளுக்குநாள் மோசமாகி, சொத்துக்கள் பறிபோன ஓராண்டிற்குள், தீபாவளிக்கு முந்தைய இரண்டு மாதத்திற்குள் முதலில் என் தாயார்

கலியாணி ஆச்சியும் பிறகு ஒரே மாதத்தில் தந்தையார் இராமசாமிச் செட்டியாரும் காலமாயினர்.

நான் வளரவந்த இடத்தில் என் அப்பத்தாள் – என் தந்தையின் தாயார் – காலமானபோது, 'தாலாட்டு' என்ற நூலை, முழுமையாய் காப்புரிமையை எழுதிக் கொடுத்து, முந்நூறு ரூபாயளவு பெற்றுச் சென்று அப்பத்தாளின் இறுதிக் கடன் செய்து முடித்தேன். அவருடன் பிறந்தவர்கள் பெரும் பணக்காரர்களாக இருந்தும், நூறு ரூபாய் மட்டும் கொடுத்தனுப்பினர். இவ்வளவு மோசமாக இருந்த இச் சமூகம் இன்று மாறி இருக்கிறது. என் பெற்றோர் இருவர்தம் இறுதிக் கடன்களையும் நானும் என் மனைவி சிந்தாமணியுமே செவ்விதமாக முடித்து, வழியனுப்பி வைத்தோம். அதுவே எங்களை வேடிக்கை பார்த்த சிலருக்கு வியப்பாக இருந்தது.

இன்று நினைத்துப் பார்க்கிறேன். இன்றைய நிலையில் இருந்தால், அச்சொத்துக்கள் முழுவதையும் இழக்க விட்டிருப்பேனா? சொத்துக்களை இழந்த துக்கத்தில், அவர்கள் இருவரையும் அவ்வாறு, முழுமையான மருத்துவம் பார்க்க முடியாமல், என்னைப் பிரியவிட்டிருப்பேனா? என் மனச்சான்று என்னைச் சிலசமயம் ஈட்டிபோல் குத்துகின்றது. அன்று மருத்துவ வசதி மிகமிகக் குறைவு. எல்லாத்துயரையும் முயன்று கடந்து வர முடிந்த எனக்கு அவர்களைக் காப்பாற்றுவதில் மட்டும் இயலாதவனானேன். அந்த இயலாமையை நினைக்கும் போதெல்லாம் என் கண்ணீர் கரைபுரள்கிறது.

அவர்கள் எனக்கு என்று குடியிருக்க வீடு வைக்கவில்லை; ஒரு குண்டுமணி அளவு தங்கம் வைக்கவில்லை; வேறு சொத்துக்களும் வைக்கவில்லை.

பரியா மருதுபட்டியில் விளையாத தரிசு நிலம் மட்டும், கடன்காரரும் வேண்டாமென்று விட்டுவிட்டதால், என் பெயரில் கிடக்கிறது.

ஆயினும் அவர்கள் நல்லவர்கள்; மிக நல்லவர்கள் சொத்து கிடக்கட்டும்; அவர்கள் நல்வினை – புண்ணியம் என்ற ஒன்றைமட்டும் எனக்கும் என்குடும்பத்திற்கும் சேமிப்புக்கணக்கில் சேர்த்துவைத்துவிட்டுப் போனார்கள். அந்தப் புண்ணியமே முதலாக என்குடும்பம் தழைத்துச் செழித்தது.

**சிந்தாமணி செய்த இல்லறத் தவம்**

வணிகச் செழுமை மிக்க நகரத்தார் குலத்தில் பிறந்தும் என்னளவு வறுமைப் பட்டவர்கள், உற்றார் உறவினர்பால் சிறுமைப்பட்டவர்கள் எங்களைப்

போல்வார் சிலர் இருந்திருக்கலாம். இந்நிலையில் மனம் உடைந்து, குடும்பம் சிதைந்து, இடையில் அழிந்து போவதே அவர்களின் 'தலைவிதி'யாக இருந்திருக்கும்.

என்னைப் பொறுத்தவரை உற்றார் உறவினரல்லாத உலகம் என்னை மதித்தது. மாணவர்கள் என்பால் அன்பைச் சொரிந்தனர்; என் குலத்தவரல்லாதவர்களே எனக்கு உதவினர்.

நானும் கவியரசு முடியரசனும் கடன் வாங்காத துறையும் இராது; நாளும் இராது; சேமிப்பு பணத்தில் (P.F) இருந்து கடன், சீட்டுப் பணத்தில் கடன் எனப் பட்டியல் நீளும். ஒவ்வொரு மாதமும் சம்பளத்தில் முன்பணம் கேட்டு, தலைமையாசிரியர் முன் போய் நிற்பவர்கள் நாங்களே எனலாம். அந்த மாதச் சம்பளத்தில் அது கழிக்கப்படும்.

தலைமை ஆசிரியர் சீனிவாச ஐயர், பத்து பதினைந்து தேதி வாகில், அவர் அறையில் எங்களைப் பார்த்ததும், கிருஷ்ணா என்று கூவுவார் (அவர் தான் தலைமைக் கணக்கர். நாங்கள் 'அட்வான்ஸ்' வாங்க வந்திருப்பதை, நாங்கள் சொல்லாமலே உணர்ந்து அவ்வாறு கூப்பிடுவார். இதுதான் 'இலம் என்னும் எவ்வம் உரையாமை' போலும் என எண்ணி மனத்தினுள் சிரித்துக் கொள்வேன்.

பின்பக்க அலுவலகத்திலிருந்து குரல் வரும். "இல்லையே, பணம் சேரலையே!" என்று, பணம் தரும் பரமாத்மா கணக்கர் கிருஷ்ணன் குரல் அது.

நாங்கள் விடுவதில்லை. வேறுவழியின்றி முப்பது கேட்டு இருபதாவது பெற்றுத் திரும்புவோம். சில சமயம் எங்களைப் பார்த்ததும், தலைமையாசிரியர், "கொஞ்சமா கேளுங்கள், குறைத்துக் கேளுங்கள்!" என்று நாங்கள் கூடுதலாக முன்பணம் கேட்டுவிடாமல் தற்காத்துக்கொள்வார்.

கவியரசு முடியரசன் செலவாளி; அப்பழக்கம் என்னிடமும் சேர்ந்தது. சிந்தாமணி, 'முடியரசு வாத்தியாரோடு சேர்ந்து, இப்படிக் கடன் வாங்கிச் செலவழித்தால், நம்ம நிலை என்ன ஆகும்? நம்ம சொந்தக்காரங்க நாளைக்கு நம்ம பிள்ளைகளுக்கு ஏதாவது விசேடம் என்றால், ரொம்ப எதிர்பார்ப்பார்களே?' அதற்கெல்லாம் எங்கே போவோம் என்று திரும்பத்திரும்ப வருத்தப்படுவாள். துன்பம் சுடச்சுட, குடும்பம் தளர்ந்துவிடாமல் காக்க, நாளும் இல்லறத் தவம் செய்தவள் என் துணைவி சிந்தாமணி.

### கவலையை மறக்கவைக்கும் கலந்துரையாடல்

எனக்குக் காரைக்குடி ஆசிரியப்பணி மிகவும் பிடித்திருந்தது; மன அமைதி தந்தது.

கவிஞர் முடியரசனும் நானும் இரட்டையர்கள்போல் வாழ்ந்தோம். பள்ளி முடிந்து, மாலையில் கல்லுக்கட்டிப் பக்கம் இருவரும் சேர்ந்தே நடந்து வருவோம். பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் மிதிவண்டியில் அப்பக்கம் வருபவர் எங்களைக் கண்டதும் இறங்கிவிடுவார். ஒரு பக்கமாக ஒதுங்கிநின்று தமிழ், இலக்கியம் பற்றியெல்லாம் மணிக்கணக்கில் பேசிப்பின்பு பிரிவோம்.

### நல்லப்பன் என்றொரு ஆருயிர் நண்பர்

காரைக்குடி சொ.முருகப்பாவின் மகளிர் இல்லத்தில் மேலாளராக இருந்த நல்லப்பனும் நானும் – காதலனும் காதலியும் போல், அத்துணை நெருக்கமாகப் பழகினோம். திராவிட இயக்க மாநாடுகள், அறிஞர் அண்ணா பேசும் ஊர்கள், முத்தமிழ் விழா நடக்குமிடங்கள், திரைப்படங்களின் முதல்நாள் காட்சிகள், விருந்துகள் என எங்கு சென்றாலும் இருவருமாகச் செல்வோம். அதனால் இலக்கியப் பதிப்பகம் சோமையா அண்ணன் எங்களைக் காதலன் காதலி என்றே அழைப்பார்.

ஒருவர் ஒருவரைத் தேடுவதும், ஒருவர் மற்றவர்க்காகக் காத்திருப்பதும் கண்டால், அவ்வாறுதான் எண்ணத் தோன்றும்.

### நல்ல நண்பர்கள் சிறந்த வாழ்க்கை

என்னுடன் திருவையாற்று அரசர் கல்லூரியில், புலவர் வகுப்பின் இறுதியாண்டில், உடன்படித்த வலையபட்டி வே.அண்ணாமலையுடன் 'கல்வித்துறையில்' இணைபிரியா நண்பனாகப் பழகினேன். என்னுடைய ஒவ்வொரு கட்ட வாழ்விலும் ஒருவர் இருவரைத்தான் உயிர் நண்பர்களாய்க் கொண்டு பழகினேன். நல்லவர்களுடன் பழகியதாலும் பல நன்மைகள் வாய்த்தன.

கவியரசு முடியரசனாரும் நானும் காரைக்குடி கம்பன் கழகம், திருக்குறட் கழகம், திருச்சி வானொலி நிலையம் உட்பட, தமிழ் விழா அனைத்திலும் கவியரங்குகளிலும் பிற நிகழ்வுகளிலும் சேர்ந்தே கலந்து கொள்வோம்.

அவருடைய கவிதைகள் மிக எளிதாக மக்களால் வரவேற்கப்படும். நான் தமிழில் முதுகலை வரை படிப்பதில் கருத்துச் செலுத்தினேன். இவ்வாறு இயல்பாக எங்கள் துறைகள் பிரிந்ததால், நான் மதுரை செல்ல எங்கள் இணைபிரியா அண்ணன் தம்பி நட்பு பிரிவுபட்டது.

அன்று தமிழாசிரியர்களுக்குத்தான் மாணவர்களிடையே செல்வாக்கு மிகுதி. ஏதேனும் மாணவரிடையே சிக்கலென்றால், தலைமையாசிரியர், எங்கள் இருவரைத்தான் மாணவர்களிடம் பேசுமாறு அழைப்பார்.

திரைப்பட இயக்குநர் சுப.முத்துராமன், சிந்தனைச் செம்மல் பழ.கருப்பையா, பேராசிரியர் இரா.மோகன் உட்படப் பெரும் முதலாளிகளாகப் பின்பு வளர்ந்தவர்கள் வரை மிகப்பலர் எங்கள் இருவரிடமும் பயின்றவர்களே.

இத்தகைய மன அமைதி தந்த சூழலைவிட்டு, உயர்ந்த நிலை கருதி, யான் மதுரைக்கு வந்து சேர்ந்தேன்.

### மதுரை வாழ்வு

### தியாகராசர் கல்லூரி

மதுரைக்கு வந்தது முதல் எனது வாழ்வில் படிப்படியான முன்னேற்றம் வாய்த்தது.

காரைக்குடிப் பள்ளிப் பணிக் காலத்தை, யான் என் கல்லூரிப் படிப்புக்காலமாக மாற்றிக் கொண்டேன். (SSLC, Intermediate, B.A., M.A.,) பள்ளி இறுதிப் படிப்பு மாணவர்க்குப் பாடம் எடுத்த நான், பள்ளி இறுதித் தேர்வு எழுத வேண்டியவனானேன். புலவர் வே. அண்ணாமலையுடன் சேர்ந்து, பள்ளியிறுதி வகுப்பிற்கு, "இரட்டையர் வினாவிடை" என்று இருமுறை, உரைவிளக்க நூல் எழுதி வெளியிட்ட நான், அதே தேர்வை எதிர் கொள்ள நேர்ந்தது.

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முழுமையாகப் பத்தாண்டுகள் பணி புரிந்த யான், அதில் பெரும்பகுதியை, எனது பிஎச்.டி என்ற முனைவர் பட்டம் பெறுவதற்கான ஆய்விலேயே கழித்தேன். பள்ளி எனக்குக் கல்லூரியாகவும் கல்லூரி எனக்குப் பல்கலைக் கழகமாகவும் பயன்பட்டன.

சொற்பொழிவுகள், கவியரங்குகள், வானொலிப் பொழிவுகள், பட்டிமன்றங்கள் எனப் பல்வேறு துறைகளில் கலந்து கொண்டாலும், இப்

பத்தாண்டுகளும் கல்லூரிப் பணியைச் செவ்வனே ஆற்றுவதிலும் எனக்குப் பெருவிருப்பம் தந்த டாக்டர் பட்ட ஆய்விலுமே கழிந்தன. அதனால் இக் காலக்கட்டத்தில் ஒரு நூல்கூட எழுதவில்லை.

உயர்நிலைப் பள்ளியில் இருந்தபோது முடியரசனாரின் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டேன். குழந்தைகள் இலக்கியம் என்ற 16 சிறுவர் பாடல்கள் அடங்கிய சிறுநூலை, யான் என் முன் மாதிரி வழிகாட்டியாகக் கொண்ட மு.வ.வின் அணிந்துரையுடன் வெளியிட்டேன். சுதந்திரப் போராட்ட வீரரும் பொதுவுடைமைக் கட்சியினரும், என் சிறியதாயார் மகனுமான தேவகோட்டை பச்சைக் காவடி ஏகநாதன் அவர்கள் 'உண்மைப் பிரசுரம்' எனத் தாம் தொடங்கிய வெளியீட்டகத்தின் மூலம் வெளியிட்டார்கள். பின்னர் 'தாலாட்டு' என்ற நாடோடிப் பாடல்களின் தொகுப்பு நூலை, செல்வி பதிப்பக வழியாக வெளியிட்டேன். அது மிகுந்த புகழைத் தேடித் தந்தது. மிகப்பல பதிப்புக்களைக் கண்டது.

தொடர்ந்து காதல் வாழ்வு, பிறைதொழும் பெண்கள் என்ற இரண்டு நாடோடிப் பாடல் தொகுப்பு நூல்களை வெளியிட்டேன். இலக்கியத்தில் இன்பச்சுவை, குறிஞ்சிப்பாட்டுத் திறனாய்வு ஆகிய இரு நூல்களும் அன்றே எனக்குத் தொல்காப்பியத்திலும் சங்கப் பனுவல்களிலும் இருந்த ஈடுபாட்டை விளக்கின. 'மொழிவழிச்சிந்தனைகள்' என்ற நூல், புதுமையாய் அமைந்து பலராலும் போற்றி வரவேற்கப்பட்டது.

இவ்வாறு உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்த்த போதே, ஏழு நூல்கள் எழுதிய யான், கல்லூரிப் பணிக்காலத்தில் ஒரு நூல் கூட எழுதாதது, இன்று நினைக்கும்போது வியப்பாக இருக்கிறது.

சங்கப்பாடல்களில் இலக்கிய மரபுகள் (Literary Conventions in Cankam Poetry) என்ற ஆய்வுக்காக, தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் திரும்பத் திரும்பப் படித்ததே, பெரும்பயனாக அமைந்தது.

கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் தமிழில் தணியாத ஆர்வலர். பிற தொழிலதிபர்கள் போலாது, தமிழைப் பழுதறக் கற்ற பெருஞ்செல்வர் என்று சொ. முருகப்பா கூறுவார்கள். அவரது தனித் தமிழ் ஆர்வமும் சிவனெறிச் சிந்தனையும் போற்றுதற்குரியன. இந்தி மேலாண்மையை அறவே வெறுத்ததுடன் எதிர்த்துப் போராடவும் துணிந்தவர். அவருக்குச் சிறந்த பக்தி நூல்

என்றால் திருவாசகம்; சிறந்த மெய்ம்மையியல் நூலென்றால் சிவஞானபோதம்; சிறந்த சங்கப் பாடல் என்றால் குறிஞ்சிப் பாட்டு; சிறந்த உரைநடை என்றால் மறைமலையடிகளின் உரைநடை என இவ்வாறான அழுத்தமான சில ஈடுபாடுகள் உண்டு. அவரால் ஒரு நாள் முழுவதும் ஆராயப்பட்டு தமிழாசிரியனாகத் தேர்வுசெய்யப்பட்டதை யான் ஒரு பெருமையாகக் கருதிக் கொள்வதுண்டு.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, அ.கி.பரந்தாமனார் போலும் பேரறிஞர்களுடனும் பேராசிரியர் மெ.சுந்தர அண்ணன், பேராசிரியர் கண. சிற்சபேசன் போல்வாருடனும் நெருங்கிப் பழகும் பேறு பெற்றவன். மேலைச்சிவபுரிக் காலத்திலிருந்து, திராவிட இயக்கம் காரணமாக, பேராசிரியர் மெ.சுந்தரம் அவர்களை அண்ணனாகவே கருதி, பல ஆண்டுகள் பழகியமை என் வாழ்வில் மறக்கவொண்ணாததாகும்.

இந்தி எதிர்ப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. தியாகராசர் கல்லூரி மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கால கட்டத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியும் மதுரை தியாகராசர் கல்லூரியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பற்று மேலோங்கி விளங்கிய உயர் கல்வி நிலையங்களாகும்.

எங்கள் மாணவர்களில், முன்னாள் அமைச்சர் கா. காளிமுத்தும், கவிஞர் நா.காமராசனும் சட்டத்தை எரித்துச் சிறை புகுந்தனர். சிறையிலிருந்தபோதும் என்னிடம் சங்க இலக்கிய நூல்களை வாங்கிப் படித்தனர். என்னிடமுள்ள பத்துப் பாட்டு நூலில் இடப்பட்ட சிறைமுத்திரை இன்றுமுளது.

பேராசிரியர் இரா.மோகன், கவிஞர் மு. மேத்தா போலும் பலருக்குப் பாடம் நடத்திய பெருமை வாய்த்தது.

சி. இலக்குவனார் துறைத்தலைவர். ஆண்டுதோறும் மூன்று துறை சார்ந்த இளங்கலை மாணவர்களை ஒன்றாக அமர வைத்து, இலக்கணப் பாடம் எடுக்கும் பணி என்னிடம் தரப்படும். அறுபது, எழுபது மாணவர்களை உட்காரவைத்து இலக்கணம் நடத்துவது பெரும்பாடு. அப்போது பெற்ற பயிற்சியால்தான். பிற்காலத்தில் 'நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணம்' பற்றி, வாரந்தோறும் தினமணியில் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் எழுத அடிப்படையானது.

சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டத்திற்கு ஆராய, துறைத் தலைவர் சி. இலக்குவனாரின் கீழ், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்தேன். 'சங்கப் பாடல்களில் இலக்கிய மரபுகள்' பற்றி ஆராய, நானே தலைப்புத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். அன்றைய சூழலில் ஆங்கிலத்தில் மட்டுமே ஆய்வேடு எழுத முடியும். ஆறு ஆண்டுகள் வரை அதிலேயே மூழ்கி, சங்க `யம் பற்றி ஆய்வு செய்து, 1969இல் முனைவர் பட்டம் பெற்றேன். சி. இலக்குவனார் தமிழ்வழிக் கல்வி பற்றிப் போராட்டம் தொடங்கினார். அவரளவு தமிழுக்காகத் தன்னீகம் செய்தவர்கள் மிகமிகச் சிலரே. அன்றைய காங்கிரசு ஆட்சியும், இலக்குமணசாமி முதலியாரும் அக் கருத்தை ஏற்காததால், மதுரை முதல் சென்னை வரை – பரப்புரை நடைப்பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார்.

ஆனால் அது தடைப்படுத்தப்பட்டதுடன் அவரும் சிறைப்படுத்தப்பட்டார். பின்பு பேராசிரியர் அ.சிதம்பரநாதனார் தியாகராசர் கல்லூரி முதல்வராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் வரவே, அவர் என் ஆய்வு மேற்பார்வை யாளரானார்.

முதன் முதலில், நேர்காணலின் போது, கலைத் தந்தை கருமுத்து தியாகராசர், 'எங்கள் கல்லூரிக்கு வரவேண்டும் என்று ஏன் விரும்புகிறாய்' என்று கேட்டார். "தமிழ் நாட்டிலேயே டாக்டர் பட்டம் பெற ஆராய்ச்சி செய்ய அனுமதி பெற்ற கல்லூரி, தென்பகுதியில் தியாகராசர் கல்லூரிதான். எனக்கு டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் ஆர்வம் உளது", என்றேன். அதை நிறைவேற்றிக் கொண்டதில் மகிழ்ச்சியுற்றேன்.

என் ஆர்வம் நிறைவேறிய நிலையில், நான் மேலும் அங்கு பணியாற்றுவதில் சில தடைகள் ஏற்பட்டன. அதனால் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்து, இடம் மாற முயல வேண்டியவனானேன். இவ்வாறு ஏற்பட்ட தடைக்கல், நான் மேலும் முன்னேற ஒரு படிக்கல்லாக உதவியது.

## மதுரைப் பல்கலைக்கழகம் தந்த பெருவாழ்வு

ஈரோடு மகாசன உயர்நிலைப்பள்ளியிற் பணி செய்யும் வாய்ப்பு புலவர் நா.மு. மாணிக்கத்தின் செல்வாக்கால், எளிதிற் கிடைத்தது.

காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளியிற் பணிசெய்யும் வாய்ப்பு, கம்பனடிப் பொடி சா. கணேசனாரின் ஒரு வார்த்தைக்காக, என்னைத் தேடிவந்து கிடைத்தது.

மதுரைத் தியாகராசர் கல்லூரியிற்பணி, வேறு பரிந்துரை இன்றி, யான் எழுதிய நூல்களே பரிந்துரையாகிக் கிடைத்தது. கலைத் தந்தை கருமுத்து தியாகராசர் நேர்காணலின் போது ஒருநாள் காலை, மாலை இருவேளையும் என்னைப் பலவாறு கேள்வி கேட்டும் எனது நூல்களைப் பார்த்தும் படித்தும் பணியில் அமர்த்தினார்.

பிறகு, மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்த போது, முதல் துணைவேந்தர் தெ.பொ.மீ. அவர்களை, அவர் மதுரை கே. கே. நகரில் வாடகை வீட்டில் தனியே இருந்தபோது, நானும் தனியே சென்று பார்த்தேன். ஒருநாட் காலை வேறு யாருமின்றி அவர் இருந்த சூழலில், நான் சென்று என் நிலைமை, படிப்பு, ஆராய்ச்சி விவரங்களைக் கூறி வந்தேன்.

வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி முதல்வரும் மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய சக்திவேலு அவர்களை, என் நண்பர் பேராசிரியர் சிற்சபேசனுடன் சென்று பார்த்தபோது, ‘உன் பெயரைத்தான் V.C.சொல்லிக்கொண்டிருக்கிறார். உனக்கு வேலை கிடைக்கும்’ என்றார்.

ஆனால் ஆட்சி மாறியதால், அவருக்குப் பதவி நீட்டிப்பு வாய்த்திலது.

அடுத்து, மு.வரதராசனார் துணைவேந்தராக வந்தமையால் பரிந்துரை இன்றியே, பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் வேலை கிடைத்தது. இரண்டாண்டுகள் ஆனதும் அவரே ஆட்சிக் குழுவில் வைத்து எனக்கு இணைப்பேராசிரியர் பதவி தந்தார்.

துணைவேந்தர் சை.வே.சிட்டிபாபு, நான் வேண்டாம் என ஒதுங்கியிருக்க நினைந்திருந்தும், கூப்பிட்டுக் கொடுத்ததுபோல் அஞ்சல்வழிக் கல்வித் தமிழ்த்துறைத் தலைவர் பதவி தந்தார்.

நான்காண்டுகள் அப் பதவியிலிருந்த போது, தமிழகம் முழுவதும் சென்று பாடம் சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று மதுரைப் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித்துறை, ‘பொன் முட்டையிடும் வாத்தாக’ வளர்ந்தது.

பின்னர் துணைவேந்தர் வ.சுப. மாணிக்கம் காலத்தில், தமிழியல் துறையில், பேராசிரியப் பணிக்குத் தேர்ந்தெடுக்கும் சூழல் வந்தது. துணைவேந்தருடன் சேர்த்து பதினான்கு பேர்கொண்ட குழு அமைக்கப்பட்டது. பேரறிஞர் க. வெள்ளை வாரணர் உள்ளிட்ட பெரியவர்கள் என்னைப் பற்றி

அமெரிக்கா சென்றதும் என் மகன் மணிவண்ணன், 'அப்பா, இனி நமக்குப் பணக்கவலை வராது' என்றான். ஏனெனில் ஒவ்வொரு நாளும் நாங்கள் பட்ட மனக்கவலையை அறிந்தவன் அவன்.

என் மகன் தொல்காப்பியன் (ஏ) கண்ணன், எடின்பரோ பல்கலைக் கழகம் சென்றதும், 'எடுத்ததற்கெல்லாம் மனக்கவலைப்படுவதை' இனி விடுங்கள் என்றான்.

## உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு போராட்டம்

தொடக்க காலத்திலிருந்து என் உடலுக்கும் உள்ளத்திற்கும் பெரும் போராட்டம். என் உள்ளம் வலிது. எனக்கு இது இப்படித்தான் முடியும் என்று, முன் கூட்டி உணர முடியும். நமக்கு நாமே மருத்துவர்; நமக்கு நாமே கணியர் (சோதிடர்); நமக்கு நாமே ஆசிரியர்; நமக்கு நாமே வழிகாட்டி இவ்வாறு வாழ முடியும்.

நம் கண் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முனைகிறது. தூசி வருமுன் இமை மூடிக்கொள்கிறது! நம் உடல்கூட, அது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முனைகிறது. சாதாரணக் காய்ச்சல் உடலை நலப்படுத்திப் போகும் என்பார்கள்.

என் பெற்றோர்க்கு நான் 'கடைக்குட்டி'. என் உடல் மிகமிக மென்மையானது. இளம் பிள்ளைப் பருவத்தில் சொரிசிரங்கு, பல்லில் சீழ்வடிதல், இன்றைய மருத்துவ வசதி அன்றில்லை. வயிற்றினுள் நச்சுநீர் ஊறும் (Acidity); அதனால் வயிற்றுப்புண், தலைவலி, வாந்தி, மயக்கம். புளிச்ச நீர் வாந்தியாக வரும். கடிதாக உழைத்தால் மனம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டால் இந் நச்சுநீர் ஊறிவிடும். ஒருநாள் முழுவதும் குப்புறப் படுத்த படுக்கைதான். பத்துமுறை வாந்தி வரும். மதியம் உண்ட சோறு, இரவு பத்துமணிக்குச் செரிமானமின்றி, அப்படியே புளிச்சநீருடன் வெளிவரும். திரும்பத் திரும்ப வாந்தி, மயக்கம், பிறகு உறக்கம். மறுநாள் 'புதுமனிதனாகி' உழைக்க, படிக்க, எழுத ஆயத்தமாகிவிடுவேன். ஒரு மாதம், இரண்டு மாதமானால் அதே புளிச்சநீர் ஊறி, அத்தனை தொல்லைகளும் திரும்ப வந்து, பிறகு விட்டுவிடுதலையாவது ஒரு வாடிக்கை.

இதே போலத்தான் நன்மைகள் தேடிவரும்; தீமைகள் தேவையின்றி, நான் அதற்குக் காரணமாகாமலே, என்னைத் தாக்கிப் பார்க்கும்.

இது நடந்த ஏழாம் நாள் தமிழக அரசு நடுவணரசால் கலைக்கப்பட்டு விட்டது.

இவ்வளவும் வெளிப்படையாக எழுதக் காரணம் கேளாமல் கிடைத்த பதவிகளும் விருதுகளும் பல; எதிர்பாராது வர இருந்தும், கைக்கு எட்டியவை வாய்க்கு எட்டாமற் போனவையும் பல. அவற்றுக்கு இது முதற் சான்று.

கனவு போல் வாழ்வு

மதுரை எழுத்தாளர் மன்றத்துடன், காரைக்குடியில் இருந்தபோதே எனக்கும் முடியரசனுக்கும் தொடர்புண்டு. அன்பு நிறைந்த கருணைதாசன் அவர்களின் பற்றும் பாசமும் அன்றே தொடங்கி, அவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தன. பேரறிஞர் அண்ணா; கவியரசர் கண்ணதாசன் போல்வாருடன் அவர்களின் பேச்சுக்களைக் கேட்க, ஓரளவு இது வாய்ப்புத் தந்தது.

முளைவிட்டு வளரும் என் இளம் பருவத்தே, யாரைப்போல் வரவேண்டும் எனக் கனவு கண்டேனோ, அவரிடமே - பேரறிஞர் சான்றோர் மு. வரதராசனாரிடமே - அவர் துணைவேந்தராக வர அவரின் கீழ்ப் பணியாற்ற இப்பல்கலைக்கழகம் வாய்ப்பளித்தது. மனம் போல் வாழ்வு என்பது மட்டுமன்று. கனவு போலவும் வாழ்வு வாய்க்கும். எனவே நல்ல கனவு காணுங்கள்!

திரு.வி.க. என்றால் எனக்கு உயிர். அவர் எழுத்து, வாழ்க்கை யாவும் யான் மனமாரப் போற்றுவன. அவர் பெயராலமைந்த, தமிழக அரசின் திரு.வி.க. விருது பெற்றது இறைமை கூட்டுவித்த பேரருளாகும்.

அங்கயற் கண்ணியாம் அன்னை மீனாட்சி பற்றி 101 அடிகளாலான பாடல் எழுதி முதற்பரிசு பெற்றதும் இறையருளேயாகும்.

பல்கலைக்கழக நல்கைக்குழுவால் தேசியப்பேராசிரியர் (National Lecturer) என்ற சிறப்பும், சிறப்பு நிலைப் பேராசிரியர் (Emeritus Fellow) என்ற பெருமையும் வாய்த்தன.

புதுதில்லி சாகித்திய அக்காதெமியில் முதல் ஐந்தாண்டுகள் பொதுக்குழு உறுப்பினராகவும் அடுத்த ஐந்தாண்டுகள் ஆட்சிக் குழு உறுப்பினரானதுடன் தமிழ்மொழிப் பொறுப்பாளராக ஆனதும் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் என்ற தகுதியினாலேதான். தில்லி ஞானபீடத் தொடர்பும் அத்தகையதுதான்.

இந்தியப் பொதுப்பணி ஆணையத்தில் (U.P.S.C) பல ஆண்டுகள் தொடர்பேற்பட்டதும், பிறபல உலகு தழுவிய தமிழ் நிறுவனங்களின் தொடர்புகள் தொடர்ந்து கிடைத்ததும் நினைத்துப் பார்க்கத்தக்கன.

## ஒப்பிலக்கியத்துறை தந்த பலதுறைப் பயிற்சி

பல்கலைக் கழகப் பணியேற்றதும், 'ஒப்பிலக்கியம்' என்ற பாடம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துறை இந்தியத் தமிழ்த்துறைகளில் இங்குதான் கால்கொண்டது. அதனால் யான் புதிய துறையில் வளர்ச்சி பெற்றதும் என்னால் அத்துறை வளர்ச்சிபெற்றதும் மறக்கற்பாலன அல்ல.

பல்கலைக் கழகப் பதவி ஏற்றதும், துணைவேந்தர் மு.வ. அவர்கள், பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவி பெற்று, ஆய்வியல் அணுகுமுறைகள் பற்றி ஆய்வாளர்களுக்குப் பயிற்சிதர, இரண்டு பயிலரங்குகளை நடத்தச் செய்தனர். அதில் ஈடுபட்டுழைத்ததன் பயனாக அது பற்றி 'ஆய்வியல் அறிமுகம்' எனும் நூலெழுதும் வாய்ப்புக் கிடைத்தது. இதற்கு எம்.எஸ். இலக்குமணன் என்ற பொருளாதாரப் பேராசிரியர், நல்ல பல ஆங்கில நூல்களைத் தேடித் தந்தார். அதனால் அவர் பெயரையும், ஆசிரியராகச் சேர்த்து வெளியிட்டேன். நாற்பதுக்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் முனைவர் பட்டம் பெற வழி காட்டவும், பலர் இளம் ஆய்வர் பட்டம் பெற உதவவும் பலர் வேலை பெற்று நல்வாழ்வு பெறவும் என இவ்வாறான பல நற்பணிகள் ஆற்ற, இப் பதவி வாய்ப்புத் தந்தது.

நாள்தோறும் மேன்மேலும் படிக்கவும் சங்க இலக்கியம், ஒப்பிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள், ஆய்வு நெறிமுறை எனப் பல்வேறு துறைகளில் தமிழ் உயர்கல்வி மாணவர்களுக்குப் பாடம் நடத்தவும், ஆய்வுகளுக்கு வழிகாட்டவும் நூல்கள் எழுதவும் இத் தலைமைப்பணிக் காலம் பேருதவி செய்தது.

## சடங்குகள் இல்லாத மணிவிழா

எனது மணிவிழாவை இன்றைக்கு இருபத்தோர் ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு வாழ்த்தரங்கமாக நடத்தி, மணிவிழா மலர் ஒன்றும் வெளியிட்டனர். பிற நகரத்தார்களைப் போல, அதனை நான் ஒரு 'சடங்காகக்' கொண்டாடவில்லை.

மணிவிழாவிற்கு என நிதி சேர்த்து உதவி, முன்நின்று நடத்தியவர்களுள் கோனாபட்டு முத்தழகப்ப செட்டியார் ஒருவர் (நாகப்பா சைக்கிள் மார்ட்டு). அவரை முன்பின் அறியாத என்னிடம் அவர் காட்டிய பேரன்புத்திறம் நண்பர்களை வியக்க வைத்தது.

**செல்லப்பன் என்றொரு செம்மல்**

நான் மதுரை வந்ததுமுதல், என் நூல்களைத் தொடர்ந்து அச்சிட்டு, நான் குடும்ப அளவில் நலவாழ்வு பெற உதவியவர், மீனாட்சி புத்தக நிலையத்தின் உரிமையாளர் செ.செல்லப்பன் ஆவார். அவர் உண்மையான காந்திய நெறியினர் என்பது என் கருத்து. நூல்களை எழுதத்தான் என்னால் இயலும். அதற்கும் வழிகாட்டி, அழகுற அச்சிட்டு, ஒரு நூற்படிக்குக் கூடக் கணக்குவைத்து, ஆண்டுதோறும் வரவுசெலவுத் திட்ட அறிவிப்பு (Statement) தந்து, சிலபோது முன்கூட்டிப் பண உதவி செய்து – இவ்வாறாக ஒரு பதிப்பாளராக மட்டுமல்லாமல், ஒரு வழிகாட்டியாக, உதவுபவராக, ஊக்குவிப்பவராக, உடன் பிறவா அண்ணனாக விளங்கியவர் செ. செல்லப்பன் ஆவார். முத்தழகப்பருடன் செல்லப்பரும் சேர்ந்து என் மணிவிழா சிறப்புற நடக்க வழிவகை செய்தனர்.

என் மூன்று பெண்மக்களுக்கும் என்னால் நல்ல முறையில் திருமணம் செய்துவைக்க முடிந்ததென்றால், என் மகன்கள் மூவரையும் நன்கு படிக்கவைக்க முடிந்ததென்றால், வாழ்வில் சிறுதவறும் நேராதவாறு வாழ்ந்த என்னால் இவ்வாறு குடும்பத்தைக் காக்க முடிந்ததென்றால் அவற்றுக்கு என் வேலைப்பணி முதற்காரணம்; நூல்கள் பலவற்றைப் பயன்படுமாறு பாடுபட்டு எழுதியமை துணைக் காரணம். பின்னதற்கு உற்ற துணையாக விளங்கியவர் செ.செல்லப்பன் அவர்கள்.

**கவிப்பேரரசு என்றொரு 'மீரா'**

இவற்றுக்கு மேலாக மணிவிழா நிகழ்ச்சியை அமைத்து, மலரை உருவாக்கி, என் வாழ்வின் ஒரு பகுதியை ஆவணப்படுத்திய கவிப்பேரரசர் –நான் வணங்கும் தம்பி – பிறர் வாழ வழிவிட்டுத் தன் வாழ்வை ஈகம் செய்த மனத்தவர் பேராசிரியர் மீரா (சிவகங்கை மீ. இராசேந்திரன்) அவர்களை நெஞ்சம் நெகிழ, கண்களில் நீர்பனிக்க நினைத்துப் பார்க்கிறேன்.

**தந்தைக்குப் போதித்ததொரு முருகன்**
**தமிழண்ணலுக்கும் ஒரு மோகன்!**

அவருடன் என் மாணவராய் படித்து, பள்ளியில் முடியரசனால் பாராட்டப்பட்டு வளர்ந்து, பிற்பாடு எனக்கு வழிகாட்டுமளவு – ஆலோசனை கூறுமளவு என்னுடன் அன்புருவாய்ப் பழகிவரும் பேராசிரியர் இரா.மோகனும், மலர் உருவாக்கத்தில் உற்றுழி உதவினார்.

### மணிமொழியனார் என்றொரு தமிழ்ப்புரவலர்

மதுரையில் தமிழ்ப் புரவலராகத் திகழ்பவர் திருக்குறட்செம்மல் ந.மணிமொழியனார். அவரும் அவரது துணைவியார் கமலாமணிமொழிய னாரும் என்பால் வைத்திருக்கும் மதிப்புக்கும் அன்புக்கும் 'என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே' என எண்ணி மகிழ்கின்றேன்.

அவரது 'நியூ காலேஜ் ஹவுஸ்' எனும் – ஐந்தாம் தமிழ்ச் சங்க அரங்கில்தான் என் மணிவிழா நடைபெற்றது.

### மணிவிழா என்றொரு காட்சிப்படம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மணிவிழா மலரை வெளியிட்டார். அவர் என்னை மிகவும் மதித்து, அவரது முத்துவிழா மலரைத் தொகுக்கப் பணித்தவர். அவர் தொடங்கிய 'தமிழகப் புலவர் குழுவில்' நானும் ஓர் உறுப்பினன்.

எனக்கு உற்றுழி உதவியும், இடர் வந்துற்றபோதெல்லாம் இடர் களைந்தும் துயர் துடைத்தும் நிலைத்து நிற்க வைத்தவருமாகிய அறநெறி அண்ணல் லெ.நாராயணன் செட்டியார் என்னை வாழ்த்தியது யான் செய்த பெரும்பேறாகும்.

என் உடன்பிறவா அண்ணன் கவியரசு முடியரசனாரும், இளமை முதலே ஈடுபாட்டுடன் பழகிய சிறுகதை மன்னர் எஸ்.எஸ். தென்னரசும் என் புலமையை மிகவும் மதித்து, மிகுந்த அன்புடனும் பண்புடனும் பழகிய பேராசிரியர் பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பரும் தமிழ்ப்பாவை ஆசிரியராய் மிக நெருங்கிப் பழகி அன்பைப் பொழிந்த அண்ணன் கருணைதாசனும் மற்றும் பேரறிஞர் பலரும் மணிவிழாவில் என்னையும் என் மனைவி சிந்தாமணியையும் வாழ்த்தியமை, இன்றும் என் நெஞ்சத் திரையரங்கில், முழுநீளப் படமென ஓடிக்கொண்டிருக்கிறது.

### ஐராவதம் மகாதேவன் என்றொரு அறிஞர்திலகம்

தில்லியில் மிக உயரிய இந்திய ஆட்சிப் பணியாளராக விளங்கி, பிறகு தினமணி ஆசிரியராக வந்தவரும் தமிழகத் தொல்லியல் நிபுணரென உலகம் போற்றுபவரும் நானறிந்த வரை தமிழில் ஒரு 'இதழியலறிஞர்' (Journalist) என்று முழுமையாய்ப் போற்றக் கூடியவருமான ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஐந்தாண்டுகளுக்கு மேல் தினமணியில் வாரந்தோறும் உங்கள் தமிழைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று எழுதவைத்து, என்னை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

**தன்னைமுன்னிறுத்தாததொரு சம்பந்தம்**

தினமணியின் ஆசிரியரும் என் உடன்பிறவாத் தம்பியும் தன் புகழ் வேண்டாது பிறர் புகழ் பரப்பியவரும் நீடுதோறு இனியராக வாழ்ந்தவருமாகிய இராம.திரு.சம்பந்தமும் என்னைச் சிறந்த தமிழ் எழுத்தாளர் என உலகோர் கூறுமளவு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தன்னை முன்னிறுத்த விரும்பாது, என்னை முன்னிறுத்துவதில் முன்னின்றவர் சம்பந்தம். "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு".

**தமிழியக்கத் தலைமை தந்ததொரு அருணாசலம்**

தமிழ்வழிக் கல்விக்காகவும், நவம்பர் முதல்நாள் தமிழகம் தனி மாநிலம் ஆனதை அரசு கொண்டாடாத நிலையிலும், தான் முன்னின்று தமிழகத் திருநாளாகக் கொண்டாடியவர், மாணவர் நகலகம் நா.அருணாசலனார். அவர் தாம் தொடங்கிய தமிழ்ச் சான்றோர் பேரவையில், என்னை மாநில ஒருங்கிணைப்பாளர் என ஆக்கினார்.

அவர் என்னிடம் காட்டிய அன்பும் மதிப்பும் மறக்கற்பாலன அல்ல.

செய்யாமல் உதவி செய்ததொரு
பெருமை மிகு திலகவதி

'செய்யமாற் செய்த உதவிக்கு' என்பார் திருவள்ளுவர். என்னிடம் எவ்வுதவியும் எதிர்பாராதவர் – என் எழுத்தை மட்டுமே மதித்து என்பால் அன்பு கொண்டவர், என் வீட்டில் திருடுபோனதை, மீட்டுத் தந்தே தீருவேன் என இறுதிவரை முயன்று, மீட்டுத்தந்தார். சிவநெறிப் பக்தி இயக்கத்தைத் தொடங்கியவர், அன்றையத் திலகவதியார். எதிர்ப்பயன் கருதாது பொதுப்பயன் பேணுபவர் இன்றையத் திலகவதியார்.

இத்தகையவர்கள் காவல்துறைகளிலும் ஆளும் நிலைகளிலும் வந்தால், இந்தியநாடு பண்புலகமாகி ஒளிவீசித் திகழும்.

வாழ்க்கையில் நாம் பிறர்க்கு – எத்தகைய கைம்மாறும் கருதாது உதவினால், நமக்கு எங்கிருந்தோ யாரோ உதவுகின்றனர்.

இங்கு நான் இடமும் காலமும் கருதிக் குறிக்காமல் விட்டவர் பலர். நான் உதவி செய்த பலரை எண்ணிக்கொண்டே போகலாம். பிறர்க்கு வேலை கொடுப்பதில், பரிசு கொடுப்பதில், பட்டம் பதவி தருவதில் நான் மனம் மகிழ்ந்தவன்.

எனக்கு உதவிய பலரோ, நான் முன்பின் அறியாதவர்கள். அவர்களுக்கு நான் மாற்றுதவி செய்ததுமில்லை; நன்றி கூறியதுமில்லை.

### தமிழ்வழிக்கல்வி இயக்கம்

தமிழ்வழிக்கல்வி வேண்டும்; தமிழ் முழுமைபெறக் கல்விமொழியானால் தான் காப்பாற்றப்படும். நூற்றுக் கணக்கில் இதற்காகக் கட்டுரைகள் எழுதியுள்ளேன். உலக மொழிகள், இந்திய மொழிகள் – குறிப்பாகக் கன்னடம், வங்காளம், மலையாளம் போலும் மொழிகள் போற்றிக் காத்துக் கற்பித்து வளர்க்கப்படும் விதம் பற்றிப் பல கட்டுரைகள், சிறுநூல்கள் எழுதியுள்ளேன்.

மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் ஒன்றே முழுமையாய்க் கற்பிக்கப்படவேண்டும் என்ற போராட்டத்தில் 102 தமிழறிஞர்களின் ‘சாகும்வரை பட்டினிப்போர்’ என நடந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினேன்.

அதற்கென அமைக்கப்பட்ட நீதியரசர் மோகன் குழுவில் இடம் பெற்று, பத்து நல்ல தீர்மானங்களை எழுதி, வரிக்குவரி சொல்லுக்குச்சொல் திருத்திக் குழுவினரால் அத்தீர்மானங்கள் வடிவமைக்கப்பட்டு மாண்பமை கலைஞரிடம் தரப்பட்டன.

அதில் முதில் தீர்மானம் மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் என ஒரு வரையறுக்கப்பட்ட சட்டமியற்ற வேண்டும் என எழுதித்தரப்பட்டது.

### அரசியலுக்கு வழிகாட்டிய அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா பதவியைத் தோளில் போடும் துண்டு என்றார்.

“நாம் அரசியலில் புகுந்து ஆட்சியில் அமராமல் வெளியிலிருந்தே செய்யக் கூடிய அனைத்தையும் ஆட்சியில் அமர்ந்து செய்வோம்” என்றார்.

அதனாலேதான் நாம் பிரிவினையைக் கைவிடுகிறோம்; இந்திய ஒருமைப்பாட்டை ஏற்கிறோம்; தேர்தலில் நிற்கிறோம்; பண்பாட்டுப் புரட்சிக்கெனத் தோன்றி வளர்ந்ததை, ஓர் அரசியல் கட்சியாக்குகிறோம் என்றார், அவர்.

### செம்மொழி தந்த சிறப்புக்குரிய கலைஞர்

2004ஆம் ஆண்டு, தமிழை ஒரு செவ்வியற் செம்மொழி என அறிவிக்கச் செய்த பெருமை, மாண்பமை தமிழக முதல்வர் கலைஞருக்குரியதாகும்.

மாற்றாரும் போற்றும் இச்சிறப்பினைத் தந்த கலைஞருக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் கடப்பாடுடையதாகும்.

இயல்பாகவே வடமொழியோடொத்த தொன்மையும் சிறப்புமுடைய தமிழுக்கு, இவ்வளவு காலம் கழித்து, சுதந்திரம் பெற்று அறுபதாண்டுகளுக்குப் பிறகு இந்த ஏற்பிசைவு கிடைத்துளது என்றால், தமிழ் மக்களைத்தான் எண்ணிப் பார்க்கவேண்டும்.

செம்மொழி என அறிவிக்கப் படினும் இன்னமும் வடமொழிக்கு நிகராக நிதி ஆதாரம் தந்து, தமிழை வளர்க்கும் ஆர்வம் வடக்கே காணப்பட்டிலது.

அவ்வாறு அவர்கள் ஆர்வம் காட்டினும் மிகப்பிற்பட்டவையும் தமிழரிடமும் வடமொழியிடமும் கடன்பெற்று வளர்ந்தவையுமான மொழிகள், போட்டி போட்டுக் கொண்டு தமிழுக்கு என்ன செய்தாலும் அதற்கு நிகராகத் தங்களுக்கும் தரவேண்டுமென நடுவணரசை நெருக்குகின்றனர்.

**நாம் வாழும் நாளிலேயே தமிழை வாழவைப்போமா?**

மேலும் இன்று பள்ளிகள் அனைத்திலும் தமிழை ஒரு கட்டாயபாடமாக்குவதே, பெருமுயற்சியாய் உளது.

இந்நிலையில் அரசுடன் சேர்ந்து தமிழறிஞர்களும் தமிழார்வலர்களும் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தந்தாலன்றி, எதுவும் முற்ற முடியாதென்றே தோற்றுகிறது.

ஒன்று எதையும் எதிர்பாராது தமிழுக்கென்று எல்லாவற்றையும் துறந்து துணிச்சலாகச் செய்ய வேண்டும் அல்லது மக்களிடையே மனமாற்றம் ஏற்படுமளவு ஒரு பண்பாட்டுப் புரட்சி தோன்றவேண்டும்.

என் இளமைக் காலத்தில், மக்களிடையே காணப்பட்ட தமிழுணர்வு எழுச்சி எங்கே; இன்று பெயரைக் கூடத் தமிழில்வைக்கத் தயங்கும் தாழ்வுமனப்பான்மை எங்கே?

தமிழ் 'செம்மொழி' என்ற அறிவிப்பு, விமானம் ஓடுபாதையில் ஓடி உயர எழ முயலும் நிலைமை போன்றது. இனி அது தான் அடைய விரும்பும் இலக்கு நோக்கி, மிக விரைவாகப் பறந்தாக வேண்டும்.

### நிலையாமை நிலை பெற்றவற்றை அழிக்கலாமா?

மனிதர்கள் பல்வேறு விருப்பங்கள், குறிக்கோள்களுடன் வளர்கிறார்கள். அவை நிறைவேறுவதைப் பார்த்துவிட்டு மறைகிறார்கள்.

சிலர் எண்ணியவை நிறைவேறாமல் உள்ளன; ஆனால் அவர்கள் மறைந்துபோகிறார்கள்.

ஒருவர் வளமனை ஒன்று கட்டி முடித்தார்; கட்டி முடிந்த நிலையில் குடிபுகும் அன்று அவர் மறைந்துவிட்டார். உண்மையில் நடந்தது. ஒருவர் பூங்கா ஒன்றை உருவாக்கினார்; அது பூத்துக் குலுங்கியது. ஆனால் பூங்கா இருக்கிறது; உருவாக்கியவர் இல்லை. வயது நாளும் பொழுதுமாய் ஓடும் விரைவில் ஒருவர் எண்ணியவை இருக்கும்; அவர் சேர்த்த செல்வமிருக்கும் - ஆனால் அவர் அவற்றை நுகர இருக்கமாட்டார். என்ன பயன்?

மொழியைச் சிதைத்து, பண்பாட்டைச் சிதைத்து, வெட்கத்தை விட்டுச் செல்வத்தைக் குவிக்கும் ஊடகக் காரர்கள் ஒருநாள் உலகைவிட்டுப் பயணமாவார்கள்; ஆனால் அவர்கள் வைத்துவிட்டுப் போன தீமைத்தீ பரவியபடி இருக்கும்.

நல்லவற்றைச் செய்து, எளிமையாக அடக்கமாக வாழ்ந்தவர்கள் விதைத்த நன்மைகள் இருக்கும்; அவர்கள் மறைந்த பிறகும் அந் நல்லவை தொடரும். எது சிறந்தது என்று எண்ணிப்பாருங்கள்! நிலையற்ற உடலைப் பெற்ற நாம், நிலையானவற்றை அழிக்கலாமா?

### நெடுந்தொலைவு போக வழிநடக்க வேண்டும்

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

வயதாகிவிட்டால் இன்பம் வரும் பொழுது, இன்ப உணர்வு முன்பு போல வெளிப்பட எழுவதுமில்லை; துன்பம் வந்தபொழுதும் அத் துன்பம் துன்பமாக முன்புபோல் தோன்றி வருத்துவதுமில்லை.

'இருவினை ஒப்பு' என்பதை, இவ்வாறு உலகியலிலும் வைத்துப் பார்ப்பதுதான் பக்குவப் பட்டநிலை. 'நிஷ்காமிய கருமம்' என்பர், வடமொழியில். விருப்பு வெறுப்பின்றியே செயல்களில் ஈடுபடுவது அது.

என் இயல்பு, ஓர் ஊருக்குப் போவதானால் ஒருநாள் முன்னதாகவே, தேவையான எல்லாம் எடுத்து வைத்து, ஆயத்தமாகிவிடுவேன். புறப்படும் வண்டி

நிற்குமிடத்திற்கு ஒருமணி அரைமணி முன்னதாகவே போய் விடுவேன். வீட்டார் இதைப்பார்த்துச் சிரிப்பதுண்டு.

வாழ்க்கைப் பயணமும் அது போன்றதே. நமக்கு எது கிடைத்தது; எது கிடைக்கவில்லை. எது நடந்தது; எது நடக்கவில்லை. நாம் வாழ்க்கையில் வெற்றி பெற்றோமா? தோற்றோமா? இவற்றை எண்ணிப் பார்க்க நேரமில்லை.

இன்னமும் வாழ்க்கையை, வாழ்ந்துகொண்டிருப்பவனுக்கு வாழ்க்கை நயம்பயம் பற்றி எண்ண நேரமிராது.

ஓட்டப் பந்தயத்தில் ஓடிக் கொண்டிருப்பவனுக்குப் பக்கவாட்டிலோ, பின்புறத்திலோ திரும்பிப் பார்க்கக் கணநேரமும் இயலாது, கூடாது.

நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கனாள்வான் திருவடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே, ஒருப்படுமின்!
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற் கரியான் பெருமானே.

(மாணிக்கவாசகர், யாத்திரைப் பத்து)

வாழ்வியல் பார்வையில், 'பெம்மான்' என்பதை, நீங்கள் அடைய விரும்பும் குறிக்கோள் என்று வைத்துக்கொண்டு இப்பாடலை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்!

நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமாக! – விளங்கவில்லையா உங்களுக்கு!

'பிற்பால் நின்று பேழ்கணித்தால்' – பிற்பட்டு நின்று போய், கண்களை அகலத் திறந்து பரக்கப் பரக்க விழித்தால், நீங்கள் அடைய விரும்பும் குறிக்கோளை அடைதல் அரிது எனலுமாம்!

**இளங்கோவடிகளும் செங்குட்டுவனும் – வென்றவர் யார்? நின்றவர் யார்?**

சிலபோது நாம் அப்பதவியை அடைந்திருந்தால் எப்படி இருந்திருப்போம்? இப் பரிசை, விருதைப் பெற்றிருந்தால் எப்படி இருந்திருக்கும்? அவருக்கு அது

கிடைத்துவிட்டதே, இவர் இதை அடைந்துவிட்டாரே? – என்றெல்லாம் எண்ணுதற்கு இடமில்லை; நேரமும் இல்லை.

இளங்கோவடிகள் கதைதான் அது. அரசாட்சியை அடைந்திருந்தால், ஒருவேளை செங்குட்டுவன் துறவு பூண வேண்டி வந்திருக்கும்! ஆயினும், 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தாக' மாறியதால், இளங்கோவடிகள் சொல்லி, செங்குட்டுவனை நமக்கு அறிமுகப்படுத்த வேண்டியுளது.

காலம் என்பது காற்று. ஒருமுறை அடித்தது. திரும்பாது. அடுத்து அடிப்பது வேறு காற்று. ஒன்றை நிலைக்கவைப்பது அது; பறக்க விடுவதும் அது.

**இல்லது என் இல்லவள் மாண்பானால்?**

இறைவன் ஒருவருக்கு எல்லாக் கதவுகளையும் அடைப்பதில்லை. 'தட்டுங்கள், திறக்கப்படும்' என்பது உண்மையே. நாம் சென்ற வழிக் கதவு அடைத்திருந்தால், நமக்குப் பிறிதொரு திசையில், வேறொரு கதவு நிச்சயம் திறந்திருக்கும். அடைக்கப்பட்டிருக்கும் கதவுடன் முட்டி மோதிப் பின்னடைவதைவிட, நமக்கெனத் திறந்திருக்கும் கதவு வழி நுழைந்து, வெற்றி ஊர்வலம் வரலாம்!

என் வாழ்க்கையில் நான் சொந்த வீடு இலாதவனாக, மாதச்சம்பளமன்றி வேறு எதுவுமில்லாதவனாக, சொத்து சுகம் என்பன எதனையும் கண்டறியாதவனாக இருந்த போது, என் மனைவி அடைக்கம்மை என்ற சிந்தாமணி காலடி எடுத்து வைத்தாள், சொந்த வீட்டிலன்று, வாடகை வீட்டில்!

என் மாமனார்க்கு ஐந்து பெண்களில் இவள் இரண்டாம் பெண். அழகும் அன்பும் பண்பும் மட்டுமன்றித் திட்டமிடுதலிலும் சிக்கனத்திலும் செல்வத்தை எளிதில் விட்டு விடாத மனநிலையிலும் வல்லவள். ஒரு ரூபாயை எளிதில் எடுத்துக் கொடுத்துவிட மாட்டாள். பலசரக்கு, காய்கறி வாங்கி வந்ததும், கடை காரன் நேர்மையை அறிய, ஒவ்வொரு முறையும் வீட்டில் வைத்து நிறுத்துப் பார்ப்பாள். உடனுக்குடன் கணக்கெழுதுவாள். கால்ரூபாய் குறைந்தால் அது எங்கே விடுபட்டது என்பதைக் கண்டுபிடிக்கும்வரை அரை நாளாயினும் விடமாட்டாள். செல்வம் போகும்போது மிக விரைந்து கைவிட்டுப்போகும்; ஆனால் வரும்போது மிகமெதுவாகவே வரும் என்பதை என்னைவிட, அவளே நன்குபடித்திருந்தாள்.

வீடு இல்லாதவன் அவள் வருகைக்குப்பின் வீடுபேறுற்றேன். கடன் வாங்கியன்றி இயலாதென்றிருந்த காலம் மாறிக் கடன் வாங்காது, அளவான வாழ்வு பெற்றேன்.

**இகழ்ச்சி அனைத்தும் ஓரளவு புகழ்ச்சியாயின!**

எனக்குத் தமிழும், ஆசிரியப் பணியும்; அவளுக்குக் குடும்பமும் பிள்ளைகளை வளர்ப்பதும்.

துன்பச் சுமைகளை அவள் தாங்கினாள்; நான் எனக்குரிய பணிக் கடமைகளைச் செய்தேன்.

அவளை மணந்த பிறகுதான் இளங்கலை, முதுகலை, முனைவர் படிப்பனைத்தும் தொடர்ந்தன.

மழைக்குக் குடையாக
வெயிலுக்கு நிழலாக
இருளுக்கு விளக்காக

இருந்த அவள், தன் எழுபத்தைந்தாம் அகவை வரை எல்லா இன்ப துன்பங்களிலும் கலந்துகொண்டு நிறைவாழ்வு வாழ்ந்தாள். அவ் வயதில் வெளிநாடு போய்வந்தவளுக்கு, 'அல்சைமர்', 'டிமென்சியா' எனப்படும் நினைவு மறதி நோய் வந்து, எவ்வளவு முயன்றும் அது முற்றிவிட்டது.

என் மகன் மணிவண்ணன் சொன்னதுபோல் 'எங்கள் துன்பத்தில் பங்கு கொண்டவள், இன்பத்தில் பங்கு கொள்ள இயலாதவள்' ஆனாள்.

**பயணத்திற்கு ஆயத்தம், வாழ்வு தந்த தமிழுக்கு ஒரு வணக்கம்!**

புறப்படுவதற்கு மிக முன்பாகவே, பயணத்திற்கான ஆயத்தப் பணிகளை முடிக்கும் எனது இயல்பு, இன்று என்னுள் உந்துசக்தியாக இருந்து இயக்குகிறது.

அகவை முதிரமுதிர, மனம் இளமையாய் மாறுகிறது. மனத்திற்கு அமைதி, தளர்ச்சியில் ஊன்றுகோல், துன்பத்துள் இன்பம்! இவை மூன்றும் எனக்குத் தமிழ்த்தாய் தரும் செல்வம்!

## தமிழண்ணலின் ஒரு நூல்

'சங்க இலக்கியஒப்பீடு' என்ற பனுவல் பேராசிரியர் தமிழண்ணலின் புலமைக்கு ஒரு செப்புப் பட்டயம் ஆகும். இவ் விலக்கியத்தின் பொருள் முறைகளையும் படைப்பு நெறிகளையும் வடமொழி கிரேக்கம் இலத்தின் கோட்பாடுகளோடு ஒப்பிட்டுப் பொது நெறிகளையும் தமிழின் தனி நெறிகளையும் விதந்து காட்டுகின்றார் தமிழண்ணல்... முழுநூலையும் கற்பார் விழுப் புலமை பெறுவர்.

- மூதறிஞர். வ.சுப.மாணிக்கம்.

## திருமண வாழ்த்து

தான் சமைத்த சுவையுணவை இனிதென் றுண்ணும்
தலைவனைக்கண் டுளமகிழ்ந்தாள் தலைவி என்று
நான் சுவைத்த குறுந்தொகைப்பாட் டுரைக்கும்! அந்த
நலமேபோல் சுவைவாழ்வு வாழ்க தோழி!
தேன்பழுத்த தமிழ்மொழிக்கே ஆக்கந் தேடும்
தெளிவுரைகள் ஆய்வுரைகள் எழுத வல்லான்!
மேன்மக்கள் குழுவில்இவன் அறிஞன் என்ன
மிளிர்வதுநின் கையில்தான் உணர்தல் வேண்டும்!

- கவியரசு முடியரசன்

## தமிழ் மருத்துவன்

பழம்பெரும் நூற்குப் புதுப்புது அணிகள்
படைத்தபொற் கொல்லன்நீ என்கோ?
வளம் பெறும் தமிழை நோய்நொடி இலாது
வளர்த்திடு மருத்துவன் என்கோ?
உளங்கவர் அழகிற்கு அழகினைச் சேர்த்த
ஒப்பனைக் கலைஞனென் றுரைக்கோ?
களம்பல அமைத்துத் தமிழினைக் காக்கும்
கடுந்திறல் மறவனே என்கோ?

- பாவலர் மணி ஆ. பழநி

(மணிவிழாமலர், 7.10.1989)

## இராம. பெரிய கருப்பன்
## தமிழண்ணல்
## தற்குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெரிய கருப்பன் |
| தாயார் அழைத்த செல்லப் பெயர் | : | சிங்காரம் |
| புனை பெயர் | : | தமிழண்ணல் |
| பிறப்பு | : | 12.08.1928 |
| இடம் | : | நெற்குப்பை, சிவகங்கை மாவட்டம் |
| இன்றைய வாழ்விடம் | : | 'ஏரகம்'<br>4/585 (732) சதாசிவ நகர்,<br>முதன்மைச் சாலை,<br>வண்டியூர் வழி, மதுரை 625 020. |
| பிறந்த ஊர் | : | 12, தெற்குத் தேர்த்தெரு, நெற்குப்பை.<br>சிவகங்கை மாவட்டம் 630 405. |
| மரபு | : | இளையாத்தக்குடி, கழனிவாசற்குடி. |
| பிள்ளை கூட்டிக் கொண்டு பால் மணம்மாறாப்பாலகன் முதல் வளர்த்த பெற்றோர் | : | கலியாணி ஆச்சி,<br>அரு. மு. இராமசாமிச் செட்டியார். |
| பெற்றெடுத்த பெற்றோர் | : | பார்வதி ஆச்சி,<br>தெ.சு.மு. முத்துராமன் செட்டியார் |
| பிறந்த இடத்து உடன் பிறந்தோர் | | |
| தமையன்மார் | : | தெ.சு.மு. சுப்பிரமணியன்<br>செ.ராம. செ. இலட்சுமணன் |
| தமக்கைமார் | : | அன்னபூரணி ஆச்சி<br>நாகம்மை ஆச்சி |

| | | |
|---|---|---|
| மனைவி | : | சிந்தாமணி |
| மனைவியின் பெற்றோர் | : | சிகப்பி ஆச்சி<br>நா.பழ.நா. நாச்சியப்ப செட்டியார் |
| மனைவியின் உடன் பிறந்தோர் | : | சொர்ணம் ஆச்சி, இராமாயி, அமிர்தம், தெய்வானை. |
| தமிழண்ணல் – சிந்தாமணி<br>திருமண நாள் | : | 30.8.1954 |
| தெய்வத் தமிழ் நெறியில் திருமணம்<br>செய்து வைத்தவர் | : | கம்பனடிப்பொடி சா.கணேசன் |
| வாழ்த்தரங்கத் தலைவர் | : | சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா |
| துணை நின்று நடத்தி வைத்தவர் | : | கவியரசு முடியரசன் |

– – –

## இராம. பெரிய கருப்பன் தமிழண்ணல் குடும்பம்

| | | |
|---|---|---|
| மகள் | : | கண்ணம்மை M.A., |
| மருமகன் | : | க. நடராசன் B.E., |
| மகன் | : | சோலையப்பன் M.Sc., |
| மருமகள் | : | திலகவதி B.A., |
| மகன் | : | பெரி கண்ணன் M.Sc., Ph.D.,(Genetics) |
| மகள் | : | அன்புச் செல்வி B.Com., |
| மருமகன் | : | கதிரேசன் B.Sc., |
| மகன் | : | மணிவண்ணன் B.E., M.S. (U.S.A) |
| மருமகள் | : | நல்லம்மை B.E., |
| மகள் | : | முத்துமீனாள் B.A., |
| மருமகன் | : | பழனியப்பன் B.Com., |
| பேரன் பேர்த்தியர் | : | கண்ணம்மை நடராசன் |

கண்ணம்மை நடராசன்

மகள் : மீனுபாரதி B.Sc.,

கணவர் : அண்ணாமலை B.E., M.S.

மகன் : கார்த்திகேயன் (எ) கார்த்திக் B.E.,

மகன் : சபரிநாதன் B.Com., M.B.A.,

சோலையப்பன் திலகவதி

மகன் : அருண் இராமசாமி B.E.,

மகள் : சிந்து

அன்புச் செல்வி கதிரேசன்

மகள் : நித்தியா B.E.,

மகன் : செந்தில்

கண்ணன் (சாந்தி)

மகள் : கவிதா கரு கண்ணன்

மணிவண்ணன் நல்லம்மை

மகன் : அருண் பெரிய கருப்பன்

மகள் : பிரியா

முத்து மீனாள் பழனியப்பன்

மகன் : சுப்பு கணேசன் B.E.,

மகள் : நாச்சம்மை

– – –

## படிப்பில் படிப்படியாய் ஏறிய படிகள்

### கல்வி

| | | | |
|---|---|---|---|
| 1. | அகவை 5 முதல் 12 வரை பள்ளிப் படிப்பு | ஏழாம் வகுப்பு 1940 முடிய | நெற்குப்பை திண்ணைப் பள்ளிக் கூடங்கள் |
| 2. | எட்டாம் வகுப்பு (III Form) | 1941 - '42 | பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர் நிலைப் பள்ளி |
| 3. | பள்ளி இறுதி வகுப்பு | 1952 | தனிப்படிப்பு |
| 4. | வித்துவான் (2 D) | 1942-1948 | மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, திருவையாறு, அரசர் கல்லூரி |
| 5. | இடைநிலை வகுப்பு Intermediate 'D' Group | 1952 - '53 | தனிப்படிப்பு. சென்னைப் பல்கலைக் கழகம். |
| 6. | இளங்கலை பொருளியல் (B.A., Economics) | 1954-1958 | தனிப்படிப்பு. சென்னைப் பல்கலைக் கழகம். |
| 7. | முதுகலை (தமிழ்) | 1960 | தனிப்படிப்பு. சென்னைப் பல்கலைக் கழகம். |
| 8. | முனைவர் (Ph.D.,) | 1969 | தியாகராசர் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம்<br>தலைப்பு : சங்கப் பாடல்களில் இலக்கிய மரபுகள் (Literary conventions in cankam Poetry) |

## பணி நிலைப் படிநிலைகள்

| | பணி நிலை | நிறுவனம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | தமிழாசிரியர் | மகாசன உயர்நிலைப் பள்ளி, ஈரோடு. | 1948-1949 (ஓராண்டு) |
| 2. | முதனிலைத் தமிழாசிரியர் | ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி | 1949-1961 (12 ஆண்டுகள்) |
| 3. | தமிழ் விரிவுரையாளர் | தியாகராசர் கல்லூரி, மதுரை. | 1961 - 1971 (10 ஆண்டுகள்) |
| 4. | தமிழ் விரிவுரையாளர் | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் | 1971-1973 (இரண்டாண்டுகள்) |
| 5. | தமிழ் இணைப் பேராசிரியர் (Reader) | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் | 1973-1975 (இரண்டாண்டுகள்) |
| 6. | அஞ்சல் வழிக் கல்வித் துறை – தமிழ்த்துறை | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் | 1975-1980 (நான்கு ஆண்டுகள்) |
| 7. | தமிழியல் துறைத் தலைவர் (இந்திய மொழிப்புல ஒருங்கிணைப்பாளர்) | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் | 1980-1989 (ஒன்பது ஆண்டுகள்) முதல் இரண்டாண்டுகள் மட்டும் |
| 8. | தமிழியற் புலம் - பணி நிறைவு சிறப்புப் பேராசிரியர் | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1989 சூலை முதல் திசம்பர் வரை. |
| 9. | சிறப்புநிலைப் பேராசிரியர் | பல்கலைக் கழக நல்கைக் குழு (UGC) | 1990 - 1992 (இரண்டாண்டுகள்) |
| 10. | தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள் பீடம் | தமிழ்நாடு அரசு | 2000 (ஓராண்டிற்குள்) |

## சிறப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | நெற்குப்பை பாரதி பாடல் போட்டியில் முதற்பரிசு | 1939 |
| 2. | சி.பா. ஆதித்தனாரின் 'தமிழன்' இதழில் பரிசு | |
| 3. | குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் வழங்கிய 'கணக்காயர்' மெய்க்கீர்த்தி விருது | 1972 |
| 4. | 'மீனாட்சி' - 101 அடிகள் கொண்ட பாடலுக்குத் தமிழக அரசு வழங்கிய பரிசு | 1973 |
| 5. | தமிழக அரசின் திரு.வி.க. விருது | 1989 |
| 6. | தமிழக அரசின் நல்லாசிரியர் விருது (1981-82க்கு) | 1986 |
| 7. | தமிழக அரசின் சிறந்த நூற்பரிசு –முனைவர் பட்ட ஆங்கில ஆய்வேட்டிற்கு முதற்பரிசு, நச்சுவளையம் நாவலுக்கு இரண்டாம் பரிசு | 1982 |
| 8. | மதுரைத் திருவள்ளுவர் கழகம் – தொல்காப்பியச் செம்மல் விருது | 1994 |
| 9. | திருவாவடுதுறை ஆதீனம் – மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைவுப் பரிசில் | 1995 |
| 10. | திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் – திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூற்றாண்டு நினைவுப் பரிசும் 'தமிழ் மாமணி' விருதும் | 1997 |
| 11. | மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் 'பேரவைத் தமிழ்ச் செம்மல்' விருது (1997க்கு) | 1998 |
| 12. | பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பர், பவளவிழா, 'தமிழியக்கச் செம்மல்' விருது | 2003 |
| 13. | சென்னை, கம்பன் கழகம் தந்த பாராட்டு | 1998 |
| 14. | கோவிலூர்த் திருமடம் – சீர்வளர்சீர் நாச்சியப்ப அடிகளார் வழங்கிய 'அறமனச் செம்மல்' விருது | 2002 |
| 15. | தில்லி, பல்கலைக்கழக நிதிநல் கைக்குழுவின் (UGC) தேசியப் பேராசிரியர் விருது | 1981-'82 |
| 16. | மதுரை, தமிழிசைச் சங்கம் அரசர் முத்தையவேள் 104ஆம் பிறந்த நாளில் தந்த பரிசளிப்பு. | 2008 |

## தமிழண்ணலின் நூல்கள்

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | குழந்தைகள் இலக்கியம் (மு.வ. அணிந்துரை) | சிறுவர் பாடல்கள் | உண்மைப்பிரசுரம் தேவகோட்டை | 1949 |
| 2. | தாலாட்டு | நாட்டுப்பாடல் தொகுப்பு | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1956 |
| 3. | பரிசில் வாழ்க்கை | சங்க இலக்கியம் | பாரி நிலையம், சென்னை. | 1956 |
| 4. | குறிஞ்சிப் பாட்டுத் திறனாய்வு விளக்கம் | சங்க இலக்கியம் | பாரி நிலையம், சென்னை. | 1956 |
| 5. | மொழி வழிச் சிந்தனைகள் | தமிழின் சிறப்பு | பாரி நிலையம், மீனாட்சி | 1956, 1980 |
| 6. | காதல் வாழ்வு | நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1957 |
| 7. | இலக்கியத்தில் இன்பச் சுவை | இலக்கியக் கொள்கை | செல்வி பதிப்பகம் காரைக்குடி | 1958 |
| 8. | பிறைதொழும் பெண்கள் (காரைக்குடியில் தொகுத்தது) | நாட்டுப்புறப் பாடல்கள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1975 |
| 9. | தொல்காப்பியர் | அறிமுகம் | சாகித்திய அகாதெமி | 1998 |
| 10 | ஔவையார் | அறிமுகம் | ,, | 1998 |
| 11. | தொல்காப்பியம் | கையடக்கப் பதிப்பு | மீனாட்சி புத்தக நிலையம், மதுரை | 2008, 2009 |
| 12 | தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் | ஆய்வு | ,, | 1985 |
| | நோக்கு மெய்ப்பாடு | ஆய்வு | ,, | 1986 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| | உள்ளுறை | ஆய்வு | மீனாட்சி புத்தக நிலையம், மதுரை | 1986 |
| | இறைச்சி | ” | ” | 1986 |
| 13. | நான்கும் ஒரே நூலாக | ” | ” | 2004 |
| 14. | தொல்.எழுத்ததிகாரம் | மாணவர் பதிப்பு | மணிவாசகர், மீனாட்சி புத்தக நிலையம் | 2003 -2010 |
| 15. | தொல். சொல்லதிகாரம் | மாணவர் பதிப்பு | ” | 1994-2010 |
| 16. | தொல். பொருளதிகாரம்-I | மாணவர் பதிப்பு | ” | 2003-2010 |
| 17. | தொல்.பொருளதிகாரம்-II | மாணவர் பதிப்பு | ” | 2003-2010 |
| 18. | தொல்.பொருளதிகாரம்-III | மாணவர் பதிப்பு | ” | 2003-2010 |
| 19. | தொல் காப்பிய அறிமுகம் சிற்றேடுகள் : | அறிமுக நூல்கள் | மீனாட்சி புத்தக நிலையம் | 2008 |
| | தொல்காப்பியத் தோற்றம்<br>தொல்காப்பியச் சுடர்மணிகள்<br>தொல்காப்பியத் தமிழ் நெறிகள்<br>தொல்காப்பியச் சொற்சுவைகள் | ” | ” | |
| 20. | புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | பின்புலமும் இலக்கிய வகையும் | மீனாட்சி புத்தக நிலையும் | 1980 2010 26-ம் பதிப்பு |
| 21. | உலகத் தமிழ் இலக்கிய வரலாறு | கி.பி.500 வரை | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 2004 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 22. | ஆய்வியல் அறிமுகம் | ஆராய்ச்சி நெறிமுறைகள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1977-2010 12-ம் பதிப்பு |
| 23. | ஆய்வியல் வழிகாட்டி | (இரா. மோகனுடன்) | " | 1979 |
| 24. | ஒப்பிலக்கிய அறிமுகம் | ஒப்பியல் | மீனாட்சி புத்தக நிலையம் | 1973-2010 13-ஆம் பதிப்பு |
| 25. | சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள் | ஒப்பியல் | மீனாட்சி புத்தக நிலையம் | 1975, 1979,1985 2003,2008 |
| 26. | இலக்கிய வகைகள் | ஒப்பியல் | " | 1978,1979, 2005,2009 |
| 27. | தமிழியல் ஆய்வு | தலைப்பு வங்கி (துறை முயற்சி) | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1975 1988 |
| 28. | Tradition and Talent in Cankam Poetry | Ph.D., ஆய்வேடு | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 2010 |
| 29. | சங்க மரபு – தமிழாக்கம் | கு.வெ.பாலசுப்பிரமணியன் | மீனாட்சி புத்தக நிலையம் | 2009 |
| 30. | திருக்குறள் நுண்பொருளுரை | விளக்கம் | மீனாட்சி புத்தக நிலையம் | 1999 2009 |
| 31. | திருக்குறள் மூலமும் தெளிவுரையும் | கையடக்கப் பதிப்பு | திருக்குறள் ஊழியம் & மீனாட்சி பு. நி. | 2007 |
| 32. | திருவள்ளுவர் அருளிய திருக்குறள் | சுருக்கவுரை | " | 2000 |
| 33. | இளைஞர் வாழ்வில் திருக்குறள் | கட்டுரைகள் | " | 1997 |
| 34. | <u>வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவம்</u> இன்ப வாழ்வுக்கு இனிய வழி தன்னம்பிக்கை தன் முயற்சித்தவம் துன்பத்தைத் துன்புறுத்துக ஆளுமை மேம்பாடு என ஐந்து சிற்றேடுகள் | குறள் நெறி விளக்கம் | மணிவாசகர், மீனாட்சி புத்தக நிலையம் | 1995 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 35. | திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம் | குறள் நெறி | மீனாட்சி புத்தக நிலையம் | 1999 |
| 36. | வாழ்க்கைக்கு ஒளி தரும் வள்ளுவம் | கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2000 |
| 37. | திருவள்ளுவரின் மனித நேயம் | கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2000 |
| 38. | திருக்குறள் சிற்றேடுகள்: இளைஞனே கடமையை நினைவு கொள்! | திருக்குறள் பொச்சாவாமை | திருக்குறள் ஊழியம், மதுரை | 2000 |
| | மனக்கவலை தீர்க்கும் மாமருந்து | கடவுள் வாழ்த்து | ” | 2000 |
| 39. | நன்னூல் - எழுத்ததிகாரம் | உரை விளக்கம் | மீனாட்சி புத்தக நிலையம் | 2003 |
| 40. | நன்னூல் - சொல்லதிகாரம் | உரைவிளக்கம் | ” | 2004 |
| 41. | யாப்பருங்கலக்காரிகை | உரை விளக்கம் | ” | 2004 |
| 42. | நம்பியகப் பொருள் | உரை விளக்கம் | ” | 2005 |
| 43. | தண்டியலங்காரம் | உரை விளக்கம் | ” | 2005 |
| 44. | இனிக்கும் இலக்கியம் | ஆனந்த விகடனில் வந்த கட்டுரைகள் | மணிவாசகர், சென்னை | 2000, 2006 |
| 45. | மாணிக்கத் தமிழ் | கட்டுரைகள் | ” | 1997 |
| 46. | கம்ப நாடகம் | சென்னை, கம்பன் கழகம் - பொழிவு | வானதி பதிப்பகம் & மணிவாசகர் | 1995 |
| 47. | புதிய நோக்கில் திருவாசகம் | அறக்கட்டளைப் பொழிவு | மணிவாசகர் | 1987, 2004 |
| 48. | உரை விளக்கு | திறனாய்வு | மீனாட்சி புத்தக நிலையம் | 1985 |
| 49. | சிலப்பதிகாரம் - இசை நாடகம் | பாவலர் மணி ஆ.பழநியுடன் | ” | 2005 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 50. | உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் | தினமணிக் கட்டுரைகள் | மீனாட்சி புத்தக நிலையம் | 1989, 2008 |
| 51. | இனிய தமிழ் மொழியின் இயல்புகள் I, II, III | புதிய முறை இலக்கணம் | மீனாட்சி புத்தக நிலையம் | 1984 முதல் பல பதிப்புகள் |
| 52. | சொல் புதிது சுவை புதிது | சொற்பொருள் விளக்கமும் பிழை நீக்கமும் | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |
| 53. | பிழை திருத்தும் மனப்பழக்கம் | ” | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |
| 54. | தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும் | ” | மீனாட்சி புத்தக நிலையம் | 2002 |
| 55. | உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் (சுருக்கம்) | | தமிழ்நாடு அறக்கட்டளை (USA) | 2010 மே |
| 56. | பேசுவதுபோல் எழுதலாமா? பேச்சுத் தமிழை இகழலாமா? | மொழிக்கல்வி | மீனாட்சி புத்தக நிலையம் | 2005 |
| 57. | தமிழ்த்தவம் | தமிழின் எதிர்காலம் | ” | 2005 |
| 58. | தமிழ் யாருக்குச் சொந்தம் | சிற்றேடு | மணிவாசகர், சென்னை | 1999 |
| 59. | மழலையர் தமிழ்க் கல்வியும் தமிழ்வழி உயர்கல்வியும் | தினமணிக் கட்டுரைத் தொகுப்பு | மீனாட்சி புத்தக நிலையம் | 1998 |
| 60. | தமிழனின் தாழ்வு மனப்பான்மை | ” | ” | 1998 |
| 61. | பொதுநலத்தில் குப்பை கொட்டும் இந்தியர்கள் | ” | ” | 1998 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 62. | தமிழ்வழிக் கல்வி வழக்கு (சிற்றேடு) | தமிழியக்கம் | தன்முயற்சித் தமிழியக்கம், மதுரை | 2001 |
| 63 | தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | தமிழில் வழிபாடு | தமிழ்த்தவ வெளியீடு | 2002 |
| 64. | வாழ்வரசி | வட்டார வழக்குப் புதினம் | சோலை நூலகம் | 1979 |
| 65. | நச்சுவளையம் | உளவியல் புதினம் | சோலை நூலகம் (தமிழக அரசின் பரிசு பெற்றது). | 1979 |
| 66. | குறுந்தொகை அரும்புகள் | சங்க இலக்கியப் பயிற்சிக்களம் அறிமுகம் | மீனாட்சி புத்தக நிலையம் | 2009 |
| 67. | நற்றிணை மலர்கள் | ” | ” | 2009 |
| 68. | புறநானூற்றுக் குறும்படங்கள் | ” | ” | 2009 |
| 69. | அகநானூற்றுக் காட்சிகள் | ” | ” | 2010 |
| 70. | குறுந்தொகைச் சிற்றேடுகள் :<br>மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள்<br>வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம்<br>உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள்<br>உள்ளங்கள் ஒன்றிடும் அன்றிற் பறவைகள்<br>(இவை நான்கும் குறுந்தொகை அரும்புகள் என ஒரே நூலாக வெளிவந்துள்ளன.) | | ”<br>”<br><br>” | 2009 |
| 71. | தமிழ் உயிருள்ள மொழி | தினமணிக் கட்டுரை | மீனாட்சி புத்தக நிலையம் | 2005 |
| 72. | தமிழ்வழிக் கல்வி (சிற்றேடு) | கலைஞருக்கு மடல் | தமிழ்ச்சான்றோர் பேரவை,சென்னை | 2000 |

| | நூல் | வகை | பதிப்பகம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 73. | தமிழ்வழி – வழிபாடும் குடமுழுக்கும் (சிற்றேடு) | கட்டுரை | திருச்சிராப்பள்ளி, தமிழ்வழி வழிபாடு கருத்தரங்கு | 2002 |
| 74. | சங்கப் பூந்துணர் (சிற்றேடு) | சங்கப் பாடல்கள் | சங்கத் தமிழ்க் கழகம் | 2009 |
| 75. | தமிழ் இலக்கியத்தின் தொன்மை – அகச் சான்றுகள் | ஆய்வு | சென்னை 'நோக்கு' வெளியீடு | 2008 |
| 76. | இது என்ன சிரிப்பு? | ஓரங்க நாடகம் | சுதர்சன் & கோ, தேவகோட்டை | 1948 |
| 77. | அனிச்ச அடி, ஆய்வுரை பாவலர் மணி ஆ. பழநியின் கவிதை நாடகம். (சை.சி. கழகப்பரிசு பெற்றது) | நாடக ஆய்வுரை | தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் (சிற்றேடு) | 1973 |

– – –

# தமிழண்ணலின் கட்டுரைகள்

கட்டுரைகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, மணிவாசகர் நூலகம் மெய்யப்பன் பதிப்பகச் சார்பில் 12 நூல்களாக 2008இல் வெளியிடப்பட்டன.

<u>நூல்கள்</u> <u>கட்டுரைகள்</u>

1. செம்மொழிப் படைப்பியல்
   1. சங்க இலக்கியம் – மனவுணர்வுப் படப்பதிவு
   2. அஞ்சியின் 'திருவுரு'
   3. அடிகளின் 'அரசுரு'
   4. அடிகளின் அரசவுள்ளம்
   5. ஓவிய வரைவில் உணர்ச்சி வண்ணங்கள்
   6. கருத்துக் குவிவும் காட்சிப் பதிவும்
   7. திரைப்படமாகும் கவிதைக் காட்சிகள்
   8. பாட்டு வயல்பரப்பில் நுண்ணுணர்வுப் பதியங்கள்
   9. திருத்தக்க தேவரின் படிமக் காட்சிப்படைப்பு
   10. ஔவையார் பாடல்களில் வடிவமைப்பும் நடைத்திறனும்
   11. ஒப்பீட்டு நோக்கில் முல்லை நிலப் பாடல்கள்

2. செவ்விலக்கியச் சிந்தனைகள்
   12. உலகம் அவாவும் பேரிலக்கியம்
   13. சங்க இலக்கியமும் தமிழரும்
   14. சங்க இலக்கியம் பயிலுதலும் – பயிற்றுதலும்
   15. சங்க இலக்கிய வழி வாழ்வியல் விழுமியக் கல்வி
   16. பத்துப்பாட்டுத் திறன்
   17. தமிழ்ப்பேரறிஞர் மா. இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சி
   18. குறிஞ்சிப் பாட்டு
   19. சங்க கால மரபுகள் – அன்றும் இன்றும்
   20. ஒப்பிலக்கிய நோக்கில் சங்க இலக்கியம்
   21. அகப்பாடல்களும் யாப்புக் கோட்பாடுகளும்
   22. சங்க இலக்கியம் – பாட்டு வடிவமும் யாப்பும்

3. ஒப்பிலக்கியப் பார்வையில்
சங்க இலக்கிய ஒளிச்சுடர்கள்


23. ஒப்பிலக்கியம் என்பதுதான் என்ன?
24. ஒப்பிலக்கியத்துறையின் வரலாறும் தெரிய வேண்டுமே
25. ஒப்பியலாய்வு எத்தனை படிகளில் ஏறி உயர்ந்தது?
26. சங்க இலக்கியக் கொள்கைகளும் பண்பாடும்
27. ‘நோக்கு’ – ஒரு தமிழ்முறைத் திறனாய்வு
28. ‘நோக்கும்’ – திருக்குறளில் நோக்கும்
29. குறுந்தொகையில் முன்னம்
30. குறுந்தொகையில் இறைச்சி
31. ‘உள்ளுறை’யின் உள்ளுறை யாது?
32. திருத்தக்க தேவரின் படிமக்காட்சிப் படைப்பு
33. சங்க இலக்கியத்தில் தொன்மம்
34. தொன்மைமிக்க தமிழ்த் தொன்மம்


4. தொல்காப்பிய இலக்கிய இயல்


35. தொல்காப்பியப் பொருளதிகாரம்
36. தொல்காப்பிய இலக்கிய இயல்
37. தமிழ் இலக்கிய இயல் – அடிப்படை நெறிகள்
38. வீரயுகமும் சங்க காலமும்
39. தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள்
40. தமிழ் இலக்கிய வகைகள்
41. சிற்றிலக்கிய வித்துக்களும் விழுதுகளும்
42. தொல்காப்பியரின் அடிக் கோட்பாடு
43. தொல்காப்பியப் பார்வையில் ‘அகத்திணை’
44. முன்னத்தின் உணரும் கிளவி
45. புரைதீர் கிளவி
46. படைப்பிலக்கியங்களில் மனித நேயம்
47. இலக்கிய மரபு
48. அக இலக்கிய மாந்தர் படைப்பு – தலைமகன்
49. அக இலக்கிய மாந்தர் படைப்பு – தோழி

5. தமிழை அறிவோம்
தமிழராய் வாழ்வோம்

50. புலி பூனையாக முடியுமா?
51. நமக்கு ஆங்கிலம் வேண்டாமா?
52. வடமொழி தமிழர்க்குப் பகையா?
53. தமிழைத் தெரிந்து கொள்வோம்
54. வாக்கிய அமைப்பின் அடிப்படை
55. ஆகுபெயர்
56. வேற்றுமை
57. வேற்றுமை, அல்வழி
58. திணை பால் எண் இட இயைபு
59. பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதல்
60. சந்தி – ஒற்றெழுத்து மிகுதல்
61. தமிழ்ச் சொல் கட்டமைப்பு
62. நான்கு வகைத் தமிழ்ச்சொற்கள்
63. மொழி முதல் எழுத்துக்கள்
64. மொழியிறுதி எழுத்துக்கள்
65. சார்பெழுத்துக்கள்
66. மெய்ம் மயக்கம்
67. பிறமொழிச் சொற்கள்
68. உலக வழக்கும் செய்யும் வழக்கும்

6. தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி

69. தமிழ் 'உயிருள்ள' மொழி
70. தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி
71. சாரியைகளின் பயன்பாடு
72. ஙப் போல் வளை
73. கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
74. தமிழைத் தளரவிடலாமா?
75. தமிழனின் தலையெழுத்தும் தமிழின் தலையெழுத்தும்
76. தலையெழுத்தாகித் தடுமாற வைக்கும் ஆங்கிலமே
77. தலையெழுத்தில் தடுமாற்றமும் தமிழ் ஊற்றமும்
78. தமிழின் எதிர்காலம் – ஒரு தொலைநோக்குப் பார்வை

7. இனிய தமிழ்மொழியின் இருவகை வழக்குகள்

79. பயன்பாட்டுத் தமிழ் வளர்த்த பாவலர்
80. பாடிப் பறந்த பறவை
81. தமிழின் இருவகை வழக்கு : இலக்கணத்தில் இதுவே முதற்பாடம்; முதன்மைப் பாடம்
82. மொழி ஆராய்ச்சியும் உலகவழக்குப் பயன்பாடும்
83. தமிழ்மொழியின் இருவகை வழக்கு
84. அழகைக் குறிக்க ஆயிரம் சொற்கள்
85. பறைசாற்றலும் விலை பகர்தலும்
86. காக்கை கரையும், கூகை குழறும், குயில் கூவும்
87. நீங்கள் கருப்பா? கறுப்பா? சொல்லுங்கள்
88. திறனறிந்து சொல்லுக சொல்லை
89. வினைச்சொல்
90. திருவேங்கடத்தான் 'வெங்கட்' ஆனதேன்?
91. 'இன்னும்' இன்னமும்'
92. முனை முரிந்ததும் மரக்கிளை முறிந்ததும் ஏன்?
93. காதலி என்னைக் காதலி

8. தேடவைக்கும் திருவள்ளுவர்

94. திருக்குறள் கற்கும் நெறிமுறைகள்
95. திருக்குறள் – உலகின் முதல் தன் முன்னேற்றச் சிந்தனை நூல்
96. தமிழிய வள்ளுவம் – இறைவழிபாட்டு மறுமலர்ச்சி
97. வழிகாட்டுமா வள்ளுவப் பெண்ணியம்
98. காமத்துப்பால் – பாலியல் வாழ்வின் பயிற்சிக்களம்
99. வடவர் சாற்றிய தவமும் வள்ளுவர் போற்றிய தவமும்
100. வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்
101. புரைதீர் கிளவி
102. வள்ளுவர் வகுத்த தமிழர் இயக்கம்
103. மாணிக்க வள்ளுவம்
104. திருக்குறள் – செல்வம்

105. திருக்குறள் – அறிவு
106. திருக்குறள் – அறம்
107. குறள்நெறி – பொருள் செயல் வகை
108. திருக்குறள் – ஒற்றாடல்

9. வள்ளுவர் நெறியில் வாழ்வது எப்போது?

109. வள்ளுவர் காட்டும் வாழ்வியல்
110. திருக்குறள் வாழ்க்கை நூல் ஆவது எப்போது?
111. திருக்குறள் தமிழரின் அடையாளம்
112. திருக்குறள் மூலபாடத்தைச் சிதைப்பது கொடுமை
113. தமிழர் திருமறையைச் சிதைப்பது அறமாகுமா?
114. எந்தத் திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்குவது?
115. கீதை நம் வழிகாட்டி நூலாகுமா?

10. தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள்

116. ஒரு தமிழ்மகனின் வழக்குரை
117. நர்சரிப் பள்ளிகளின் ஆதிக்கம்
118. தமிழ்வழிப் பொறியியல்
119. மழலையர் பள்ளிகள் 'மறு' சீரமைப்பு
120. மழலையர் தமிழ்வழிக் கல்வி
121. தமிழ்வழிக் கல்விக்கும் ஒரு பல்கலைக் கழகம்
122. தமிழனின் தாழ்வு மனப்பான்மை
123. செக்கைச் சுற்றும் மாடுகள்
124. வளைந்து போன முதுகு
125. தேவை கல்விச் சமத்துவ நீதி
126. சுதந்திர நாட்டில் தாய்மொழி
127. உலகம் எங்கும் தமிழ் உதவிமையம்
128. தமிழுக்குப் பொற்காலம் ஆகுமா?
129. ஒரு பக்கப் பார்வை
130. புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழும்
131. நூலகமே கோயில், நூல்களே தெய்வங்கள்
132. தமிழ்வழி உயர்கல்விக்கு முன்னோடி
133. அடிமை இந்தியாவில் ஒரு சுதந்திரக் குடிமகன்
134. ஆங்கிலத்திற்கு நாம் எதிரிகள் அல்லர்

135. கனவு பலிக்குமா?
136. மொழிக் கொள்கையில் ஒரு தெளிவின்மை
137. தீராப்பெருங்கவலை
138. சுதந்திர நாட்டின் அடிமைச்சின்னம்
139. முதலில் தமிழ்; பிறகு சீர்திருத்தம்
140. மனமிருந்தால் வழிபிறக்கும்
141. தமிழுக்கு ஏன் தயக்கம்?
142. எளிமையாய்த் தொடங்கி இமயத்தை அடையலாம்
143. தழைக்கட்டும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள்
144. தமிழ் யாருக்குச் சொந்தம்
145. தாருங்கள் தமிழ்ஒளித்திட்டம்
146. வழிகாட்டுகிறது கருநாடகம்
147. தமிழ்வழிக் கல்விக்கு விடிவெள்ளி
148. விழித்தால் மட்டுமே விடிவு
149. தாழ்ந்துவரும் தமிழிலக்கியக் கல்வி

11. ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு

150. பொதுநலத்தில் குப்பை கொட்டும் இந்தியன்
151. ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு
152. வீட்டுக்கு நெருப்புவைக்கும் வேலை
153. சின்னச்சின்ன நடைமுறை நாகரிகம்
154. நமது மேடை நாகரிகம்
155. நாய்களை அவமானப் படுத்தாதீர்
156. ஒரு பண்பாட்டின் சின்னம்
157. வாடிக்கையாளர்களுக்காக நாம்
158. முன்னேறும் காலம் எது?
159. மக்களாட்சியில் மக்களின் பங்கு
160. அரசும் அதிகாரமும் மக்களுக்காகவே

12. எழுச்சிதரும் எண்ணச்சிறகுகள்

161. யாழும் இசையும்
162. இசைக்கலையின் உச்சத்தைத் தொடும் நாக சுரம்
163. தாய்மை தந்த தாலாட்டு இலக்கியம்
164. சுதந்திரத்துக்குப்பின் கவிதை
165. வள்ளலாரின் இறைக் கொள்கை

166. சமயமும் ஒழுக்கமும்
167. திரு.வி.க.வும் திராவிட இயக்கமும்
168. அறுபது ஆண்டுகளில் கவிதை நாடகங்கள்
169. காலத் தராசில் பாரதியார் கருத்துக்கள் – தமிழ் மொழியின் எதிர்காலம்
170. பாரதி காட்டிய வழி – பக்தியில் தன்னம்பிக்கை
171. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாரதி
172. பாரதியாரின் கண்ணன் பாட்டு
173. அகிலனின் சிறுகதைகளில் உளவியல் பாங்கு
174. திருவிளையாடல் முன்னோடி
175. இளைஞர்களே! எழுச்சிகொள்ளுங்கள்!
176. குறள் வைப்புமுறை பற்றி ஒரு குறிப்பு
177. தமிழ் இலக்கியத்தில் மகளிர் பற்றிய ஆய்வுகள்
178. இலக்கியத்தில் அம்மன் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
179. முருகனின் அழகும் சீற்றமும்
180. வழித்துணை முருகன்
181. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது எப்படி?
182. திணை துறை கூற்று பொருள் அறிமுக விளக்கம் அரிமா நோக்கு சனவரி 2009
183. Literary Heritage of South India - A Historical Perspective. அரிமா நோக்கு ஏப்பிரல் 2008
184. Imagery in Kapilars Poems அரிமா நோக்கு அக்டோபர் 2008
185. Literary Theories in Tamil and Sanskrit
186. Tholkappiyar's Theory of Poetics
187. Indian Heritage on the concept and practices of Managerical Effectiveness (With special reference to ancient Tamil Literature and Thirukkural)
188. செய்தக்க அல்ல செயக்கெடும்
189. இரட்டை வாழ்வு
190. இந்திய விடுதலை இயக்கத்தில் மேடை நாடகப்பாடல்கள் – 41 பாடல்கள் – சாகித்திய அகாதெமி, பொன். சௌரிராசன் தொகுப்பு.

191. திருவள்ளுவர் உணர்த்தும் மனித மனம்
திருக்குறளில் பொதுமை – க.சி. அகமுடை நம்பி
தொகுப்பு 2008.
192. திருக்கார்த்திகையும் தீபாவலியும்
193. தமிழ் 'அரசு' – இரண்டும் 'சமஸ்கிருத ஆதிக்கம்'
என்னும் பெரியார் திறந்த நிலைப் பல்கலை
வெளியீடு.
194. தை முதல் நாளே தமிழரின் புத்தாண்டு
195. தொல்காப்பியர் காலம், உலகத் தமிழ்ச் செம்மொழி
மாநாடு, கோவை.
196. தமிழ் மொழி வழங்கிய இசைச் செல்வம்
மு.அருணாசலம் எழுதிய
தமிழ் இசை இலக்கிய வரலாறு
தமிழ்இசை இலக்கண வரலாறு
பதிப்பாசிரியர் உல. பாலசுப்பிரமணியன்
இருநூல்களின் மதிப்புரை.
தமிழ் இலெமூரியா, அரிமா நோக்கு முதலான
இதழ்களில் வெளிவந்தது.
197. கபிலர் பாடல்களில் தனித்திறன்
198. செறுநரும் விழையும் செம்மல் – அண்ணா
நூற்றாண்டு விழா மலர்
199. சங்கத் தமிழில் செவ்வியல் மாண்புகள்
கோவை உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுமலர்
200. சங்க இலக்கியத்தில் செவ்வியல் பண்புகள்
தினமணி, செம்மொழிக் கோவை.

<u>பதிப்பு</u>

1. சொ. முருகப்பா மணிவிழா மலர்
2. புதுக்கோட்டை அண்ணலார் மணிவிழா மலர்
3. சுப. அண்ணன் சதாபிசேக மலர்
4. 'வையை' I, II, ம.கா. பல்கலை 1974, '75
5. 'பொதிகை' I, II,ம.கா. பல்கலை 1979, 1980
6. அகிலன் கருத்தரங்கம், ம.கா. பல்கலை

## கவிதைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வம் – செல்வமென்னும் காதலியே! | திருச்சி, தில்லி வானொலிகள் | 1971 |
| 2. | மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ் | காரைக்குடி, இராமசாமி தமிழ்க் கல்லூரி, ஆறுதல் பரிசு | 1975 |
| 3. | 'மீனாட்சி' 101–அடிப்பாடல் முதற்பரிசு | தமிழ்நாடு அறநிலையத் துறை ஆணையம் | 1973 |
| 4. | தமிழ்த்தாய் – திருஅம்மானை | கம்பனடிப் பொடி தொகுத்த தமிழ்த்தாய் பிரபந்தம் – வெளியீடு | 1993 |
| 5. | வாழ்க்கைக்கு வெற்றி தரும் வழி பாட்டுப்பாடல்கள் | தொகுப்பு – தன் பாடலும் உளது | 2003 |
| 6. | கண்ணகி நோன்பு கண்ணகி வணக்கம் | | 2004 |
| 7. | தாலாட்டு | தாலாட்டுத் தொகுப்பில் உளது (மேலும் பல கட்டுரைகளும் கவிதைகளும் தொகுக்கப்பட வேண்டும்.) | 1956 |

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள்

⋆ எதிர்காலக் கணிப்புகள்

நம்பிக்கையைத் தவறவிடாத நம்பிக்கைகள்

பேராசிரியர் சவரிமலையான் என்று ஒருவர். அவர் பொதுவுடைமைப் பெருந்தலைவர் தங்கமணி என்பவருக்குச் சகலர் என்பர். அளவையியலும் உளவியலும் (Logic and Phychology) கற்று, அவற்றில் பாடம் நடத்தியவர். இப் பாடங்களுக்கு மாணவர்கள் சேர்வது அரிதாகையால், அவர் பல கல்லூரிகளில் பகுதி நேரப் பேராசிரியராக மட்டுமே சென்று பாடம் நடத்தியவர். அனுபவத்தில் சோதிடமும் அதுபோலச் சித்த மருத்துவமும் அறிந்தவர்.

மதுரை அறிஞர் அண்ணா நகரின் கீழ்க் கோடியில் அவர் வீடு. அதைக் கடந்து சென்றால் சதாசிவ நகரில் என் வீடு. இதனால் அடிக்கடி சந்தித்து நண்பரானோம்.

நான் பல்கலைக் கழக வேலை முடிந்து, (ஏறத்தாழ இருபது கிலோமீட்டர் தூரம்), பேருந்து மூலம் வீடு திரும்பப் பெரிதும் இரவு ஒன்பதை ஒட்டி ஆகிவிடும். சில சமயம் அவரும் அதே பேருந்தில் வந்து, இருவரும் அறிஞர் அண்ணா நகர்ப் பேருந்து இறுதி நிறுத்தத்தில்இறங்கி ஒன்றாக நடந்து வீடு செல்வோம். வழியில் ஏதாவது பேச நேர்தல் இயல்பே. சிறுகச் சிறுக அவர் என்னுடையனவும் என் பிள்ளைகளுடையனவுமான பிறந்த நாள் மீன்களைக் கேட்டும், பிறந்த நாட் குறிப்புகளைக் கொண்டுவரச் சொல்லிப் பார்த்தும் விவரம் கூறுவார்.

என் தாய்மாமன் மேலைச்சிவபுரி மு.கும.நடராசன் செட்டியார் சாதகம் பார்ப்பதில் 'நிபுணர்' எனலாம். எங்கள் அனைவரின் சாதகங்களைக் கணித்துத் தந்தவர் அவர்தான். கணியம் (சோதிடம்) என்பதும் ஓர் அறிவியல். இன்று பயன்படுத்தப்படும் முறையே மூடநம்பிக்கை ஆனது.

⋆ சவரிமலையான் சொன்னது அருள் வாக்கா? அறிவுரையா?

மணமாகிக் குழந்தைகள் பிறந்து வளர்ந்த பிறகு அவ்வப் போது கணியம் பார்ப்பதிலும் ஈடுபட்டாலும், என் மனம் மட்டும் அதையே நம்பி இராது. மன அமைதிக்கென்று பார்ப்பது வேறு; அதனையே நம்பி வாழ்வது வேறு.

எனக்குத் தெரிய அக்காலத்தில் சாதகம் பார்ப்பவர்கள், அவர்கள் வாழ்வில் செழிப்பாக வாழ்ந்ததாக நினைவில்லை.

பேராசிரியர் சவரிமலையான் நாள் மீனை – பிறந்த நட்சத்திரத்தைக் கேட்டே, 'பலன்'களைக் கூறிவிடுவார்.

ஒருமுறை அவ்வாறு அண்ணாநகர்ப் பேருந்தில் இறங்கி நடந்தபோது, அவர் என் முகத்தைப் பார்த்து, 'ஏன் முகம் சற்றே வாடியுளது' என்றார்.

என் வாழ்வில் கேளாமலே கிடைத்த நற்பேறுகளும் பல; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போனவையும் பல.

அன்றும் அதுபோல ஒன்று நடந்தது. அவர் அந்த நூறுஅடி வழி நடந்து, பிரிவதற்கு முன் சொன்னவை மந்திர மொழிகள் போல அடிக்கடி என் நினைவிற்கு வரும்.

"உங்களுக்கென்று ஒன்று கிடைக்காமற்
போனால், அது அதனை நீங்கள் அடைவதால்
ஏதேனும் தடங்கலோ, துன்பமோ நேரும்
என்பதற்காக விலகிப் போகும்; அல்லது அதை
விட ஒன்று கிடைப்பதற்காக அவ்வாறு
நடந்திருக்கும்."

சில சமயம் அவர் கூறியவை, அருள்வாக்குப் போல என் வாழ்வில் பலித்துள்ளன. எனக்கு அவை தற்செயலாக நடந்தனவா, அவர் முன்கூட்டி அறிய வல்லவரா என்பதில் ஒரே குழப்பம்.

### ★ ஒருவர் முகத்தைப் பார்த்தும் அவரைப் பற்றிப் படித்துவிடலாம்

காரைக்குடியில் பள்ளி முடிந்ததும் மாலைவேளையில் நானும் முடியரசனும் மற்றும் யாரேனும் ஒருவர் இருவரும் மெல்ல நடந்து, கல்லுக்கட்டி வந்து, கொப்புடையம்மன் கோயிலுக்குத் தென்புறமிருந்த 'கலைமகள்' அச்சகத்தில் இளைப்பாறுவோம்.

மேலாளர் முத்துவும் காசாளர் வள்ளியப்பனும் நல்ல நண்பர்கள். ஒருநாள் என்னையே உற்றுப் பார்த்த ஒருவர், முகப் பார்வையை வைத்தே சில

முன்னறிகுறிகள் (கணியம் - சோதிடம் போல) சொன்னது நினைவிலுளது. என்னைப் பார்த்து "நீங்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் ஆறு அணாதான் உங்களுக்குப் பயன்படும். மீதம் பத்தணா வேறு செலவாகிவிடும்" என்றார். அதாவது நாற்பது விழுக்காடு போக அறுபது விழுக்காடு எனக்கென்று பயன்படாவிட்டாலும் அவை நல்ல செலவிற்கு - என் குடும்பம், உறவு சார்ந்த பலருக்குப் பயன்பட்டுள்ளன. அவர் சொன்னது தவறாகவில்லை.

இதில் மூடநம்பிக்கை ஒன்றும் இல்லை, உங்கள் நடை உடை பாவனை வாழும் முறை போன்றவற்றை வைத்து, நீங்களே உங்கள் எதிர்காலத்தைப் பெருமளவு முடிவு செய்யலாம். ஒருவரது கண்ணும் முகமும் அவர் 'யாரென்று' காட்டிவிடும், உற்று நோக்கும் திறனுடையார்க்கு. ஒருவர் பேச்சும், குரல் ஆளுமையும் அவருக்குப் பெரும் பதவியைத் தேடித் தரக்கூடும். உங்கள் முகமலர்ச்சியும் புன்னகையும் கனிவும் போல்வனவே, உங்கள் எதிர்காலத்தைக் காட்டும் கணியம் எனலாம்.

வசதியின்மையால் திருமணத்திற்கு உதவிகேட்டு வரும் என் உறவினர்கள், எங்களிலேயே பெருத்த செல்வர்கள் வீட்டிற்குப் போகமாட்டார்கள்; குறைந்த வருமான முள்ள என் வீட்டிற்கு வருவார்கள். காரணம் என் முகமும் கண்ணும் இரக்க குணத்தைக் காட்டிவிடும்.

### ⭑ ஒருவரை முன்னோடியாகக் கொண்டால் முன்னேற முடியும்

உயர்நிலைப் பள்ளியில் வேலைபார்த்த காலத்திலேயே ஏழு நூல்கள் எழுதி வெளியிட்டேன்.

ஓர் ஆசிரியனுக்குத் தொடர்புடைய பணி அது. ஒரு நூல் எழுத அவன் பல நூல்களைப் படிக்கின்றான். ஒரே நூலாயினும் பலமுறை படிக்கின்றான். அதனால் அவன் மாணவர் மனங்கொள்ளுமாறு பாடம் நடத்தப் பயிற்சி பெறுகிறான். தன்னையும் வளர்த்து, தமிழையும் சிறப்பித்து, மாணவர்க்கு உற்ற துணையாகின்றான். இவ்வாறு 'சரக்குள்ள' ஆசிரியனை மாணவர்கள் போற்றுகின்றனர். மனம் ஈடுபடாதபோது அவர்கள் வகுப்பறையையே வெறுக்கின்றனர்.

நான் தமிழ் படிக்கத் தொடங்கியபோது திரு.வி.க. வின் 'முருகன் அல்லது அழகு' ஒரு பாட நூலாக இருந்தது. அந்நூலைத் திரும்பத் திரும்பப் படித்தேன்.

அது என்னுள் விளைவித்தது பெரிது. இன்றும் முருகன் என்றாலே, என் உடலும் உள்ளமும் சிலிர்க்கின்றன. அவர் எழுதிய 'உள்ளொளி' நூல் ஏனோ, பலராலும் கற்கப்படவில்லை.

அன்று மு.வ.வின் நூல்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தன. திருமணம், விழா நிகழ்ச்சிகள் எதுவானாலும் மு.வ.வின் நூல்களே பரிசிலாகக் கொடுக்கப்படும் சூழலும் இருந்தது. என் மனத்தில் அவர் ஒரு 'மனஉணர்வு வழி' குருவாக வழிகாட்டியாக ஆனார். எப்பொழுதும் மு.வ.வைப் போல் படித்து, நல்லாசிரியனாக வேண்டும்; 'டாக்டர்' பட்டம் பெற வேண்டும்; நூல்கள் எழுதவேண்டும் என்றெல்லாம் கனவும் நனவுமாய் நினைவிலோடும். ஒரு தமிழாசிரியன் யாரையும் எதிர்பாராதவனாக, பரிசுக்கும் பணத்திற்கும் ஏங்காதவனாக, பிறரை நம்பி வாழாமல் தன் காலில் நிற்பவனாக ஆதல் வேண்டும். தன் படிப்பாலும் எழுத்தாலும் அவரைப் போல் வரவேண்டும் என்ற என் உறுதிப்பாடு ஓரளவு வெற்றிதந்தது.

### ⋆ தமிழாசிரியர்களுக்கு வாழ்வு தந்தவர்

அன்று கல்வி அமைச்சராக இருந்த தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள்தான் முதன் முதலாகத் திருக்குறளை அனைத்து வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களிலும் சேர்க்குமாறு ஆணை இட்டவர்.

தமிழாசிரியர்களுக்கு மட்டும் சம்பள வரையறை விதி (Scale of Pay) என்பது இல்லாமல், நினைத்ததைக் கொடுத்து வந்தனர். எனக்கு முன்பு, தமிழாசிரியராக இருந்த மாசிலாமணி தேசிகருக்கு 18 உரூவா சம்பளம். மற்ற B.A.L.T., படித்த அனைவருக்கும் 60+24=84 சம்பளம். இக் கொடுமையை தி.சு. அவினாசிலிங்கனார் மாற்றினார். தமிழாசிரியர்களுக்கும் சம்பளவிதிமுறை வகுத்து, புலவரும் SSLC - யும் படித்திருந்தால், B.A.L.T., சம்பளமும் SSLC இல்லாவிட்டால் இடைநிலை ஆசிரியர் சம்பளமும் என விதி வகுத்தார். அதிலும் 1.1.1948க்கு முன்பு, ஆசிரியரானவர்களுக்கு விதிவிலக்குத் தந்து, அதன் பிறகு படித்தவர்களே பள்ளியிறுதி வகுப்பும் முடித்திருக்க வேண்டுமென்றும் ஆணையிட்டிருந்தார். பெரிய போராட்டம் எதுவுமின்றி, அவர் தாமே கருதிச் செய்த உதவி இது.

மாசிலாமணி தேசிகருக்குப் பிறகு வந்த எனக்கும் முடியரசனார்க்கும் உரூவா 84 சம்பளம் கிடைத்தது. பிறகு அது 85 ஆகவும் உயர்த்தப்பட்டது.

பொது அறிவு வேண்டுமென்பதற்காகவே அவர் தமிழ்ப் புலவராவார், பள்ளி இறுதி வகுப்பும் முடித்திருக்க வேண்டும் என்றார். இதை விளங்கிக் கொள்ளாமல், தமிழாசிரியர் சிலர் அவரை எதிர்த்துப் பழித்துப் பேசியன வேதனைக் குரியன.

### ✯ இடையூறும் இனிதாகலாம்

அவினாசிலிங்கனார் விதித்த ஆண்டு வரையறை என்னைப் பாதித்தது. ஓராண்டு இலங்கை கொழும்பு நகரில் வேலைக்குச் சென்று திரும்பியதால், நான் 1948இல் நான்காம் மாதம்தான் தேர்ச்சிபெற்று, ஆறாம் மாதம் வேலையில் சேர்ந்தவன். 1.1.1948க்குப் பிற்பட்டுவிட்டதால், எனக்குப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியுமிருந்தால்தான், B.A.L.T., படித்தவர்க்குரிய உரூவா 85 சம்பளம் தர முடியும். முடியரசன் எனக்கு முந்தியவராதலால், அவருக்கு அது கட்டாயமாகவில்லை.

எனக்கோ கூடுதல் சம்பளம் தந்துவிட்டார்கள். மாவட்டக் கல்வி அலுவலர் எனக்கு அது பொருந்தாது என்றதால், சம்பளத்தைக் குறைத்தாக வேண்டும் முதலில் தந்துவிட்டுக் குறைப்பதற்குத் தயங்கினார்கள்.

இதனால் தலைமையாசிரியர் சீனிவாசய்யர் “RMP! இந்த SSLC யைப் படித்துத் தொலையுங்களேன். மேலேயிருந்து குறைக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள் என்று அடிக்கடி கூறலானார். (RM. Periakaruppan என்பது RMP ஆனது).

சம்பளம் குறையுமே என்ற அச்சம் காரணமாகவே, உடனே எழுதித் தேர்ந்தேன். அது தந்த உந்துதலே முதுகலை வரை போய் நின்றது!

### ✯ ஆ. முத்துசிவம் அறிவுரை

முத்துசிவம் ஆங்கிலப் பேராசிரியர் போல், தம் சொற்பொழிவில் அம் மொழி மேற்கோள்களைக் கலந்து பேசுவார். அவர் டி.கே.சி. கருத்து மரபினர். சிறந்த திறனாய்வாளர். யான் இளங்கலை படிக்க முயன்றபோது ‘தமிழ்ப் புலவருக்குப் படித்த நீ மீண்டும் தமிழ் இளங்கலை எழுதி என்ன பயன்? வேறு ஏதாவது ஆங்கிலம், பொருளியல் படி’ என்று வழிகாட்டினார்.

அவரை ஒரு முறை வீட்டில் தனியே சந்தித்தபோது, “இந்தப் பிராமணரல்லாதார், பிராமணர் என்றெல்லாம் வேறுபடுத்திப் பேசுவதை விட்டுவிடு. நம்மவர்கள் புலமையை மதிக்கமாட்டார்கள்; மதிக்கவும் தெரியாது; மதித்தாலும் கீழே தள்ளவே முயல்வார்கள்”.

பிராமணர்கள் புலமையை மதிப்பார்கள். இங்கே பார்! ஆசிரியரென்றால் அவர்களே; டாக்டர் என்றால் அவர்களே; வழக்கறிஞரென்றால் அவர்களே.

அவர்களைப் பகைத்தும் பயனில்லை; நம்மவர்களை நம்பியும் பயனில்லை. நம்மவர்களை மட்டுமே நம்பினால் உன்னைக் கறிவேப்பிலையாக மட்டுமே பயன்படுத்திக் கொள்வார்கள்.

தமிழை வளர்க்க, காக்க, படிக்க, முன்னேற ஒத்திசைவோடு போய்விட வேண்டும் என்பதே என் கருத்து என்றார் அவர். மேலும், "எதிர்த்து முழங்குவதால் எப் பயனும் இல்லை", என்றும் அவர் நடையில் அறிவுரை கூறினார்.

அன்று நாங்கள் தீவிரமாகத் திராவிட இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காலம். அவர் கருத்தை முற்றிலும் ஏற்கவும் இயலவில்லை. தமிழ் என்று வந்தால், பிராமணர்கள் முழுமை பெற ஒப்புவதில்லையே.

### ⭑ பதிப்பாளர் பொன்மொழி

என் முதற் பதிப்பாளர் என் ஒன்றுவிட்ட தமையனார், விடுதலைப் போராட்ட மறவர் தேவகோட்டை, பச்சைக் காவடி ஏகநாதன் ஆவார்.

அடுத்த பதிப்பாளர் காரைக்குடி நண்பர். அவர் ஒருமுறை சொன்னது மறக்கவே இல்லை: "பணம் எங்களுக்கு; பெயர் உங்களுக்கு" என்ற பொன்மொழிதான் அது. சிலசமயம் அவ்வாறு நடந்துவிடுவதை அனுபவித்துள்ளேன். சொற்பொழிவுக்குப் போனாலும் இந்தக் கதைதான். என் முகமே அவ்வாறு செய்யக் காட்டிக்கொடுக்கும் போலும்!

### ⭑ ஏமாற்றம் எதிர்பாராத இடத்திலிருந்தும் வரலாம்

பிறிதொரு சமயம் தொல்காப்பியத்திற்கு மாணவர்கள் எளிதில் படித்து விளங்கிக் கொள்ளும்படியான உரை எழுதினேன். கோவையில் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு – மாநாடு முடிந்து, அங்கு நான் அம்மன்றத்தின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் நடந்தது இது.

மிக முயன்று மாணவர்களுக்கான எளியவுரை எழுதியதிலும் எனக்கொரு பின்னடைவே காத்திருந்தது. இ.ப.த. மன்றத் தலைமைப் பதவியிலும், தொல்காப்பிய எளியவுரைப் பதிப்பிலும், நான் மனநிறைவடையும்படியான மகிழ்ச்சியைப் பெறவில்லை.

ஏமாற்றங்கள் எதிர்பாராத இடத்திலிருந்தும் வருவது, என் வாழ்க்கைச் சுழற்சியில் அடிக்கடி நேர்வனவே.

**☆ முடியரசன் கவிதைகள் வெளியீடு**

**முயன்றால் முடியும்**

ஒரு நாள் காரைக்குடியில் பள்ளி முடிந்து நடந்து வந்துகொண்டிருந்தோம். அப்பொழுது, முடியரசனார் தம் கவிதைகளை வெளியிட யாரைக் கேட்டாலும், எங்கு அனுப்பினாலும் அவர்கள் தயங்குவதைக் குறிப்பிட்டு வருந்தினார். அன்று அவருக்கு திரும்பி வந்த கவிதைத் தொகுப்பு அவர் கையில் இருந்தது. நாங்கள் கலைமகள் அச்சகத்திற்குள் நுழையுமுன், 'அண்ணா! இந்த தொகுப்பை எடுங்கள்; நான் வெளியிட எற்பாடு செய்கிறேன்' என்றேன். அவர் தந்ததை அச்சக மேலாளர் முத்துவிடம் தந்து 'முடியரசன் கவிதைகள்' என்ற சிறிய நூலை, ஆயிரம் படிகள் வெளியிட எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன்.

அவர் தாள், அச்சு, அட்டை, கட்டு உட்பட – அன்றைய நிலையில் ரூபாய் முந்நூறு வருமென்றார். அதன்படி அச்சிடுமாறு கையெழுத்துப்படியை, அப்பொழுதே அச்சகத்தில் தந்துவிட்டேன்; உரிய தொகைதரப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

மறுநாள் பள்ளியில் நான் பாடம் நடத்திய வகுப்புகளில் விவரம் கூறி, ஆளுக்கு ஒரு ரூபாய் பெற்றோரிடம் கேட்டு வாங்கி வரும்படி கூறினேன். ரூ. 120 மறுநாளே சேர்ந்தது. கவியரசு முடியரசன் இதைக் கேள்விப்பட்டதும் தம் வகுப்புக்களில் பணம் கேட்க வேண்டாம் என்று கூறிவிட்டார். பிறகு அச்சகத்திற்கு ஒருவாறு, நூல்களை விற்று உரிய தொகையைத் தந்துவிட்டேன். அச்சகக் கடன் தீர்ந்தது. சென்னை, பாரி நிலையத்திற்கு விற்பனை உரிமை தந்து மீதி நூல்கள் அனுப்பப் பட்டன.

**☆ முதல் அணிந்துரை தந்த மதிப்புரை**

நூல் முடிந்த நிலையில் கவியரசு, நீதான் இதற்கு அணிந்துரை எழுத வேண்டும் என்றார். நான் மா. இராச மாணிக்கனார், அ.சிதம்பர நாதனார் போல அவரிடம் அன்பு செலுத்திய பெரியவர்களிடம் அணிந்துரை வாங்குமாறு கூறினேன். அவர், 'அதெல்லாம் முடியாது; நீதான் எழுத வேண்டும்' என்றார். நான் அது அவ்வளவு சிறப்பாகாது என்று கூறிவிட்டு நெற்குப்பை போய்விட்டேன்.

அவர் ஓர் அஞ்சலட்டையில், 'நீ வந்து உடனே எழுதித் தருகிறாயா? அல்லது முதல் நான்கு தாள்களை வெறுமனே விட்டுவிட்டு, இறுதியில் 'தமிழண்ணல்' என்று போட்டு, அச்சுப்பணியை முடிக்கச் சொல்லட்டுமா?' என்று எழுதியிருந்தார்.

உடனே நான் பறந்து அடித்து, காரைக்குடி சென்று நேரே அச்சகத்திற்குப் போய், ஓர் அறையில் அமர்ந்து, அடித்தல் திருத்தல் எதுவுமின்றி ஒரே மூச்சில், 'வாழையடி வாழை' எனத்தலைப்பிட்டு, எழுதிக் கொடுத்து அச்சேறியது.

பிற்பாடு, நூலைப் படித்த பலரும் என் அணிந்துரையைப் பாராட்டவே, அவர் 'என்னப்பா இது? எல்லோரும் எந்நூலைப் பற்றிக் கூறாமல், அணிந்துரை நன்றாயிருக்கிறது' என்று சொல்கிறார்கள், எனச் சொல்லிச் சிரித்தார். அணிந்துரையில் அவர் பாடல்களிலிருந்த அரிய தொடர்களைத்தான் சுவைபடச் சொல்லியிருந்தேன்.

அந் நூலுக்குத் தமிழக அரசின் முதற்பரிசு கிடைத்தது. தாள்கள் அனைத்தும் நூலைக்குறிப்பிட்டு முதற்பரிசு: தொகுப்பாசிரியர் தமிழண்ணல் என்றே வெளியிட்டன. பரிசுக்கான காசோலையில் அவர் பெயரிட்டுக் கொடுத்தனர். அப்போதும் சிரித்துக்கொண்டே அவர் சொன்னார்: "நல்ல வேளையப்பா! பத்திரிகைகள் எல்லாம் உன் பெயரை வெளியிட்டதால், எங்கே காசோலையையும் உன்பெயருக்கே எழுதி விடுவார்களோ என்று நினைத்தேன். அதிலாவது சரியாக என் பெயரை எழுதித் தந்தார்கள்", என்றார்.

### ☆ எழுத்தார்வம் வளர்ந்த கதை

எனது உயர்நிலைப் பள்ளிப் பணி ஈரோட்டில் தொடங்கியது (1948). அங்கு நான் குடியிருந்த வீடு குடியரசு இதழ் அச்சகத்திற்கும் தந்தை பெரியார் வீட்டுக்கும் நடுவில் இருந்தது. குடியரசு இதழின் துணையாசிரியர், தமிழறிஞர் நா.மு. மாணிக்கம் ஆவார். அவர் அன்பு அழைப்பாலேயே அங்கு வேலை கிடைத்துப் போனவன் நான். அதனால் அடிக்கடி அச்சகம் செல்வதுண்டு. இதனால் 'திருக்குறளில் அறம்', 'திருக்குறளில் அறிவு', 'திருக்குறளில் செல்வம்' என மூன்று தொடர் கட்டுரைகள் எழுதிக் குடியரசில் வெளியிடச் செய்தேன்.

அதற்கும் முன்னர் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையில் புலவருக்குப் படித்துக் கொண்டிருந்த போது, காரைக்குடி, அமராவதி புதூர், மகளிர் இல்லத்தில் இருந்தவரும் நகரத்தார்களிலேயே பகுத்தறிவு இயக்கத்தில் முதலில் ஈடுபட்டவருமாகிய சொ. முருகப்பா 'குமரன்' என்ற வார இதழை நடத்திவந்தார்.

அதில்தான் திரு.வி.க. ரா.பி. சேதுப்பிள்ளை, கா. அப்பாதுரையார் போலும் பேரறிஞர்களின் கட்டுரைகள் வெளியாயின. அவ் இதழில் 'வெண்பாப் போட்டி' என ஒன்றைத் தொடங்கிய பெருமையும் சொ.முருகப்பா அவர்களையே சாரும். பிறகு இப் போட்டியைக் கணக்கற்ற தமிழிதழ்கள் தொட்டுத் தொடர்ந்து சிறக்கச் செய்தன.

சொ. முருகப்பா 'ஈற்றடி கொடுப்பார்'. அதற்கேற்ற வெண்பாவை எழுதி அனுப்பினால், அது வெளிவந்து விடும். தன் பெயருடன் கூடிய கட்டுரை, கதை, கவிதையை ஓர் இதழில் பார்த்து ஒருவன் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களில் பலர் போட்டி போட்டுக் கொண்டு, வாரந்தோறும் எழுதிக் கொண்டே இருந்தோம்.

நான் இராம. பெரியகருப்பன், இராம. சிங்காரம் (என் தாயார் அழைத்த பெயர்) என எழுதினால் இரண்டும் வெளிவரும். இந்த ஆர்வ மேலீட்டால்தான் தமிழண்ணல் என்ற பெயராலும் எழுதி, அதுவும் வெளிவந்து, மகிழ்ந்ததாக நினைவுளது.

### ⭑ வேண்டத்தக்கது அறிவோய் நீ!

காரைக்குடியில் தமிழ்ப் புலவராகிய யான் இளங்கலை பொருளியல் (B.A., Economics) படித்துப் பட்டம் பெற்று, முதுகலை தமிழ் படிக்கத் தொடங்கிய நேரம். அழகப்பர் கல்லூரியில் விரிவுரையாளர் பதவி என்று வரவே, அதற்கு விண்ணப்பித்தேன். தேசிகன், அமிர்தலிங்கம் போன்ற பெருமக்கள், புலவர் படிப்பிலேயே புலமை மிக்கவர்கள். எனக்கு முன்பே பல ஆண்டுகள் அங்கு உயர்நிலைப் பள்ளிகளில் வேலை பார்த்தவர்கள். தமிழ்க் கடல் ராய. சொ; கம்பனடிப் பொடி சா. கணேசன் போலும் பெரியவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள்.

அதனால் என் கூடுதல் தகுதி பற்றிக் கருத இடமின்றிப் போனது. தேசிகன் முன்பே கல்லூரிப் பேராசிரியர் ஆகிவிட்டார். அடுத்து அமிர்தலிங்கனாருக்குப் பணி தந்து, என்னை நேர் காணலுக்குக் கூட அழைக்காமல் விடுத்தனர்.

கல்லூரியில் சேர ஆணை பெற்றதும் பூ. அமிர்தலிங்கனார் என் வீட்டிற்கு வந்தார்.

நானும் வே. அண்ணாமலையும் ஏதோ எழுதிக் கொண்டிருந்தோம். தமக்கு ஆணை கிடைத்ததைக் கூறவும், பிறகு ஏதும் இடம் வரும்போது எனக்கும் வாய்ப்புத் தரப்படும் என்றும் கூறிச் சென்றார். அஃது எனக்கு ஆறுதல் சொல்ல வந்தது போல் இருந்தது.

நான் மதுரை வந்தால், எளிதில் பல்கலைக்கழகத்தில் வாய்ப்புக் கிடைக்கும் என்பதாற் போலும் அங்கு அச்சிறு தடை ஏற்பட்டது.

### ⋆ ஆசிரியர் பதவியா? ஆராய்ச்சி மாணவரா?

நான் முதுகலை முடித்த பின்னும் ஓராண்டு, காரைக்குடிப் பள்ளியிலேயே வேலையிலிருந்தேன். அப்போது கவியரசு முடியரசன் ஒரு பையனைப் படிப்பில் சேர்க்க, அவனுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்றவர் என்னையும் துணைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு பேராசிரியர் க. ஆறுமுகனாரைப் பார்க்கச் சென்றபோது, அவர் வீட்டைக் காலி செய்துவிட்டுத் தில்லிப் பல்கலைக் கழகத்தில் வேலை கிடைத்ததால் அங்கு செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவர் எங்களிடம், "இங்கு மூன்று விரிவுரையாளர் பதவிகள் காலியாக உள்ளன. அவற்றுக்கான நேர்காணல், இன்ன இடத்தில், இன்னும் ஒரு வாரத்தில் நடக்க இருக்கிறது. லெ.பெ.கரு. உங்களூர்க்காரர். உடனே சென்று பாருங்கள். அதில் ஓரிடம் தரக் கூடும்" என்றார்.

அவ்வாறே நானும் முடியரசனாரும் அவரைப் போய்ப் பார்த்தோம். அவர் அவ்வாறு உடனே விரிவுரையாளர் பதவி தரமுடியாதென்றும், தமக்குக் கீழே ஆராய்ச்சி செய்ய வருமாறும், அதற்கான படிவத்தைப் பதிவாளரிடம் பெற்றுச் செல்லுமாறும் கூறினார்.

ஆனால் அதில் ஆய்வாளருக்கான உதவிப்பணம் குறைவாக, ஆறு திங்கள் கழித்தே வரும் என்றார்கள். எனக்கோ திருமணமாகிக் குழந்தைகளும் உள்ளன. மாத ஊதியம் வாங்குவதை விட்டுவிட்டு, ஆறு மாதம் காத்திருந்து பணம் பெற்று வாழ்தல் எனக்கு இயலாததாகும்.

அதனால் யான் பதிவாளரைப் பார்த்துப் படிவம் எதுவும் வாங்காமலே காரைக்குடி திரும்பிவிட்டேன். என் நிலையை விளக்கிப் பேராசிரியருக்கு ஒரு

கடிதமும் எழுதினேன். வேலை வாய்ப்புத் தந்தால்தான், குடும்பமாகிவிட்ட நிலையில் என்னால் வாழ்வை ஓட்டமுடியும் என்பதை விளக்கியிருந்தேன்.

பிறகு ஒருநாள் ஒரு திருமண வீட்டிலோ, எங்கோ பார்த்த அவர், “என்னிடம் ஆய்வு செய்ய மிகப் பலர் வரிசையில் காத்துக்கிடந்தார்கள். நான் உனக்காக அதைத்தர முன்வந்தும், நீ வராமலே இருந்துவிட்டாய்” என்று சொன்னது நினைவு வந்தது.

### ✯ அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வாழ்வில் மறக்கமுடியாத ஒருநாள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் பணி ஓய்வு பெற்ற நேரம். அடுத்து யாரை அமர்த்துவது என ஆராய்ந்துள்ளனர்.

அரசர் முத்தைய வேள் அவர்களை ஓரளவு அறிவேன். மதுரை முத்தையா மன்றம் திறப்பு விழாவின் போது, மலர் உருவாக்கத்தில் நானும் பேராசிரியர் சுப. அண்ணாமலையும் முழுஈடுபாட்டோடு ஒத்துழைத்தோம்.

மற்றபடி அரசரிடம் யாரேனும் என்னைப்பற்றி விரிவாக எடுத்துரைத் திருக்கக் கூடும்.

ஒருநாட் காலை, மதுரை முத்தையா மன்றப் பொறுப்பாளர், மதுரைத் தமிழிசைச் சங்கத் தலைவர் செம்பனூர் மாணிக்கம் செட்டியார், நான் குடியிருந்த சதாசிவ நகர் வீட்டுக்கு வந்தார். அரசர் அழைத்துவரச் சொன்னார். ‘நீங்கள் எழுதிய ஒன்றிரண்டு நூல்களை எடுத்துக்கொண்டு உடனே புறப்படுங்கள்’ என்றார். நான் பல்விளக்கி முகம் கழுவக் கூட இல்லை. இருப்பினும் அவற்றை முடித்துக் கொண்டு, இரண்டு மூன்று நூல்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் பேராசிரியர் தேவை என விளம்பரம் வந்திருந்தது எனக்குத் தெரியாது. நான் விண்ணப்பம் போடவில்லை. தில்லி முதல் சென்னை வரை பலர் நேர்காணலுக்கு வந்திருந்தனர் எனப் பிறகுதான் அறிந்தேன். அப்போது மதுரை மேயராக முத்து அவர்கள் இருந்ததால், அவருடைய பரிந்துரைக் கடிதத்துடன் ஒருவர் வந்திருந்தார்.

இந்நிலையில் என்னை அழைத்துக் கொண்டு, செம்பனூர் மா. வன்னா, சொக்கிகுளம் வளமனையின் பின்புறமாகக் காரைவிடச் சொல்லி, உள்ளே என்னைப் பிறர் அறியாமல் அழைத்துச் சென்றார்.

அரசரவர்கள் படுத்திருந்தார்கள். அவர்கள் தலைமாட்டில் போய் உட்கார்ந்தேன். அவர்கள், "உன்னைத்தான் மாணிக்கத்திற்குப் பிறகு அங்கு பேராசிரியராகப் போட எண்ணியுள்ளேன். வெளியே பலர் வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர், பெரியவர்களிடம் சிபாரிசுக் கடிதம் கூட வாங்கி வந்துள்ளார்கள். என்றாலும் நான் உன்னைத்தான் போட நினைக்கின்றேன்", என்றார்கள்.

நான், "இப்பொழுதுதான் அஞ்சலவழித் துறையில் பேராசிரியராக நியமிக்கப் பட்டுள்ளேன். அதுவும் சிட்டி பாபு விரும்பி அப் பதவியைத் தந்துள்ளார். அதனால் யோசித்துச் சொல்கிறேன்" என்றேன்.

அவர் "அஞ்சல்வழிப் பேராசிரியர் பதவி வேறு. அங்கே நீ துறைத் தலைவராகிறாய், சிண்டிகேட் உறுப்பினராகிறாய், மேலும் மாணிக்கத்திற்குக் கொடுத்த அத்தனை பொறுப்பையும் உனக்குத் தருகிறேன். பேசாமல் அங்கே வந்துவிடு" என்றார்.

எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. "வண்டி தரச் சொல்கிறேன். போய்விட்டு, பிற்பகல் மூன்றுமணி அளவில் வந்துவிடு. ஆட்சிக்குழுக் கூட்டம் இங்கே தான் நடக்கப் போகிறது. உன்னை அவர்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன்" என்று அவர் நடையில் சொல்லி அனுப்பிவைத்தார்.

அவ்வாறே நான் சென்று, மதியம் அக் காரிலேயே, பின்புற வழியாக உள்ளே அழைத்துச் செல்லப்பட்டேன். அரசர் மிக விரிவாக என்னையும் நான் எழுதிய நூல்களையும் புகழ்ந்து அறிமுகப் படுத்தியது எனக்கு பெருவியப்பாக இருந்தது. அதுவும் நான் பிஎச்.டி. எனும் டாக்டர் பட்டத்திற்கு எழுதிய ஆங்கில ஆய்வேடு பற்றி விரிவாகச் சொன்னதைப் பார்த்தால், என்னைப் பற்றி யாரோ மிகவும் விளக்கிச் சொல்லியிருக்க வேண்டும் என எண்ணினேன்.

துணைவேந்தர் சந்திரசேகர் மாலையில் பாண்டியன் விடுதியில் தம்மை வந்து பார்க்குமாறும் நாள் குறித்துக்கொண்டு பிறகு சென்னை வருமாறும் கூறினார்.

பிறகு எல்லோரும் வெளியே வந்து, நடந்தபோது, யான் பின்னேவர, எங்கள் ஊர்ப் பேராசிரியர், அரசர் குடும்பத்திற்கு மிக வேண்டியவர், லெ.ப.கரு. இராமனாதன் செட்டியார் உடன் நடந்துவந்தார். அவர் முகம் ஏனோ வாடி இருந்தது. நான் அவரிடம், "எனக்கு அங்கு பேராசிரியப் பதவி முக்கியமில்லை.

இங்கே பேராசிரியராகத்தான் உள்ளேன். என் மகனுக்கு அங்கு பொறியியற் கல்லூரியில் படிக்க விண்ணப்பம் போட்டுள்ளேன்" என்றேன்.

எங்கள் ஊரார்க்கு மட்டுமன்றிப் பலர்க்கும் பலவகைப் படிப்புக்களிலும் இடம் தந்து, அவர்களை ஆதரித்த பெருந்தகை அவர். ஆனால் அப்போது கடுகடுப்பாக, "உங்கள் பையனுக்கு இடம் கிடைக்காது" என்றார்.

அவர் மனநிலையைப் புரிந்து கொண்டேன். பழைய நினைவு ஒன்று வந்தது.

முன்பு ஆய்வுமாணவராக அவர் அழைத்தும் நான் போகவில்லை அல்லவா? இதற்கிடையே நான் சிதம்பரம் வரக்கூடும் என்று வதந்தி பரவவே, அங்கிருந்து ஒப்பமிடாத கடிதங்கள் சில தொடர்ந்து வரத் தொடங்கின. அதில் அருவருப்பான சொற்கள் அடங்கியிருந்தன.

எல்லாவற்றையும் உய்த்துணர்ந்த யான் தனியார் பல்கலைக் கழகத்தைவிட, அரசுசார் நிறுவனமே மன அமைதி தருமென எண்ணி, இடம் மாறும் எண்ணத்தைக் கைவிட்டேன்.

என்பால் பேரன்பு வைத்திருந்த முத்தைய வேள் அவர்களிடம், நான் அங்கு வருவதை விரும்பாமல், முயன்றவர்கள், "பார்த்தீர்களா, நீங்கள் அழைத்தும் தமிழண்ணல் வரவில்லை" என்று பலவாறு கூறி, அவர் மனத்தில் தவறான எண்ணத்தை ஏற்படுத்தவும் முயன்றமை பெரிதும் வருத்தம் தருவதாகும்.

### ☆ கலைத்தந்தை, கருமுத்து தேர்ந்தெடுத்த தமிழ் முத்து

முதுகலை முடிந்ததும் ஓராண்டு பள்ளியிலேயே ஓடிற்று. எங்கள் ஊரில் உடன்பங்காளியும் ஒன்றுவிட்ட அண்ணனுமாகிய, உலகறிந்த எழுத்தாளர் சோமலெ எனக்காக, மேற்பதவிக்கு முயன்றார். பள்ளி ஆசிரியனாக இருந்து, மேற்படிப்பு வரை முடித்ததில், என்பால் அன்பு பாராட்டினார்.

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் சேர்க்கலாம் என்று, என்னை ஒருநாள் மதுரை வருமாறு குறி, நானும் அங்கு சென்றேன். இருவரும் மீனாட்சி ஆலையினுள்ளிருந்த வளமனையில், அவரைப் பார்க்கச் சென்றோம். அவரோ மிகுந்த அவசரப் பணி காரணமாக, புதுதில்லி போகப் புறப்பட்டு, எங்களைப் போல்

பலர் வரிசையாக நின்ற நிலையில், எங்களைக் கடந்து, சென்று காரேறிப் புறப்பட்டுவிட்டார்.

அதனால் வெறுமனே இருவரும் திரும்பினோம். இவ்வாறு சிலமுறை எனக்காகப் பிறர் தாமே விரும்பிப் பரிந்துரைத்தவை எனக்குக் கிடைத்தில. அதுபோல எதிர்பாராது, என்னை எதிர்கொண்டவையும் பல.

உலகம் ஒரு சுழற்சிக்கு உட்படுகிறது. உடல் ஒரு சுழற்சியின்படி நடக்கிறது. ஒருவர் தம் வாழ்வும் ஒரு சுழற்சிப்படி நடக்கிறது. இதற்குக் கணியம் பார்க்கவேண்டியதில்லை.

சிலருக்குச் சில 'இராசிகள்' என்று இதையே கூறுகின்றனர்.

எனக்கு உழைப்புக்குத் தகுந்த கூலி என்பதே விதி. எனக்குச் சில முன்னேற்றங்கள் வாய்த்தன என்றால், அவை என் கடின உழைப்பின் பயன்கள். யான் என் மக்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு; "கடவுள் நமக்கு அளந்து கொடுக்கிறார்; அள்ளிக் கொடுப்பதில்லை" என்று.

உடனே என் மனைவி சொல்வாள் : கடவுள் அதாவது தருகிறாரே அது போதும். நல்ல உடல் நலத்தையும் நீண்ட ஆயுளையும் இந்த அளவு தந்தாலே போதும். 'ரொம்பத் தந்து, திண்டாட விட வேண்டாம்'.

என்னுடன் வாழ்ந்த அவளது அனுபவ வார்த்தை அது.

அந்த ஆண்டு இறுதியிலேயே, தியாகராசர் கல்லூரி விளம்பரம் பார்த்து, விண்ணப்பம் போட்டேன். ஆலைக்காயினும் கல்லூரிக்காயினும் அவரே விண்ணப்பத்தை முழுவதும் படித்தும், நேர் காணலில் மிகவும் சோதித்தும்தான் முடிவெடுப்பார்.

நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள், அமைச்சர்கள் பரிந்துரைகள் உட்பட – வந்திருந்தும் யான் அழைக்கப்பட்டது, இறைமையின் திருவருள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கிலப் பேராசிரியராகச் சந்திரசேகரன் என்பவர், ஒரு மணி நேரத்திற்குள் வேலை உறுதிசெய்யப்பட்டு அனுப்பப்பட்டுவிட்டார். டோக் பெருமாட்டி கல்லூரிப் பேராசிரியை தேவ கிருபை தியாகராசன், பிஎச்.டி. ஆய்வுக்கு என மூன்றாண்டு மட்டும் விடுப்பில் வர விரும்பியதால் அரைமணிக்குள்

நேர்காணல் முடிந்து சென்று விட்டார். மூன்றாமவன் நான் மட்டுமே. கலைத் தந்தை கேட்டவற்றுக்கு விடைகள் சொன்னேன்.

என் முதுகலை மதிப்பெண் பட்டியலில் இலக்கணத்தில் கூடுதல் மதிப்பெண் இருந்ததால், நான் எக் கல்லூரியிலும் பயிலாது, தனிப்படிப்பு மூலம் தேறியிருந்ததையும் நன்கு பார்வையிட்டார்.

என் விண்ணப்பத்தில் 'குறிஞ்சிப் பாட்டுத் திறனாய்வு விளக்கம்' என்ற நூலை எழுதியதும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கலைத் தந்தைக்குக் குறிஞ்சிப்பாட்டு என்றால் மிகவும் பிடிக்கும் என்றும் 261அடி கொண்ட பாடல் முழுவதும் அவருக்கு மனப்பாடம் என்பதும் எனக்குத் தெரியாது.

'ஏதோ குறிஞ்சிப்பாட்டைப் பற்றி Treatise எனப் பெரிதாக எழுதியிருப்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளாயே, எங்கே அந்தப் பாட்டைச் சொல் பார்க்கலாம்' என்றார்.

எனக்கு அது மனப்பாடம் இல்லை. 'அன்னாய் வழி வேண்டு அன்னை...' அதற்குமேல் ஓடவில்லை. இம் முதலடியுடன் மேலும் சில அடிகள் தெரியும் என்றாலும், தொடர்ச்சியாக வரவில்லை.

அவர் அப் பாடலைச் சொல்லத் தொடங்கினார். ஏறத்தாழ இருநூறு அடிகள் வரை, ஒரு வரி மாறாமல் சொல்லிக் கொண்டே போனார். சி. இலக்குவனார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, தி. மாணிக்கவாசகம் செட்டியார் எல்லோரும், சிலைகள் போல் மௌனமாய் அமர்ந்து, அவர் சொல்லச் சொல்ல வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தோம்.

'சரி, இனி நாம் வீட்டிற்குப் போக வேண்டியதுதான். இது தெரிந்திருந்தால் பத்துப் பதினைந்து அடிகளாவது மனப்பாடம் செய்து வந்திருக்கலாமே' என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

பேராசிரியர் இலக்குவனார், 'இக்காலப் பிள்ளைகளுக்கு மனப்பாடப் பழக்கம் போய் விட்டது. படிக்கிறார்கள், ஆராய்கிறார்கள், அவ்வளவுதான்' என்று எனக்கு ஆதரவாக எடுத்துரைத்தார்.

எனினும் கலைத் தந்தை அவர்கள் மனப்பாடம் செய்வதன் இன்றியமையாமையை வற்புறுத்தினார்கள்.

பின்னரும் என் தாலாட்டு நூலை எடுத்துயான் எழுதிய முன்னுரையைப் படித்துப் பார்த்தார்கள். மனத்துள் படித்துக்கொண்டிருந்த அவர்கள், இடையே ஒரு வடசொல் வரக் கண்டதும், வாய்திறந்து 'வடசொற் கலப்புளதே' என்றார்கள். முடிக்குமிடத்து நமது நாடும் நமது மொழியும் நமது பண்பாடும் என வந்த இடத்தைச் சுட்டிக் காட்டித் திரும்பவரும் நடை உளதே என்றார்கள்.

இவற்றுக்கெல்லாம் யான் விடை இறுக்கவில்லை. சி. இலக்குவனார்தான் வேறுவழியின்றி வடசொல் வந்துவிட்டதென்றும் முடிக்குமிடத்தில் அழுத்தம் தருவதாக நினைத்துத் திரும்பவரும்படி எழுதியிருக்கக் கூடுமென்றும் ஏதோ சில சொல்லி எனக்கு ஆதரவாகப் பேசினார்.

நேரம் கடந்து கொண்டிருந்தது. இக் கால உரைநடை பற்றிக் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. பலரது பெயரையும் கூறி, இக்கால உரைநடை பற்றித் திறனாய்ந்து, மறைமலையடிகளின் தனித்தமிழ் உரைநடையே இன்றைய உரைநடைகளில் முடிமணியாய்த் திகழ்வதென்றும் கலைத் தந்தை கூறியவற்றை, அனைவரும் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம்.

உணவு வேளை வந்துவிட்டதால், பிற்பகல் வா, பார்க்கலாம் என்று கூறி எழுந்துவிட்டார் கலைத்தந்தை. அனைவரும் சென்று விட்டனர். நான் இலக்குவனாரைப் பின்பற்றி, மீனாட்சி ஆலை முன்னர்இருந்த தொடர்வண்டிப் பாதையைக் கடந்து, ஒரு சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தோம்.

எனக்கு உணவு செல்லவில்லை. ஏதோ சிறிதுண்டு திரும்பியபோது, எனக்கும் இலக்குவனாரே பணம் கொடுத்தார். திரும்பி வரும் பொழுது, 'சற்றுமுன் வரை உனக்கு வேலை கிடைக்கும்போல் இருந்தது. பிறகு எப்படியோ அவர் மனம் மாறிவிட்டது' என்றார்.

எனக்கு மயக்கமே வந்துவிட்டது.

மீனாட்சி வளமனை முன்னுள்ள அகலமான திண்ணையில் அனைவரும் வந்தமர்ந்தோம்.

சற்று நேரம் கழிந்தபின், மேல் மாடியிலிருந்து இறங்கி வந்த கலைத் தந்தை, 'பெரியகருப்பன் நீ போகலாம். உனக்கு 'ஆர்டர்' அனுப்பச் சொல்கிறேன்', என்று சொல்லியபடியே, எங்களைக் கடந்து, அவரது நூலகமும் நேர்காணல் நடந்ததுமான அறைக்குள் போய்விட்டார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்து அறைக்குள் போய்விட்டார்கள்.

சற்று நேரத்திற்குப் பிறகு, ஔவை அவர்கள் மெதுவாகக் கதவைத் திறந்து, 'என்னை அழைப்பதாகக்' கூறினார்.

மீண்டும் தயக்கத்துடன் உள்ளே சென்றேன். கலைத்தந்தை, 'கவிதை பாடுவதுண்டு என்று விண்ணப்பத்தில் எழுதியுள்ளாயே, எங்கே நீ எழுதிய ஒரு பாடலைச் சொல்' என்றார்கள்.

நான் எழுதிய பாடலையே மனப்பாடமாய்த் திரும்பச் சொல்லுமளவு எனக்கு நினைவாற்றல் இல்லை. அதுவும் அந்தப் பதற்றத்தில் எதைச் சொல்வதென்றும் தோற்றவில்லை.

நான் எழுதிய சிறுவர் பாடல் ஒன்று,

'கொக்கரக்கோ என்று சேவல்
    கூவுது கேளடா!
அக்காவைப்பார் தெருவிலே போய்
    ஆடிப் பாடு'றாள்!

என்று ஒப்பித்த எனக்கு அடுத்த அடிகள் நினைவில் வந்தில. உடனே ஒன்று செய்தேன். மேசையிற் கிடந்த என் தாலாட்டுத் தொகுப்பு நூலில், நான் எழுதிய தாலாட்டும் இருந்தது. அப் பாடல் 'செந்தமிழ்ச் செல்வி'யில், அன்றே வெளிவந்தது, மலேசியா, சிங்கப்பூரில் எல்லாம் பாடி வரவேற்கப்பட்டது.

வெல்லம் இனிக்கும் என்றும்
    வேம்பு கசக்குமென்றும்
சொல்லப் பழகவில்லை
    சுவைத்துப் பழகிவிட்டாய்!

தன்னைத் தமிழனென்று
    தான் சொல்லக் கூசுகின்ற
பின்னறிவுத் தமிழரிடைப்
    பிறந்ததற்கோ நீ அழுதாய்!

என்று இவ்வாறான அடிகள் பலவுள்ள பாடல் அது. பாடல் முழுவதையும் படித்து முடித்த கலைத்தந்தை, 'நீ போகலாம், 'ஆர்டர்' அனுப்பச் சொல்கிறேன்' என்றார்கள். வெளியே வந்த நான், கதவருகிலேயே நின்றேன், மீண்டும் அழைக்கக் கூடுமோ என்று.

இதைக் கவனித்த ஔவை வெளியே கதவைத் திறந்தபடி, என்னைப் பார்த்து, 'பயப்படாதே! கலைத் தந்தை சொன்னால் சொன்னது தான். தைரியமாய்ப் போய்வா!' என்றார்கள்.

காரைக்குடி சென்ற எனக்கு மறுநாளே, 'தந்தி' மூலம் ஆணை வந்தது.

★ **தடைக்கல்லும் படிக்கல்லாகலாம்!**

தேவகோட்டையில் சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி தொடங்கியபோது, பேராசிரியர் நா.பாலுசாமி அங்கு முதல்வராக நியமிக்கப்பட்டார். தியாகராசர் கல்லூரியில் அவர் இளங்கலைத் துறைப் பேராசிரியர். முனைவர் சுப. அண்ணாமலை முதுகலைத் துறைப் பேராசிரியரும் தமிழ்த்துறைத் தலைவருமாவார்.

இந்நிலையில் இளங்கலைத் துறைக்கு, யாரை அடுத்த தலைவராகப் போடுவதென்ற சிந்தனை எழுந்தது. கோப்புகள் கலைத்தந்தைக்கு அனுப்பப்பட்டன.

கல்லூரி அனைத்துத் துறைகளிலும் சேர்த்து, விரவுரையாளர் நிலையிலிருந்து 'டாக்டர்' பட்டம் பெற்றவர்கள் நானும் கணிதத்துறை சார்ந்த சோம சுந்தரம் என்பவருமே.

அன்றைய (UGC) விதிப்படி, விரிவுரையாளராக இருந்து பிஎச்.டி எனும் முனைவர் பட்டம் பெற்றால், அவர்களுக்கு ஐந்து ஊதிய உயர்வு தர வேண்டும்.

இருவரும் சென்று கேட்ட பொழுது முதல்வர் வைத்தியநாத் மறுத்துவிட்டார். பொருளியல் துறைத் தலைவராக இருந்த அவர் முனைவர் பட்டம் பெற்றவர் அல்லர்.

'தமிழ்' என்றால் அவருக்கு ஓர் ஒவ்வாமையும் இருந்தது போலும்! தமிழ் இன்றும் உண்மையாக மதிக்கப்படவில்லை என்பதே உண்மை.

தெற்கூர் மாணிக்கம் செட்டியாரை அழைத்துக் கொண்டு, மீனாட்சி ஆலைக்குச் சென்று கேட்ட பொழுது, தாளாளர் கருமுத்து தி. சுந்தரம் செட்டியாரும், முதல்வர் சொற்படி கேட்டு, 'நாங்கள் பணம் ஏதும் கூட்டித்தர முடியாது; வேறு கிடைத்தால், (பெரிய நல்ல வேலை) மாறிக் கொள்ளலாம்' என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டார் பத்தாண்டுகள் பணியாற்றிய கல்லூரியில் கிடைத்த பதில், என்னைப் பதறச் செய்துவிட்டது.

இதற்கிடையில் கோப்புகளைப் பார்வையிட்ட கலைத்தந்தை, எனது முனைவர் பட்டம் கருதி, என்னை இளங்கலைப் பேராசிரியராக அமர்த்துமாறு எழுதி, ஒப்பமிட்டு அனுப்பியுள்ளார்.

ஆங்கிலப் பேராசிரியர் சக்திவேலு அடிக்கடி பங்களா போய் வருவார். அவர் ஒருநாள் இரவு 9 மணிக்குப் பங்களாவிலிருந்து வந்தவர் என் வீட்டுக் கதவைத் தட்டினார். அவர் நான் குடியிருந்த பாண்டியன் நகர் வீட்டின் எதிர் திசை வீடொன்றில்தான் குடியிருந்தார்.

“உங்களை பேராசிரியராக நியமிக்கச் சொல்லி, எழுதி, கோப்பி ஒப்பமிட்டுக் கலைத்தந்தை கல்லூரிக்கு அனுப்பச் செய்து விட்டார். நான் இப்பொழுது நேரில் பார்த்துவிட்டுத்தான் வருகின்றேன். வாழ்த்துக்கள்!” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அப்போது என் பெற்ற தகப்பனார் முத்துராமன் செட்டியாரும் வந்திருந்தார்.

பிறகு மறுநாள் முதல் சிலநாள்களுக்கு இது பற்றிய பேச்சே வரவில்லை.

சக்திவேலுவிடம் ‘நடந்தது உண்மையா’ எனக் கேட்டேன். அவர் நேரில் பேசியது, எழுதியது எல்லாம் பார்த்ததைக் கூறி, முதல்வர்தான் ஏதோ தந்திரம் செய்கிறார் என்றார். மேலும் முதல்வரைப் போய், தைரியமாய் இதுபற்றிக் கேளுங்கள் என்றார்.

நானும் அவ்வாறே சென்று கேட்டபொழுது, முதல்வர் வைத்தியநாத் “இது எப்படி உங்களுக்குத் தெரியும். அது பற்றி ஒன்றும் கூறமுடியாது” என்று சொல்லிவிட்டார்.

இதற்கிடையே வேறு ஒரு வேடிக்கையும் நடைபெற்றது.

சேலம் வேலூர் கந்தசாமிக் கண்டர் கல்லூரியில் எனக்குத் தொடர்பிருந்தது. அங்கு முதுகலைத் தமிழ் இருந்ததால், அதனுடன் வேறு ஒரு முதுகலையிருந்தால் அக் கல்லூரிக்கு முதன்மைச் சிறப்புக் கிடைக்கும். அன்று இரண்டு முதுகலைத் துறைகள் இருந்தால், அவை பெரிய கல்லூரிகள் என்று சிறப்புச் சலுகைகள் பெற்றன.

அதனால் அங்கு கணிதத்துறையையும் முதுகலைத் துறையாக்க விரும்பி, அதற்குத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேடி, முதல்வர் முதல் பலரும் ஒரு அம்பாசிடர் காரில் என் வீட்டிற்கு வந்தனர்.

தக்க சமயம் என்று சோமசுந்தரத்தை யான் அறிமுகப்படுத்த, அவருக்கு வேலை உறுதி ஆனது. இது கேட்ட முதல்வர் வைத்திநாத், அவரை அழைத்து, ஐந்து ஊதிய உயர்வும் தருவதாகக் கூறியும், அவர் அதை மறுத்து கண்டர் கல்லூரிக்குப் போய்விட்டார்.

என்னைப் பற்றி பேச்சே இல்லை. ஆயினும் தெ. பொ. மீ, மு.வ. போலும் தமிழ்ப் பேரறிஞர்களின் அன்பும் மதிப்பும் இருந்ததால், நானும் அங்கிருந்து விலகிப் பல்கலைக் கழகப் பணிக்குச் சென்றேன்.

### ✯ பரிந்துரையின்றிப் பல்கலைக் கழகப் பதவி

தியாகராசர் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகம் செல்ல, இணைப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தேன். விரிவுரையாளர் பதவிதான் கிடைத்தது. தெ.பொ.மீ. இருந்தபோது விண்ணபித்து, மு.வ. இருந்தபோது நேர்காணல் நடந்தது. அவர் 'நான் சங்க இலக்கிய மாணவன்' என்பதை அறிந்தவர். எனவே பரிந்துரை ஏதுமின்றியே வேலை கிடைத்தது.

நேர்காணலில் மு.வ. அவர்கள் "நேரே 'ரீடர்' பதவி தர இயலாது. விரிவுரையாளர் பதவிதான் தரலாம். சம்பளமும் நீங்கள் இப்போது வாங்குவதை விடக் குறைவுதான். பின்னர் யுஜிசி சம்பள விகிதம் வரவுளது. அப்போது கூடிவிடும். சம்மதமா என யோசித்துச் சொல்லுங்கள் என்றார்".

"விரைவில் சம்பளம் குறைந்து விடாது என்பதால், சம்மதம்" என்று கூறியதும், "இதற்காக உங்களை வேலைக்குச் சேர்த்துவிட்டோம் என்று வெளியே கூற வேண்டாம். உங்கள் கருத்தை அறிந்து முடிவெடுக்க எண்ணியுள்ளோம். அவ்வளவே" என்று கூறியனுப்பினார்.

ஆயினும் உடனே பணியமர்த்தம் கிடைத்தது, விடுமுறையாயினும் ஏப்பிரல் 2ஆம் நாளே, தியாகராசர் கல்லூரியை விட்டு விலகி, அங்குப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

★ **ஒப்பிலக்கிய மாணவன்**
**பாடம் நடத்தச் சென்றவன்**
**புதிய பாடம் படிக்கும் மாணவன் ஆனேன்!**

பல்கலைக் கழகத்திற்கும் கல்லூரிக்கும் தமிழ்ப் பாடம் நடத்துவதில் ஒரு வேறுபாடு இருந்தது. கல்லூரியில் தமிழ், ஆங்கிலம் போலும் மொழிப் பாடத்திற்கு இரண்டு துறை சார்ந்த மாணவர்கள் ஒன்றாக வந்து அமர்வார்கள். கூடுதல் அறுபது எழுபது மாணவர்களுக்கு, ஒரே சமயத்தில் பாடம் சொல்வதில் சில சமயம் தளர்ச்சி ஏற்படும். அதிற்சிலர் ஆர்வமற்றவர்களாக இருந்துவிட்டால் 'மேய்ப்பது' கடினம்.

பல்கலைக் கழகத்தில் முதுகலை, ஆய்வுக் கல்வி என்பதால் இருபது இருபத்தைந்து மாணவர்கள் மட்டுமே இருப்பர். அமைதியாய்ப் பாடம் சொல்வது எளிது.

இதனால் நான் என் மனைவியிடம் இனிப் பல்கலைக் கழகம் போவதால், பாடம் நடத்துவதெல்லாம் எளிது என்று சொல்லிவிட்டேன்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நான் சேர்ந்த அன்றே, 'ஒப்பிலக்கியம்' என்ற பாடம் எனக்குத் தரப்பட்டது. (ஈரோட்டில் மகாசனப் பள்ளியில் சேர்ந்ததும், அப்போதே தலைமையாசிரியர் என்னை, 'எஸ்.எஸ்.எல்.சி' என்னும் பள்ளி இறுதி மாணவர் வகுப்பில் கொண்டு போய் விட்டுச் சிலப்பதிகாரப் பாடத்தை நடத்த வைத்தது நினைவுக்கு வந்தது). முதல் துணைவேந்தர் தெ.பொ.மீ. அவர்கள் இதற்கென ஒரு தாளை, முதுகலையில் ஒதுக்கிப் பாடத்திட்டமும் தந்திருந்தார்கள். இதனால், முற்றிலும் புதிய இப் பாடத்தை நடத்தவேண்டிய கட்டாயத்தால், இரவும் பகலும் படிக்க நேர்ந்தது. கே.சி. பாண்டே, எஸ்.கே.டே, வி. இராகவன், கோ.சுந்தரமூர்த்தி, சி.எம். பௌரா, ஆஸ்டின் வாரன்னும் ரெனே வெல்லக்கும் என்று பலரெழுதிய நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்துப் பாடம் நடத்தி, புதிதாகப் பாடத்திட்டம் வகுத்து நடத்த நேர்ந்தது. என் மனைவி சிந்தாமணி, 'இது என்ன கேலிக் கூத்தாக இருக்கிறது. பல்கலைக் கழகத்திற்குப் பாடம் நடத்தச் சேர்ந்தீர்களா? படிக்கச் சேர்ந்தீர்களா?' – என்று கேட்கும் நிலை உருவாயிற்று.

ஒப்பிலக்கிய அறிமுகம், சங்க இலக்கிய ஒப்பீடு எனப் பல நூல்களும் எழுதலானேன். இந்தியாவிலேயே, வங்காளத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகத்திற்குப் பிறகு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில்தான்

'ஒப்பிலக்கியத்துறை' என ஒன்று தமிழ்த் துறையில் உருவானது. பிறகுதான் ஆங்கிலத்துறையில் ஒப்பிலக்கியம் இடம் பெறலாயிற்று.

### ⋆ மதுரை காமராசர் பல்கலைக் கழகம் தொடங்கிய தமிழ்ச்செம்மொழிச் சங்க இலக்கிய ஆய்வுகள்

ஒப்பிலக்கியத்துறைப் பாடம் சுவையாய் அமைந்தது. மாணவர்கள் அதில் ஆர்வம் காட்டினர். ஆய்வு மாணவர்களுக்கு ஒப்பிலக்கியத் துறை சார்ந்த தலைப்புக்கள் தரப்பட்டன.

இதனால் செவ்வியல் இலக்கியம் பற்றிய சிந்தனையும், இப் பல்கலைக் கழகத்தில்தான் வளர்க்கப்பட்டது.

'இலக்கியக் கொள்கை' என்ற நூலில், இலக்கியத்தை உரைநடையிலிருந்து வேறுபடுத்தும் அடிப்படை இலக்கியக் கொள்கைகள் உருக்காட்சி (Imagery), படிமம் (Symbol), தொன்மம் (Myth) என்று குறிப்பிட்டுள்ளனர். இதில் புராணம் என்பதை விடுத்து, 'தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே' என்பதை அடிப்படையாகக்கொண்டு, தொன்மம் என்ற கலைச்சொல் உருவாக்கப்பட்டது. இன்று பல்வேறு பார்வைகளில் 'தொன்மம்' பற்றிய ஆய்வுகள் பல்கிப் பெருகியுள்ளன. இதற்கு இப் பெயரையும் இதன் வழி ஆய்வுநெறியையும் முன்னோடியாகக் காட்டிய பெருமை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு உரியதாகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு என இது பதம் காட்டப்பட்டது.

முதன் முதலாகச் செவ்வியல், நடப்பியல், புனைவியல் பற்றியும் ஆராயப்பட்டது.

செ. சாரதாம்பாள் ஆய்வுக்குத் தொடங்கும் போதே, 'செவ்வியல்' (Classcism) பற்றி, ஒரு சிறு தனிநூல் எழுதுமாறு வழிகாட்டப் பெற்றது. அவரின் பிஎச்.டி. ஆய்வுக்கு 'சங்கச் செவ்வியல்' (Classcism in Sangam Literature) என்பதே தலைப்பாகத் தரப்பட்டது. தமிழாய்வுத் துறையில் இன்று அரசே, 'செம்மொழித் தமிழ் இலக்கியம்' பற்றி இசைவு தந்து பலரும் அதில் கருத்துச் செலுத்தி வருகின்றனர். எனினும் என் வழிகாட்டுதலில் தோன்றிய 'சங்கச் செவ்வியல்' என்ற ஆய்வு நூலே, இத்துறையில் தமிழில் முதல்நூல் முதல் முயற்சி என நினைவிற் கொள்ளுதல் தகும்.

★ ஆராய்ச்சி நெறிமுறை அறிமுகம்

பல்கலைக் கழகத்தில், ஆய்வாளர்கள் ஓர் ஆய்வை எப்படி எழுத வேண்டும் என்ற நெறிமுறைகளைப் படிக்காமலே, ஒருவர் பின்பற்றிய நெறியை மற்றவர்களும் பார்த்துப் பார்த்து 'ஆய்வேடுகள்' எழுதும் நிலை இருந்தது.

துணைவேந்தர் மு.வ. அவர்கள், பல்கலைக் கழக ஆசிரியர்களேயன்றிக் கல்லூரி ஆசிரியர்களும், இரண்டு பேர் கொண்ட மேற்பார்வையாளர்களின் கீழ் ஆய்வு செய்யலாம் என, விதிகளைத் தளர்த்தினார். இதனால் ஆய்வு செய்யும் ஆர்வமுடையார் பலருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழிலும் எழுதும் நிலை பரவலாகிவிட்டதால், எல்லோரும் ஆய்வு நெறி முறைகளை அறிய, விடு முறைக் காலத்தில் இருமுறை 'ஆய்வுநெறிமுறைக்' கருத்தரங்குகளை நடத்தினார். பலர் பங்கு கொண்ட அதில், என் பணி மிகுதியாயிற்று. பொருளியல் துறைப் பேராசிரியர் எம்.எஸ். இலக்குமணன் ஆங்கிலத்தில் இது பற்றி வந்துள்ள நல்ல பல நூல்களைத் தேடித் தந்தார். அவற்றையும் ஒரு மாணவனாக நன்கு படித்து, பிறர்க்கும் எடுத்துச் சொன்ன பழக்கத்தால் 'ஆய்வியல் அறிமுகம்' என்ற நூலை எழுதினேன். இத்துறையில் அதுவே தமிழில் வந்த முதல் நூலாதலால், பல துறையினரும் அதனை விரும்பி வரவேற்றுக் கற்றனர். பின்னர் இத்துறையில் பல நூல்களைச் சிறந்த முறையில் பலரும் எழுதினர்.

★ இணைப் பேராசிரியர்

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகள் விரிவுரையாளராக உருண்டோடின. இடையே ஒப்பிலக்கிய அறிமுகம், ஆய்வியல் அறிமுகம் போலும் இரண்டொரு நூல்களும் எழுதினேன்.

ஒரு நாள் மாலை 4 மணிக்கு மேல் நானும் என் உடனாசிரியர் இசரயேலும் மட்டும் துறையில் இருந்தோம். துணைவேந்தர் அலுவலக ஏவலன் ஒருவன் ஓடிவந்து, என்னுடைய தகுதிக் குறிப்பை துணைவேந்தர் வாங்கிவரச் சொன்னதாகக் கூறினான். துறையில், எழுத்தர்கள் உட்பட எல்லோரும் போய்விட்டனர். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை; ஏன் கேட்கின்றார் என்றும் தெரியவில்லை.

விரைந்து எழுதி, கண்ணிற்பட்ட ஒருவரை அழைத்து, தட்டச்சு செய்து அனுப்பினேன்.

மறுநாள் ஆட்சிக்குழு கூடியுள்ளது. அதில் என் குறிப்பை வைத்து, எனக்கு இணைப் பேராசிரியர் பதவி கொடுப்பதென்று முடிவுசெய்துள்ளனர்.

விளம்பரம் செய்யாமல், நேர் காணல் வையாமல் நேரடியாக அவர் பதவி உயர்வு தந்தது, அவர் என் பணிகளைக் கவனித்து வந்ததன் விளைவாகும்.

ஏனெனில் அவர் எளிதாக இத்தகையவற்றைச் செய்ய இயைபவரல்லர்.

இதனைக் கேள்விப்பட்ட நான், அதற்கான ஆணை கைவரப் பெற்றதும், துணைவேந்தர் வீட்டிற்குச் சென்றேன். அவரும் சற்று முன்தான் அலுவலகம் விட்டு வந்திருந்தார். ஒரு கல்லூரி முதல்வர், மு.வ. அறைக்குள் சென்று, பேசிவிட்டுப் போனதும், நான் அறைக்குள் போவதற்குள் அவரே வெளியில் வந்தார்.

நான் சிறிதும் தயக்கமின்றி, 'நான் சிலமுறை பெரியவர்கள் வந்தபோது, தங்களைப் பார்க்க வந்துள்ளேன். ஆயினும் எனக்கு 'ரீடர்' பதவி பற்றி ஒருமுறைகூடக் கேட்கவில்லை. பிறகு எவ்வாறு எனக்கு இப் பதவியைத் தந்தீர்கள்' என்று கேட்டேன்.

'ஆமாம், நீங்கள் கேட்கவில்லை. உங்கள் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டிருந்தீர்கள். அதனால் இதனைச் செய்ய எண்ணினேன். இதுபோல எதனையும் எதிர்பாராது பணிகளில் ஈடுபடுவது நல்ல பழக்கம். பதவிகள் தாமே வரும்', என்று கூறியவர், "உட்கார்ந்து கொண்டுதான் பேச வேண்டுமா? நடந்துகொண்டே பேசலாமா?" என்றார். நான் நடந்து கொண்டு பேச இசைந்தேன். அந்தக் கட்டிடத்தை அடுத்திருந்த, மலர்ச்செடிகள் பல சூழ்ந்திருந்த, தோட்டத்தில் நடந்து கொண்டே உரையாடினோம். அன்று அவர் எனக்குக் கூறிய அறிவுரைகள் காலத்தால் அழியாதவை. நினைவிலுள்ள அதன் சாரம் இது. "நாம் நமக்கென்று ஒரு வழியை வகுத்துக் கொண்டு, அதில் முழு ஈடுபாட்டுடன் முயன்று உழைக்கின்றோம். அதற்குக் குறுக்கே எதுவரினும் – அது பதவியேயாயினும் வேண்டாம் என எண்ணி, நம் குறிக்கோளின்படி உழைப்பதுதான் நல்லது. பதவியோ, பிறிதொன்றோ வரினும் 'வேண்டாமே' என்பது போன்ற மனப்பக்குவம் வேண்டும். அதற்கு மாறாக அது வேண்டும், இது வேண்டும் என எண்ணத் தொடங்கிவிட்டால், நாம் நினைத்த காரியங்களில் வெற்றி பெற முடியாது. பச்சையப்பனில் விரிவுரையாளராக இருந்த போது நிரம்பப் படிக்க, எழுத முடிந்தது. எனக்குப் பேராசிரியர் பதவி தந்து போது 'வேண்டாமே' என்றுதான்

தயங்கினேன். கல்லூரி விடுதிக் காப்பாளர் எனத் தந்த போதும் எனக்கு அதில் ஈடுபாடில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பதவியை, எவ்வளவு மறுத்தும் ஏற்க வைத்துவிட்டனர். இந்தத் துணைவேந்தர் பதவிகூட அது போலத்தான். தன் பணியில் முழுவதும் ஈடுபடுபவன், எதனையும் முன்கூட்டி எதிர்பார்க்க மாட்டான். 'வேண்டாமே' என எண்ணும் மனப் பக்குவம் நல்லது" - இவ்வாறு நடந்துகொண்டே அவர் கூறியவை பல எனக்கு, அறிவுரைகள் ஆயின.

அதன் சாரம் 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' என்ற குறளையே எனக்கு நினைவூட்டியது. 'வேண்டாமை' என்றால் வெறுப்பதோ, துறப்பதோ அன்று. அம் மனப் பக்குவம் பணியில் முழுமையாய் ஈடுபடுத்தும். எதனையாவது 'வேண்டும்' என எண்ணிவிட்டால், மனம் அதற்கான வழிகளையே நாடும்.

ஒன்று விளங்கியது எனக்கு. நாம் வேண்டாம் என்ற மனப் பக்குவத்துடன், நாமும் நம் பணியுமாக இருந்தால், வர வேண்டியவை, வரக் கூடியவை தாமே வரும் என்பதுதான் அது.

### ★ அஞ்சல்வழித் தமிழ்த்துறைத் தலைவர்

இந்தியாவிலேயே தில்லிப் பல்கலைக் கழகத்திற்கு அடுத்த படியாக - அதாவது இரண்டாவதாக அஞ்சல்வழிக் கல்வியைத் தொடங்கியது மதுரை காமராசர் பல்கலைக் கழகம்தான். அது மிகுபுகழ் பெற்று வளர்ந்தது. அதற்குக் 'கோப்பு' அளவில் தீர்மானித்து வித்திட்டவர் தெ.பொ.மீ. அவர்கள். அதைச் செயற்படுத்தித் தொடங்கியவர் மு.வ. அவர்கள். அதற்கு ஒரு தமிழ்த்துறையை உருவாக்கியவர் சை.வே. சிட்டிபாபு அவர்கள்.

அதற்குப் பேராசிரியர் பதவிக்கு விளம்பரம் வந்தது. என்னுடன் பணிபுரிந்த சிலர் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்; வெளியிலிருந்தும் பலர் விண்ணப்பித்திருந்தனர். எனக்கு அதில் ஈடுபாடு ஏற்படவில்லை. தலைமைத் துறையில் (Main Department) இணைப் பேராசிரியராக இருப்பதே போதுமெனப்பட்டது. அதனால் நான் விண்ணப்பிக்க விரும்பவில்லை.

ஒருநாள் விண்ணப்பித்தவர் பட்டியலைப் பார்த்த சிட்டிபாபு அவர்கள் என்னைக் குறிப்பிட்டு, 'அவர் ஏன் விண்ணப்பம் அனுப்பவில்லை' என்று கேட்டுவிட்டு, உடனே விண்ணப்பம் அனுப்பும்படி சொல்லியனுப்பினார். நான்

தயங்கியபடி இருந்தேன். என் துறையின் ஏவலன், அருணாசலம், என்னை அணுகிச் சிரித்தபடி, 'எல்லோரும் இதற்கு அலை அலையென்று அலைகிறார்கள். நீங்கள் சொல்லியனுப்பிய பிறகும் சும்மா இருக்கிறீர்களே' என்றான்.

பிறகு நானும் விண்ணப்பிக்க, எனக்கே அப் பணி வழங்கப்பட்டது. பரிந்துரை எதுவுமில்லை. நேர் காணலில் ஒரு கேள்வி கேட்டதிலிருந்து ஒன்று விளங்கியது.

எனது 'சங்க இலக்கிய ஒப்பீடு' என்ற நூலுக்கு, ஆங்கில நாளிதழில் மதிப்புரை இரு வாரங்களுக்கு முன் வந்திருந்தது. அன்றைய Hindu – ஆங்கில நாளிதழ் ஆசிரியர்கள் தமிழ் நூல்களுக்கும் ஆங்கிலத்திற்கான அளவு சிறந்த இடம் தந்து மதிப்புரைகளை வெளியிட்டார்கள். எனது இரண்டு நூல்களுக்கு, தலைப்பிலேயே மூன்று நான்கு கலம் அளவு பெரிய தலைப்புத்தந்து மதிப்புரை வந்தன. அதில் இது ஒன்று; மற்றது யான் எழுதிய புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.

The Challenge of Comparative Literature என்ற தலைப்பில் வந்த மதிப்புரையைச் சிட்டிபாபு படித்திருந்தார் என்பது, அவர் நேர் காணலில், "Hinduவில் உங்களுக்கு யாரும் வேண்டியவர்கள் இருக்கிறார்களா!" என்று கேட்டதன் மூலம் விளங்கியது.

எனக்கு அஞ்சல்வழித் தமிழ்த்துறைத் தலைவர் பதவி, தானே வந்து கிடைத்து, வழங்கப்பட்டமைக்கு அம் மதிப்புரையும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

இல்லையென்றால் துணைவேந்தர் அவ்வாறு ஒரு வினாவை எழுப்பியிருக்கமாட்டாரல்லவா?

என் எழுத்தே எனக்குப் பரிந்துரை ஆனது போலும்.

### ★ அறிவும் திருவும் – இலட்சுமி சிங்காரம்

எங்கள் நெற்குப்பையில், 'கிராண்பாஸ்' காசிச் செட்டியார் செல்வாக்கு மிக்கவர். சொந்த ஊரில் ஒரு வீடின்றித் தவித்த எனக்கு, அவர் ஊரின் நடுவே வீடொன்றமைய, பேரம் பேசி, கட்டுப்பாடான ஒரு விலைக்கு வாங்கித் தந்தார். அவர் செய்த அப்பேருதவி இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் மறக்கவொண்ணாததாகும்.

நான் ஏதோ படித்தவன் என்பதற்காக, என்னிடம் மதிப்பு வைத்து, கைம்மாறு கருதாது, ஒரே ஒரு முறை கேட்டுக் கொண்டதற்கே, விடாது முயன்று வாங்கித் தந்தார்.

அவர் மகன் சிங்காரம் மதுரையில் கிழக்காவணி மூல வீதியில், மிகப் பெரிய தாள் வணிகராகத் திகழ்ந்தார் (இலட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்). தாள் வணிகர் சங்கத் தலைவராக விளங்கிய போது, அச்சங்கவிழா ஒன்று மிக விரிவாக நடைபெற்றது. அதில் பட்டிமன்றம் ஒன்று; அந் நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டேன். அன்று இரவு அவர் வீட்டில் விருந்து.

ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டு வந்தவர், என் அருகே வந்ததும் நின்றார்.

பெரிய கருப்பன்! நினைவிருக்கிறதா என்றார்.

என்ன? – என்றேன்.

நாமிருவரும் ரேடியோ பொட்டல் திண்ணைப் பள்ளிக்கூடத்தில், நம் ஊரில் ஒன்றாகப் படித்தோமே என்றார்.

ஆமாம் என்றேன்.

அப்போது வாத்தியார் கரும்பலகையில் கணக்கை எழுதுவார். நான் உங்கள் சிலேட்டைப் பார்த்துப் பார்த்துக் கணக்கிற்கு விடையெழுதுவேனே, நினைவில்லையா? என்று கூறிச் சிரித்தார்.

உண்மைதான்; நான் சரியாகக் கணக்குப் போட்டதால் ஆசிரியன் ஆனேன்; நீங்கள் பார்த்து எழுதியதால் முதலாளி ஆனீர்கள் – என்றேன்.

அப்படிச் சொல்லாதீர்கள் பெரிய கருப்பன்; இன்று நீங்கள் பல்கலைக் கழகம் போயுள்ள, பெரிய நிலைதான் பெரிது; நான் முதலாளியானது பெரிதல்ல என்றார்.

என் நெஞ்சம் நெகிழ்ந்தது.

அவர்தம் மகளைப் படிக்கவைப்பது முதல் அனைத்திலும் என்னுடன் தொடர்பு கொள்வார். எனக்கு நல்ல எழுதுகோல், எழுதப் பயன்படுத்தும் நீள அகலமான அட்டை என வழங்குவார். அவர் தந்த அட்டைகள் முழுவதும் முனை மழுங்கித் தேய்ந்து போனாலும், இன்றும் அவற்றை அடியில் வைத்தே

எழுதுகின்றேன். அவர் இளம் அகவையில் காலமாகிவிட்டார்; அவர் செய்த உதவிகளும் எழுத்தட்டைகளும் இன்னமும் என் நினைவிலும் கண் முன்னரும் உள்ளன.

### ⋆ திரு.வி.க. விருது

எனக்கு திரு.வி.க. மீது புலவருக்குப் படிக்கத் தொடங்கும் போதே பெரும் பற்று ஏற்பட்டது. அவரது 'முருகன் அல்லது அழகு' நூல் என்னை ஆட்கொண்டது. அவர் நூல்களில் 'உள்ளொளி' என்ற நூலும் நான் மிகவும் விரும்பிப் படித்த நூலாகும்.

அவருக்கும் தந்தை பெரியாருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை நன்கு அறிவேன்.

ஆயினும் தந்தை பெரியார் நடத்திய இரண்டு மூன்று மாநாடுகளில், திரு.வி.க.வையும் தவறாமல் அழைத்துப் பேசவைத்த நாகரிகத்தைக் கண்டு மகிழ்ந்தவன் நான்.

புலவர் பெருந்தகை நா.மு.மாணிக்கம் பெரியாரின் அன்பிற்குரியவர்; குடியரசு இதழில் பலகாலம் துணையாசிரியராக ஈரோட்டில் பணியாற்றியவர். அவரது திருமணம், நகரத்தார் மரபிலேயே ஒரு பெரும் புரட்சியாகத் தந்தை பெரியார் தலைமையில் உலகம்பட்டி என்ற ஊரில் ந டந்தது. வாழ்த்துரை வழங்க திரு.வி.க. அழைக்கப்பட்டிருந்தார்.

நான் அப்பொழுது மேலைச்சிவபுரி, சன்மார்க்க சபையில் படித்துக்கொண்டிருந்ததால், திருமணத்தைக் காணச் சென்றிருந்தேன்.

காலையில் பெரியார் சமயத்தையும் சடங்குகளையும் புயற்காற்றுப்போல் அடிஅடியென்று அடித்துப் பேசினார். எனக்கு மாலையில் திரு.வி.க. எவ்வாறு பேசுவார் என்று கேட்க ஆர்வம். அதனால் முன் வரிசையில் அமர்ந்திருந்தேன். திரு.வி.க. பேச்சின் சாரம் மட்டும் நினைவிலுளது.

"சமயம் என்பது ஆலமரம். காலையில் சண்டமாருதம் சுழன்று சுழன்று அடித்தது. ஆனாலும் அதிலுள்ள வேண்டாத சருகு, குச்சிகள், கழிவுகள் போகுமே தவிர, ஆலமரம் ஒருபொழுதும் வீழாது. தேவையற்றவை ஒழிவது நல்லது. அதற்காகச் சமயம் என்ற ஆலமரம் விழுந்துவிடுமென்று யாரும் நினைக்க வேண்டாம்".

இவ்வாறு திரு.வி.க. மிக நாகரிகமாக, தந்தை பெரியாருக்கு மாற்றுக் கருத்தை எடுத்துரைத்தார். எனக்கு என்னவோ பெரியாருக்கும் அதுதான் உள்ளெண்ணமென்றும் இருவரின் அணுகு முறைகள்தான் வேறுபட்டன என்றும் தோற்றியது.

இவ்வாறு திரு.வி.க. மீது எனக்கு ஏற்பட்டிருந்த ஈடுபாட்டாற்போலும் திரு.வி.க. விருதே எனக்குக் கிடைத்தது.

அதற்கான மடல் வந்துதான் அறிந்தேனே தவிர, இவ்வாறொரு விருது கிடைக்குமென எனக்குத் தெரியாது.

மாண்பமை கலைஞர் தர, எனதன்புக்குரிய மேதகு பேராசிரியர் க. அன்பழகர் தலைமை தாங்கியது யான் பெற்ற பேறு.

ஏற்புரையில், "எனக்கு இவ் விருது தந்ததற்கு நன்றி! நான் சங்க இலக்கியம் படித்தவன். எனவே ஒரு வேண்டுகோளை வைத்து என் ஏற்புரையை முடிக்க எண்ணுகிறேன். தொழிற்கல்வி (Professional Courses) என எண்ணப்படுகிற மருத்துவம், பொறியியல் போன்றவற்றைத் தமிழிலும் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். உயர்கல்வியைத் தமிழில் தந்தால்தான் நம் தாய்மொழியின் தரம் உயரும்" என்று கூறினேன்.

மாண்பமை கலைஞர், அன்றைய முதல்வர் என்ற முறையில், "தமிழண்ணல் கூறியதை வேண்டுகோளாக அல்ல; ஆணையாக ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார்.

மறுநாட் காலை இதழ்கள் பலவற்றில் இது சிறப்புச் செய்தியாக வெளிவந்தது. காலை ஆறுமணி விமானத்தில் புதுதில்லிக்குச் சென்று கொண்டிருந்த நான், பல தமிழ் ஆங்கில இதழ்களில் 'தமிழறிஞர் வேண்டுகோளை முதல்வர் ஏற்றது பற்றி' விரிவாகச் செய்தி வெளியிட்டிருந்ததைப் பார்த்தேன்.

நான் தில்லி விட்டுத் திரும்பிவந்தபோது, அன்றைய தினமணி ஆசிரியர் இராம. திரு. சம்பந்தம் ஏறத்தாழ பதின்மூன்று இதழ்களில் வந்திருந்த இச் செய்தியைத் தனியே எடுத்து வைத்திருந்து என்னிடம் தந்தார். ஆங்கில நாளேட்டில்; ஒரு தமிழறிஞர் சொன்னதற்காக, முதல்வர் அதை ஏற்றது முறையன்று; உயர்கல்வியைத் தமிழில் கொண்டு வருவது தவறு என, ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதியில் பலர் மறுப்பு எழுதியிருந்தனர். இவை பல தனிநூலாக வரவுள்ளன.

## ✯ சங்கத்தமிழ்

கலைஞரின் சங்கத் தமிழ் வெளியீடு மதுரையில் நடந்த போது அதை நடத்திய பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராசனிடம் அரசியல் வாதிகள் பேசிப் பயனில்லை, சங்க இலக்கியத்தில் பட்டம் பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களையும் பேச அழையுங்கள் என்று கலைஞர் கூறியுள்ளார்.

பழனிவேல்ராசன் வேலையிலிருந்த என்னை மிக வற்புறுத்திப் பேச அழைத்தார்.

பிறசில பேராசிரியர்கள் பெயர் போட்டு வரவில்லை; வந்தவர்கள் பேசவில்லை; அப்படியப்படி ஒதுங்கிப் போய்விட்டார்கள். அவர்கள்தான், கலைஞர் பதவிக்கு வந்தபிறகு ஒட்டிக்கொண்டார்கள்.

என் பேச்சு நன்கு அமைந்தது. இதனால் ஆட்சிக்குழுவில், 'இவர் எப்படி எதிர்க்கட்சித் தலைவர் விழாவில் கலந்து கொள்ளப் போகலாம்' என்று பேச்சு எழுந்து, என் மீதிருந்த மதிப்புக் காரணமாக, என்னைக் கூப்பிட்டுக் கேட்கவோ, எழுத்து மூலம் கண்டனம் தெரிவிக்கவோ இல்லை.

பதிவாளர் சின்னதுரை எனக்கு மிக வேண்டியவர். அவரிடம் ஒரு வேலையாய்ப் போனபோது, "நீங்கள் ஏன் எதிர்க்கட்சியினர் கூட்டத்திற்குப் போனீர்கள், சின்டிகேட்டில் பேச்சுவந்தது" என அவர் நிறுத்தியபின் 'என்ன என்ன?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை. வந்தது என்றேன். உங்களை யாரும் குறைவாக எண்ண இடமில்லையே'; அதுசரி நான்தான் கேட்கிறேன், 'ஏன் சென்றீர்கள்?' என்றார்.

"பழனிவேல்ராசன் வற்புறுத்தினார். நாளைக்கு அவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன நினைப்பார்கள். நான் முழுவதும் இலக்கியமாகப் பேசிவிட்டு வந்தேன்" என்றேன். அதனுடன் அது முடிந்தது.

## ✯ தொல்காப்பியப் பூங்கா

கலைஞர் சிலபோது என்னைப் பாசத்தோடு நினைப்பார்; ஆட்சியில் இருக்கும் போது நினைப்பதும் உண்டு.

ஒருநாள் தா.கிருஷ்ணன் தொலைபேசியில் என்னைக் கூப்பிட்டார். அவர் எங்கள் சிவகங்கைத் தொகுதிச் சார்புடையவர். இளமை முதல் அவர், எஸ்.எஸ். தென்னரசு, தங்கபாண்டியன் போல்வார் அறிமுகம் உண்டு.

பின்னர் டி.ஆர். பாலு; துரைமுருகன் இருவரும் கூப்பிட்டார்கள். எல்லோரும் தலைவர் உங்களுடன் பேசவிரும்புகிறார் என்றார்கள்.

தா.கிருஷ்ணன் மதுரையில் என் வீட்டுக்கு வந்து, தொலைபேசியில் கலைஞருடன் நான் தொடர்பு கொள்ள வைத்தார்.

தலைவர் கலைஞர் 'தொல்காப்பியப் பூங்கா'வை வெளியிட அழைத்தார்.

சென்னையில் வெளியிட்டேன்; மதுரை விழாவில் தலைமை தாங்கினேன்.

கலைஞர் அழைத்தபோது, 'எனது நூலில் முதலாவதாக உங்களை மேற்கோள் காட்டியுள்ளேன்' என்று கூறினார்கள். எனக்குத் தொல்காப்பியப் புலமை உண்டு என அவர்கள் உள்ளத்தில் தோன்றியது மகிழ்ச்சிக்குரியது. அதுபோலவே எனக்குத் திரு.வி.க. விருது தந்த போதும், குமரிமுனையில் வானோங்கிய வள்ளுவர் சிலையைத் திறந்த விழாவில் முதல்நாள் அரங்கிற்கு என்னை தலைவராக இடம் பெறச் செய்த போதும், தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள் பீடத் துணைத் தலைவராக ஆக்கியபோதும் நான் அவற்றைக் கேட்டுப் பெறவில்லை; நான் கேளாமலே, பிறர் சொல்லிக் கேட்டு நான் வியப்படையும்படி, அவரே வழங்கியவை அவை. இவை அனைத்திற்கும் நான் தகுதியுடையவன் என்பதன்று கருத்து; தமிழ்த் தாய் தந்த தவப்பேறுகள் அவை!

★ காவிரியில் மூழ்கிக் கரை ஏறியமை

1947 - 48இல் திருவையாறு அரசர் கல்லூரியில், நானும் வே. அண்ணாமலையும் புலவர் இறுதியாண்டில் படித்துக்கொண்டிருந்தோம்.

சிலகாலம் அக் கல்லூரி விடுதியிலேயே தங்கியதுண்டு. தஞ்சையிலிருந்த மராட்டிய அரச குடும்பத்தார் அங்கு வந்து தங்கக் கட்டியது அது. காவிரி நீர் சிறிது உள்ளே வந்து போகுமாறு இரண்டு புறமும் மண்டபத்தை நீட்டிக்கட்டி, இடையே படிக்கட்டுகள் இருக்கும். பிற படித்துறைகள் போலாது, மறைவாகக் குளிக்கலாம். படிகள் வழியே கீழே இறங்கிச் சிறிது - பதினைந்து இருபதுபடிகள் - கடந்துவிட்டால், காவிரியாறு இரண்டாள் மட்டத்திற்குமேல் வெள்ளமாய் விரைந்து ஓடும்.

நீச்சல் தெரிந்த மாணவர்கள் மண்டபத்தில் ஏறிக் குதித்து விளையாடுவார்கள். எனக்கு நீச்சல் தெரியாது.

படிக்கட்டில் அமர்ந்து குளித்துவிட்டு வந்துவிடுவேன். ஒருநாட் காலையில் நான் மட்டும் தனியே சென்று படிக்கட்டில் அமர்ந்துகுளித்துக் கொண்டிருந்தேன்.

எனக்குப் பின்னே வந்த ஒரு மாணவன், நீச்சுத் தெரியும் என நினைத்து, என் முதுகில் அடித்து, படிகளுக்கு அப்பால் போய், காவிரி வெள்ளத்தில் மூழ்க வைத்துவிட்டான்.

மூச்சுத்திணற, நீச்சுத் தெரியாத நான், கையைக் காலை உதறி, மேலே எழ உயிருக்குப் போராடுகிறேன். காவிரி வெள்ளத்தின் ஈர்ப்புப் பெரிது. அப்படியே விட்டிருந்தால், என் உடல் வேறு எங்காவது கரையொதிங்கியிருக்கும் அல்லது காவிரிவெள்ளத்துடன் பயணம் சென்றிருக்கும்.

நீர்வழிப் படூஉம் புணைபோல், என் ஆருயிரும் காவிரி நீர்வழிச் சென்றிருக்கும்.

அங்கு எங்கள் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியவர் புருசோத்தம நாயுடு ஆவார். அவர் உறவினன் சீனிவாசன் என்பவனும் அங்கு இருந்ததால், அந்நேரம் குளிக்க வந்தவன், நீரினுள் நான் தத்தளிப்பதைப் பார்த்து, காவிரியில் குதித்து, நீந்தி என்னை நோக்கி வந்துள்ளான்.

நான் தண்ணீரில் போராடிக் கொண்டே, அடுத்த படித்துறையும் தாண்டி, அதற்கு அடுத்த பொதுமக்கள் குளிக்கும் படித்துறைக்கு இழுத்துச் செல்லப்பட்டுவிட்டேன்.

என் பின்னே நீந்தி வந்த சீனிவாசன் என் முதுகிலே கையால் இரண்டு தள்ளுத் தள்ளிவிடவே, என் கால்கள் மண்தரையைத் தொட்டன. உடனே நன்றாக ஊன்றி நடந்து கரையேறிவிட்டேன். திரும்பிப் பார்த்தால், அவன் நீந்தியபடி திரும்பிப் போய்விட்டான்.

அதுவோ 'அக்கிரகாரத்தெரு'; முழுவதும் நனைந்தபடி நடந்து, விடுதிக்குச் சென்று, உடைமாற்றிக் கொண்டேன்.

எல்லாமே பதினைந்து மணித்துளிகளுக்குள் நடந்தவைதான். யாருக்கும் நடந்தது எதுவும் தெரியாது. சீனிவாசனையும் அங்கு பார்த்ததுதான். இன்றுவரை நன்றி சொலக் கூடக் கண்டிலேன்.

★ இடுப்பெலும்பு முறிவும்
எழுந்து நடந்ததும்

எனக்கு அறுபது அகவையை ஒட்டி, ஒருநாள் மதியம் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த யான், பெரியார் பேருந்து நிலையம் அருகே, கட்டபொம்மன் சிலைப்பக்கம் சாலையைக் கடக்கும் போது, மேம்பாலத்திலிருந்து, இருவராக வந்த மிதிவண்டிப் பையன்கள், என்மேலே மோதி தள்ளிவிட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

என் உடம்பில் வெளியே எவ்வித இரத்தக் காயமும் இல்லை. இடதுபக்கம் இடுப்பு எலும்பு உடைந்து, காலைத் தூக்கவே முடியவில்லை.

நல்ல மதியம் நேரமாதலால் வேறு வாகனம் எதுவும் வரவில்லை.

அவ்வழியாக வந்த பேராசிரியர் ஒருவர் என்னை அறிந்தவர், என் நிலைமை அறிந்து ஒரு 'சோடா' வாங்கிக்கொடுத்து, என்னை ஒரு 'சைக்கிள் ரிக்ஷாவில்' ஏற்றி, விளக்குத்தூண் மதுரை வங்கியிலிருந்த என் மகனிடம் சேர்த்துவிட்டுப் போனார்.

அதற்குப் பிறகு அவரை நான் பார்க்கவே இல்லை.

எங்கள் குடும்ப மருத்துவர் விவேகானந்தம் கூறியபடி, செந்தில் மருத்துவமனையில் சேர்ந்து, தேவதாசு என்னும் மருத்துவ அறிஞரால் காப்பாற்றப்பட்டு, நடக்கும் அளவு தேறினேன்.

நான்கு முறை செத்துப் பிழைத்தது போன்ற நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

★ முழங்கால் வலியாலும் முடங்காது எழுந்தமை

முதன் முதலில் இரண்டு முழங்கால்களும் வீங்கி, நடக்க இயலா நோய்நொடி ஒன்று வந்தது.

ஆங்கில மருத்துவம் பயன் தரவில்லை. நாகர்கோயில் பக்கம், நானும்என் மனைவி சிந்தாமணியும் மட்டும் சென்று, மூலிகை மருத்துவம் பார்த்ததில், உடல் எடையை மிகக் குறைத்துவிட்டது.

மீண்டும் மதுரை வந்து அலேபதியில் எம்.எஸ். படித்த மருத்துவ அறிஞர், அனந்த நாராயணனிடம் பல மாதங்கள் தொடர்ந்து, 'ஹோமியோபதி' மருத்துவம் பார்த்ததில்தான் படிப்படியாய்க் குணமானது.

ஏறத்தாழ மூன்று திங்கள் பல்கலைக் கழகம் போகாததால், யான் இனி அங்கு வர வாய்ப்பில்லை என முடிவு செய்த உடனாசிரியர் சிலர், என் பொறுப்புகள் பலவற்றைத் தங்கள் பெயருக்கு மாற்றுமாறு எழுதிக் கொடுத்துள்ளனர்.

பல்கலைக் கழக நல்கைக் குழுவில், யான் அரிதின் முயன்று பெற்றிருந்த 'சிறப்பு நிதியுதவித் திட்டப் பொறுப்பையும்' (D.S.A. Programme), தங்களுக்கு மாற்றிவிடும்படி எழுதித் தந்திருந்தனர்.

இவற்றை யான் அறியேன். ஒருநாள் மகிழுந்து மூலம் சென்று, பல்கலைக்கழகத்தில் ஒப்பம் மட்டும் இட்டுவரச் சென்றேன். என் கால்வலி முக்காற்பங்கிற்குமேல் நலமாகிய நேரம் அது.

அப்போது துணைவேந்தராக இருந்தவர் கிருஷ்ணசாமி என்பவர்.

துணைவேந்தரின் தனிச் செயலர் சத்திய மூர்த்தி என்பவர். நல்ல உள்ளம் படைத்தவர்.

அவர் என்னிடம், "உங்கள் பொறுப்புக்கள் பலவும், நாளைக்கு நடக்க இருக்கும் ஆட்சிக் குழுவில் வைத்து மற்றவர்களுக்கு மாற்றப்பட உள்ளன. கோப்புகள் ஆயத்தமாகி விட்டன. உங்கள் உடன் ஆசிரியர்களே, நீங்கள் திரும்பத் துறைக்கு வரமாட்டீர்கள் என முடிவு செய்து விட்டனர். அதனால் இந்த ஏற்பாடுகள்; ஒரு வேளை நீங்கள் வரினும், முக்கிய பொறுப்பனைத்தும் இன்றிப்பேருக்குத் தலைவரென இருக்கலாம். நாளையே கூட்டம் நடக்க இருப்பதால், இவற்றை மாற்றுவது இயலாதென்று தோற்றுகிறது" என்றார்.

மிகப் பெரிய மலைபோல் வரும் துன்பங்கள் எனக்கு வருவதுண்டு; உச்சத்திற்குப் போய், அவை உடனே பனிபோல் விலகுவதும் உண்டு.

இறைமை நம்மிடம் கண்ணாமூச்சி விளையாடுகிறது என நான் நினைப்பேன். அன்றைக்கு மட்டும் நான் அங்கு போகாது இருந்தால், சத்தியமூர்த்தி சொன்னவை நடந்திருக்கும்.

கிருஷ்ணசாமி பதவி முடியும் நேரம். அவர் நீட்டிப்புக்கு – மறுமுறையும் வர முயலும் சமயம். துணைவேந்தர் தேர்வுக் குழுவில் லெ.நாராயணன் செட்டியாரும் இருந்தார். அதுபற்றிக் கூட யான் முன்கூட்டி அறியேன்.

லெ. நா. அவர்கள் என்னிடம் பேரன்பு வைத்திருந்தார்கள். மேலும் ஓர் இடர் வந்தபோதும் உற்றுழி உதவியவர்.

அவருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்தன எல்லாம் கூறினேன். அவர் உடனே, அன்று இரவே கிருஷ்ணசாமியிடம் ‘இவ்வாறு செய்தல் தகாது; தமிழண்ணல் நலமுற்று விட்டார்’ என அறிவுறுத்தியுள்ளார்.

மறுநாள் ஆட்சிக்குழுவில், என்னைப் பற்றிய கோப்பு வைக்கப்படவில்லை.

சிலநாட்களில் ‘வேன்’ எனப்படும் உந்து மூலம் நானும் தொடர்ந்து பல்கலைக் கழகம் செல்லத் தொடங்கினேன்.

எனக்கு எதிராக முயன்ற, உடன் ஆசிரியர்களின் மகிழ்ச்சிப் பெருக்கைக் கண்டு நான் மனத்துள் சிரித்துக் கொண்டேன்.

நாள் ஆக ஆக, எதுவும் நடக்கவில்லை என அறிந்தபின், அவர்கள் துணைவேந்தரிடமே போய்க்கேட்டபோது, “நான் என் வேலையையே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய சூழலில், உங்களுக்கு உதவ முடியாம போயிற்று” என்று கூறியனுப்பியதாகக் கேள்விப்பட்டேன்.

ஆனாலும் அன்று முதல் இன்று வரை, யான் அவர்களிடம், ‘இப்படிச் செய்யலாமா’ என்று ஒரு வார்த்தை கேட்டதில்லை.

பதிவாளர் சின்னதுரை கூடப் பிறகு ஒருநாள், என்னிடம் என்ன துணிச்சல் பாருங்கள் என்று கூறிச் சிரித்தார்.

மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வரும் இத்துணைவேந்தரும் வேறு சில வகையிலும் என்னைப் புறக்கணித்ததுண்டு. அவர்களுக்கு நான் எத்தீங்கும் செய்தவனல்லன். தமிழண்ணல் என்ற பெயரும் எனது தமிழ்ப் பற்றும் அவர்களிடம் என் மீது உள்ளார்ந்த வெறுப்பை விளைவித்தனவோ அல்லது வேறு காரணமோ நான் அறியேன். சிலவற்றைத் தேவையில்லை என்பதால், அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்பமில்லை.

**★ காசியில் கால்இடறி வீழ்ந்து, மதுரையில் எழுந்து நடந்தமை**

2008இல் காசிக்குச் சென்றேன். அவ்வமயம் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் தலைவராக, எங்கள் நெற்குப்பையைச் சார்ந்த பழ. அடைக்கப்பச்செட்டியார் தலைவராக இருந்தார்.

எனக்கு வயது எண்பதை ஒட்டி நடந்தது. காசியில் மூலவரை நாமே தொட்டு வழிபடலாம். கங்கையில் ஒரு தொன்னையளவு நீரை முகந்து கொண்டு, கடையில் சிறிதளவு மலர்களை வாங்கிக்கொண்டு, வரிசையில் சென்று நாமே 'சிவபெருமானைத்' தொட்டு, நீராட்டி அபிடேகம் செய்து, மலர்தூவி வழிபட்டுவிட்டுச் செல்லலாம். இம் முறையே இந்தியா முழுவதும் இருந்துளது. திருநாவுக்கரசர் 'போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின்புகுவேன்' என்று பாடியுள்ளார். இதனால் எனக்கு இதில் ஓர் ஈடுபாடு.

தமிழகத் திருக்கோயில்கள் அனைத்திலும் இம் முறையே பின்பற்றப்படவேண்டும்.

அங்கு சென்று வழிபாடெல்லாம் முடிந்தபின், இரவு உணவுண்ணப் போகும்போது, சத்திரத்தில் படியில் கால்தவறி விழுந்ததில், வலது இடுப்பிலும், மயிரளவு எலும்பு விரிவு ஏற்பட்டுவிட்டது.

மறுநாட்காலை என் மகள் கண்ணம்மையுடன், விமானம் மூலம் மதுரை வந்துவிட்டேன்.

### ✫ பெற்றமகன் மூவர், உற்ற மகன் வரதராசன்

மதுரை எஸ்.பி. மருத்துவமனையில், பொதுநலப் பணிச்செல்வரும் என்பால் பெருமதிப்புள்ளவருமான பி.வரதராசன் சேர்த்து விட்டார். மருத்துவ அறிஞர் அன்புமிகு வி.ஆர். கணேசன் என்னை மீண்டும் நடக்கவைத்தார். என் பக்கத்தில் என் மகன்கள் யாரும் இல்லை; அக்குறையை நீக்கி வரதராசன் எனக்கு உற்ற துணையாக உள்ளார்.

### ✫ தமிழ் மந்திரம்

மலேயாப் பல்கலைக் கழகத்திற்குப் புறநிலை மதிப்பீட்டாளனாக, ஒரு மாத அளவு கோலாலம்பூர் சென்ற போது, என் மனைவியையும் அழைத்துச் சென்றேன்.

விடுமுறை நாட்களில் ஒருமுறை, தொடர்வண்டி மூலமாக இருவரும் சிங்கப்பூர் சென்றோம்.

திரும்பும்போது, டாக்டர் வைரவன் செட்டியார் குடும்பத்துடன் வந்து, இரவு 11 மணிக்குமேல், சிங்கப்பூர் நிலையத்தில் விட்டுச் சென்றனர். பயணச்சீட்டுடன் உள்ளே நுழைந்தால், எங்களுக்கு முன்னே சென்றவர்கள், பயணச்சீட்டுடன் பணத்தையும் எடுத்துக் காட்டினர்.

அது எனக்கு விளங்கவில்லை.

1965க்குப் பிறகு மலேசியாவும் சிங்கப்பூரும் தனித்தனி நாடுகளாகிவிட்டன. அதனால் சிங்கப்பூரிலிருந்து மலேசியா செல்பவர்கள், 200 டாலர் காட்டவேண்டுமாம்; சுங்கச் சோதனையும் உண்டு. இதை முன்பே யாரும் கூறாததால், என் மனைவியை அழைத்துச் சென்ற நான், அவளை மகிழ்விக்கும் நோக்குடன் சில சிங்கப்பூர்த் தங்கநகை வாங்கிவிட்டேன். என்னிடம் சில்லரையாக ஒரு நூறு அளவினதாக சிங்கப்பூர் டாலர் மட்டும் இருந்தது. முன்னே சென்றவர் போனதும், என்னிடம் இருநூறு டாலர் இல்லாததால் போகக் கூடாது, அனுமதி இல்லை என்று கூறித் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டனர். என்குப் பின்னே வந்தவர்கள் விரைந்து போகிறார்கள். இரயில் புறப்படும் நேரம் நெருங்குகிறது. நள்ளிரவு நேரம். வைரவன் செட்டியார் கார் போய்விட்டது. மறுநாட் காலையில் எங்களைக் கூட்டிப் போக வருபவர்கள் ஏமாற நேரும்.

சிங்கப்பூருக்குள் நள்ளிரவு நேரத்தில் திரும்பிப் போய், என்ன செய்வது?

ஒரே பரபரப்பு; வேர்க்கிறது.

என் மனைவி சிந்தாமணி, "என்னைக் கூட்டிக் கொண்டு வந்து உங்களுக்குத் தொந்தரவாகிவிட்டது", என்று தன்னை நொந்து கொண்டாள்.

அவள் எதுவுமே கேட்கவில்லை. தவற்றுக்கு நான்தான் காரணம்.

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் 'தொடுக்கும் கடவுட் பழம்பாடல்' என்ற பாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். அதை அடிக்கடி மனத்துள் படிப்பேன்.

நான் கடவுள் இல்லை என்ற சுயமரியாதை இயக்கச் சார்பில் வளர்ந்தவன். அதே சமயம் திரு.வி.க. எழுதிய 'முருகன் அல்லது அழகு' என்பதே, நான் புலவர்க்காகப் படித்த போது, முதன் முதல் தொட்டுப் படித்த புத்தகம்.

மு.வ. அவர்கள், வ.சுப.மா அவர்கள் நான் மற்றும் என் போன்றவர்கள் அடிக்கடி கோயிலுக்குச் செல்பவர்கள் அல்லர். உண்மையில் உள்ளத்தளவில் இறைமை உணர்வுடையவர்கள்.

இன்றும் நான் ஆங்கில வழிப் பள்ளிகளின் கல்வி வாணிகம் போலவே, திருக்கோயில்கள் புண்ணிய வாணிகம் நடத்துகின்றன என நினைப்பவன். இன்றைய கோயில் நடைமுறைகளை அறவே முழுவதும் வெறுப்பவன். 'திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தம்' கொண்டு வரவேண்டும் என முயல்பவன்.

பகுத்தறிவு நாத்திகம் ஆகாது. பகுத்தறிவில்லாத ஆத்திகம் பக்தி ஆகாது. தமிழ்ப் பத்திமைப் பாடல்களை உள்ளம் உருக அவரவர் பாட வேண்டும்.

இவ் வகையில் இடர் வந்துற்ற போதெல்லாம் இந்தத் 'தொடுக்கும் கடவுட் பழம்பாடல்' – என்ற பாடலை, உள்ளார்ந்த உணர்வுடன் மனத்தினுள் படிப்பதுண்டு. மந்திரம் என்பது மொழியில் இல்லை; உணர்ந்து நினைப்பதால், படிப்பதால் அது மந்திரமாகிறது. வடமொழியில்தான் மந்திரம் உளது என்பது மடமை. பொருள் புரியாமல், தரகராம் அருச்சகர் வைத்துப் பிறமொழிகளில் அருச்சிப்பது அருச்சனை அன்று. அவை இம் மானுடர் சேர்க்கும் பழிச்சுமை.

சிங்கப்பூர்த் தொடர்வண்டி நிலையத்தில், அக்கணப் போதில் இப் பாடலை மனத்தினுட் பாடி முடித்ததும் ஓர் ஒளி வீச்சுப் போல் எண்ணம் தோன்ற, என் கடவுச்சீட்டை எடுத்துப்போய்க் காட்டி, "நான் மலேயா பல்கலைக் கழகப் பணிக்காக அவர்கள் அழைத்து வந்துள்ளேன். எல்லாச் செலவும் அவர்களுடையதாதலால், எனக்குப் பணம் தேவை இல்லை" என்றேன். என் கடவுச்சீட்டில் வேலைக்கான முத்திரை (Work permit) அச்சுக்குத்தியிருந்ததை காட்டினேன். அவ்வளவுதான் அவர்கள் ஓடுஓடு என்று கூற, சுங்க அதிகாரிகளும் நேரம் கருதி வழிவிட, என் மனைவியும் நானும் இரயில் ஏற, அது புறப்படமிகச் சரியாக இருந்தது.

'அப்பாடா, தப்பித்தோம், பிழைத்தோம்' என்று இருக்கைகளில் அமர்ந்தோம்.

ஒருகணம் சுணங்கியிருந்தாலும் மிகப்பெரும் துன்பப்பட்டிருப்போம்.

அதுவும் நான் மட்டுமெனில் அது வேறு; என் மனைவியையும் அல்லவா மிகவும் துன்பப்பட வைத்திருப்பேன்.

தமிழ் முறையில் திருமணம் செய்து கொண்டதால் என் குடும்பம் தழைத்தது. தமிழ்ப் பாடலைப் படித்ததால் இடர் நீங்கியது.

தமிழை நம்புங்கள்; தழைத்து வாழ்வீர்கள்!

### ⋆ சோமலெ

'சோமலெ' என்னும் பெயருக்குரிய சோம.இலட்சுமணன் நெற்குப்பையில் பிறந்து தமிழுடன் ஆங்கிலத்திலும் எழுதும் ஆற்றல் பெற்று நாடுதழுவிய புகழ் பெற்றவர். அவர் என்பால் அன்புடையவர். உலக நாடுகள் பற்றியும் தமிழக மாவட்டங்கள் பற்றியும் அவர் எழுதிய நூல்கள் புள்ளி விவரம் நிறைந்தவை. சங்கங்கள், திருக்கோயில்கள் பலவற்றுக்கு அவர் உருவாக்கிய மலர்கள் நிலைத்த பயனுடையன. அவர்தம் மலர் உருவாக்கப் பணியில் என்னையும் ஈடுபடுத்துவார். என்னை முன்னேற்ற விழைந்தவர்.

நாட்டுப் புறப் பாடல் தொகுப்பு (தாலாட்டு) நாட்டுப் புறவழக்காற்றுச் சொல் தொகுப்பு போன்றவற்றை நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

☆ சோமலெ சோமசுந்தரம்

அவர் தம் ஒரே மைந்தன் சோமசுந்தரத்தை வேளாண்மைத் துறையில் நன்கு படிக்க வைத்து, மேற்படிப்புக்கு அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார். அவன் அங்கு நன்கு கற்று, வேலையும் பெற்று நல்ல பெயருடன் திரும்பி வரும் போது, அவனை வரவேற்று மகிழ இறை இடம் வைக்க வில்லை.

தம் தந்தையாரை இவ்வாறு இழக்க நேர்ந்த பேரவலத்தை, சோம சுந்தரத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனினும் எந்த நேரமும் தன் தந்தையை நினைப்பவன். அமெரிக்காவில் மிகுந்த புகழுடன் விளங்கும் அத் தம்பியின் சட்டைப் பையில் எந்த நேரமும், தந்தையார் படம் இருக்கும். எந்த நல்ல செயலையும் தன் தந்தையைக் கும்பிட்டே தொடங்குவான்.

உலகிலேயே இந்த அளவு தன் தந்தையை நினைவு கூரும் மைந்தனை, மிக அரிதாகவே காண முடியும். இன்று, அமெரிக்கத் தமிழ்நாடு அறக்கட்டளை மூலம், தமிழகத்தில் நல்ல பல கல்விப்பணியும், சமுதாயப் பணியும் செய்யத்தூண்டு கோலாக இருந்து, அனைவரையும் அதில் ஈடுபட வைக்க எடுக்கும் முயற்சிகள் மிகப் பாராட்டத்தக்கன.

அமெரிக்காவிற்கு நான் இருமுறை (FeTNA and Tamilnadu Foundation) மூலம் சென்று வர, அத்தம்பி ஏற்பாடு செய்ததை இங்கு நினைவு கூர்வதே என் கடமையாகும்.

☆ மணிவண்ணன்

என் இளைய மகன் கொலம்பஸ் நகரில் (OH) தமிழ்ச் சங்கம் நடைபெறவும் அச்சங்கத்தின் சார்பில், சுமார் 50 குழந்தைகள் வரை, தமிழ் படிக்கும் பள்ளி ஒன்றை நடத்தவும் மிகவும் முயன்று, அனைவரையும் இணைத்துச் செயற்பட்டு வருவது, எனக்கு மன நிறைவு தருகிறது.

☆ ஈரோடு தமிழன்பன்

தமிழன்பன் மிகச் சிறந்த கவிஞர், தமிழாசிரியர்களிலேயே பரந்த மனம் படைத்த பெருமைக்குரியவர். நல்ல பண்பாளர்; சொற்பொழிவாளர்; எழுத்தாளர். அவருடன் நானும் 'என் மனைவியும் அமெரிக்காவில் சுமார் 25 மாநிலங்களில்

கலந்து கொண்டு பேசி இருப்போம்'. என்னையும் என் மனைவியையும் அண்ணனும் அண்ணியுமாய் அப்புதுமைக் கவிஞர் போற்றிய விதம் மறக்கற்பாலதன்று.

சோமலெ சோமசுந்தரம் அன்று (1996) அங்கு ஒருங்கிணைப்பாளராக இருந்ததால், அமெரிக்காவையே ஒரு சுற்றுச் சுற்றியது போல் ஆனது.

**☆ புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனார்**

அண்ணலார் என அவரை அழைப்பர். புதுக்கோட்டையில் திருக்குறட் கழகம் அமைத்துப் பலருக்குக் கல்வி கற்றுத்தர ஏற்பாடு செய்தார்.

அவரால் பெரிய மருத்துவரான இராமச்சந்திரன் பிள்ளை உட்படப் பல பேராசிரியர்கள் உருவாயினர். கவியரசு முடியரசனார் நோய்வாய்ப்பட்ட போது அவரைக் காத்த பெருமை அவருக்கு உண்டு.

இலக்குவனாரின், நூல்களை வெளியிட்டு நன்கு ஆதரித்தார்.

திருக்குறட் கழகத்தில் மாதம் ஒரு கூட்டம் நடக்கும். சரியாக மணி 6க்குத் தொடங்கி, 7க்கு முடியும். முகமன், புகழுரை எதுவுமிராது.

பாவாணர், இலக்குவனார் போலும் பேரறிஞர்களுடன், இளையோராகிய எங்களையும் பேச வைத்து ஊக்கம் தருவார்.

அவர் மணிவிழா மலரை உருவாக்கும் பதிப்பாசிரியராகப்பணி செய்தேன். அதற்கு முன்பு சொ.முருகப்பா மணி விழா மலரையும் நானே முன்னின்று உருவாக்கினேன்.

அண்ணலார் மணிவிழாவில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தலைமையில், கவிபாடியவர்களில் நானும் ஒருவன்.

எந்த நேரமும் தமிழும் குறளுமாய் வாழ்ந்தவர் அண்ணலார். இன்று அத்தகையாரைக் காண இயலவில்லை.

**☆ வை. சு.சண்முகனார்**

கானாடுகாத்தானில் பெரும் செல்வராக விளங்கியவர் வை.சு.சண்முகனார். அவரும் சொ.முருகப்பாவைப்போல, அன்றே கலப்புமணம் செய்து கொண்டவர். மஞ்சுளா பாய் அவருக்கு இரண்டாம் மனைவி. மூத்தவர் நகரத்தார் மரபினராயினும், அவருக்குப் பிறகு அவர்தம் குழந்தைகளைத் தம் மக்கள் போல் வளர்த்தவர்.

அவரது இல்லத்திற்குப் பெயர் இன்ப மாளிகை. அதில் மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும் வந்து தங்கியதுண்டு. அவர்கள் இருவருக்கும் உற்றுழி எல்லாம் உதவிய பெருமை அவருக்கும் மஞ்சுளாபாய் அம்மையாருக்கும் உண்டு.

⋆ எழில்

காரைக்குடியில் கலைமகள் அச்சகம் ஒன்று கல்லுக்கட்டி அருகில் இருந்தது. அதன் உரிமையாளர் தி.நாராயணன் செட்டியார். அவர் தமிழ்ப் பற்று மிக்கவர். அவரது அச்சகத்தில் 'வாரச் செய்தி' என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். அப் பெயர் என்னால்தான் இடப்பட்டது. காரைக்குடிச் செய்தித் தாள் அது. அதில் நாங்கள் அடிக்கடி ஏதாவது எழுதுவோம்.

இன்றைய திரைப்பட இயக்குநர் சுப.முத்துராமன், அரசியல் தலைவர் சுப.வீரபாண்டியன் போலும் உடன்பிறப்பாளர்களின் தந்தையார், நகரத்தார் களிலேயே மிகத் தீவிரமான சுயமரியாதைக்காரர். செட்டி நாட்டில் திராவிட இயக்க வளர்ச்சியில் அவருக்குப் பெரும்பங்கு உண்டு.

தி. நாராயணன் செட்டியாரை ஆசிரியராகக் கொண்டு, கவியரசு முடியரசனும் நானும் எழில் என்ற மாத இதழைத் தொடங்கினோம். அது நான்கு மாதங்கள் மிகுந்த சிறப்புடன் வெளிவர அண்ணன் இராம. சுப்பையா, பம்பரம் போல் சுழன்று, விளம்பரம் வாங்கியும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தும் உதவினார்.

⋆ செட்டிமக்கள் குலவிளக்கு

கானாடுகாத்தானைச் செட்டிநாடு என மாற்றுவதிலும் செட்டிநாட்டு அரசர் என்பதிலும் அவர் கருத்து வேறுபட்டார்.

அதனால் அஞ்சல் நிலையம் கானாடுகாத்தான் என்றே இன்றுமுளது. தொடர்வண்டி நிலையம் செட்டிநாடு எனப் பெயர் வைக்கப்பட்டது.

இக் கருத்து வேறுபாட்டால் வை.சு.சண்முகனார் தளர்ச்சி அடையவில்லை. இருப்பினும் குடும்பம் வரவர நலிவுற்றது. இறுதிக் காலத்தில் அவர்கள் 'இன்ப நிலையத்தை' விட்டுவிட்டு, ஊர்க் கோடியில், ஒரு பழைய வீட்டில் வாழ்ந்தனர். நானும் கவியரசு முடியரசனும் அவர்களை அடிக்கடி பார்க்கச் செல்வோம். அவர்களது திருமகளார் பார்வதி ஆச்சியும் மற்றும் மகன் ராஜா சண்முகமும் குடும்பத்தார் அனைவரும் எங்களுடன் அன்பாய்ப் பழகுவர்.

ஒருநாள் அவர்கள் இறுதியாக வாழ்ந்த அப் பழைய வீட்டில் தேடி, மகாகவி அவரைப் பற்றிப் பாடிய வாழ்த்துப் பாடலை, நாங்கள் கண்டுபிடித்து எடுத்தோம்.

மகாகவி பாரதியார் தனிப்பட்ட ஒரு வள்ளலை, 'செட்டிமக்கள் குலவிளக்கு' எனப் பாராட்டி எழுதியிருந்தார். அதுவரை வெளிவராத அப் பாடலை, எழில் – மாத இதழில் வெளியிட்டோம். பிறகுதான் பாரதியார் பாடல் தொகுப்புக்களில் அப்பாடலும் இடம் பெற்றது.

☆ பொற்கிழிப் பரிசு

'மீனாட்சி' என்ற தலைப்பில் 101 அடிகள் கொண்ட பாடலுக்குப் பரிசு பெற்ற போது, அப் பரிசு வழங்கும் விழா கலைஞர் தலைமையில், மீனாட்சியம்மன் கோயில் மேற்காடி வீதி வடக்காடி வீதி சந்திப்பில் நடைபெற்றது, அன்று கலைஞர் மிகு புகழ் பெற்று விளங்கிய காலம். கோயில் முழுவதும் கூட்டம் நிரம்பியிருந்தது. மு. வரதராசனார், முன்னைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாரும் பரிசு பெற்ற எங்களைப் பற்றியோ, பாடல்களைப் பற்றியோ எடுத்துரைக்க வாய்ப்பில்லை. விழா முடியும் நேரத்தில் பரிசு பெற்ற நாங்கள் நால்வரும் அவரவர் பாடலை அரங்கேற்ற அழைக்கப் பட்டோம்.

இந்து அறநிலையத் துறையினர், 'ஒவ்வொருவருக்கும் ஐந்து மணித்துளியே' என, மிக நெருக்கடி கொடுத்தனர்.

பாடுவதற்கு எழுமுன் வரதராசனார் என்னிடம் 'இசையோடு பாடுவீர்களா' என்று கேட்டார். 'இல்லை, ஓரளவு ஓசையோடு படிப்பேன்' என்றேன்.

அது போலவே நான் படித்து முடித்து வந்ததும்,'உயர்ந்த கவிதை, இப்படித்தான் பாட வேண்டும்' என்றார்.

அன்றிலிருந்து அவர் என்பால் வைத்திருந்த மதிப்பு, ஒரு படி கூடியதென்றே கூற வேண்டும்.

முன்பெல்லாம் வேலை முடிந்ததும் கை எடுத்துக் கும்பிடுவார். 'போதும், போங்கள்' என்று பொருள்.

ஆனால் இந் நிகழ்ச்சிக்குப் பிறகு, என்னை வரச்சொல்லி அழைத்து, நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பார்.

பல அரிய செய்திகளை – மறைவான சில பொதுச் செய்திகள் உட்பட – என்னிடம் அவர் பேசியமை, அவர் என்பால் வைத்திருந்த நன்மதிப்பைக் காட்டியது.

ஆயினும் அவர் மிகச் சுருங்கிய காலத்தில், இயற்கை எய்தியது என் வாழ்வில் ஏற்பட்ட பேரிடி ஆகும்.

உண்மையிலேயே உழைப்பையும் படிப்பையும் மதிக்கும் அவர் நீண்டநாள் வாழ்ந்திருந்தால் நான் எங்கேயோ போயிருப்பேன்.

இவ்வாறு ஆசைகாட்டி, பிறகு விருப்பத்தை நிறைவேற விடாமல் அடித்து, என் உள்ளத்தை வருந்த வைப்பதும் கூட, என் வாழ்க்கைச் சுழற்சியில் அடிக்கடி நிகழ்ந்தனவேயாகும்.

⋆ குடும்பத்தின் துணை

தெய்வானை

என் வாழ்வில் என் மனைவியின் தங்கை தெய்வானை, எங்களுக்கு உற்றுழியெல்லாம் உதவிசெய்து, எங்கள் வாழ்வுடன் இணை பிரியாத உறுப்பினரானார். தனக்கென ஒரு வாழ்வமைத்துக் கொள்ளாது, எங்களுக்கென வாழும் தெய்வானையை, எங்கள் குடும்ப உறுப்பினராகவும் என் துணையாகவும் ஏற்றுக் கொண்டேன். இடையறாத பல முயற்சிகளினால் தளர்ச்சியுறாது முன்னேறத்துணை தேவைப்பட்டது. என் பிள்ளைகளின் நலனும் என் மனைவி, மற்றும் என்னுடைய நலனும் கருதி, ஒரு துணை அமைந்ததால் நன்மையே விளைந்தது.

⋆ மதலையாம் சார்பு

முதலிலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை (449)

என்றார், திருவள்ளுவர். கட்டிடத்தைத் தாங்கும் உத்தரம் போல, தன்னைத் தாங்கிக் காத்து வளர்க்கக் கூடிய பெரியவர்களது சார்பிலார்க்கு நிலையான நற்பேறுகள் இல்லை. எதுபோல என்றால் முதல் இல்லாது தொழில்முனைவோர்க்கு ஊதியம் இல்லை என்பது போல.

இவர்களைக் கடவுள் தந்த தந்தையனையர் (God Father) என்பது ஆங்கில வழக்கு.

என்னுடைய வாழ்வில் பள்ளியிறுதி வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை கற்ற தனிப்படிப்பு முறையால், நான் இன்னாருடைய தனி அன்புக்குரிய மாணவன் எனச் சொல்லிக் கொள்ள முடியாமல் போயிற்று. அதனால் 'இவன் என் நன் மாணவன்' என உதவுவார் இன்றிப்போனது.

பெரும் பெரும் பதவிக்கு வந்தவர்களுக்கெல்லாம், ஏதோ ஒருவகையில், அவர்களின் பின்னணியில், 'மதலையாம் சார்பு' இருப்பது புலனாயிற்று.

எனக்கு அவ்வாறானவர்கள் என் இனத்திலும் உறவிலும் அல்லது பழக்கத்தாலும் என ஏதேனும் ஒரு வகையால், கடவுட் தந்தையராய் முழுவதும் உதவி, என்னைப் புரந்தருவாரைப் பெற்றிலேன்.

என் உழைப்பால் பெற்றவை தவிர, பின்னிருந்து உதவியவர்களால் பெற்றேன் என்று கூற, ஒன்று கூட இல்லை.

ஒருவேளை மு. வரதராசனார் 62 வயதிலேயே காலமாகாமல், மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால், என்னுடைய 'கடவுட் தந்தை' ஆகியிருக்கக்கூடும்.

என் உழைப்புக்குக் கிடைத்த 'கூலிகளே என் பட்டம் பதவி பரிசு பணம் அனைத்தும்'. அதுவும் கரடுமுரடான வழி நடந்து, காலில் கல்லும் முள்ளும் குத்தி, எனக்கு வாராதனபோல் வந்து சேர்ந்தவையேயாகும்.

## குறிப்பிடத்தக்க பணிகள்

### இந்திராகாந்தி தேசிய பொதுநிலைப் பல்கலைக் கழகம்

இந்திராகாந்தி தேசிய பொதுநிலைப் பல்கலைக் கழகம் தொடங்கியபோது, இளநிலைக் கல்வியில் தமிழ் ஒரு பாடமாக்கப்பட்டது. தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளையும் அவரவர் தம் தாய்மொழியைப் படிக்க வகை செய்தனர்.

தமிழ்ப்பாடத் திட்டக்குழுவிற்கு நான் பொறுப்பாளனாக அமர்த்தப் பட்டேன். என்னுடன் பணி செய்ய ஐந்து தமிழ் அறிஞர்களைச் சேர்த்துக் கொண்டு, நான்கு பாடநூல்கள் எழுதினோம்.

ஐதராபரத்தில் பாடம் எழுதுபவர்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. யான் தில்லி சென்று ஒத்துழைத்தேன். இது 1987, '88இல் நடந்தது. தமிழுக்கு மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்திலர்.

### செம்மொழிக் கருத்துரைஞர் குழு

மைசூரில், இந்திய மொழிகளின் நிறுவனத்தில், பழந்தமிழ்ச் செம்மொழி நூல்களின் மரபு வழிப் பதிப்புக்கான கருத்துரைஞர் குழுவில் என்னையும் ஓர் உறுப்பினன் ஆக்கினர். (2006, 2007)

### செம்மொழிச் சிறப்பு நிலைத் தமிழறிஞர்

நடுவணரசின் செம்மொழித் தமிழ்த் திட்டத்தின்கீழ்ப் பணி செய்ய, மூத்த சிறப்பு நிலை அறிஞர் (Senior Fellow) என அமர்த்தப்பட்டு, 10-6-2006 முதல் ஆறு திங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டேன். பணி விவரங்கள் தரப்பட்டு எழுதி முடிக்கப்பட்டன.

### தமிழ் இலக்கியச் சங்கப் பலகையின் குறள் பீடம்

மாண்பமை கலைஞர் குறள்பீடம் தொடங்கிய போது, என்னிடம் அறிவிக்காமல், தாமே விரும்பி அதன் துணைத் தலைவராக அமர்த்தியது என்னை வியப்பிலாழ்த்தியது. 2000- ஆண்டில் தொடங்கி நடந்த அதில், சிறப்பான பணிகள் பல நிறைவேற்றப்பட்டன.

எதிர்பாராது அரசு கலைக்கப்பட்ட அன்றே யான் துணைத் தலைவர் பதவியை விட்டு விலகிக் கொண்டேன்.

### தொல்காப்பியப் பூங்கா வெளியீடு

மாண்பமை கலைஞர் தம் தொல்காப்பியப் பூங்கா நூலை வெளியிட அழைத்தார்கள். அந்நூலில் முதலாவதாக என் கருத்தை மேற்கோள் காட்டியிருந்தார்கள். சென்னையில் 11.1.2003 அன்று வெளியிடப் பெற்றது.

"கலைஞர் தொடங்கும் போதே ஆய்த எழுத்துப் பற்றிக் கூறியிருப்பது, அவரது கூர்த்த நுண்மாண் நுழை புலத்திற்குச் சான்றாகிறது... நாங்களும் தமிழியக்கத்தில் அவருக்குத் துணையாக "ஆய்த எழுத்தாகப் பயன்படுவோம்" என்று பேசினேன்.

அதன் இரண்டாம் பதிப்பு மதுரையில் வெளியிடப் பெற்ற போது, தலைமை தாங்கும் பேறு வாய்த்தது (23.2.2003).

### திரு.வி.க. விருது

தமிழக அரசின் திரு.வி.க. விருது, 27.8.1989இல் எனக்கு வழங்கப்பட்டது. இதுவும் மாண்பமை கலைஞர் அவர்களும் மாண்பமை பேராசிரியர் அவர்களும் தாமே விரும்பி எனக்கு அளித்த பெருமையாகும்.

அன்று என் ஏற்புரையில், 'தமிழை மருத்துவம், பொறியியல்' உட்பட அனைத்து உயர்கல்வியிலும் கொண்டு வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தேன். மாண்பமை கலைஞரவர்கள் 'தமிழண்ணலின் வேண்டுகோளை நான் ஆணையாக ஏற்கிறேன்' என்று கூறினார். இவை அன்று 13 இதழ்களில் வெளிவந்ததை, இராம. திரு.சம்பந்தம் தொகுத்துக் கொடுத்தார். ஆங்கில இதழ்களில் சிலர், 'ஒரு பேராசிரியர் கேட்பதா? அதை முதல்வர் ஏற்பதா? ஆங்கிலத்தை விட்டுத் தமிழில் வந்தால் எதுவும் உருப்படாது' என்பது போல மறுப்புரைகளையும் கடிதங்களாக எழுதினர். இவை அனைத்தும் இன்றும் என்னிடம் உள.

### கண்ணகி சிலை

கண்ணகி சிலை தமிழ்ப் பண்பாட்டுச் சின்னம் என, தினமணியில் எழுதினேன். அதற்கான 'கண்ணகி சிலை நிலைநாட்டும் மாநாடு', சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில் கலைஞர் தலைமையில் நடந்த போது, அதில் கலந்து கொண்டேன் (5-1-2002).

### குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

இன்னும் ஆயிரம் ஆண்டுக்குப் பிறகும் நினைவு கூரும் வகையில், கன்னியாகுமரியில், கடற்கரை கடந்து, மறைந்த குமரிக் கண்டத்திலிருந்து எழுந்து

வந்தவர்போல், திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. மாண்பமை கலைஞர் மூன்று நாள் விழாவில் முதல் நாள் அரங்கிற்கு என்னைத் தலைமை ஏற்க வைத்தது மறக்க வொண்ணாத நன்றிக்குரியதாகும்.

**தை முதல் நாள், தமிழாண்டுத் தொடக்க நாள்**

தைத் திங்கள் முதல் நாளைத் தமிழரின் ஆண்டுத் தொடக்கமாகக் கொள்ள, நிரம்பச் சான்றுகளுடன் கட்டுரை எழுதப்பட்டது (தமிழோசை 26.1.2008).

அதற்காகச் சகத்ரட்சகனார் கொண்டாடிய விழாவில் கலைஞரைப் பாராட்டும் வாய்ப்புப் பெற்றேன்.

**திருச்சி வானொலியில் செல்வம்**

திருச்சி வானொலியில் பொங்கல் விழாக் கவியரங்கம். கலைஞர் தலைமையில் கவியரசு முடியரசனும் நானும் கலந்து கொண்டோம். 'செல்வம்' எனும் தலைப்பில் பாடிய இக்கவிதை, பின்னர் தில்லி வானொலியில், ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவிற்கு முதல் நாள் கவியரங்கில் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, வானொலிகள் அனைத்திலும் ஒலிபரப்பப்பட்டது.

**மதுரை வானொலியில் பழகுதமிழ் அறிவோம்**

மதுரை வானொலியில், முனைவர் சுந்தர ஆவுடையப்பனுடன் 'பழகுதமிழ் அறிவோம்' என நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழ் பற்றி ஐம்பது வாரங்கள் உரையாடியமை. இது மிகுந்த வரவேற்பைப் பெற்றது. சென்னை வானொலியில், சுந்தர ஆவுடையப்பன் இருந்த போது, ஒரு திங்கள் 31 நாளும் மூன்று மணித்துளியுள், காலையில் 'சொல் புதிது' என ஒரு சொல் பற்றி மட்டும் விளக்கியது.

**கோவை வானொலி**

மகரந்த மண்டபம்

1. முன்னேற்றச் சிந்தனைகள்
2. உவகை தரும் உவமைகள்

இரண்டும் தனித்தனியே 31 நாள்கள் காலையில் ஒலி பரப்பப்பட்டன.

– – –

# வெளிநாடுகளில் தமிழ்ப்பணி

1. முதல் முறையாகச் சிங்கப்பூரில், பொங்கல் திருநாளைச் சார்ந்து, 'தமிழர் திருநாள்' கொண்டாட்டத்தில் கலந்து கொண்டது. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் (கோலாலம்பூர், ஈப்போ) தமிழமைப்புக்களில் கலந்து கொண்டமை.

2. சிங்கப்பூர் வானொலியில் பல முறை உரையாற்றியமை. முனைவர் சுந்தர ஆவுடையப்பனுடன் 'தமிழில் பிழையின்றிப் பேசுதல்' பற்றிய உரையாடல், பல வாரங்கள் ஒலி பரப்பப்பட்டமை.

3. சிங்கப்பூரில் உலகத் தமிழாசிரியர் - முதல் மாநாட்டிலும் கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாம் மாநாட்டிலும் கலந்து கொண்டமை. (1992-1994).

4. உலகத் தமிழ் மாநாடு - கோலாலம்பூரிலும், மொரீசியசிலும் கலந்து கொண்டமை. (தமிழகத்தில் சென்னை, மதுரை, தஞ்சை, கோவை).

5. மலேயாப் பல்கலைக் கழகத்தில் புறநிலைத் தேர்வாளராகக் கலந்து கொண்டமை (ஒரு திங்கள்) (1991)

6. சிங்கப்பூரில் தமிழ்ப் பாடநூல்களின் பதிப்பு மதிப்பீட்டாளராக மூன்று மாதங்கள், வேலை தரப்பட்டு, SNP (Singapore National Publishers)யில் பணி செய்தமை.

7. சிங்கப்பூரில், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ் இளங்கலை - அஞ்சல்வழிக் கல்வியைத் தொடங்கி, பேராசிரியர் வி.ஆர்.பி.மாணிக்கம் வீட்டில் தங்கி, ஒரு திங்கள் பாடம் நடத்தியமை.

8. சிங்கப்பூர் சிம் (Sim) பகுதி நேரப் படிப்புப் பல்கலைக் கழகத்தில், தமிழ் இளங்கலை தொடங்கி, பாடத்திட்டம் வகுத்து, முதல் மூன்று பாடங்கள் எழுதிக் கொடுத்து, வழி காட்டியதுடன், சில வாரம் பாடம் நடத்தியமை.

9. சிங்கப்பூர் அரசகேசரி சிவன் கோயில் சார்பாக, ஒரு வாரம் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்.

10. சிங்கப்பூரில் சிறந்த இலக்கிய நூற் பரிசு - சிங்கப்பூர் இலக்கிய நூல் வளர்ச்சி மன்றம் - தமிழில் சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து, பரிசளிப்பு விழாவிற்குப் போய் வந்தமை.

11. சிங்கப்பூர்ப் பாடத்திட்டம் உருவாக்கம் - அதன் நெறிமுறை பற்றியும், தமிழில் எந்த மொழி நடையில் பாடநூல் உருவாக்குவது என்பது பற்றியும் தமிழ் இலக்கணத்தை எளிமையாய்க் கற்றுக் கொடுப்பது பற்றியும், முப்பது தமிழாசிரியர்களுடன் இரண்டு நாள் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குச் சென்று வந்தமை. 'தமிழ் மொழி' நடையைக் கற்பிக்கும் நெறிமுறைகள் பற்றி ஒரு சிற்றேடு எழுதி அளித்தமை.

12. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கமும் (FETNA), தமிழ்நாடு அறக்கட்டளையும் சேர்ந்து நடத்திய, தமிழ்விழாவிற்கு 1996இல் அழைக்கப்பட்டுச் சென்று கலந்து கொண்டமை. ஈரோடு தமிழன்பனுடன் அங்கு ஏறத்தாழ 25 மாநிலங்களிலுள்ள தமிழமைப்புக்களில் சொற்பொழிவாற்றியமை. என் மனைவி சிந்தாமணியும் உடன் வந்திருந்தாள்.

13. 2010 மே மாத இறுதியில், சோமலெ சோம சுந்தரம், தமிழ்நாடு அறக்கட்டளையின் 35 ஆம் ஆண்டு விழாக் குழுத் தலைவராக இருந்து விழாவை நடத்தினார். அதன் இன்றையத் தலைவர் இராம்மோகன். இவர்கள் அனைவரின் அன்பிற்கும் மதிப்புக்கும் உரியவனாகச் சென்று, விழா மலரை வெளியிட்டு, சிறப்புரையாற்றியமை.

14. இலங்கையில் நடைபெற்ற உலக இந்து சமய மாநாட்டிற்கு, என் மனைவி சிந்தாமணியுடன் சென்றேன். சிவமெய்யியலில், 'வினைக் கோட்பாடு' பற்றி உரையாற்றினேன்.

15. சப்பானிலிருந்து தக்ககசி என்ற மாணவன் இங்கு தமிழ் கற்க வந்திருந்தான். அமெரிக்காவிலிருந்தும் மாணவர்கள் வருவர். அமெரிக்க மாணவர்க்கு என இங்கு ஒரு தனி அமைப்பும் உண்டு. மொழியியல் அறிஞர்களே இவர்களுக்கு 'பேச்சுத் தமிழைக்' கற்பித்து அனுப்பி வைப்பர். என்னிடம் வந்த ஓர் அமெரிக்க மாணவன் 'தமிழ்த் திரையிசைப்பாடல்களில்' ஆர்வம் காட்டியதால் அவனுக்கு, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்பித்தேன். சப்பான் நாட்டுத் தக்ககசிக்கு, சங்க இலக்கியம் பற்றிப் பொதுவாகவும் குறுந்தொகை பற்றி முழுமையாகவும் கற்பித்தேன். அதன் பின் அவன் நெதர்லாந்தில், கமில் சுவலபில்லிடம் சென்று சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றான். இன்று அவன் சப்பானில் தலைசிறந்த தமிழாசிரியனாய். பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றான்.

## தமிழ் வழிக் கல்வித் தமிழியக்கப் பணிகள்

தமிழ் மொழியைக் கற்பவர் தொகை குறைந்து வருகிறது. கடந்த நாற்பது ஆண்டுகளில், ஆங்கிலக்கல்வி 'மெட்ரிக்' பள்ளிகளைக் கணக்கின்றித் திறந்துவிட்டதால், மதுவில் மோகம் கொள்வதுபோல் ஆங்கில மொழி மோகத்தில் மக்கள் ஆழ்ந்து மூழ்கிப்போயினர்.

1968 இல் மும்மொழிக் கொள்கையை மாற்றி, இரு மொழிக் கொள்கையைக் கொண்டு வருவதற்கான அரசாணை ஒன்று வெளியிடப் பெற்றது. இதில் இ.ஆ.ப. அதிகாரிகள் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்து விட்டனர்.

பகுதி I என்பதில் வட்டார மொழி அல்லது தாய்மொழி எனக் குறித்துவிட்டனர்.

இதல் வட்டார மொழி என்பதுதான் தமிழைக் குறிக்கும். தாய்மொழி என்பது சிறுபான்மையோருக்காக என்று கூறினர்.

இவ் ஆணையில் தமிழ் கட்டாயமாகவும் சிறுபான்மையோருக்குத் தமிழ் கட்டாயமாவதுடன் அவரவர் தாய்மொழியையும் கற்பிப்பது என்றிருக்க வேண்டும். மேலும் வட்டார மொழியல்லாத (தமிழ் அல்லாத தாய் மொழியையுடையவர்களுக்கு) அவரவர் மொழியே போதும் என்பது கருத்தாகிறது. அதாவது மாநில (வட்டார) மொழியாம் தமிழை விட்டுவிட சட்டப்படி இது உதவுகிறது.

பகுதி II ஆங்கிலம் அல்லது ஏதேனும் ஒரு இந்திய மொழி அல்லாத மொழி என்றுளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், மும்மொழித்திட்டத்தை முழுவதுமாக நீக்கிவிட்டதாக மட்டும் முன்னுரையில் குறிப்பிட்டுவிட்டு, இருமொழிக் கொள்கைக்கான தனி ஆணைபிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழை வட்டார மொழி என்று குறிப்பிட்டுவிட்டு, தமிழ் என்ற சொல்லே, அவ்ஆணையில் வந்துவிடாதபடி செய்த, அந்தக் கால இ.ஆ.ப. அதிகாரிகளின் திறன், சாணக்கியரை மிஞ்சியது.

இதனால் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் தமிழை அறவே விட்டுவிட்டு, பிரெஞ்சு, சமஸ்கிருதம், இந்தி எது வேண்டுமானாலும் படிக்க வாய்ப்பானது.

மேலும் தமிழ் தவிர்த்தவற்றில் 200க்கு 200 மதிப்பெண் வழங்கினர். அம் மொழிகளையும் யாரும் நன்கு கற்கவில்லை. ஏமாற்று வித்தையாக அது நடத்தப்பட்டதற்கு, மதிப்பெண் கூடுதலே அடிப்படையானது.

அண்ணா காலத்தில் இதைக் கண்டறிய வாய்ப்பில்லை. நடைமுறை வலுத்த போது அண்ணா இல்லை. பிறகு வந்த கலைஞர், எம்.ஜி.ஆர், அம்மையார் ஆட்சிக் காலங்களில் எல்லாம், 'தமிழை அறவே விட்டுவிட்டுப் படிக்கும் அவலநிலை' யாராலும் கண்டு கொள்ளப்படவில்லை. அவ் ஆணை நாற்பதாண்டுகள் அரியணை ஏறிக் கோலோச்சி, பள்ளிப் படிப்பில் தமிழே படிக்காத பல நூறாயிரம் மாணவர்களை உருவாக்கவழி செய்துவிட்டது.

அரசுப் பள்ளிகளில் தமிழ் இருந்தது. என்றாலும் தனியார் பள்ளிகளே வளர்ந்து ஓங்கியதால், இது நடைமுறையில் வசதிவாய்ப்புடைய உயர்தர, நடுத்தர வகுப்பினர்களின் குழந்தைகளை எல்லாம் ஆட்கொண்டு விட்டது.

இன்று அவர்கள் எல்லாம் வளர்ந்துவிட்டதால், தமிழ் கலப்பட மொழியாகி, சிலபோது எழுதத் தெரியாது பேச மட்டும் தெரியும் மொழியாக மாறி வருகிறது.

தமிழை அழியும் நிலைநோக்கி உந்துவதை இளையோர், பெற்றோர், கல்வி நிலையப் பொறுப்பாளர் என எல்லோரும் முன்னின்று, தங்களை அறியாமல் ஆங்கிலமே தம் தாய்மொழியாகவும் அதுவே தமிழ் போலவும் நினைத்துப் பேசுமளவு 'மொழிநோய்' முற்றிவிட்டது.

ஒரு கலப்பட மொழி உருவாகிவிட்டது. எழுத்தாளர் சிலர் இக் கலப்படத்தை, எழுத்துத் தமிழாம் கட்டளைத் தமிழில் புகுத்தி. அழிவை விரைவு படுத்துகின்றனர்.

ஒரு தெலுங்குத் தமிழ் எழுத்தாளர், படைப்பாளிகளாக வளரும் தமிழ் இளைஞர்களை மூளைச் சலவை செய்துவிட்டார். தமிழ் இதழ்கள் சில இதுதான் சமயம் என்று அவரையும் அவரைப் பின்பற்றி எழுதுபவர்களையும் ஊக்கப்படுத்தி வருகின்றன.

கூர்மையான தொலைநோக்குடையவர் இதை நன்கறிவர்.

இந்நிலையில் என் தமிழியக்கப் பணி பன்முகப் பார்வை கொண்டது; ஆள்பவர்கள் தங்களை மட்டுமே கூறுவதாக எண்ணி, என் மீது சீற்றம் கொண்டனர்.

சு. வேங்கடேசன் எழுதிய 'ஆட்சிமொழி' நூலை நான் வெளியிட்டேன். அதை அனைவரும் படிக்க வேண்டும்.

அண்ணா காலத்திற்கு முந்தைய நீதிக் கட்சி, ஆங்கிலத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தது.

காரணம் அன்று பார்ப்பனர்கள் பலர் ஆங்கிலம் கற்று, ஆங்கில அரசில் பெரும் பதவிகளில் இருந்தனர்.

சர் பி.டி. தியாகராயர் போன்ற பலர், தமிழரும், ஆங்கிலம் கற்று, பார்ப்பனருக்கு நிகராகப் பெரும் பதவிகளைப் பிடிக்க வேண்டும் எனக் கருதினர்.

பிராமணரல்லாதார் (Non - Brahmin Movement) இயக்கம் ஆங்கிலத்தில் மிக மேம்படக் கற்றாலன்றி, பார்ப்பனருக்கு நிகராகத் தாங்கள் வர முடியாதென்று கருதியது. அன்றைய நிலை ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்; ஆங்கில மொழி ஆதிக்கக் காலம். தந்தை பெரியார் 'அடுக்களையிலும் ஆங்கிலம் பேசும் ஆற்றல் பெறுக' எனக் கூறிய காலம் அது.

திராவிட இயக்கம் வந்த போது, தான் ஆட்சியைப் பிடிக்க, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும் ஒரு காரணம் என்று உணர்ந்திருந்தது. அதானல் இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்றும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டால் இந்தி அந்த இடங்களைப் பிடித்து, நம்மை ஆளும் மொழியாகி விடும் எனவும் எண்ணியது.

இதனால் அன்று இயல்பாக ஆங்கில வழியிலேயே, கல்வி, ஆட்சி, நீதி எல்லாம் நடப்பதை விரும்பினர். ஆங்கிலத்தை விட்டுவிட்டால் வடநாட்டுத் தலைவர்கள், இந்த மூன்றிலும் இந்தியைப் புகுத்திவிடுவர் என எண்ணினர்.

ஆனால் அன்றைய எதிர்க் கட்சியினரும் தமிழார்வலர்களும் வேறு வகையாகச் சிந்தித்தனர்.

காலம் மாறிவிட்டது; சுதந்திரம் வந்து விட்டதல்லவா? நாடு விடுதலை பெற்றது போல மொழியும் விடுதலை பெற வேண்டுமல்லவா? தாய்மொழி ஆங்கிலத்திற்கோ, இந்திக்கோ அடிமையாகலாமா?

தொடக்க காலச் சட்டமன்ற நிகழ்வுகளில் ம.பொ.சிவஞானம், பொதுவுடைமைப் பெரியோர்களான ப.சீவானந்தம், இராமமூர்த்தி, ஆ.பாலசுப்பிரமணியம் போல்வார் கொடுத்த 'குரலுக்கு' அண்ணா மதிப்புக் கொடுத்தார்.

அவர்கள் பேச்சுக்கள் மிக ஆழமானவை; சிறந்தவை; தமிழைக் காத்து நிலைநிறுத்த உதவுபவை. அவர்கள் பேச்சின் சாரம் இதுதான்.

"ஆங்கிலேயன் போன பிறகும் கல்வி, ஆட்சி, நீதி
என்ற மூன்று இருக்கைகளிலும் ஆங்கிலம்
அமர்ந்துளது. விடுதலை பெற்றுவிட்ட இச் சமயத்தில்
அம் மூன்றிலும் ஆங்கிலத்தை நீடிக்கவிட்டால்

பிறகு அவற்றில் 'இந்தி' வந்து அமர்ந்துவிடும்.
உடனே அவை மூன்றிலும் தமிழை அமர்த்திவிட்டால்,
பிறகு இந்தி வந்து அவற்றில் அமர முடியாது.
ஆங்கிலத்தை நம்பித் தமிழைக் கைவிட்டால்
தமிழ் வளர்ச்சி குன்றித் தாழ்ந்துபோகும்."

இவற்றை எல்லாம் கேட்ட அறிஞர் அண்ணா – மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணமிருக்கும் என நம்பும் பெருந்தன்மையுடையவராதலால், அவற்றை ஏற்றுத் தீர்மானத்தைத் திருத்தி, 'இனி எங்கும் எதிலும் தமிழே இடம் பெறச் செய்வேன்' என்று சூளுரைத்தார்.

ஆயினும் காலம் பொல்லாதது; காலனும் மிகமிகக் கொடியவன்.

இன்று அன்றாட வழக்கில் தமிழ் தள்ளாடுகிறது. இன்றைய இளைஞர்கள் வளர்ந்து, பெற்றோராகி விட்டனர். அதனால் தமிழில் பெயரிடுவதென்ற உணர்வு கூடப் போய்விட்டது. கணினியுகம் வந்ததால், ஆங்கிலம் வருமானம் தரும் தொழில் ஆனதால், தமிழ் எண், எழுத்து, சொல் சொல்லத் தெரியாதவர் பலர்; எழுதத் தெரியாதவர் பலர்; படிக்கத் தெரியாதவரும் பலருள்.

ஒருவனைக் கையெழுத்துப் போடச் சொன்னபோது, அந்த ஏவலனுக்கு 'கருப்பன்' என எழுத வரவில்லை. 'டொமோட்டோவை'த் தமிழில் எப்படிச் சொல்வார்கள் என்று பிள்ளை கேட்கிறது. இரவு என்ற சொல்லை அறவே மறந்து 'நைட் டிபனுக்கு வருவீர்களா?' என்றுதான் மனைவி கேட்கின்றாள். எங்கெங்கும் தண்ணீர் குடிப்பவனும் சோறு உண்பவனும் இல்லவே இல்லை. 'வாட்டர்' குடித்து, 'ரைஸ்' சாப்பிட்டு 'லஞ்சை' முடிக்கிறான் இன்றைய தமிழன்.

இந்த நிலையில் பிற மாநிலங்களோடும் பிற உலக மொழிகளோடும் ஒப்பிட்டும், வலியுறுத்தியும் நூற்றுக்கணக்கில் கட்டுரைகள் எழுதவும் அறிக்கைகள் விடவும் நேர்ந்தது.

என் உண்மையான உள்ளத்தின்படி யாரையும் குறை கூறவோ, பகைக்கவோ நான் எதையும் எழுதவில்லை. திராவிட இயக்க உள்ளார்ந்த உணர்வை இளமை முதல் நன்கு அறிந்தவன்; தமிழுக்கு இன்று அதைவிட்டால் வேறு கதி இல்லை என்றும் நினைப்பவன்.

1. முதற்குழு

6.5.1966இல் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் தலைமையில், தமிழைக் கட்டாய பாடமாக்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. அதில் என்னையுட்பட நான்கு தமிழறிஞர்களும், அரசுச் செயலர் மூவரும் இடம் பெற்றோம்.

தமிழை மழலையர் முதல் பள்ளி, கல்லூரி வரை கட்டாயமாக்க, நல்ல பல தீர்மானங்களை எழுதிக் கொடுத்தோம். அவை என்னிடம் உள; ஆனால் அதிகாரிகள் அவற்றை என்ன செய்தனரோ, தெரியவில்லை.

## 2. தலைநகர்த் தமிழ்ச்சங்கம்

த.சுந்தர ராசன் முயற்சிமிக்க தமிழ்ப் போராளி; தமிழ் விடுதலைச் சிந்தனை மறவர். அவர் அழைப்பின் பேரில், அடையாள உண்ணாநிலைப் போராட்டங்களில் கலந்து கொண்டதுண்டு.

1998 ஏப்பிரலில் தலைநகர்த் தமிழ்ச்சங்கமும் உடன் உள்ள சில தமிழமைப்புக்களும் சேர்ந்து தமிழைப் பயிற்றுமொழியாக்கவேண்டி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடுவதென, என் தலைமையில், பாரீசு மூலை குறளகம் எதிரே கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பிறகு முந்நூறுக்கும் மேற்பட்டோர், அணிதிரண்டு, தலைமைச் செயலகம் நோக்கி நடக்கத் தொடங்கினோம். எங்களைத் தடுத்து நிறுத்தவும், நிற்காவிட்டால் சிறையிலடைக்கவும் 'உத்தரவு' வரவே, நாங்கள் 'பாரிஸ் கார்னர்' என்ற இடத்தில், காவல்துறைப் பேருந்துகளில் ஏற்றப்பட்டோம். ஒரு காவல்துறை ஆய்வாளர் த.சுந்தரராசன், ஏற முயன்றபோது, சட்டையைப் பிடித்து இழுத்து அவமானப்படுத்த முயலவே, அனைவரும் கொதித்தெழுந்தோம். அவரை 'மன்னிப்புக் கேட்கச்' சொல்லி முழக்கமிட்டோம்.

கடற்கரைக் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டோம். அவ் அதிகாரி தலைமைச் செயலகம் போய்விட்டார். நாங்கள் அவர் வந்து, மன்னிப்புக் கேட்டாலன்றி, எங்களுக்குத் தரப்பட்ட உணவுப் பொட்டலங்களை எடுத்து உண்ண மறுத்துவிட்டோம். கைக்குழந்தையுடன் வந்திருந்த பெண்களும் உணவுண்ண வில்லை. பிறகு மாலை 6 மணிக்கு எங்களை விடுவித்தனர்.

## 3. தமிழச் சான்றோர் பேரவை

தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் நா.அருணாசலனார், ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று தமிழ்நாடு எனத் தனி மாநிலமாகத் தொடங்கியதைக் கொண்டாடும் பொருட்டு 'தமிழகப் பெருவிழா' என, மிகுந்த பொருட் செலவுடன், விரிவான முறையில் ஆண்டுதோறும் நடத்திவந்தார். சிலம்பொலி செல்லப்பர் அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வந்தார்.

ஒரு முறை என்னை அவ்விழாவிற்கு அழைத்தனர். சென்னை 'செருமன் மண்டபம்' என்பதில் விழா நடைபெற்றது. எவரும் எதிர்பாராத நிலையில் சிலம்பொலி செல்லப்பர், 'மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு வரை' தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் எனச் சட்டம் இயற்றுமாறு வலியுறுத்தி, நான் சாகும் வரை பட்டினிப் போரில் ஈடுபடப் போகிறேன் என அறிவித்தார்.

இதைக் கேட்டதும், இதில் ஈடுபாடுள்ள யான், கூட்டத்தில் இருந்தவன், எழுந்து நின்று, 'நானும் உங்களுக்குத் துணையாகப் பட்டினிப்போரில் ஈடுபடுவேன்' என அறிவித்தேன். என்னைத் தொடர்ந்து பலரும் அவ் அறப்போரில் ஈடுபடுவதாக அறிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அப் போராட்டம் பற்றிய பரப்புரைகள் நாளும் நடந்தன. 1999 ஏப்பிரலில் ஒரு நாளும் குறிக்கப்பட்டது. செல்லப்பரும் 'விடைபெற்றுக் கொள்கிறேன்' என எழுதி, நாடெல்லாம் பரப்பி ஆயிற்று அரசு இவற்றை எல்லாம் கண்டுகொள்ளவில்லை.

பட்டினிப்போர் தொடங்க இரண்டு நாள் முன்னதாக, செல்லப்பர், நண்பர் சிலர் சொன்னதைக் கேட்டுப் போராட்டத்தை விட்டு விலகப் போவதாகக் கூறிவிட்டார்.

அருணாசலனாரின் அடையாறு மாணவர் நகலக அலுவலகத்தில், செயல்திட்ட உறுப்பினர் இருபது பேர் வரை கூடி, என்ன செய்வதென்று கலந்துரையாடினோம். பலரும் ஒருமுகமாக என்னைத் தலைமை ஏற்கும்படி கூறினர். உடனடியாக அதற்கு இசையாமல், ஐவர் மட்டுமே சென்று செல்லப்பனாரையே அழைத்து வருவோம் என்று யான் கூறியதற்கேற்ப, அவரை வீட்டில்போய்ச் சந்தித்து மிக மன்றாடிக் கேட்டும் அவர் மறுத்துவிட்டதால், திரும்பி வந்து யான் தலைமை ஏற்பதென உறுதியாயிற்று.

25.4.1999 அன்று, பல ஆயிரம் பேர் கூடி பேரணி ஊர்வலம் வந்து, வள்ளுவர் கோட்டம் அருகே பட்டினிப்போர் தொடங்கியது. அதற்கு முதல் நாளிலிருந்தே, வயிற்றைத் தூய்மை செய்துகொள்ளும் வகையில் பலரும் பருப்பொருள் எதுவும் உண்ணாதும், 'எனிமா' முதலியன செய்து கொண்டும் ஆயத்தமாகிவிட்டனர்.

பட்டினிப்போர் தொடங்கி இரண்டாம் நாள் முடியும் தறுவாயில், தமிழ்க்குடி மகனாரை அனுப்பி, அரசு உடனே ஒரு குழு அமைத்துத் தமிழைப் பயிற்றுமொழி ஆக்குவதாக உறுதியளித்ததால், மிகவும் சிந்தித்துப் பிறகு, 'கலைஞரை விட்டால் தமிழுக்கு வேறு யாருளர்; அரசைத் தூண்டுவதுதானே நம் குறிக்கோள்' என எண்ணி, அறப்போர் நிறுத்தப்பட்டது.

பிறகு உடனேயே சில நாட்களில் நீதியரசர் மோகன் தலைமையில், ஓர் ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. என்னையும் இரா. இளங்குமரனாரையும் தமிழறிஞர்கள் என்பதற்காக, அதில் உறுப்பினராக்கினர்.

இந்நிலையில் தெலுங்கரான அன்றைய பள்ளி கல்வித்துறை அதிகாரியும், ஆங்கில நாளேடுகளும், இந்த ஆங்கிலவழிப் பள்ளி வணிகக்

கூட்டத்திற்கு ஆதரவாக நடத்திய குழப்பங்கள், தீங்குகள், பழிப்புரைகள் உலகில் வேறு எங்கும் நடைபெறா என்று கருதுமளவு நடந்தன.

ஒருவாறு ஒன்றேகால் மாதம் வரை கூடிப் பேசி, மழலையர் முதல் உயர்கல்வி வரை தெளிவான மொழிக் கொள்கை ஒன்றை வகுத்து, பத்து தீர்மானங்களாக எழுதப்பட்டன.

அதில் முதல் தீர்மானம் மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழே பயிற்றுமொழி என வரையறுக்கப்பட்ட சட்டம் இயற்றுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

21.6.1999 அன்று அளிக்கப்பட்ட அவ்அறிக்கை, இ.ஆ.ப. அதிகாரிகளிடம் தரப்பட்டு. தமிழ் பயிற்றுமொழி என்பது சட்டமாக ஆக்கப்படாது போயிற்று.

உள்ளூர் நீதிமன்றமும் நகையாடித் தாய்த்தமிழைத் தோற்கடித்தது. உச்சநீதிமன்றத்திலோ வழக்கே நடத்தப் பெறாமல், நீதிபதிகள் தாம் கருதியவாறு கூறலாம் எனக் கூறிவிடுத்தனர்.

கருநாடக உயர்நீதிபதிகள் அரசுக்குத் தாய் மொழியை நிலைநிறுத்த வழிகாட்டும் வகையில் தீர்ப்பு வழங்கினர். இங்கு தாய்மொழியை அறவே புறக்கணிக்க வழிவகுத்துத் தீர்ப்புக் கூறினர்.

ஆங்கில வழி வணிகப் பள்ளிகள் ஆனந்தக் கூத்தாடின. ஆங்கில நாளேடுகள் எங்களை வசைபாடி, குறிப்பாக என்னைக் குறைகூறித் தங்கள் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தின.

உச்ச நீதிமன்றத்திற்குத் தம் சார்பாகவும் ஒரு வழக்கறிஞரைக் கொண்டு, ஒரு நீண்ட வழக்குரையை எழுதியனுப்பிய பேரறிஞர் வ. அய். சுப்பிரமணியம் தாம் ஆங்கிலத்தில் எழுதிய அதன்படியை எனக்கு அனுப்பி இருந்தார். அதன் தட்டச்சுப்படி என்னிடம் உளது. தக்கவர் யாரேனும் முன்வந்து அதை வெளியிடவேண்டும் என்பது என் விருப்பம்.

# பொது

1. அமரர் பொன். சௌரிராசன் முயற்சியில், திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில், இரண்டு வாரம் (15-28 ஏப்பிரல் 1987) வருகைதரு பேராசிரியர் என அழைக்கப்பட்டு, முதுகலை மாணவர்களுக்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியம் பற்றிப் பாடம் நடத்தியமை.

2. சிங்கப்பூர், சிங்கப்பூர் தேசியப் பதிப்பாளர் (SNP) என்ற நிறுவனத்தில், பாடத் திட்ட நூல் வெளியீட்டு மேற்பார்வையாளராக மூன்று மாதம் வேலைக்குச் சென்று பணியாற்றியமை (1997).

3. அமெரிக்காவில் தமிழ்நாடு அறக்கட்டளை சார்பில் 35ஆம் மாநாட்டுக் கருத்தரங்கில், 2010 மே இறுதியில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டதுடன் எனது, 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற நூலைச் சுருக்கமாக வெளியிட்டு, பதிவு செய்த 1200 பேராளர்களுக்குமேல் வழங்கியமை.

4. 'ஜூனியர் சேம்பர்' என்ற அமைப்பு, நூற்றுக்கணக்கான மனித வாழ்வியல் பற்றிய பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. அவ்வாறு திருக்குறளை, அதே தலைப்புக்களில் நடத்தினால், குறள் வாழ்க்கை நூலாகும். இக்கருத்துக்கு உடன்பட்டு, விருதுநகரிலுள்ள அவ் 'இளையர் சங்கத்தினர்' - பல்வேறு நிலைகளில் என்னை ஈடுபடுத்தினர். அவை சில சிற்றேடுகளாகவும் வெளியிடப்பட்டன. (1991, 1992)

5. கோவை கற்பகம் பல்கலைக் கழகம், தமிழ் மாணவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் சங்க இலக்கியப் பயிற்சி தர வாய்ப்பளித்து தொல்காப்பியம், குறுந்தொகை, நற்றிணை பற்றி எல்லாம் பயிற்சிக்களம் நடத்தப் பெற்றமை.

6. அமெரிக்க சர்வதேசத் தமிழ்ப் பல்கலைக் கழகமும் தமிழ்ப் பண்பாட்டுத் தூதரகமும் சேர்ந்து, திருக்குறட் செம்மல் ந. மணிமொழியனார் உட்படச் சிலருக்கு 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கியபோது, எனக்கும் அப்பட்டயம் தரப்பட்டது.

7. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், 45 துறைகளே இருந்த போது, பல்கலைக் கழக நல்கைக் குழுவிடம், சிறப்பு நிதியுதவித் திட்டத்தை, 'உயிரியல் துறை' பெற்றது.

அடுத்ததாக மிக முயன்று DSA Programme எனப்படும் நிதியுதவித் திட்டத்தை, ஐ.சி. மேனன் என்பார் உதவியுடன் பெற்றுத் தந்தமை எனது அரிய முயற்சிகளில் ஒன்றாகும்.

8. நேர் காணல்கள் மூலம் எனக்குரிய கருத்துக்களை வெளியிடச் செய்தன சில இதழ்கள்; குமுதம் (இருமுறை), புதியபார்வை, அமெரிக்க நானல் (Nanal), கல்கி, முகம் இதழ், ஊற்று இதழ், ஓம் சக்தி இதழ் என்று குறிப்பிடலாம்.

9. மதுரை தமிழ்நாடு இதழ் – ஞாயிறு மலரில் 1.12.1963இல், தமிழை ஒலிக்கும் முறைபற்றிய என் விரிவான கட்டுரை வெளிவந்துளது.

10. பேராசிரியர் சி. இலக்குவனாரின், 'குறள்நெறி'யில் யான் எழுதிய, 'முருகன் தமிழ்க் கடவுளே' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கது. விரைவில் அது விரிவான தனி நூலாக வெளியிடப்படும்.

11. காரைக்குடியில் இருந்த போது, அங்கு நடந்த சிறப்பு நிகழ்வுகளை எழுதி அனுப்பினேன். அவை வெளியிடப் பெற்றதுடன், சிறிது மதிப்பூதியமும் வந்தது. உடனே தமிழ்நாடு நாளிதழின் செய்தியாளர் போல, இரண்டாண்டுகள் காரைக்குடியிலிருந்து மதுரைக்கு அனுப்பி, அச் செய்திகள் வெளிவந்து எனக்குச் சிறு வருமானமும் தந்தன. அதனால் ஏற்பட்ட சிறந்த பயன் ஜவகர்லால் நேரு, இராஜாஜி, இராசேந்திர பிரசாத், சிந்தாமண் தேஷ்முக், ஆர்க்காடு இராமசாமி முதலியார், அறிஞர் அண்ணா, பேராசிரியர் அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன் எனப் பலரை அணுகிக் காணவும் அவர்களின் பொழிவுகளைக் கேட்கவும் வாய்ப்பானது.

## தமிழண்ணலின் மேற்பார்வையில் முனைவர் பட்டம் (Ph.D) பெற்றோர்

| வரிசை எண் | ஆய்வாளர் பெயர் | | ஆய்வுத் தலைப்பு |
|---|---|---|---|
| 1. | அழகேசன், கு. | – | சோழர் காலக் கல்வெட்டுகளால் அறியலாகும் கலைச்சொற்கள் – ஓர் ஆய்வு |
| 2. | இராசேந்திரன்,சி.மொ. | – | தமிழ் இலக்கியத்தில் கையறுநிலைப் பாடல்கள். |
| 3. | இராசேந்திரன், ப.பா. | – | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இலக்கியக் கொள்கைகள். |
| 4. | இராதாகிருஷ்ணன்,இரா. | – | நா. பார்த்தசாரதியின் சமூக நாவல்கள். |
| 5. | இராமகிருட்டிணன்,எம் | – | திருப்புகழ் – ஓர் ஆய்வு. |
| 6. | இராமசாமி, இ.கி. | – | தமிழில் பாயிரங்கள். |
| 7. | உமாமகேசுவரி,பி.பி. | – | நெல்லையப்பர் கோவில். |
| 8. | கந்தசாமி, செ. | – | சேதுமன்னர்களின் தமிழ்ப் பணி. |
| 9. | காளிமுத்து, கா. | – | தொல்காப்பிய இலக்கியக் கொள்கையும் குறுந்தொகையும். |
| 10. | கிருட்டிணசாமி,வெ. | – | தமிழில் குழந்தைப் பாடல்கள். |
| 11. | கோதண்டபாணி, இரா. | – | செந்தமிழ் – இதழியல் ஆய்வு. |
| 12. | கோவிந்தன், வி.எஸ். | – | சூரிய நாராயண சாத்திரியாரின் வாழ்வும் வாக்கும். |
| 13. | சரசுவதி, அ. | – | மு.வ. நாவல்களில் கட்டமைப்பு. |
| 14. | சவகர்லால், ச. | – | தேவாரத்தில் தொன்மைக் கூறுகள். |
| 15. | சாந்தமூர்த்தி, பு.மு. | – | கம்பனின் படிமங்கள். |
| 16. | சாந்தா ஆப்தே, ந. | – | தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம் |
| 17. | சாரதா நம்பிஆரூரன். | – | தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும். |
| 18. | சாரதாம்பாள், செ. | – | சங்க இலக்கியத்தில் செவ்வியல் பண்புகள் |
| 19. | சுசீலா. எம். | – | கம்ப ராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள். |
| 20. | சுருளிவேல், செ.ப. | – | சங்க இலக்கிய அணி இலக்கண வளர்ச்சி. |

| | | | |
|---|---|---|---|
| 21. | சேதுராமலிங்கம், வி. | – | இராமநாதபுரம் வட்டம் – நாட்டுப்புறப் பாடல்கள். |
| 22. | சேதுமணி | – | தமிழ் நாவல்களில் மதிப்புகள் |
| 23. | சொக்கலிங்கம், ந. | – | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் இலக்கணக் கோட்பாடுகள். |
| 24. | சோதிபாய், ஆர்.எஸ். | – | சங்கப் புறப் பாடல்களில் திணை, துறை. |
| 25. | சௌமியநாராயணன்,சீனி. | – | வியாச, வில்லிபாரதங்கள் – ஓர் ஒப்பாய்வு. |
| 26. | தட்சிணாமூர்த்தி, பி. | – | சிலப்பதிகாரத்திலும் சீவக சிந்தாமணியிலும் தொன்மை. |
| 27. | தமிழ்க்குடிமகன், மு. | – | பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1966 - 1976). |
| 28. | தேனப்பன், வ. | – | ஒன்பது நகரக் கோயில்கள். |
| 29. | நவநீதகிருஷ்ணன்,மா. | – | தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை. |
| 30. | நாச்சியப்பன், நாகப்பா | – | திருப்பரங்குன்றம் கோயில். |
| 31. | நிர்மலா மோகன். | – | குறம் குறவஞ்சி குறவ நாடகம் – ஓர் ஆய்வு. |
| 32. | பாலகிருஷ்ணன், மு. | – | கண்ணேறு கழித்தல். |
| 33. | பாலாமணி, கா. | – | தனிப்பாடல் திரட்டு. |
| 34. | பிச்சை, அ. | – | சங்க யாப்பு. |
| 35. | பிரீதி, எஸ். | – | பாரதிதாசன் பாடல்களில் பெரியாரின் கொள்கைகளும் மார்க்சிய கோட்பாடுகளும். |
| 36. | பிரேமா, இரா. | – | இராமயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு– கம்பர், வான்மீகி, துளசிதாசர். |
| 37. | புஷ்பம், பி. | – | சாதி அடிப்படையில் தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களில் ஒற்றுமை வேற்றுமைகள் (திருநெல்வேலி மாவட்டம்). |
| 38. | மஞ்சுளா, கா. | – | நோக்குக் கோட்பாடும் சங்க இலக்கியமும். |
| 39. | மாணிக்கம், மு.தி. | – | ஜானகிராமன் நாவல்கள். |
| 40. | விசயலக்குமி, பொ. | – | பக்தி இலக்கியத்தில் அக மரபுகளின் செல்வாக்கு. |
| 41. | ஜெயபாண்டியன், சொ. | – | மதுரையில் சிறு தெய்வ வழிபாடு. |
| 42. | திருமதி அனுராதா | – | தமிழில் உளவியல் நாவல்கள். |

ஓ ஓ ஓ

# ஆர்வத்தை விளைவித்த அண்ணாவின் பொழிவு

அறிஞர் அண்ணா பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற பேரறிஞர்; பெருந்தன்மை மிக்கவர்; பண்பில் இமயம் அவர்.

வள்ளலாரிலிருந்து காந்தியார் வரை கூச்சப்படுகிறவர்கள். 'தம் புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம் துஞ்ச' என்பது கலித்தொகை. 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை' என்பது திருவள்ளுவம்.

அண்ணா அம் மரபினைச் சார்ந்தவர். எளிமையை நோக்கியே வாழ்க்கைப் பயணம் செய்தவர்.

சொற்பொழிவு செய்ய அவரை அழைக்க, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மறுத்த காலம் ஒன்றுண்டு. அவர் பேசுவதற்கு மண்டபங்கள் தரமாட்டார்கள்.

மதுரை வரும் போது சில சமயம் அவர் இரவு நேரத்தில் அரிசி ஆலைகளில் பேசியதுண்டு.

அதற்கு முன், நான் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, அண்ணா அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரில் பேச வந்தார்.

கூட்டம் ஊர்ப் புறத்தே ஒரு தென்னந்தோப்பில் நடந்தது. எங்கள் கல்லூரியிலிருந்து மாணவர்களாகிய நாங்களும் எங்களுடன் கல்லூரி ஆசிரியர் இருவரும் மிதிவண்டியில் ஏறத்தாழ இருபது கிலோ மீட்டர் சென்று அண்ணாவின் பேச்சைக் கேட்டோம். எதிர்பாராமல் திடீரென்று மழை வந்துவிட்டது. எல்லோரும் ஓடி, ஒரு வீட்டின் முன்புறம் இருந்த சிறியதொரு முற்றத்தில், அண்ணாவின் அருகில் இருந்து எஞ்சிய பேச்சையும் கேட்டுவிட்டுத் திரும்பியது இன்றும் என் நெஞ்சில் பசுமையாய் நினைவிலுள்ளது.

# 'அவர்தான் எங்கள் தந்தை'

**மணிவண்ணன் B.E., M.S., (USA)**

(அமெரிக்க நாட்டுக் கொலம்பசு நகரிலுள்ள தமிழ்ச் சங்கத்தில், தமிழ்த் தொண்டாற்றி வரும் மணிவண்ணன் தமிழண்ணலின் இளைய மகன்).

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு - ஆகஸ்டு, 12ஆம் தேதி எங்கள் தந்தையார்க்குப் பவள விழா (75 ஆண்டுகள்) நிறைவேறுகிறது. வாழ்நாள் முழுவதும் எழுத்து மூலம் தம்மைத் தமிழுக்காக அர்ப்பணித்துக் கொண்ட அவர் இந்த வருடமும் 'பவள விழா நூல் வெளியீடுகள்' மூலம் தம் பணியைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார். அவர்தம் வாழ்க்கையைப் பாராட்ட, எழுத்தைத் தவிர, வேறொரு சிறந்தவழி கிடையாது. அந்த எண்ணத்தின் வடிவே, இந்தக் கட்டுரை.

**'நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்...'** பொருளாதார மேம்பாட்டிற்காக, அவரவர் தம் தொழில்துறையையோ, உத்தியோகத்தையோ தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இதில் தமிழின் அருமை பெருமை அறிந்தவர் பலர். இவர்களில் தமிழுக்காக அன்றாடம் நேரம் ஒதுக்குபவர் வெகு சிலரே. அங்ஙனம் நேரம் ஒதுக்கித் தமிழ்ப் புலமை பெற்றாலும், அது 'எழுபத்தைந்து ஆண்டுக்காலப் புலமைக்கு' ஈடாகிவிடாது. இக்கட்டுரையில் தமிழ் உணர்வும் பற்றும் சற்றேனும் புலப்படுமேயானால், அது 'தந்தை வழி வந்த' தாகும்.

**'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்'.** "ஓராயிரம் வரிகளில் ஒரு கருத்தைச் சொல்வது கட்டுரை; ஒரே வரியில் ஓராயிரம் கருத்துக்களைச் சொல்வது கவிதை" என்று, விகடனில் 'இனிக்கும் இலக்கியம்' பகுதியில் குறிப்பிட்டிருந்தார் தந்தை. அந்த வகையில் ஒரே வரியில் அவர்தம் வாழ்க்கை பற்றி நினைவுக்கு வருவது, இந்தக் 'குறள்' தான். இது அவர்தம் மக்களாகிய எங்களுக்குக் 'கண் கண்ட உண்மை'! இதற்கு மேலேயும், தன் 'மெய்யை வருத்திக் கொள்வாரேயானால்', அவர்தம் மெலிந்த உருவம் தான் தெரியும்!

ஒரு சாதாரண உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணி தொடங்கி, இன்று தமிழ் பேசும் நல்லுலகத்தால், 'மூதறிஞர்' எனப் போற்றப்படுவதற்குக் காரணம், முயற்சி ஒன்று மட்டுமே.

மிகவும் 'கூச்ச சுபாவம்' உடையவர். தமக்காக மட்டுமன்று, தம் மக்களுக்காகவும் 'பரிந்துரைகள்' நாட மிகவும் தயங்குவார். வெளிப்படையானவர்;

மனத்திற்பட்டதை அப்படியே ஒப்பித்து விடுவார். 'யாரொடும் பகை கொள்ளலன்' என்ற கம்பர் வாக்குப்படி வாழ்பவர்தான். ஆயினும் தம் கருத்து, கொள்கையில் இம்மியளவும் விட்டுக் கொடுக்கமாட்டார். இது தமக்கு 'நிறையோ, குறையோ' என அவர் எண்ணிய காலங்கள் உண்டு. நாட்டில் மட்டுமல்ல, வீட்டிலும் அதே கதைதான்!

எழுத்து வலிமையுள்ளவர் இவர். தம் புத்தகங்கள் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் அறிஞர்களையும் அரசியல்வாதிகளையும் சிந்திக்க வைக்கும் வலிமை அது. சொல் வலிமையும் நிரம்பப் பெற்றவர் இவர். தமது சொற்பொழிவுகள், வானொலி விளக்கங்கள், தொலைக்காட்சி உரைகள் மூலம் தமிழ் உணர்வை உயிர்த்தெழச் செய்யும் வலிமை அது.

குரல் வலிமையும் குறிப்பிடத்தக்கது. 'குரல் ஆளுமை' என்றும் கூறலாம். இந்த உடம்பிலிருந்து வந்து, சிலிர்க்க வைக்கும் குரலா இது என்று கேட்போரை வியக்க வைக்கும் வலிமை அது. 'பேராட்டமில்லாத வாழ்க்கை வலிமையற்ற வாழ்க்கை' (Life without struggle is life without strength) என்பது ஓர் ஆங்கிலத் தொடர். உடல் வலிமை இல்லாவிடினும், திடம் மிகுந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

குடும்ப 'ரகசியமொன்றைச் சொல்ல வேண்டுமென்றால், இவர் இன்று மேற்கொள்ளும் உண்ணா விரதங்களுக்கும் விடா முயற்சிகளுக்கும் வாக்குவாதங்களுக்கும் அடிப்படை, இவர் எங்கள் வீட்டில் நடத்திய உண்ணா விரதங்களும் மௌன விரதங்களும் அம்மாவிடம் நாளுக்கு நாள் நடத்திய வாக்குவாதங்களுமே என்றால் மிகையாகாது. குடும்பத்தை நடத்த, எங்களைத் தூண்ட இவர் கையாண்டவை இவை.

தமிழண்ணல் என்ற பெயருக்கு அறிமுகம் அவசியமில்லை. எனினும் என் அனுபவத்தில் யான் கண்டவையும் கேட்டவையும் சில :

'இதுமாதிரி யாராவது தமிழ் சொல்லிக் கொடுத்திருந்தால் நான் எங்கேயோ போயிருப்பேன்' என எழுத்தாளர் சுஜாதா, குமுதம் இதழில் எழுதிய மதிப்புரை.

ஏ.எஸ்பி. அண்ணாமலை காலத்துக் குமுதத்தில், தலைசிறந்த தமிழறிஞர் எண்மரில் ஒருவராக இவர் பெயரைக் குறிப்பிட்டமை.

தினமணி நாளிதழில் தலைசிறந்த நூறு தமிழறிஞரில் ஒருவராக இவரும் தேர்ந்தெடுக்கப்பட்டமை.

'ஆறாம் திணை' இணைய தளத்தில், மூதறிஞர் என்றே, வளர்தமிழ்ப் பகுதியில் குறிப்பிட்டமை.

கலைஞர் கருணாநிதி தம் 'தொல்காப்பியப் பூங்கா' வெளியீட்டுக்கு, இவரே முழுத் தகுதியானவர் எனத் தீர்மானித்துத் தம் நூலை வெளியிடத் தனிப்பட்ட முறையில் விரும்பி அழைத்தமை.

முன்னாள் மற்றும் இந்நாள் பேரவைத் தலைவர்கள் இவர் வழிகாட்டுதலில் முனைவர் பட்டம் பெற்றமை.

இவை தவிர, அமெரிக்க நாட்டிற்கு வரும் பெருமைக்குரிய பலரும், 'விரல் விட்டு எண்ணக் கூடிய தலைசிறந்த தமிழறிஞர்களில், உங்கள் தந்தையும் ஒருவர்' என இவ்வாறு, பலபடப் புகழ்ந்து பேசக் கேட்டதுண்டு. 'சான்றோன் எனக் கேட்ட தாயாக' அல்லாமல், 'சேயாக' நாங்கள் மகிழ்கின்றோம்.

'சிலை என்றால் அது வெறும் சிலை தான், தெய்வம் என்றால் அது தெய்வம்' என்பது கண்ணதாசன் பாடல். மொழியாயினும் சரி, நாடாயினும் சரி. சம்பிரதாய சாத்திரங்கள் எவையாயினும் எதையும் ஆழ்ந்து தெரிந்து கொண்டாலே, அவற்றின் மேன்மையைப் போற்றும் மனப்பக்குவத்தை அது தருகிறது.

தமிழின் சிறப்பு நம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. நம்மால் கணித்தறிய முடியாதது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த தமிழ் இது. ஜி.யு. போப்பையர் தம்மைத் 'தமிழ் மாணவன்' எனத் தம் கல்லறையில் எழுதி வைத்துக்கொள்ள ஈர்த்த மொழி இது. எண்ணற்ற இலக்கியங்களைக் கொண்ட தனிப்பெரும் மொழி இது.

புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, ஆய்வியல் அறிமுகம், உங்கள் தமிழைத் தெரிந்துகொள்ளுங்கள் - தொடர், 'பழகு தமிழ்' கலந்துரையாடல்கள், 'இயன்ற வரையில் இனிய தமிழில்' - தொலைக்காட்சித் தொடர் என இவர் மக்களிடமும் மாணவர்களிடமும் தமிழைக் கொண்டு செல்வதில் பெரும்பங்கு வகிக்கின்றார்.

'கற்றனைத்தூறும் அறிவு' என்பது வள்ளுவம். 'உலகின் முதல் தன்முன்னேற்றச் சிந்தனை நூல் திருக்குறள்' என இவர் எழுதி வருவன புதுமையானவை.

தொல்காப்பியத்தை, முழுமையாக மிக எளிமைப்படுத்தி, இவர் தந்துள்ள 'கருத்துரை விளக்கச் செம்பதிப்புக்கள்' தமிழ் மாணவரிடையே விரும்பிப் பயிலப்படுகின்றன.

மேடைப் பேச்சாளர்கள், 'தமிழ் வாழ்க, வளர்க!' என முடிப்பது, கல்யாண அரங்கில் தம்பதியரை வாழ்த்துவது போல் ஆகிவிட்டது. அங்ஙனம் வாழ்த்திவிட்டு, அவரவர்வேலையைப் பார்க்கப் போய்விட்டால், தமிழ் தானாகவே வளர்ந்து கெள்ளும் என்பது, அவர்கள் நினைப்பு. இங்ஙனம் வீண் பேச்சு என்பதொன்றில்லாமல், தம் நூல்களாலும் பொழிவுகளாலும் தமிழறிவை எல்லோரும் பெற, நாளும் உழைக்கும் பெருமை இவருக்கு உண்டு.

எங்களிடம், நாங்கள் தத்தம் துறைகளில் சிறந்து விளங்கக் கொண்டுள்ள ஊக்கம், உந்துதல், எளிமை, நேர்மை, கடமை, கட்டுப்பாடு உணர்வுகள் இருக்குமாயின், அவை எங்கள் தந்தையிடமிருந்து வந்தவையாகும்.

'பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை' என்பது வள்ளுவம். 'செல்வம் என்பது வேண்டியதை அடைவது மட்டுமன்று; முன்பே அடைந்துள்ளவற்றைக் காப்பதுமாகும்' என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி. இறையருளை வேண்டுகையில், இருக்கும் செல்வங்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய பின்னரே, மேலும் செல்வங்கள் சேர்க்க வழிவகுக்க முறையீடு செய்கிறோம். எங்களிடம் இருக்கும் பொருளைப் பேணிக் காக்கும் பழக்கமுண்டேயானால், அது எங்கள் தாயாரிடமிருந்து வந்தது.

திரைப்படமொன்றில் ஒரு நகைச்சுவைக் காட்சி : தொழிலதிபர் மகனிடம், 'நீ இன்னார் மகன்தானே?' என்று கேட்க, அவனோ, 'இல்லை, அவர்தான் என் அப்பா' என்று வசனம் பேசுகிறான். தன் வழியே தன் தந்தை அறிமுகமாகுமளவு தான் வளர விரும்பும் வேட்கையை அது வெளிப்படுத்துகிறது. 'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை' ஆகும் இது.

அவ்வாறு தன் வழியில் தந்தை அறிமுகமாவது போல் கூறுவதானால், மேன்மேலும் வளர உந்துதல் தந்த, 'அவர்' தான் எங்கள் அப்பா' !

## திரு அம்மானை

ஓராயிரம் ஆண்டு தவம்செய்து நாம்பெற்ற
சீராயிரம் கொண்டபுகழ்ச் சேயிழையார் அம்மானை?
சீராயிரம் கொண்டபுகழ்ச் சேயிழையாள் சுற்றியுள்ள
பாராயிரம் போற்றவந்த பைந்தமிழ்காண் அம்மானை!
பைந்தமிழின் சீரனைத்தும் பாடேலோர் அம்மானை!!

ஒல்காப் புகழோடு உலகாண்டு நூல்பலவும்
பல்கிப் பெருகப் படைத்தவன்யார் அம்மானை?
பல்கிப் பெருகப் படைத்துத் தமிழ்காத்தான்
தொல்காப் பியனென்னும் தொல்லாசான் அம்மானை!
தொல்லாசான் நற்புகழைப் பாடேலோர் அம்மானை!!

பொங்கு கடல்சூழ்ந்து பூவுலகைக் கொண்டதனால்
மங்காத் தமிழ்ச்செல்வம் காத்தவர்யார் அம்மானை?
மங்காத் தமிழ்ச்செல்வம் காத்துத் தரணிக்கே
சங்கத் தமிழ்தந்தார் சான்றோர்கள் அம்மானை!
சான்றோர் திறம் எல்லாம் பாடேலோர் அம்மானை!!

பாருலகை நேசிக்கும் பண்பாட்டைப் பாராட்டிச்
சீருலவு நூல்ஒன்று செய்தவன்யார் அம்மானை?
சீருலவு நூல்ஒன்று செய்து பொதுமறையாய்
பாருக்குத் தந்திட்டான் வள்ளுவன்காண் அம்மானை!
வள்ளுவனின் சீர்முழுதும் பாடேலோர் அம்மானை!!

பெண்ணின் பெருமையினைப் பேருலகம் பேசுதற்கு
கண்ணகியின் காப்பியத்தைக் கண்டவன்யார் அம்மானை?
கண்ணகியின் காப்பியத்தைக் கண்டுநம் நெஞ்சையள்ள
எண்ணும் அரசன் இளங்கோகாண் அம்மானை!
இளங்கோ திறம்வியந்து பாடலோர் அம்மானை!!

புறச்சமயம் வேற்றுமொழி பொங்கிவந்த காலம்
அறப்போர்கள் ஆற்றி எதிர்த்தவன்யார் அம்மானை?
அறப்போர்கள் ஆற்றி அருந்தமிழைக் காத்தளித்தான்
சிறந்ததிரு நாவுக் கரசன்காண் அம்மானை!
நாவரசன் பேர்பரவிப் பாடேலோர் அம்மானை!!

ஓங்கும் வடமொழிக்கும் ஒப்பாய்த் தமிழ்மொழியில்
பாங்குடைய காப்பியத்தைத் தந்தவன்யார் அம்மானை?
பாங்குடைய காப்பியத்தைத் தந்து தமிழ்த்தாய்க்கு
நீங்காத செல்வம் நிறைவித்தான் அம்மானை!
நிறைவித்த கம்பன்புகழ் பாடேலோர் அம்மானை!!

காசிக்கும் சென்றங்கே காசிருடன் பேசி
மாசற்ற செந்தமிழைப் போற்றினன்யார் அம்மானை?
மாசற்ற செந்தமிழைப் போற்றிப் பரப்பியவன்
தேசுற்ற செல்வன் குருபரன்காண் அம்மானை!
குமர குருபரனைப் பாடேலோர் அம்மானை!!

தென்னாட்டார் போற்றும் சமயங்கள் தேனமுதாய்
எந்நாடும் போற்ற எழுச்சிதந்தார் அம்மானை!
எந்நாடும் போற்ற எழுச்சிதரு சன்மார்க்கம்
அன்பொழுகத் தந்திட்டார் வள்ளலார் அம்மானை!
வள்ளலார் சீர்பரவிப் பாடேலோர் அம்மானை!!

மறுமலர்ச்சி தந்துநம் மாண்தமிழைக் காத்த
உறுதிப்பா டுள்ள உயர்ந்தவன்யார் அம்மானை?
உறுதிப்பாட் டோடு விடுதலைப் பண்ணிசைத்தான்
சிறுமை அகற்றவந்த பாரதிகாண் அம்மானை!
பாரதியின் சீர்பரவிப் பாடேலோர் அம்மானை!!

நெஞ்சை உயர்த்தித் தமிழ்ப்பகையை வேரறுத்த
அஞ்சாத நெஞ்சுடைய பாவலன்யார் அம்மானை?
அஞ்சாத நெஞ்சுடனே அருந்தமிழைக் காத்தளித்த
செஞ்சொல் பாரதி தாசன்காண் அம்மானை!
பாவேந்தன் புகழ்பரவிப் பாடேலோர் அம்மானை!!

(கம்பனடிப்பொடி தொகுத்த தமிழ்த்தாய் பிரபந்தத்தில் இடம் பெற்ற பாடல் இது)